# இந்துக்கல்லூரி - கொழும்பு

COLLEGE MAGAZINE - 1997

572.05
இந்து
SL/PR

# HINDU COLLEGE
## COLOMBO

*O Lord!*

*Lead us from the unreal to the Real*

*From darkness unto light*

*from death to immortality*

**- Upanishad**

# இந்துக்கல்லூரி - கொழும்பு

COLLEGE MAGAZINE - 1997

# HINDU COLLEGE
## COLOMBO

CONTENTS


1. கல்லூரி அதிபரின் செய்தி
2. அஞ்சலி
3. நிறுவுனர் நினைவு நாள்
4. பாடசாலை அபிவிருத்திச் சபை
5. பழைய மாணவர் சங்கம்
6. **Sports Reports**
   - Athletics
   - Soccer
   - Hockey
   - Cricket
7. **House Reports**
   - Valluvar House
   - Kambar House
   - Elango House
   - Barathy House
8. Clubs and Societies
9. ஆசிரியர் நலன்புரிக் கழகம்
10. Farewell
11. மாணவர் ஆக்கங்கள்
12. English Literary Contributions of the Students
13. Staff List
14. இதழாசிரியர் குறிப்பு

# கல்லூரிக் கீதம்

இராகம்; மோகனம் தாளம்; ஆதி

பல்லவி

வாழ்த்துவோம் வணங்குவோம்
வானளாவும் புகழோங்க (வாழ்)

அநுபல்லவி

கொழும்பமர் இந்துக்கல்லூரி
செழுந்தமிழ் மலரின் நியமமதனை - (வாழ்)

சரணம்

ஞானமுடிவின் அறந்தரு வள்ளுவன்
கான நடம்கூத்து காட்டும் இளங்கோ
மோன முத்தமிழ் வித்தகர் கம்பர்
தேனிசை பாரதி சேர்ந்தியல் நியமத்தை- (வாழ்)

# Our Principal



**Mr. T. Muthukumarasamy**

*B.A Dip-in-Ed, SLPS (I)*

# கல்லூரி அதிபரின் செய்தி

கல்வியும் மனிதனும் பிரிக்க முடியாத அம்சமாகிவிட்ட இன்றைய நிலையில், கல்வி என்னும் பயிரை கருத்துடனே வளர்த்து பயன் கண்டு இம்மையிலும், மறுமையிலும் செழுமைதர சீர்படவேண்டும். எத்தகைய இன்னல்கள் வந்துற்றபோதும் அழியாச் செல்வமாக விளங்குவது கல்விச்செல்வமே மாணவனின் ஆளுமைவிருத்தியை உருவாக்குவதும் கல்வியின் முதன்மை நோக்கங்களில் ஒன்றாகும்.

மாணவரிடம் இயல்பாக இருக்கும் ஆற்றல்கள், உணர்வுகளை வெளிக் கொண்டு வரச் செய்வது ஆளுமை வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றது. இன்றைய நவீனயுக தேவைகளை ஈடுசெய்யக் கூடியதாக கல்வி முறையில் மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன.இந்த மாற்றங் களை நடைமுறைப்படுத்தும் களங்களாக பாடசாலைகள் அமைகின்றன. எனவே நல்ல வாழ்க்கைக்கு அத்திவாரம் இடும் இடமாக பாடசாலை அமைகின்றது.

மாணவர்கள் தமது ஆற்றலை வெளிப்படுத்த பாடப்புலம் மட்டும் போதாது, கற்றல் தொடர்பான அம்சங்களுடன் மாணவரிடம் புதைந்துள்ள ஆற்றல்கள் வெளிக்கொண்டுவரப்படவேண்டும். மாணவர் ஆற்றல் திறனை வெளிக்கொண்டுவரும் ஒரு ஊடகமாக கல்லூரி சஞ்சிகை அமைகின்றது. மாணவர் தாம் பெற்ற கல்வி அநுபவங்களை எல்லாம் ஒருங்கே திரட்டிப் பருகும் வண்ணம் பக்குவமாய் நூல் ஒன்றை அமைக்க முன்வந்துள்ளனர். இதிலே அவர்களின் கற்பனைக்கும் எட்டாத ஒவ்வொருவரினதும் அற்புதச் சிருட்டிகளாம் கட்டுரைகள், கன்னித்தமிழில் உன்னி ஊஞ்சலாடும் கவிதைகள், தீந்தமிழின் இனிமையைச்சுவைத்து எம்மையும் சுவைக்க வைக்கும் தத்துவங்கள், பசுந்தமிழால் பாலரைப் பயிற்றுவோருக்கும், பயிலுவோருக்கும் பயிற்றப் படுவோருக்கும் ஏற்ற முன் மாதிரியான பாடரீதியான ஆக்கங்கள், தன்னுடன் நில்லாது பிறருடனும் கூட உலகெங்கும் ஊசலாடிவரக்கூடிய ஆங்கிலக் கட்டுரைகள் ஆகிய இன்னோரன்ன அம்சங்களுடன் நறுமணங்கமழ்கின்றது

இந்துவின் சஞ்சிகை. கொழும்பு இந்து மாணவர்களின் ஆக்கங்களை வெளியிட ஆற்றல்களை வெளிப்படுத்த இச்சஞ்சிகை ஏதுவாக அமைகின்றது. இம்மலரை அலங்கரிக்கும் ஆக்கங்கள் அனைத்தும் எமது மாணவமணிகளின் படைப்புக்கள் என்பதையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன். எமது மாணவமணிகள் எதிர்காலத்தில் எழுத்தாளர்களாகவும், பல்வேறு துறைகளைச்சேர்ந்த அறிஞர் களாகவும் வர இது ஒரு களமாக அமைகின்றது. அத்துடன் மாணவர்களது தன்னம்பிக்கை, ஆர்வம், ஆற்றல், எழுத்தாற்றலை வளர்க்க இந்துவின் சஞ்சிகை பெரிதும் உதவுகின்றது.

இத்தகைய ஒரு சஞ்சிகையை வெளியீடு செய்ய மாணவர்கட்கு ஊக்கமும் ஆக்கமும் வளங்கிய எனது ஆசிரிய நண்பர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். அவர்கள் பாடபுலம் சார்ந்த அறிவைமட்டுமல்ல மாணவர்கள் ஆற்றல்களை ஏனைய துறைகளிலும் வளர்க்க களம் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். இந்நூலிற்கு சிறந்த ஆக்கங்களை கொடுத்த மாணவர்கள். இந்நூல் வெளிவர அல்லும் பகலும் பாடுபட்ட ஆசிரிய குழுவினர் பலவகையிலும் உதவி புரிந்த பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் அனைவரும் பாராட்டப்படவேண்டியவர்கள். இந்நூல் எமது கல்லூரியின் கன்னிமுயற்சியாகும். தொடர்ந்து இவ்வாறான சஞ்சிகை வருடாவருடம் வெளிவர எல்லாம்வல்ல வித்தகவிநாயகப் பெருமான் அருள் பாலிக்க வேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

*தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசாமி*
*அதிபர்*

# அஞ்சலி



## கலாநிதி க.வேலாயுதபிள்ளை

எமது கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க உபதலைவராகவும், நலன் விரும்பி உறுப்பினராகவும் இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்காகத்திறம்பட உழைத்து இறைபணிகளையும், சமூகப்பணிகளையும் செய்து தனக்கென வாழாத சான்றோன்,அமரர் வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை அவர்கள் 1997.10.26 ஆம் திகதி விண்ணகம் சேர்ந்தார். அன்னாரின் மறைவு கல்லூரிக்கு மட்டுமல்ல தமிழ் மக்கள் அனைவரிற்கும் ஒரு பேரிழப்பாகும்.

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியும், இரத்மலானை இந்துக்கல்லூரியும் ஆரம்பித்து நடாத்திய இந்து வித்தியா விருத்திச்சங்கத்தின் உறுப்பினராகவும் பின்னர் தலைவராகவும் சேவையாற்றினார். கொழும்பு விவேகானந்த சபையின் தலைவராகவும், தமிழர்புனர்வாழ்வு நிவாரண கழகத்தின் ஆளுனராகவும், கொழும்பு வாழ் தமிழ்மக்கள் பணிக்குழு தலைவராகவும், தமிழர் முன்னேற்றக் கழக உபதலைவராகவும், இந்து பிரஜைகள் குழு உறுப்பினராகவும் இருந்து ஆற்றிய சேவை அளப்பரியது.

சுருக்கக் கூறின் கலாநிதி வேலாயுதபிள்ளை, ஓர் உத்தமரான சைவப் பெரியாராகத் திகழ்ந்து சைவத்திற்கும் எமது இனத்திற்கும் அளப்பரிய தொண்டுகள் யாவரும் மெச்சும் வண்ணம் தனது இறுதி மூச்சு வரை ஆற்றி வந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல வித்தக விநாயகனைப் பிரார்த்திப்போமாக.

# நிறுவுனர் நினைவு நாள்

1951ம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் பன்னிரண்டாம் நாள் இந்நாட்டு இந்து மக்களின் வரலாற்றிலே பொன்னான நன்னாள். நீதியரசர் செ. நாகலிங்கம் தலைமையில் கொழும்பு வாழ் இந்துப் பெரியோர்கள் இந்து வித்தியாவிருத்திச் சபை அமைத்து, மாநகரில் இந்துப் பண்பாடு மங்காது வளர்ந்திட வித்திட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள் அது.

ஒவ்வொரு வருடமும் பெப்ரவரித் திங்கள் பன்னிரண்டாம் நாள் கல்லூரியின் நிறுவுனர்களை நினைவு கூரும் நாளாகக் கொண்டாடப்படுகின்றது. இவ்வருடமும் 12 - 02 - 97 அன்று "நிறுவுனர் நினைவு நாள்" சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரி அதிபர் திரு .த. முத்துக்குமாரசுவாமி தலைமையில் நடந்த இவ்விழாவில் முதன்மை விருந்தினராக கலாநிதி க.வேலாயுதபிள்ளை கலந்து கொண்டார். நிறுவுனர்கள் இக் கல்லூரியை அமைப்பதற்கு எவ்வளவு சிரமங்களை அனுபவித்தனர் என்பதை விளக்கினார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கந்தையா நீலகண்டன் அவர்கள் பேசும்போது பெரியோர்கள் விதைத்திட்ட வித்து செடியாக மலர்ந்து நன்றாக வேரூன்றி பெரு ஆலமரமாக வளர்ந்து கொழும்பு மாநகர் வாழ் இந்துச் சிறார்களுக்கு மட்டுமல்ல நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து தலைநகருக்குப் பரிதவித்து ஓடிவந்த பிள்ளைகளுக்கும் தஞ்சம் தந்துஅவர்கள் தம் அறிவினை வளர்த்து நிற்கின்றது இக்கலைக்கூடம் எனக்குறிப்பிட்டார். இந்துப்பண்பாட்டுப் பின்னணியில் "கற்றாங்கு ஒழுகும் " இந்துக்கல்லூரி மாணவர்கள் பரீட்சைகளில் பல்லோரும் பாராட்டும் வண்ணம் சிறப்புச்சித்தி பெற்றதோடு விளையாட்டுத் துறையிலும் கல்லூரிக்கொடியைக் கம்பீரமாக பறக்க வைத்திருக்கின்றனர் எனப்பாராட்டினார். மாணவர் தலைவர்களுக்கு சின்னம் அணிவிக்கும் நிகழ்வும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இந்நிறுவனர் நினைவு நாளில் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரிக்கீதத்துடன் விழா இனிது நிறைவு பெற்றது.

S.நவக்குமார்
*முதன்மை மாணவர் தலைவர்*

# Head Prefect



*S. Navakumar*

## Deputy Head Prefect



*V. Parthipan*

## Athletic Captain



*T.Thanaseelan*

# Noteworthy Performances

## G.C.E Ordinary Level Examination December - 1996

### 8 Distinctions



*S. Myooran*



*U. Barathumashankar*

### 7 Distinctions

1. Karunanantham Ragulan
2. Mohanrajah Gajamohan
3. V. V. K. Paramaswamy Kuhanendra
4. Kathirkamanathan Vennugoben
5. Aloysious Amirthanathan Jude Brahanavan
6. Kamalanathan Krishakeesen
7. Thavachelvam Mathankopal
8. Sundrasigamany Majuran
9. Chadramohan Myooran
10. Viveganandan Majuran
11. Kanagaratnam Sanjeev
12. Nadarasa Nimalarasa

# Outstanding Perfomances
# G.C.E (A/L) Examination August-1996

**Those who obtained 4 A's**

1. Ramanathapillai Aingaran
2. Sivasothylingam Aarooran
3. Rajasegaram Thivakar
4. Nadarajan Nishaanthan
5. Rajasegarar Sutharshan



*R. Aingaran*



*S. Aarooran*



*R. Thivakar*



*R. Sutharsan*

**அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற தமிழ்தின போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்கள்**

(தனி இசை)



சண்முகசர்மா
வித்தியாசங்கர்

(பாஓதல்)



செல்வரட்ணம்
ராகவன்

(அபிநய இசை)



லோகநாதன்
லகாரண்யன்

**மேல்மாகாண மட்டத்தில் முதலிடம்**



இரகுபதி பாலஶ்ரீதரன்
வாமலோசன்
(கவிதை)




**மேல்மாகாண மட்டத்தில் முதல் இடம் பெற்ற வில்லிசைக் குழு**

# Prefects - 97



**Seated from ( L -R ):**

K. Amuthan, M. Suntharavathanan, Thiruselvam, S. Sevatharan, A.R. Vamalosanan, S.Yatheeskumar, V. Parthiban (D.H.P), Mr. Sivakrishnamoorthy,(Teacher in charge) Mr. M. Muthukumarasamy (Principal), Mr. Rajaratnam (Vice Principal), S. Navakumar (H.P), Prabhakar, S. Sabesan, Karthikayan, Udayachandran, M. Saravanan.

**Standing first row:**

S. Jaiganesh, N. Ramesh, N. Prabhothran, A. Prasanna, S. Sivarajan, J. Amithapkumar, V. Mukilan, J. Gajamugan, K. Churshan, S.Bradeev, S. Balasubramaniam.

**Second row:**

S. Thananjayan, C.W.Mayurajith, N,Rajmahendran, S.Balatharan, M. Gajamohan, I. Gobinath, Prashanthan, Sasikumar, Jaiprasath, R. Ramesh, R. Prashanth, J. Megaroopan, S. Sivanason.

**Abe:** N. Saravanan, P. Navanithan, S. Sivamayuran.

## INAUGURATION OF THE NEW GENERAL SCIENCE LABORATORY



( L - R ):-MrsT.Sivarajah (Vice Principal), Mr. & Mrs. Paramsothy (Chief Guests), Mr. T. Rajaratnam (Vice Principal), Mr. T. Muthukumarasamy (Principal).

## Junior School Athletic Meet



*Mr. T. Rajaratnam (Vice Principal ), Mrs.T. Sivarajah (Vice Principal), Mr. & Mrs. Arulanandam (Cheif Guests ) and Our Principal Mr. T. Muthukumarasamy.*



TUTORIAL STAFF - HINDU COLLEGE

**A series of the practice tests were organised to the G.C. E (O/L) students to make their dreams come true.**



# பாடசாலை அபிவிருத்திச் சபை

எமது கல்லூரியின் வாசலில் எழுந்தருளி திருவருள் பொழிந்துஎம்மை வாழவைக்கும் வித்தகவிநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து எமது சங்கத்தின் சார்பில் இவ்அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்.

12-02-1951 அன்று இந்து வித்தியாபிவிருத்திச் சங்கத்தைச் சார்ந்த நன்மக்களால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று தியாகசிந்தையுடைய பெற்றோர், நலன் விரும்பிகள், ஆசிரியர்கள் உதவியால் தலைநகரில் தலைநிமிர்ந்து நிற்கின்ற, தலைசிறந்த தேசிய பாடசாலையாக திகழ்கின்றது. இக்கல்லூரியின் வளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்த ஒவ்வொருவரையும் நாம் சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

எமது சங்கம் திறமைவாய்ந்த பொறியியலாளர், சட்டத்தரணிகள், கணக்காய்வாளர்கள், இன்னும் பலதுறைகளில் தேர்ச்சி பெற்றவர்களை உள்ளடக்கி 21 உறுப்பினர்களுடன் அதிபரின் தலைமையின் கீழ் சிறப்புற இயங்குகின்றது. இக்கல்லூரிக்காக மிக நீண்டகாலம் அயராது உழைத்து இவ் உலகவாழ்வை நீத்த பொறியியலாளர் திரு. மகேசன், வைத்தியகலாநிதி வேலாயுதபிள்ளை ஆகியோரை நினைவு கூர்ந்து அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இக்கல்லூரியின் சகல நடவடிக்கைகட்கும் கைகொடுத்து இயங்கிவந்த பாடசாலை அபிவிருத்திச்சங்கம், 1995 யூன் மாதம் தொடக்கம் 1996 யூலை மாதம் வரை இயங்காது இருந்தது. 1996 யூலை மாதத்திலிருந்து எமது சங்கம் மிகவும் சுறுசுறுப்புடன், திறம்படச்செயற்பட்டு வருகின்றது. எமது செயற்பாடு பாடசாலை அபிவிருத்தியைப் பொறுத்த வரையில் நல்ல முறையில் செயற்பட எமக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கக்கூடிய வகையில் சிறந்த ஒரு அதிபரை நியமித்துத்தந்த கல்வி அமைச்சிற்கும், கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகட்கும் எமது நன்றி யைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது கல்லூரி மீண்டும் தற்போது துரிதமாக சிறப்புற இயங்கிவருகின்றது. இக்காலகட்டத்தில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளை இங்கு குறிப்பிடல் எமது கடமையாகும்.

1. உயர்தர வகுப்பு மாணவர்கட்கு புதிதாக கணணிகள் பெறப்பட்டு கணணி வகுப்புகள் குளிரூட்டப்பட்ட அறைகளில் ஆரம்பித்தமை.
2. சகல விஞ்ஞான ஆய்வு கூடங்களும் புனரமைக்கப்பட்டு ஆண்டு 6 தொடக்கம் சகல மாணவர்கட்கும் ஆய்வு கூட வசதி செய்து கொடுத்தமை.
3. மாணவர்கட்கு விடுமுறை காலப்பகுதியை நன்கு பயன்படுத்து முகமாக மீட்டல்பயிற்சி வினாத்தாள்கள் ஆசிரியர்களின் உதவியுடன் வழங்கி அவற்றை திருத்துவித்து மாணவர் கல்வியில் ஊக்கம் கொடுத்தமை.
4. ஆண்டு 5, 11, 13 வகுப்புகட்கான மாதிரி வினாத்தாள்களை இலவசமாக ஆசிரியர்கள் உதவியுடன் செய்து கொடுத்தமை.

5. அலுவலகம், ஆசிரியர்கள் ஓய்வறை என்பனவை புனரமைத்து வர்ணம் பூசிக்கொடுத்தமை.

6. ஓர் அன்பரின் உதவி மூலம் ரூபா 200000/- செலவில் மலசல கூடதொடர் அமைத்தமை, ஆராதனை மண்டபத்திற்கு அதே அன்பரின் உதவி மூலம் ரூபா 50000/- பெறுமதியான 100 கதிரைகள் செய்து கொடுத்தமை.

7. ஆரம்ப பிரிவில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அமைய அடிப்படையில் ஆசிரியர்களை அமர்த்திவேதனம் வழங்கியமை.

8. கல்லூரித் தேவைக்கென போட்டோஸ்ரற் இயந்திரம் பெற்றுக் கொடுத்தமை.

9. பெற்றோர்கள் உதவியுடன் கூட்டுறவு மண்டபத்தில் மாதிரி வகுப்பறைகள் அமைத்துக்கொடுத்தமை.

10. ஆரம்பபிரிவு மண்டபத்திற்கு பெற்றோர் உதவியுடன் வர்ணம் பூச நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

11. ஆசிரியர்களின் உன்னதமான சேவையை மதித்து அவர்களை கௌரவித்தல்.

12. கல்லூரி பரிசளிப்பு விழா நடாத்த உதவுதல்.

13. கல்லூரி ஸ்தாபகர் தினம் கொண்டாட உதவுதல்.

இப்பணிகளை நாம் மேற் கொள்வதற்கு எமது மாணவர்களின் பெற்றோர்கள் தாராளமாக பண உதவி செய்து வருகின்றார்கள். குறிப்பாக இவ்வருடம் அவர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்காக ஆற்றிய பண உதவி மிகவும் போற்றுதற்குரியது. அத்துடன் கல்லூரியில் உள்ள கட்டிடங்கள் யாவற்றிற்கும் வர்ணம் பூசுவதற்கும் மேலும் உள்ளக விளையாட்டு அரங்கு அமைப்பதற்கும் உதவி செய்துள்ளார்கள்.

இந்நடவடிக்கைகள் யாவும் அவர்கள் எமது அதிபர் மேலும், ஆசிரியர்கள் மேலும், பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் மேலும் வைத்திருக்கும் நம்பிக்கையையும் நல் எண்ணத்தையும் காட்டுகின்றது.

எமது கல்லூரி மட்டுமே வடக்கு கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்து வந்த கிட்டத்தட்ட 3400 மாணவர்களை கடந்த 10 ஆண்டுகளில் அனுமதித்த ஒரே ஒரு கல்லூரியாகும். இதனால் நாம் பாரிய இடப்பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளோம். சிறுபான்மையினரில் ஆர்வமும் அக்கறையுமுள்ள அமைச்சர் எமக்கு வகுப்பறை, கட்டிட வசதி செய்யதுதர முன் வந்துள்ளார். திரு இ. யோகராசன் (பாராளுமன்ற உறுப்பினர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்) மாணவர்விடுதி அமைத்துத்தர முன்வந்துள்ளார்.

எமது மாணவர்களுடைய கல்வி வளர்ச்சியிலும், அவர்கள் ஆளுமை வளர்ச்சியிலும் அயராது அக்கறையுடன் பாடுபட்டுவரும் எமது கல்லூரி ஆசிரியர் களை நாம் என்றும் நன்றியுணர்வுடன் பாராட்டுகின்றோம்.

செ. குகதாசன்
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

# SCHOOL DEVELOPMENT SOCIETY



**Seated L -R.**

Mr. V. Kandasamy, Mr. K.Neelakandan, Mr.T. Rajaratnam,
Mr.T. Muthukumarasamy (President), Mr. S.Kugadasan (Secretary),
Miss. S. Velupillai (Treasurer), Mr. K. Sribhavan.

**Standing:**

Mr. S. Thayaparan, Mr. A. Ragupathi Balasritharan, Mr. K. Chandrakumar,
Mr. S. Bhuvan, Mr. T. Loganathan, Mr.T. Ramkumar, Mr. K. Seynthan.

# OLD BOYS ASSOCIATION



**Seated. (L - R)**

Mr. K. Chandirakumar (Secretary), Mr.S. Bhuvan (Vice President),
Mr.T. Ramkumar (Vice President), Mr.T. Muthukumarasamy (President),
Mr.S. T. S. Arulananthan (Vice President),
Dr. K. Pannusamy (Vice President), Mr. S. Mutateesa (Treasurer).

**Standing: (L-R)**

Mr. J. Lukshman, Mr. F. Pathmarajah, Mr.Neilmarlan
Mr. M. H.M. Rizny (Asst. Secretary), Mr. B. Prathaban,
Mr. R. Elanko, K. Amithan.

# பழைய மாணவர் சங்கம்

## செயலாளர் அறிக்கை - 1997

எமது கல்லூரி வெளியிடும் இந்தச் சஞ்சிகைக்கு பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் இவ்வறிக்கையைத் தருவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சில ஆண்டுகள் இடைவெளிக்கு பின் எமது சங்கத்தின் ஆண்டுப்பொதுக் கூட்டம் கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்று நடப்பு ஆண்டு உத்தியோகத்தர்கள் தெரிவாகினர். இதன் பின் மாதந் தோறும் கூடிய செயற்குழுக் கூட்டம் கல்லூரியின் தேவைகள் அபிவிருத்திகளை பூர்த்தி செய்ய பல ஆக்க பூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

வருடாவருடம் நடைபெறும் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி எமது சங்கத்தின் ஆதரவுடன் நடைபெறுகிறது. தலைநகரில் உள்ள ஒரே தமிழ் தேசிய பாடசாலையான எமது கல்லூரி தமிழ் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு பெரும் பங்களிப்பது போன்று விளையாட்டுத்துறையிலும் முன்னேற்றம் காணவேண்டும் என எமது சங்கம் விரும்புகிறது.

இதற்கும் முதற்கட்டமாக தற்போதைய கல்லூரி மைதானம் உடனடியாக புனரமைக்கப்படவேண்டியுள்ளது. சகல விளையாட்டுக்களும் மெய்வல்லுனர் போட்டிகளும் இடம் பெறக் கூடியதாக மைதானத்தை புனரமைப்பதற்கு 30 லட்சம் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான வரைபடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டுள்ளன. கூடிய சீக்கிரத்தில் வேலைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இதற்கான நிதியை சேகரிப்பது பற்றி பலயோசனைகள் செயற்குழு க்கூட்டத்தில் ஆராயப்பட்டு வருகிறது. வெளிநாடுகளில் வதியும் எமது பழைய மாணவர்களிடமும் உதவிகோரியுள்ளோம். இந்த வேலைத்திட்டத்தை திறப்படசெய்து முடிப்பதற்கு பெரியோர்கள், அன்பர்கள், நலன் விரும்பிகள் பெற்றோர், பழைய மாணவர்களிடம் இருந்து எமது சங்கம் உதவியை எதிர்பார்க்கிறது. எமக்குத் தேவையான உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் இத்திட்டம் உட்பட கல்லூரிக்கு தேவையான சகல வசதிகளையும் திறம்படச் செய்து முடிப்போம்.

"முயற்சி திருவினையாக்கும்"

க. சந்திரகுமார்
பொதுச்செயலாளர்
பழைய மாணவர் சங்கம்

## SOCCER

In Soccer our star players C. Rajniroshan (under 12) N. Jatheesparan (under 14) and K.Amuthan (under 18) who were recognised as best players at the district level matches had brought fame to our college. There is another excellent football player, M. Keerthi Bharatharanjan (under 16) who was recignized as the best player at the all Island Soccer match.

The players of all the age groups who had displayed their potential as talented players need remarkable praise for their excellent performance.

The following awards were obtained for the year 1997

| | | | | |
|---|---|---|---|---|
| Under 12 | Runners up | - | District level | (C.D. S. F. A ) |
| Under 14 | Semi finalist | - | District level | (C. D. S. F. A) |
| Under 16 | Semi finalist | - | All Island level | (S. L. S. F. A) |
| Under 18 | Runners up | - | District level | (C. D. S. F. A) |

The year 1997 saw our football players training hard under the guidance of a veteran coach Mr..A. Sinnathamby who is better known as 'Chinnanna' We are greatful to him for having taken great pains and devotion in coaching our players.

In conclusion we wish to thank the teacher in charge Mr. N. K. B. Sarma for his assistance and support.

## ATHLETICS

Our Inter house Athletic meet was held on 28th Feb 1997 at college grounds It was well organized and attended by a large number of parents, old boys and well wishers. Mr. and Mrs. Srikananathan were the chief guests. There was a keen competitions by various houses.

It is a remarkable one to cite that our athletic captain T. Thanaseelan won the second place in discuss throw at Western Province Schools Athletic meet 1997.

# HOCKEY

The hockey players of Hindu College Colombo enjoyed a much needed rivival of spirit when they successfully participated in the series of tournaments, conducted by the Srilankan schools Hockey Association,and Colombo District Hockey Association.

**The captains of the teams were:**

| | | |
|---|---|---|
| Under 19 | : | N. Prabotharan |
| Under 15 | : | S. Swarnakamal |
| Under 13 | : | Sanjayan |

The teams did fairly well in all the matches under the guidence of teacher in charge Mr. N. Prabaharan and our coach Mr. S. Ratnasabapathy.

The under 19 team also did not fail to show their colours in the all Island 7 A side Hockey Tournament Organized by the Kandy Sitadevi Balika MV, and Matale Jaycees Club They just lost in the semi finals by a penalty goal. It's a pity that the finals were not held. Master Naresh was the best player of the event.

These encouraging performances definitely augur well for the future of the hockey players as well as the hockey lovers of this college.

# CRICKET

In order to encourage more students to play cricket we have re-introduced. cricket for the age groups under 13, 15 and 17 after a lapse of nearly five years. We played five matches organised by the Srilanka Schoo CricketAssociation

Our under 13 and 15 teams won 5 matches in the first round sponsored by the Horlicks Trophy and eventually, we lost in the second round. Our under 17 team played in the match sponsored by the Singer Trophy and won in the first round and unfortunately they lost in the second round.

**The teams were led by**

| | | |
|---|---|---|
| Under 13 | : | S. Rakesh sharma |
| Under 15 | : | K. Dinesh |
| Under 17 | : | A. Suren |

Our sincere thanks go to our dedicated coach Mr. A. S. Mannuel for the hard work he has put in.

# VALLUVAR HOUSE
## (BLUE)

| | | |
|---|---|---|
| House captain | - | R. Karthik |
| | - | Y. Lakarinyan (primary section) |
| Vice captain | - | R. Niruban |
| Athletic captain | - | S. Yatees kumar |
| Secreta ry | - | S. Achuthan |
| Treasurer | - | S. Sabesan |

**Teacher in charge -**

Mr. V. Verl
Mr. T. Ambikaipagan
Mrs. I. L. Nadarajah
Mrs. R. Selvaranjan
Miss. S. Ponniah
Mr. J. P. Sukumar
Mrs. S. Tharmaseelan
Mrs. Y. Jeyaratnam
Miss. Y. Thanabalasingam
Mr. K. Ramanesh
Miss. R. Rajendram
Mrs. P. Gnanalingam
Mrs. S. Ranjanakumar
Mrs. S. Sivarooban
Mr. S. Karunanithy
Mrs. K. Kumaralingam
Miss. K. Kumarasamy
Mrs. A. Suntheralingam

At the Inter House Athletic meet '97, the follwing students won their respective age group Champion ship Trophies;

| | | |
|---|---|---|
| Year 5 | : | Mas. V. Rahulan |
| Under 19 | : | Mas. P. Raj Mahendran |

Keen interest was shown by our members in various activities. Their experience will lead them for a better performance in future. We are thankful for their active support of the students and house teachers.

*R. Karthik*
House Captain

# KAMBAR HOUSE
## (GREEN)

| | | |
|---|---|---|
| House captain | - | S. Balachandran |
| | - | J. Pradeepan (primary section) |
| Vice captain | - | P. Akilan |
| Athletic captain | - | N. Jeyakumar |
| Secretary | - | N. Satheeskumar |
| Treasurer | - | S.Sivakanthan |

**Teacher in charge -**

| | |
|---|---|
| Mrs. A. Visvakumar | Mr. M. Vijayaratnam |
| Mr. K. Kanagaratnam | Mrs. T. Gnanapandithan |
| Mrs. N. Paramalingam | Mrs. N. Thirunavukarasu |
| Mrs. V. Visvakanthan | Mrs. S. R. Ponniah |
| Mrs. P. Linganathan | Mrs. S. Selvarajah |
| Mr. Chandramohan | Mr. S. karunanithy |
| Mrs. R. Sriskandarajah | Mrs. S. Anandasivam |
| Mrs. H. Sivagiri | Mrs. S. Kajendrajith |
| Miss. M. Balasingam | Miss. S. Chandralingam |

I am indeed proud to submit this report for 1997. This year has been a successful one to Kambar House. Mas. K. Aravinthan -Year 5 and Mas. N. Indiran -Year 3 won the champion ship trophies and in addition to this obtained the relay champion ship as well the' Green 'and was placed first with score of /81. The credit should undorbtedly be given to the house teachers for their assistance and the participant for their untiring efforts.

*S. Balachandran*
House Captain

# ELANGO HOUSE
## (YELLOW)

| | | |
|---|---|---|
| House captain | - | P. Rajiv |
| | | M. Dhivagar (primary section) |
| Vice captain | - | B. Balamohan |
| Athletic captain | - | L. Raghukolan |
| Treasurer | - | N. Saravanan |

**Teacher in charge-**

Mr. Vairavanathan
Mr. Sivanandan
Mrs. J. F. G. Gnanaselan
Mrs. R. Uthayalingam
Mrs. Y. Prabeharan
Mrs. A. Manikendran
Mrs. V. Balasubramaniam
Miss. S. Sivakkolunthy
Mrs. E. Athipar
Mr. N. Soundrarajah
Mrs.I. Thevakrishna
Mrs. T. Nallanathan
Mrs. M. Subramaniam
Mrs. P. Navaratnarajah
Mrs. J. S. Nadarajah
Mrs. V. Sitsabesan
Mrs. S. Sivapalan
Mrs. T. Balakumaran

The following students were awarded championship trophies at the Inter House Athletic meet '97

| | | |
|---|---|---|
| Under 13 | - | Mas. G. Haran Prasath |
| Under 15 | - | Mas. G. Roshan |
| Under 17 | - | Mas. M. Niroshan |

Elango House is the Runner up with 179 1/2 points. The participant has shown a lot of enthusiasm in various activities and their performances were noteworthy. We are grateful to the teachers and participants for the job well done.

*P. Rajiv*
House Captain

# UNDER 16 SOCCER TEAM - 1997




**1st Row: L - R**

Wijekumar, Archuna, Sivaraj.

**Seated: L - R**

Mr. S. Thayaparan, Mathanaraj, Mr . T. Muthukumarasamy (Principal), Keerthy Bharatharanjan, Mr. T. Rajaratnam, Chenthoran, Mr. A. Sinnathamby (Coach).

**Standing: L - R**

R. Elamurugan, Rajiv, Sujeevan , Dinesh, S. Harendran, Sanjeev, Arulraj, R. Sharmilan, S. Senthoorkkumaran

# UNDER 18 SOCCER TEAM - 1997



**1st Row- (L-R)**

C. Sivaneswaran, L. Suthakar, T. Kandeepan.

**Seated: (L-R)**

Mr . S. Thayaparan (Prefect of Games), S.Jeyaprashanth,
Mr .T. Muthukumarasamy (Principal), R. Prashanth (Captain),
Mr.. T. Rajaratnam (Vice Principal), V.Thushyanthan,
Mr.A. Sinnathamby (Coach).

**Standing: (L-R)**

C. Mayurajit, K. Thananjeyan, S. Ajanthan, A.Thilipan, M. Gayamohan,
R. Prabakar, D. Rajmahendran, S. Jeyaramanan, B. Seerala krishnan.

# UNDER 12 SOCCER TEAM- 1997




**1st Row ( L - R )**
Ramanan, U. Gowthaman.

**Seated: ( L - R )**
Mr. S. Tha yaparan (P.O.G), R. Ab hiyuthan, Mr. T. Muthukumarasamy (Principal), Royniroshan, Mr. T.Rajaratnam (Vice Principal ), S. Pradeeban, Mr. A. Sinnathamby (Coach)

**Standing: ( L - R )**
Ayingaran , M. Shankar, Gobhinath, J. Udeshkanth, V. Manoj Sanjeevan, J. Sajeev, K. Lavan, Vishnuharan.

# UNDER 14 SOCCER TEAM - 1997



**1st Row (L - R)**

K. Vibulashan, V. Thushyanthan.

**Seated: ( L - R )**

Mr. S. Thayaparan (Prefect of Games), T. Dineshan (Captain), Mr. T. Muthukumarasamy (Principal), N. Jatheesparan, Mr. T. Rajaratnam (Vice Principal), N. Shankar, Mr. A. Sinnathamby (Coach).

**Standing: ( L - R )**

R. Prabhu, P. Vivek, C.Prasanna, K. Rajeev, K.Kokulan, M. Kesavan, R. Prashanth, M. Pradeepan, M. Sabithran.

# UNDER - 15 HOCKEY TEAM -1997



**Seated- ( L - R )**

S. Mohanbabu, Mr. T. Rajaratnam (Vice Principal),
S. Suwarnakamal (Captain), Mr. T. Muthukumarasamy (Principal),
S. Mayuran (Vice Captain), Mr. S. Thayaparan (Prefect of Games),
Mr. N. Prabaharan (Teacher -in-charge), S. Thirukumaran.

**Standing - ( L - R )**

V. Kethees, S . Ravanan, P. Navaneethan, S. Sutharjanan, W. Prasanna,
J. Gobikrishnan, K. Dinesh, N. Kantharajah, S. Pratheep, R. Selvaruban.

# UNDER - 19. HOCKEY TEAM- 1997



**Seated- (L-R)**

S. Dinesh kumar, Mr.T. Rajaratnam (Vice Principal), N. Prabaharan (Captain), Mr. T. Muthukumarasamy (Principal), S. Thevarajan (Vice Captain), Mr. S. Thayaparan (Prefect of Games), Mr. N. Prabaharan (Teacher-in- Charge).

**Standing- (L-R)**

K. Satheesan, T. Kumaran, Benjomin, R. Sutharsan, V. Naresh, S. Jeyaganesh, S. Kisho, N. Jeyakumar, S. Umasuthan, V. Chitparan, S. Prashanthan.

# UNDER - 13. CRICKET TEAM- 1997



**Seated: (L - R)**

Mr. K. Thayaparan (P.O.G), S. Gnanam, Mr. T. Rajaratnam (Vice Principal), Mr.T. Muthukumarasamy (Principal), M. Mathuran, P. Shankar, Mr. A. S. Manial (Coach).

**Standing: (L - R)**

V. Nirmalan, R.Puviram, A. Ajanthan, K. Nishanthan, T. Komalan, S. Akeel R. Shankar, M. Nizar, W. Suresh.

# UNDER 13 HOCKEY TEAM- 1997



**1st Row- ( L - R )**

N. Sumi, M. Marcus, K. Anushan.

**Seated- ( L - R )**

S. Ramprasath, MR.T. Rajaratnam (Vice Pricipal), N. Sangan (Captain), Mr. T. Muthukumarasamy (Principal), T. Selvakumar (Vice Captain), Mr. S. Thayaparan (P.O.G), Mr. N. Prabaharan (M.I.C).

**Standing- ( L - R )**

T. Ajanthan, J. Jeyakanthan, B. Sanjayan, P. Prasath, N. Ramanan, N. P. Andrew, V. S. Jathukulan, G. Umashanker, C. Vickneswaran, G. Ashokkumar, M. Jegabawan, M. Gobi.

# BHARATHY HOUSE
## (RED)

| | | |
|---|---|---|
| House captain | - | K. Amuthan |
| | - | Y. Manoj (primary section) |
| Vice captain | - | P. Navaneethan |
| Athletic captain | - | R. Prabakaran |
| Secretary | - | S. Kandeepan |
| Treasurer | - | M. Saravanam |

**Teacher in charge -**

| | |
|---|---|
| Mr. V. Gnanasundram | Mr. K. Kalaharan |
| Miss. G. Sripathmanathan | Mrs. J. Kirupananthamoorthy |
| Mrs. S. Jeyarajah | Mrs. K. Nadanasigamany |
| Mrs. M. Chelliah | Mrs. S. S. Parasivam |
| Miss. S. Ponnudurai | Miss. M. Kulasingam |
| Mrs. J. Selvaratnam | Mrs. C. Thuyamany |
| Mrs. L. Selvalingam | Mrs. M. Pathmanathan |
| Mrs. V. Jeyanthan | Mrs. S. Sathananthan |
| Mrs. A. Jeyachandran | Mrs. P. Navaratnam |

We are grateful to our members,who participated actively though the performance was not so noteworthy. Mas. S. Dineshan won the under 15 trophy. However it will be a good foundation for better progress in future. Our sincere thanks to House teachers for their activities.

*K. Amuthan*
House Captain

# தமிழ் மாணவர் மன்றம்

| | |
|---|---|
| காப்பாளர் :- | திரு த. முத்துக்குமாரசுவாமி (அதிபர்) |
| பொறுப்பாசிரியர்கள் :- | திரு க. கலாகரன்<br>திருமதி தி. பாலகுமாரன்<br>திருமதி கௌ. சித்தானந்தன்<br>திருமதி ச. ஜெயராஜ்<br>திருமதி இ. நடராஜா<br>திருமதி ஜெ. விஜயகுமாரி<br>திருமதி ச. ஸ்ரீஸ்கந்தகுமார்<br>செல்வி கி. குமாரசுவாமி |
| தலைவர் :- | செல்வன் ரூ. ஜெயப்பிரசாந் |
| உபதலைவர் :- | செல்வன் சி. பாலசுப்பிரமணியம் |
| செயலாளர் :- | செல்வன் ஆ.இ. வாமலோசனன் |
| உபசெயலாளர் :- | ந. பிரபோதரன் |
| பொருளாளர் :- | ந. ஜெயகுமார் |
| உபெபாருளாளர் :- | செல்வன் வா. முகிலன் |
| பத்திராதிபர் :- | த. தமிழமுதன்<br>கு. லக்ஷ்மணன் |

செயற்குழு உறுப்பினர்கள்

செல்வன் ம. சரவணன்
செல்வன் ச. சிவதரன்
செல்வன் ஜ. கஜமுகன்
செல்வன் நீ. சரவணன்
செல்வன்த. தமிழமுதன்
செல்வன் ஆ.இ. திருச்செந்தூரன்
செல்வன் து. கஜன்
செல்வன் மு. லக்ஸ்சயன்
செல்வன் ந. கோபிநாத்
செல்வன் இரா. அபியுதன்

**"முதல் மொழி தமிழ் மொழி ஆதலால்**
**பிறக்கும் போதே பெருமையுடன் பிறந்தவன் தமிழன்"**
**என்றான் பாரதிதாசன்.**

இனிய மொழியாம் தமிழ் மொழிக்கு விழாவெடுக்கவும் தமிழ் மொழியின் இறைமையை வளர்க்கவும் எமது இந்துக் கல்லூரியின் தமிழ் மாணவர் மன்றம் சிறப்பாக செயலாற்றி வருவது தெரிந்ததே.

எனினும் 1996/97ம் ஆண்டுக்குரிய தமிழ் மன்றச் செயற்பாடுகள் மிகவும் சிறப்பானவையாகவும் எமது இந்துக்கல்லூரி வரலாற்றில் இடம் பெறக் கூடியவாறும் அமைந்தன. இக்காலப்பகுதியில் முழுமையாக மாணவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி 'இந்துவின் தமிழ்ச்சுடர்' என்னும் மாதாந்த சஞ்சிகை வெளியிடப்பட்டது. இது மாதாந்த சஞ்சிகையாக வெளியிடப்பட்டதுடன் வருடாந்த முத்தமிழ் விழாவில் (07/11/1997) அதன் ஆண்டுச் சிறப்பிதழாக "இந்துவின் தமிழ்தீபம்" வெளியிடப்பட்டது.

எமது வருடாந்த முத்தமிழ் விழா புதிய கதிரேசன் மண்டபத்தில் 07/11/1997இல் அதிபர் த. முத்துக்குமாரசுவாமி தலைமையில் இனிதே இடம்பெற்றது. இவ்விழாவில் பேராசிரியர் திரு வை. நந்தகுமாரனும் அவரது பாரியாரும் பிரதம விருந்தினராக கலந்து கொண்டனர். அன்றைய தினம் இந்துவின் முத்தமிழ் விழாவையொட்டி நடாத்தப்பட்ட எமது கல்லூரி மட்டப் பேச்சு, கவிதை, சிறுகதை, கட்டுரை, பாடல் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் கொழும்புப் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன.

எமது பாடசாலையால் நடாத்தப்பட்ட ஏனைய பாடசாலைகளுக்கான போட்டியில் 27 பாடசாலைகளைச் சார்ந்த 414 மாணவர்கள் கலந்து கொண்டனர். விவாதப் போட்டியில் றோயல் கல்லூரி வெற்றிக் கேடயத்தை பெற்றுக் கொண்டது.

1996/97 காலப்பகுதியில் எமது தமிழ் மாணவர் மன்ற விவாதக்குழு பல விவாதப் போட்டிகளில் கலந்து வெற்றி பெற்றதுடன் கல்கிசை சென்தோமஸ் கல்லூரியின் விவாதப் போட்டியில் வெற்றிக் கேடயத்தை பெற்று முதலாமிடம் பெற்றது. அத்துடன் தமிழ் மாணவர் மன்றம் விஞ்ஞான மாணவர் மன்றத்துடன் இணைந்து சூழல் பாதுகாப்பு செயற்பாட்டில் ஈடுபட்டதுடன் "டெங்கு காய்ச்சல்" ஒழிப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டது.

பாடசாலையில் நடாத்தப்பட்ட கல்விக் கண்காட்சியில் "அன்றைய தமிழ்த்திரைப்படமும் இன்றைய தமிழ் திரைப்படமும்" என்ற தலைப்பில் "விபரண சித்திர" படக்காட்சியையும் நடாத்தியுள்ளது. இக்கால்ப்பகுதியில் தமிழ் மாணவர் மன்றம் சிறப்பாக செயலாற்ற உதவி புரிந்து ஆலோசனைகள் தந்த அதிபர் அவர்கட்கும் உபஅதிபர், பொறுப்பாசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.

**ஆ.இ. வாமலோசனன்**
செயலாளர் , தமிழ் மன்றம்

# இந்து மன்ற செயற்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| காப்பாளர் :- | திரு T. முத்துக்குமாரசாமி (அதிபர்) |
| பொறுப்பாசிரியர்கள் :- | திருமதி P. ஞானலிங்கம்<br>திரு K. சேய்ந்தன் |
| இந்து நாதம் ஆலோசகர்கள் :- | திருமதி T. மாணிக்கராஜா<br>திருமதி E. அதிபர்<br>திருமதி G. சித்தானந்தன் |
| தலைவர் :- | நடராசா ரமேஸ் |
| உபதலைவர் :- | ஏரம்பமூர்த்தி ரமணன் |
| செயலாளர் :- | சிவலோகநாதன் பாலதரன் |
| உபசெயலாளர் :- | சிவசம்பு பிரதீப் |
| பொருளாளர்/விழா இணைப்பாளர் :- | ரமேஸ் ராஜகுரியர் |
| உபபொருளாளர் :- | கதிர்காமநாதன் வேணுகோபன் |
| பத்திராதிபர் :- | க. இளங்கோ<br>ச. ஜனகன்<br>இ. விரதீஸ்குமார் |
| ஆட்சிக்குழு உறுப்பினர்கள் :- | இ. சுதர்சன்<br>க. சுதர்சன்<br>சி. சுதாகரன்<br>லோ. நிமலன்<br>ம. சஞ்சீவன் |

# இந்து மாணவர் மன்றம்

வித்தக விநாயகனின் திருவடியில் என் தலை தாழ்த்தி இவ்வருட இந்து மன்றத்தின் செயற்பாடுகளைச் சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். அதிபர் அவர்களை காப்பாளராகவும் திருமதி பு. ஞானலிங்கம், திரு க. சேய்ந்தன் அவர்களைப் பொறுபாசிரியர்களாகவும் கொண்ட இம் மன்றம் மிகவும் சிறந்த முறையில் தன் கடமைகளைச் செய்வதற்கு எல்லாம் வல்ல வித்தக விநாயகனின் அருள் பரிபூரணமாக என்றென்றும் உண்டு.

ஆலயச் சூழலில் இயங்கும் இம்மன்றம் வெள்ளிக்கிழமைகளில் மாணவர் களின் அபிஷேக ஆராதனைகளைப் பொறுப்பேற்றுச் செய்கின்றது. விசேடதினங் களான பொங்கல் விழா, சிவராத்திரி விழா, மாசிமகம், பங்குனி உத்தரம் போன்ற தினங்களில் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களின் சார்பாக வித்தக விநாயகருக்கு அபிடேக, ஆராதனைகள் நடக்கின்றது. மாதந்தோறும் நடைபெறும் சதுர்த்திப் பூசைகளில் எங்கள் ஆசிரியர்களின் பங்களிப்பு உண்டு.

இவ்வருடம் நவராத்திரி பூசையும் கலைமகள் விழாவும் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. பத்துத்தினங்கள் மாணவர்களினால் நடைபெற்ற பூசையில் தினமும் காலையில் சொற்பொழிவுகள் பஜனைகள் போன்ற சமய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த செல்வி விரோஜினி விஜயரட்ணம் அவர்களின் பாட்டும் திருமலை அரசாங்கஅதிபர் திரு புவனேந்திரனின் பேச்சும் கொழும்பு சத்தியசாயி அமைப்பின் பஜனையும் குறிப்பிடத்தக்கன.

இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த கன்னியகுமாரி கேந்திர நிலையத்தைச் சேர்ந்த திரு கிருஷ்ணமூர்த்தி, சின்மயா மிஷனைச்சேர்ந்த சுவாமி சமன்பிதா அவர்களின் சொற்பொழிவுகள் எங்கள் மாணவரின் மனதில் பெரும் இடத்தை பிடித்தன.

இந்து மன்றத்தின் கலைமகள் விழா 10.10.97 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டன. பிரதம அதிதியாக அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய கலாநிதி வேலாயுதபிள்ளை அவர்களும் சிறப்பு அதிதியாக எங்கள் வணக்கத்திற்குரிய இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தஜி மகராஜ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். மாணவர்களின் கலைநிகழ்ச்சியுடன் நடைபெற்ற இவ்விழாவில் எங்கள் 'இந்து நாதம்' வருடாந்த சஞ்சிகையும் வெளியிடப்பட்டது.

மாணவர்களுக்கான சமயபாடப்பரீட்சைகளை பொறுப்பேற்று இம்மன்றம் நடாத்துகின்றது. கொழும்பு விவேகானந்தசபை பரீட்சைகளில் சிறந்த பெறுபேறு களைப் பெற்று உள்ளது. எங்கள் மாணவரின் சமய சமூக நல்வாழ்விற்கு அடித்தளமாக விளங்கும் இம் மன்றத்திற்கு அதிபர், உபஅதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரினதும் பரிபூரண ஒத்துழைப்பு என்றும் உண்டு.

சிவலோகநாதன் பாலதரன்
செயலாளர்
இந்து மன்றம்

# நுண்கலை மன்றம்

| | | |
|---|---|---|
| காப்பாளர் | - | திரு. த. முத்துக்குமாரசாமி |
| பொறுப்பாசிரியர்கள் | - | திருமதி. ஜெ. கிருபானந்தமூர்த்தி |
| | | திருமதி. ம. குலசிங்கம் |
| | | திருமதி. ர. செல்வரஞ்சன் |
| | | திருமதி. I. L. நடராஜா |
| தலைவர் | - | J. அமிதாப் குமார் |
| செயலாளர் | - | S. சங்கர் |
| பொருளாளர் | - | I. கஜமுகன் |
| உபதலைவர் | - | S. சிவராஜன் |
| உப செயலாளர் | - | S. ரஜனிகாந்த் |
| பத்திராதிபர் | - | S. கிஷோர் |
| துணைப்பத்திராதிபர் | - | K. சுரேஷ் |

எமது கல்லூரிமாணவச் செல்வங்கள், கல்வியில் மட்டுமன்றி, அழகியற் கலைகளிலும் சிறந்தோங்கி முதலிடம் வகிக்கின்றனர். கலைகள், மாணவரின் மனித நற்பண்புகள் இனிதே சிறந்து விளங்கிடச் செய்து, மாணவரை ஆளுமை விருத்தியுடன் முழுமை பெற்றவராக விளங்கச் செய்கின்றது.

ஆண்டு தோறும் நடைபெறும் தமிழ்மொழித்தினவிழாவில்- வலய, மாகாண, தேசிய நிலைப்போட்டிகளிற் பங்கு கொண்டு நம் மாணவர்கள் பல பரிசில்களை வென்றெடுத்துச் சாதனை புரிந்துள்ளனர். திருமுறைப்- பண்ணிசைப் போட்டிகள், இசைப்போட்டிகளில் திறமையுடன் பங்குபற்றிப் பரிசில்களை வென்றெடுத்துள்ளனர்.

எம் மாணவர்கள் 1997 க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 8பேர் அதிதிறமைச் சித்தியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

மேலும், பாடசாலை விழாக்களான, முத்தமிழ்விழா கலைமகள் விழா, கலை விழா, போன்றவற்றில், கர்நாடக இசை, மெல்லிசை, கணணிப் பதிவு இசை, கிராமிய இசை, வில்லிசை, மேலைத்தேய இசை, இசைநாடகம், நாட்டிய நாடகம், நாடகம், நடனம் போன்ற நிகழ்ச்சிகளில் பார்ப்போர் வியக்கும் வண்ணம் மிகச் சிறப்புடன் தமது பங்களிப்பைச் செய்துள்ளனர்.

1997 பாடசாலைக் கல்விக் கண்காட்சியில் எமது மாணவரமைத்த இசைப் பொருட்காட்சியறை அமைப்புப் பலராலும் வாழ்த்திப் போற்றப்பட்டது குறிப்பித்தக்கது.

இவை தவிர, எமது பாடசாலை இசைச் செயற்பாடுகட்கு மகுடம் வைத்தாற்

# தமிழ் மாணவர் மன்றம்

செயற்குழு உறுப்பினர் 1997



**நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக)**:-

செல்வன். சி. பாலசுப்பிரமணியம் (உப தலைவர்), செல்வன். ந. பிரபோதரன் (உபசெயலாளர்), செல்வன். நீ. சரவணன் (விழாக்குழு உறுப்பினர்), செல்வன். ந. ஜெயக்குமார் (பொருளாளர்),செல்வன். முகிலன் (உப பத்திராதிபர்), செல்வன். ச. டினேஷ்குமார் (உபபத்திராதிபர்), செல்வன். கு. லக்ஷ்மன் (இதழாசிரியர்), செல்வன்.த. தமிழமுதன் (இதழாசிரியர்)

**இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக)**:-

திருமதி. ரா. நடராஜா (மன்றப் பொறுப்பாசிரியர்), திருமதி சி. ஜெயராஜ் (மன்றப் பொறுப்பாசிரியர்), திருமதி. தி. பாலகுமாரன் (மன்றப்பொறுப்பாசிரியர்), செல்வன். ஆ. இ. வாமலோசனன் (செயலாளர்),திரு. க. த. ராஜரட்ணம் (பிரதி.அதிபர்), திரு. த.முத்துக்குமாரசாமி (அதிபர்), செல்வன். றூா. ஜெயப்பிரசாந் (தலைவர்), திரு. க. கலாகரன் (மன்றப் பொறுப்பாசிரியர்), திருமதி. த. விஜயகுமாரி (மன்றப் பொறுப்பாசிரியர்), திருமதி. ச.ஸ்ரீஸ்கந்தராஜா (மன்றப் பொறுப்பாசிரியர்).

# இந்து மாணவர் மன்றம்

செயற்குழு உறுப்பினர் -1997



**இருப்போர். (இ-வ):-**

இரமேஷ் இராஜசூரியர், திருமதி. பி. ஞானலிங்கம் (பொறுப்பாசிரியர்), சி.பாலதரன் (செயலாளர்), திருமதி. சிவராஜா (உபஅதிபர்), ந.இரமேஷ் (தலைவர்), திரு.த.முத்துக்குமாரசாமி (அதிபர்), திரு.தி.இராஜரட்ணம் (உபஅதிபர்), க. சாந்தகுமார், திரு.க.சேய்ந்தன் (பொறுப்பாசிரியர்).

**நிற்போர்(இ-வ)::-**

A. இரமணன், S சுதாகரன், K. சுதர்ஸன், S. பிரதீப், K. வேணுகோபன், K. இளங்கோ, காங்கேயன், M. சஞ்ஜீவன்.

போல் 29 பேர் கொண்ட கீழைத்தேய பாண்ட் இசைக்குழு, 25 பேர் கொண்ட மேலைத்தேய பாண்ட் இசைக்குழு, 20 பேர் கொண்ட கர்நாடக பல்லிய இசைக்குழு என முத்தான மூன்று குழுக்கள் சிறப்பமைந்து விளங்குகின்றன.

இவற்றை விடப் பாடசாலைக்கு வெளியேயும் எமது மாணவரது கலாசார வைபவ பங்களிப்புக்கள் அதி உன்னதமானவை. யாழ் இந்து பழைய மாணவர் சங்க விழா, சாரணிய தலைமைச் செயலகக் கலைவிழா, கம்பன் கழகவிழா, கல்வி அமைச்சின் விழா, தேசிய இளைஞர் சங்கீத விழாபோன்ற இன்னோரன்ன விழாக்களின் தமது திறன்களைப் பார்ப்போர் வியந்து பாராட்டும் வண்ணம் வெளியிட்டுள்ளனர்.

இத்துடன், நம் மாணவ மலர்களின் நுண்கலைச் செயற்பாட்டை மேலும் வெளிக் கொணரவும், வளர்க்கவும், முன்னேற்றவும் சர்வதேசகலாசார பொதுநலவாய மன்றத்துணையுடன் எமது நுண்கலை மன்றம் சிறப்புடன் இயங்கி வருகின்றது.

இத்தகைய நுண்கலைச் செயற்பாடுகளில் மாணவர் சிறந்து விளங்கி, மிளிர்ந்திட, மூன்று இசைவகுப்பறைகளை நிரந்தரமாகத் தந்து, ஊக்கமும் ஆக்கமுமளித்திட்ட எமது அதிபரை நாம் நன்றியுடன் போற்றுகின்றோம். அவருக்கு உறுதுணையாயிருக்கும் உப அதிபர்களுக்கும் எமது நன்றிகள். பாடசாலையிற் தொடர்ந்து வரும் நாட்களிலும் நம் மாணவ இளந் தளிர்கள் இசைத்துறையில் ஓங்கிப் பிரகாசிக்க, எல்லாம் வல்ல வித்தக விநாயகர் பதம் பணிவோமாக.

S. சங்கர்

★ படகு தண்ணீரில் இருக்கலாம், ஆனால்
தண்ணீர் படகினுள் நுழைய்க் கூடாது.
மனிதன் உலகத்தில் வாழலாம்.
ஆனால் உலக ஆசை அவனிடத்தில்
இருக்கக் கூடாது.

## தமிழ்த்தினப் போட்டிகள் 1997
### மேல் மாகாண மட்டம்

1 ஆம் இடம் பெற்ற நிகழ்ச்சிகள் விபரம் :-

(1) பாஓதல் பிரிவு 3
செல்வன் செ. இராகவன்

(2) தனி இசை பிரிவு 4
செல்வன் ச. வித்யாசங்கர்

(3) கவிதை பிரிவு -5
செல்வன் ஆ.இ. வாமலோசனன்

(4) வில்லுப்பாட்டு - திறந்த பிரிவு
பங்குபற்றியோர் :-
1. ச. வித்யா சங்கர்
2. ஐ. கஜமுகன்
3. ர. மேகரூபன்
4. நீ. சரவணன்

## தமிழ்த்தினப் போட்டிகள் -1997
### கொழும்பு வலய மட்டம்

பரிசு பெற்றோர் விபரங்கள் :-

### 1 ஆம் இடம் பெற்றோர் :- (தனி – நிகழ்ச்சிகள்)

(1) பிரிவு- 1 பேச்சு
செல்வன் த. ஸ்ரீரமணன்

(2) பிரிவு- 3 பாஓதல்
செல்வன் செ. ராகவன்

(3) பிரிவு- 4 தனி இசை
செல்வன் ச. வித்யாசங்கர்

(4) பிரிவு- 5 கவிதை
செல்வன் ஆ. இ. வாமலோசனன்

### 2 ஆம் இடம் பெற்றோர் :-

(1) பிரிவு- 1 பாஓதல்
செல்வன் ந. ஹரேந்திரன்

(2) பிரிவு- 5 தனிஇசை
செல்வன் நீ. சரவணன்

(3) பிரிவு- 5 பேச்சு
செல்வன் T. தமிழமுதன்

## 3 ஆம் இடம் பெற்றோர் :-

(1) பிரிவு- 4 பாஓதல்
செல்வன் S. கோகுலன்

## குழு நிகழ்ச்சிகள்

*1 ஆம் இடம் பெற்ற நிகழ்ச்சிகள் :-*

### (1) திறந்த பிரிவு – தமிழறிவு வினாவிடைப் போட்டி

பங்கு பற்றியோர்:-

1. ஆ. இ. வாமலோசனன்
2. T. தமிழமுதன்
3. S. கேசவன்
4. து. கஜன்
5. ஆ.இ. திருச்செந்தூரன்

### (2) வில்லுப்பாட்டு – திறந்த பிரிவு

பங்கு பற்றியோர்:-

1. ச. வித்யாசங்கர்
2. ஜ. கஜமுகன்
3. ஜெ. மேகரூபன்
4. நீ. சரவணன்
5. T. சுரேஷ்
6. ந. மோகன்குமார்
7. வி. சியாமளகிருஷ்ணன்

*2 ஆம் இடம் பெற்ற நிகழ்ச்சி :-*

### (1) நாடகம் – திறந்த பிரிவு

1. ச. வித்யாசங்கர்
2. நீ. சரவணன்
3. ஜ. கஜமுகன்
4. T. சுரேஷ்
5. S. ரமணன்
6. P. பிரசன்னா
7. J. மேகரூபன்
8. S. சதீஷ்
9. வி. சியாமளகிருஷ்ணன்
10. சு. உமாசுதன்
11. இரா. அபியுதன்
12. யோ. லகாரண்யன்
13. எஸ். உமாசுதன்

# நாடக அரங்கியல் மன்றம்

அன்றைய தமிழர் கட்டிக்காத்த முத்தமிழான இயல், இசை, நாடகத்தை நாமும் வளர்க்க வேண்டும் என்ற ஆவலுடன் 1996ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் எமது கல்லூரியில் சர்வதேச கலாச்சார பொதுநலவாய மன்றத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டதே இந்நாடக அரங்கியல் மன்றமாகும். இம்மன்றத்தை பொறுப்பெடுத்து நடாத்திச் செல்ல நாடகத்துறையில் ஆர்வம் மிக்கவரும், அனுபவம்பெற்றவருமான எமது கல்லூரி ஆசிரியர் திரு R.T. டக்ளஸ் அவர்களிடம் பொறுப்பாசிரியர் பதவி ஒப்படைக்கப்பட்டது. செயற்குழு உறுப்பினர்களாக பின்வரும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| காப்பாளர் :- | திரு T. முத்துக்குமாரசாமி (அதிபர்) |
| பொறுப்பாசிரியர் :- | திரு R.T. டக்ளஸ் |
| தலைவர் :- | ப. சதீஸ் |
| செயலாளர் :- | ஐ. கஜமுகன் |
| பத்திராதிபர் :- | கு. சுசீவன் சர்மா |
| பொருளாளர் :- | பென்ஜோ நவனீதமன் |
| உபதலைவர் :- | இ. ராகவன் |
| உபசெயலாளர் :- | ஸ். திவாகர் |

எமது மன்றம் முதலில் செயற்படுத்திய செயற்திட்டமானது வெற்றிக்கனியை எமக்குப் பெற்றுத்தந்தது. ஆம் அதுதான் நாம் முதலில் நடித்த "பொய் முகங்கள்" என்ற நாடகம் மேல்மாகாண பாடசாலைகளிற்கு, இடையிலான நாடகப் போட்டியினில் முதலிடத்தைப் பெற்று எமது பாடசாலைக்கும், எமது மன்றத்துக்கும் பெருமையைச் சேர்த்துத் தந்தது. இவ்வெற்றியுடன் நின்று விடாது நாம் இலங்கையில் அருகிவரும் தமிழ் நாடகத்தை கட்டியெழுப்பும் பொருட்டு, கொழும்பு மாவட்ட தமிழ்ப் பாடசாலை மாணவர்களிற்காக

"வானொலி நாடகப் பிரதியாக்கமும், நடிப்புப் பயிற்சியும்" என்ற தலைப்பில் 3 கட்டங்களைக் கொண்ட செயலமர்வினை ஒழுங்கு செய்து மாணவர்களிற்கு பயிற்சி வழங்கியது. இச்செயல் அமர்வு கடந்த டிசம்பர் 8ஆம் திகதியடன் இனிதே முடிவுற்றது.

எமது மன்றம் தமிழிற்கும், நாடகத்திற்கும் மேலும் பற்பல நற்றிட்டங்களை மேற்கொண்டு தொடர்ந்துவரும் காலத்தில் எமது பாடசாலை நாடக வளர்ச்சிக்கு மட்டுமல்ல, இலங்கையின் நாடகத்துறை வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றும் என உறுதியளிக்கிறோம்.

நன்றி

**பத்தகுணநாதன் சதீஸ்**
(தலைவர்)

# வளர்ச்சிப்பாதையில் இந்துக்கல்லூரிச் சாரணர்குழு

1977 ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் திகதி 35சாரணர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட எமது சாரணக்குழு இன்று அதன் வளர்ச்சியின் உச்சக் கட்டத்தில் நின்று கொண்டு இருக்கின்றது. ஆரம்பிக்கப்பட்டு ஒரு தசாப்தத்தில் ஜனாதிபதி சாரணரான திரு. புவனினால் பொறுப்பேற்கப்பட்டது அதன் வளர்ச்சியின் முதற்படியாக அமைந்தது. 1993 இல் எமது குழுச்சாரணரான புவனும், அவரின் வழியில் 1994 இல் எமது சாரணத்தலைவன் அமிர்தனும் தரு சின்னங்களை வென்று எமது சாரணக்குழுவுக்கு வலுவூட்டினர்.

1997 ஆம் ஆண்டு எமது சாரணக்குழுவைப் பொறுத்தவரையில் ஒரு பொற்காலமாகவே திகழ்ந்தது. ஆண்டின் முற்பகுதியில் இலங்கை தேசிய சாரண சங்கத்தால் நடாத்தப்பட்ட சாரண வேலை வாரத்தில் எமது சாரணர் உற்சாகமாகப் பங்களிப்பு செய்து கொழும்பு மாவட்டத்தில் 3வது இடத்தைப் பெற்றுக் கொடுத்தனர். ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற மாத்தளைப் பாசறையில் சாரணத்தலைவர் V. அரவிந்தனின் தலைமையில் 35 சாரணர்களும் 5 சாரணத்தலைவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இப்பாசறையின் போது மாத்தளை சித்தகட்டி விநாயகர் ஆலயத்தின் வெளிவீதியை சிரமதானம் மூலம் அமைத்துக் கொடுத்ததன் மூலம் எமது சாரணர் பலரது பாராட்டிற்குள்ளாயினர். ஜூலை முதலாம் திகதி மாநகர முதல்வர் திரு. கரு ஜெயசூரியவின் தலைமையில் நடைபெற்ற சிரமதான நிகழ்வில் எமது சாரணர் கொழும்பு மத்திய புகையிரத நிலையத்தில் செயலாற்றினர். வருடாவருடம் கொழும்பு மாவட்ட சாரண சங்கத்தால் ஒழுங்கு செய்யப்படும் ஜம்போறியிலும் சாரணத்தலைவர் திரு.தேவச்சந்திரன் தலைமையில் கலந்து கொண்டு பாசறை விருதுகளை எமது சாரணர்கள் வென்றுவந்தனர்.

அனைத்து சாரணப் பாடல் களையும் தொகுத்து எமது குழுச்சாரணத் தலைவர் புவன் நூல் வடிவில் 4ஆம் திகதி ஒக்டோபர் மாதம் முதல் பிரதியைப் பாடசாலை அதிபர் திரு. முத்துக் குமாரசுவாமியிடம் கையளித்ததன் மூலம் வெளியிட்டார். சிறப்புப் பிரதியை பெற்றோர் குழுமைச் சபைத்தலைவர் திரு விஸ்வகுமார் பெற்றுக் கொண்டார்.

அனைத்திற்கும் முத்தாப் பாய் எமது சாரணக்குழுவின் 20ஆம் ஆண்டு நிறைவு விழா ஒக்டோபர் 18ஆம் திகதி நடந்தேறியது. இதற்கும் பிரம விருந்தினராக கொழும்பு மாவட்ட ஆணையாளரான திரு அந்தனி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். கௌரவ விருந்தினர்களாக உதவி மாவட்ட ஆணையாளர் சிராசாலியும் முன்னாள் கழக ஆணையாளர் சம்ஊனும் அழைக கப்பட்டு இருந்தனர். 2ஆம் நாள் விழாவில் எமது குழுச் சாரணத் தலைவர் திரு புவனினால் எழுதப்பட்ட "சாரணர் சுற்கைநெறி" நூல் பலரது பராட்டிற்கு மத்தியில் வெளியிடப்பட்டது. இவ்விழா விற்கு சிறப்பு விருந்தினராக பிரதம சாரண ஆணையாளரான திரு. கமிலஸ் பெனான்டோவும் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட ஆணையாளர் திரு அந்தனி, உதவி மாவட்ட ஆணையாளர் திரு சிராசாலி ஆகியோர்கலந்து கொண்டனர்.

ஆண்டின் இறுதிப் பகுதியான டிசம்பர் மாதம் 13ஆம் திகதி எமது சாரணத் துருப்புத் தலைவரான மயூரனினால் திட்டமிடப்பட்ட சிரமதான நிகழ்வு ஒன்று தெகிவளை முதியோர் இல்லத்தில் எமது சாரணர்களால் சிறப்பாகச் செய்யப்பட்டது.

இறுதியாக எதிர்வரும் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள 5வது தேசிய ஜம்போறியிலும் கலந்து கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்கும் பல நிகழ்வு களை எதிர்வரும் ஆண்டுகளில் வெற்றி கரமாக நிகழ்த்தவும் எல்லாம் வல்ல வித்தக விநாயகரின் பேரருளை வேண்டிநிற்கின்றது.

# ADVANCED LEVEL STUDENT'S UNION

## WORKING COMMITTEE - 1997

| | | |
|---|---|---|
| Partron :- | Mr. T. Muththukumarasamy (Principal) | |
| Staff Advisors:- | Mr. K. Seyanthan | Mrs. P. Thangarajah |
| | Mr. N. Pirabaharan | Mr. K. Kalaharan |
| | Mr. K.Ramanaish | Mr. M. Vijayaratnam |

| | | |
|---|---|---|
| President | :- | S. Shiyamalan |
| V.President | :- | P. Navaneethan |
| Secretary | :- | K. G. Lakshman |
| V. Secretary | :- | J. Amirthapkumar |
| Treasurer | :- | S. Sivatharan |
| Editor | :- | S. Sivatharan |
| V. Editor | :- | S. Jenarththanan |

I take great pleasure in submitting the annual report of the Advanced level union for the year 1997. Our principal Mr. T. Muththukumarasamy allocated two periods for the union meeting at the beginning of the year itself and with the support and coperation of teachers made it possible to conduct meetings successfully.

A talk on" Human rights and the U.N.O" by Mr. V. T. Thamizh Maran Lecturer, the law faculty of the Colombo University, which was greatly appreciated by both the teachers and students.

An interesting lecture on "Cancer and its symptoms" was delivered by Dr. Vani Pillai of the Maharagama Cancer Hospital.

The third but not least intersting lecture was delivered by Mr. Perasiriyan, an Engineer on 'Air Pollution'.

The next lecture, most relevant to the student world was on "The proposed Educational Reforms", was delivered by Mr. S. Thanaraj N.I.E Project Officer at which students from ten schools participated at Saraswathy Hall.

On looking back we are proud as well as happy that the year '97 was most constructive and beneficial to the students as well as teachers.

***K. G. Lakshman***
Secretary

# SCIENCE UNION

| | | |
|---|---|---|
| Staff Adviser | :- | Mrs. N. Thirunavukarasu |
| President | :- | Mas. S. S. Kandeepan |
| Vice President | :- | Mas. P. Pranavan |
| Joint Secretaries | :- | Mas. S. R. T. Arulkumaran. |
| | | Mas. S. Yathukulan. |
| Asst. Secretary | :- | Mas. B. Balagajenthan |
| Treasurer | :- | Mas. S. Bhradeev |
| Asst. Treasurer | :- | Mas. R. Sutharsan |
| Editor | :- | Mas. T. Prasanth |
| Asst. Editor | :- | Mas. S. Pramekalan |

Committee Members:-

| | |
|---|---|
| Mas. S. Kamalkumar nair | Mas. K.Parthipan |
| Mas. P.Janahan | Mas. S. Thushyanthan |
| Mas. S. Prashanthan | Mas. M. Suntharavathanan |
| Mas. V. Nithipan | Mas Rufus. R.A.Rajanayagam |
| Mas. T. N. Subramaniyam | Mas. S. Mythriban |

The objective of this Union is to bring out the talents, personality traits and the skills of the students. The students are given chances and guidance through the activities of the Union. We conduct competitions for speech and essay to promote their talents.

We payed way for our students to participate in the seminars, debates and speech competitions conducted by the other schools and our students won prizes.

The science day was celebrated on a large scale by the Union. A science magazine was published to promote the creative talents and the technical advancements in science.

We encouraged our students to take part in the Quiz Competitions that was held by the All Island Science Development Association.Valuable books on physics, chemistry and biology were bought and donated by the union to the school. This is a great help for the students to clear the doubts that rise in the particular subjects. Seminars were conducted to Prevent Environmental Pollution and Dengue fever. An interesting lecture was on the topic "Ozone hole".

Our Union worked hard to prepare out students to face the challenges of the 21st century. We prepare them to be innovative and inventive citizen.

Finally we would like to thank our principal Mr. T. Muththukumarasamy , our teacher in charge Mrs. N.Thirunavukarasu and other teachers for all the valuable support and guidance given to us during the course of this period.

*S. S. Kandeepan*
President

The year under review was quite an active one for us. The term saw the formation of a board. For the Interact year 96/97 the board is as follows:

| | | |
|---|---|---|
| President | - | P. Navaneethan |
| Vice President | - | V. Naresh |
| Secreatary | - | N. Prabodharan |
| Treasurer | - | J. Megarooban |
| Editor | - | V. Muhilan |
| Sergeant at Arms | - | J. Amithapkumar |
| International Under standing Director | - | A. Prasana |
| Community Service Director | - | B.N. Mann |
| Finance Director | - | N. Mohankumar |
| Club Service Director | - | S. Sivamayuran |

The membership of our club stands at 60. The main project undertaken during this period was to organise an event called, 'Light in Life 97' to mark the occasion of Deepavali. The club held meetings regularly and discussed several projects which they hope to carry out in the year ahead.

Our members continue to participate in other functions organised by other schools. This provides them with opportunities to learn more about interaction

In conclusion, we like to thank our principal, staff advisors and our former office bearers for all their help and support.

***P. Navaneethan***
President

# ENGLISH LITERARY ASSOCIATION

During the period 1996-97 the association couldn't organise an English Day but produced Act one of Julius Caesar for the English Day Compertition. The cast put on a splendid performance but were not fortunate enough to get a place. The members of the committee screened a a series of Shakespeare's plays on the video, for the benefit of the students who study English Literature. We would like to thank the Teachers in charge Mr. J. P. Sukumaran and Mrs. M. Anandabaskaran for all their guidance and support.

The following students obtained prizes in the English Day competition held at the zonal level.

1. T. Kajan - First place in English Recitation
2. N. Pranavan - Second place in Recitation
3. Sathyajothan - Second place in Prepared Speech
4. U. Barath Umashankar - Second place in Dictation
5. T. Seralathan - Third place in Given Speech

***R. Sutharshan***
Secretary

# ST.JOHN AMBULANCE BRIGADE

## HINDU COLLEGE DIVISION

The Hindu College unit registered as Wellawatte Division continues to recruit and train more and more students providing better service to the school. Members take part in providing first aid services at sportsmeet and other special occasions inside the school and at Kovil festivals, Peraheras, Rugger matches, Karate tournaments, Hockey tournaments, etc., under Wellawatte division. While performing public duties, the Hindu College unit joins the other school units such as Hindu Ladies College, Wellawatte T.M.V, St Marys T.M.V units, etc.

From January 1997 when the Wellawatte division became a City Corps, the Hindu College unit became a division. Members over 16 years of age are attached to the adult division and engage in school duties.
The members under 16 years are under the Cadet division and engage in school duties only.

During the past five years, other than first aid services, the division has organized get- togethers, trips for the members and seminars for the senior school students. This year (1997), a three day education training camp was conducted by the Wellawatte City Corps for the Hindu College division in which nearly 90 cadet members and 30 adult members took part. In addition to the first aid activities, members take part in "Annual Inspection and Parade" organized at the provincial level and held at the police park Bambalapitiya in which all the divisions in the western province participate. It is an important event for all the members because, it is a must for their future activities and promotions. This year, for the third time the Hindu College division took part in Parade March together with the Hindu Ladies College division.

The Hindu College division is proud to have started a division of the St. Ambulance Brigade in the area by which the youngsters are motivated to serve the public while learning about mankind and mutual understanding among the members and elders. The first division started five years ago is now promoted as a City Corps having more powers and high ranking officers.

The Hindu College division is having 125 members and doing its best to the school and the public as well. We have many ideas to improve and widen the division in future.

## WESTERN BAND



## THE KARATE CLUB



## ST.JOHN AMBULANCE BRIGADE

### HINDU COLLEGE DIVISION






**BADMINTAN TEAM - 1997**

# SCIENCE UNION - 97

BOARD ADMINISTRATION



**Seated ( L -R )**

P.Janahan *(Committee)*, T. Prashanth *(Editor)*, S. Yathukulan *(Secretary)*, Mrs. N.Thirunavukarasu *(Staff Adviser)* S.S.Kandeeepan *(President)* Mr .T. Muthukumarasamy *(Principal)*, P. Pranavan *(Vice President)*, S. R. T. Arulkumaran *(Secretary)*, S. Kamal Kumar Nair *(Committee)*.

**Standing ( L - R )**

V. Balagajenthan *(Asst. Secretary)*, S. Premekalan *(Asst. Editor)*, V. Nithipan T.N. Subramaniyam, M. Suntharavathanan, R. R. A. Rajanayagam, K. Parthipan, S.Prashanthan, S. Thushyanthan, S. Mythriban *(Committee)*, S. Bhiradeev *(Treasurer)*, R. Sutharsan *(Asst. Treasurer)*,



Practical Session in the Chemistry lab



Active participation and involvement of the students during the practical session in the physics lab........

# INTERNATIONAL CULTURAL AND COMMON-WEALTH ASSOCIATION



**Seated ( L - R ):-**

K. Chutharsan (President), Mrs. S. Sivaraja (Vice Principal),
Mr. T. Rajaratnam (Vice Principal), Mr. K. Pakiyanathan (Teacher in charge),
Mr. T. Muthukumarasamy (Principal), J. Megaroopan (Secretary).

**Standing :- (L -R)**

J. Amithapkumar (V.Secretary), S. Sivamayuran (V.President), V. Muhilan (Treasurer), A.Prassana (Editor).

# PEACE AND FRIENDSHIP ASSOCIATION- 1997



**Seated:- ( L - R )**

Mr.T. Rajaratnam (Vice Principal), S. Balamaran (Secreatary),
Mr. T. Muthucumarasamy (Principal), S. Mythriban (President),
Mr. K. Ramanaish (Staff Adviser), S. Bhradeev.

**Standing:- ( L - R )**

R. Sutharsan, T. Ananthan, J. Santhypoosan, R. Ramesh, T. Prasanth.

# ADVANCED LEVEL UNION
## (WORKING COMMITTEE - 1997 )



**Seated ( L - R ):-**

Mrs. P. Thangaraja (Teacher in charge), K.G.Luxman (Secretary),
Mr. T. Muthukumarasamy (Principal), Mr. K. Seynthan (Teacher in charge).

**Standing ( L - R ):-**

S. Sabesan, J. Amirthapkumar, P. Navaneethan.

# DRAMA AND THEATRE ASSOCIATION



**Sitting ( L - R ):-**

S. Dineshan, Ramanan, I. Gajamugan, P. Sathies (President),
Mr. T. Muthukumarasamy (Principal), Mr. T. Dauglas (Teacher in charge),
T. Suresh, G. Sujeevan Sharma (Treasurer), R. Ramash, P. Suthagar.

**Middle ( L - R ):-**

B. Sathyojathan, N. Thananchayan, L. Gokulan, Vishnunath, T. Thirukkumar,
S. Sayanthan, S. Gajanan, Yogendra Prasath, N. Indragith, A. Sanjeevganthi,
Luxmanan, Jayaram.

**Rear Stand ( L - R ):-**

S. Suganthan, S. Prashanthan, A. Sivaram, Harankumar, M. Gajenthiran,
V. Thesikan, E. Sayanthan.

# PEACE AND FRIENDSHIP CLUB

| | | |
|---|---|---|
| Patron | :- | Mr. T. Muthukumarasamy (Principal) |
| V. Patron | :- | Mr. T. Rajaratnam |
| Staff Adviser | :- | Mr. K. Ramanesh |
| President | :- | Mas. Subramaniam Mythriban |
| V. President | :- | Mas. Ramakrishnan Sutharsan |
| Secretary | :- | Mas. Sivaloganathan Balatharan |
| Asst. Secreatary | :- | Mas. Jeyabalan Shanthypoosan |
| Treasurer | :- | Mas. Sivasambu Bhradeev |
| Asst. Treasurer | :- | Mas. Thiyagalingam Prasanth |
| Editor | :- | Mas. Ramesh Rajasooriyar |
| Asst. Editor | :- | Mas. Thilainathan Anandhan. |
| | | Mas. Shanmugalingum Ahilan |

Peace and Friendship Club was started very recently to create an awareness among the students about the importance and value of peace and friendship.

The club organized a joint cultural function along with Lumbini Mahavidyalaya and Colombo Muslim Ladies College at our college Hall.

It really gave us a chance to build up a good relationship with other communities.

We would like to thank our Teacher in charge Mr. Ramanesh for the valuable support and guidance he gave us.

*S. Mythriban*
President

# KARATE CLUB

The Karate Club of Hindu College was started in June 1997.

Practices continue every wednesdays and a healthy membership is maintained. The Instructor in Charge Dr. V. Thanarajah J.P takes keen interest in training the students.

Our sincere thanks go to the Chief Instructor Swarnaraja and other instructors Ramesh Rajasooriyar and S.L.S Mathurshan. We thank our Teacher in Charge Mr. R. T. Douglas for his untiring efforts invaluable to the club.

President

# ஆசிரியர்கழக நிர்வாகக்குழு
## உறுப்பினர்கள்

| | |
|---|---|
| தலைவர்:- | திருமதி. H. சிவகிரி |
| உப தலைவர்:- | செல்வி. S. பொன்னுத்துரை |
| செயலாளர்:- | திருமதி. L. செல்வலிங்கம் |
| உப செயலாளர்:- | திருமதி. J. கிருபானந்தமூர்த்தி |
| பொருளாளர்:- | திருமதி. T. நல்லநாதன் |

## ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திரு. M. விஜயரெட்ணம் | திரு. S. தயாபரன் |
| திரு. ஈஸ்வரதாசன் | திரு. கருணாநிதி |
| திருமதி. K. குமாரலிங்கம் | திருமதி. P. ஞானலிங்கம் |

எமது கழகத்தின் ஆட்சிக்குழு ஆசிரியை திருமதி சிவகிரி தலைமையில் தனது செயற்பாடுகளை 97 ஜூலை மாத நடுப்பகுதியில் ஆரம்பித்தது. ஆசிரியர்களிற்கிடையே புரிந்துணர்வையும், சிநேக மனப்பாங்கையும் ஏற்படுத்தி அனைத்து ஆசிரியர்களினதும் சுகதுக்கங்களில் பங்குபற்றியது.

ஆசிரியர் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மதிய போசன விருந்து டிசம்பர்- 10ஆம் திகதி புதன்கிழமை பாடசாலையில் 97 ஆம் ஆண்டுக்குரிய இறுதி நாளன்று ஆராதனை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஆசிரியர் கழகத் தலைவர் திருமதி. சிவகிரி தலைமை வகித்து தமது உரையில் ஆசிரியர்கள் புரிந்துணர்வுடனும் சகோதரத்துடனும் செயற்படுவதையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டார்.

அதிபர் தனது உரையில் இவ்வருடமும் எமது ஆசிரியர்கள் திறம்பட செயற்பட்டுள்ளார்கள் எனப் பாராட்டியதுடன் இவ்வாறான நிகழ்வுகள் தொடர வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய ஆசிரிய கழக நிர்வாக சபை உறுப்பினர் திரு. இ ஈஸ்வரதாஸன் கொழும்பு இந்து, சமூகத்தில் பெற்றோர் ஆசிரியர் உறவு, ஆசிரியர் ஆசிரியர் உறவு, ஆசிரியர் அதிபர் உறவு, வலிமையானதாக அமைதல் வேண்டும் இதன் மூலம் சமூக வளர்ச்சியை சிறப்பாக்கலாம் எனக் குறிப்பிட்டார்.

இறுதியில் ஆசியர் கழக நிர்வாக உறுப்பினர் திரு. தயாபரன் அவர்களின் நன்றியுரையும் அடுத்து மதிய போசனமும் இடம் பெற்று நிகழ்வு இனிது நிறைவு பெற்றது.

செயலர்
ஆசிரியர் கழகம்

# TEACHERS' GUILD

## ACTION COMMITTEE



**Seated ( L - R ):-**

Mrs. T. Nalainathan (Treasurer), Mrs. Sivakiri (President),
Mr. T. Rajaratnam (Vice Principal), Mr. T. Muththukumarasamy (Principal),
Mrs. L. Selvalingam, Mrs. P. Gnanalingam, Mrs. J. Kirubananthamoorthy.

**Standing ( L - R ):-**

Mr. Karunanithy, Mr. Eswarathasan, Mr. M. Vijeyaratnam,Mr. S. Thayaparan.

**Absent:-**

Mrs. K. Kumaralingam, Miss. S. Ponnuthurai.

# TRAFFIC SQUAD



**Standing:- ( L - R )**

S. Arunkanth, C. Lingeswaran, N. Sasivarma, L. Rishikeshan, S. Sutharsan, A. Nihal Chandrasegram, K. Neresh, S. Senthurkumaran, V. Kugathasan.

**Seated:- ( L - R )**

M. Niroshan, Mr. T. Rajaratnam (Vice President), R. Ramesh (Incharge), Mr. T. Muthukumarasamy (Principal), T. Thevaranjan (Incharge), Mr. S. Sivakrishnamoorthy (Teacher in charge), K. Chutharsan (Incharge).

# இந்துவின் ஆசிரியர் கழகம் 24/07/1997 நடாத்திய ஆசிரியர் பிரிவுபசார விழாவில் பிரதி அதிபர் க.த. இராஜரட்ணம் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து ஒரு பகுதி

*கழகத் தலைவர் அவர்களே இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினர்களான எமது அன்புக்குரிய ஓய்வுபெறும் ஆசிரியர்களே, கல்லூரி முதல்வர் அவர்களே, ஆசிரியர்களே உங்கள் அனைவருக்கும் எனது மாலை வணக் கங்கள்.*

*அரிது அரிது மானிடனாகப் பிறப்பது. மானிடப் பிறப்பிலே ஆசிரியனாக பணி புரிவதற்கு நாம் கொடுத்து வைத்திருக்கவேண்டும். ஏனெனில் ஆசிரியர்கள் மற்றவர்களைக் கரைசேர்க்கும் தோணிகள், மற்றவர்களை உயர்நிலைக்கு ஏற்றிவிடும் ஏணிகள், தன்னை உருக்கி மற்றவர்களுக்கு உயிர்கொடுக்கும் ஒளி விளக்குகள், அன்பின் உறைவிடங்கள், பாசத்தின் இருப்பிடங்கள், அறிவு சுரக்கும் அருவிகள், திறன்களை வளர்க்கும் திறனாளர்கள், நல்மனப்பாங்கை விருத்தி செய்யும் கலாச் சாரக்காவிகள், விடயச் சிறப்பறிஞர்கள், நடுநிலை நின்று தீர்ப்புவழங்கும் நீதிபதிகள், நல்ல உளமருத்துவர்கள், பாடசாலைச் சமூக இணைப்பாளர்கள், சமூக விஞ்ஞானிகள், நலன்புரி அலுவலர், மாற்றங்களை ஏற்படுத்துபவர்கள் என்றெல்லாம் போற்றப்படுகின்றனர்.*

*மேலே சொன்ன அணிஉரைகளையெல்லாம் ஓர் ஆசிரியன் பெற வேண்டுமாயின் ஓர் ஆசிரியன் தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் காலம் தவறாது செய்ய வேண்டும். அவ்வாறு தொழிற்படாதவர்களாலேயே ஆசிரியர் சமூகத்திற்கு இழுக்கு ஏற்படுகின்றது.*

*எம்மத்தியில் பாடங்களை மட்டும் கற்பிப்பவர்கள் உள்ளனர்; மாணவனை மட்டும் கற்பிப்பவர்கள் உள்ளனர்; பாடங்களையும், மாணவனையும் கற்பிப்ப வர்கள் உள்ளனர். இவர்களில் மூன்றாம் வகையைச் சார்ந்தவர்களே நல்ல ஆசிரியர்கள் என சமூகத்தால் போற்றப் படுகின்றனர்.*

*இங்கு மேடையில் காட்சிக்கு எளியராய் வீற்றிருக்கும் அனைவரும் எமது பாடசாலையின் உயர்ச்சிக்காக உழைத்து மாணவ மனங்களிலும், பெற்றோர் மனங்களிலும் தமக்கென தனியான ஓர் இடத்தைப் பெற்றவர்கள் ஆவர்.*

*திருமதி. லில்லி சுப்பிரமணியம் அவர்கள் 35 வருடகால ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்தவர். அதில் எமது கல்லூரியில் 17 வருடம் கடமை செய்துள்ளார் இவர். நான் இந்தப் பாடசாலைக்கு வரும்போதே (1984) ஆரம்பப்பிரிவில் போதனையாளராகக் கடமை ஆற்றினார். 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர் களை ஆயத்தம் செய்து நல்ல பெறுபேறுகளைப் பெற்றுத்தந்தவர். மாணவர்களின் ஒழுக்கம், விழுமியம் பேணல் போன்றவற்றை மேம்படுத்துவதில் அக்கறை உடையவர். பாடசாலையில் நடைபெறும் கலைமகள்விழா, தமிழ் விழா போன்றவற்றில் தரமான சிறுவர் நாடகங்களை மேடை ஏற்றியவர். எனவே இவர் ஓய்வு பெறுவது எமது பாடசாலைக்குப் பெரும் இழப்பாகும். அவர் வாழ்வு நலம் பெறப் பாடசாலையின் சார்பில் வாழ்த்துகின்றேன்.*

திரு. ஜீவரட்ணகுமார் அவர்கள் ஏறத்தாழ 14 வருட ஆசிரியர் சேவையைப் பூர்த்திசெய்தவர். இவர் எமது கல்லூரியில் 7 வருடங்கள் சேவையாற்றியுள்ளார். சிறந்த கணித ஆசிரியர், பேச்சாளன், கவிஞன், நாடகவாளர், அறிவிப்பாளர் போன்ற சிறப்புக்களைப் பெற்றவர். இவர் எமது கல்லூரியில் நடைபெறும் கலைமகள் விழா, தமிழ் விழா போன்றவற்றில் மாணவர் களை நாடகம், விவாதம், பேச்சு போன்றவற்றில் பயிற்றுவித்து மேடையேற்றி மாணவர்களின் கலை உணர்வுகளின் விருத்திக்கு உதவியவர். இந்துக்கல்லூரி விளையாட்டுப் போட்டிகளில் அவருடைய கணீர் என்ற குரல் ஒலிப்பதை நாம் மறக்கமுடியாது. பாடசாலை நிர்வாகத்தின் செயற்பாடுகளைச் சமூகத்திற்கும், சமூக விருப்புகளைப் பாடசாலைக்கும் கொண்டு செல்வதில் முன் நின்று உழைத் தவர் இவர். ஆசிரியர் சேவையை இடையில் விட்டு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன த்தில் நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளராகச் செல்கின்றார் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். இவருடைய வாழ்வும் தொழிலும் நலம் பெற எமது பாடசாலையின் சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

திருமதி. சிறியோகநாதன் அவர்கள் 25 வருட ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்துள்ளார். இவர் எமது கல்லூரியில் 7 வருடங்கள் கடமையாற்றியுள்ளார். மாணவர்களால் மதிக்கப்படும் நல்ல விஞ்ஞான ஆசிரியர். பாடசாலையின் ஏனைய தொழிற்பாடுகளிலும் எந்நேரமும் மனம் கோணாது தொழிற்படுபவர். இவரும் தனது குடும்பநலன் கருதி ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார். அவரும் நல்வாழ்வு பெற இந்துவின் சார்பில் எமது வாழ்த்துக்கள்.

திரு. வரதராஜன் அவர்கள் எமது கல்லூரியில் 7 வருடங்கள் சேவை செய்து ள்ளார். இவர் தனது சொந்த ஊரான கல்முனைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கிறார். இவர் உயிரியியல் விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்த சிறந்த ஆசிரியர் ஆவார். இவர் மாணவர்களைப் பாடங்கள் தவிர்ந்த புறக்கிருத்தியச் செயற்பாடுகளிலும் செயற்படுத்தி மாணவர்கள் மத்தியில் மதிப்புப் பெற்ற ஒருவர் ஆவார். அவருடைய சேவை சிறப்புற்றுத் தொடர பாடசாலையின் சார்பில் வாழ்த்துகிறோம்.

திரு பாக்கியராஜா அவர்கள் 26 வருட ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்துள்ள அனுபவம் மிக்க ஆசிரியர். இவர் எமது கல்லூரியில் 6 வருடங்கள் கடமையாற்றி மாணவ உள்ளங்களில் இடம் பிடித்த சிறந்த கணித ஆசிரியர் ஆவார். இந்துவின் தமிழ் மன்றத்தின் பொறுப் பாசிரியராக இருந்து மாணவர் களை நல்ல முறையில் வழி நடத்தியவர். பாடசாலை நிர்வாக வேலைகளை ஒழுங்காகவும் இலகுவாகவும் செய்வதற்குப் பாடசாலை நிர்வாகத்துக்குப் பல்வேறு வழிகளிலும் உதவியவர் இவர். ஆசிரிய தொழிலின் ஓய்வின் பின்னுள்ள ஓய்வு காலம் நலம் பெற நலமான நல்வாழ்த்துக்களைப் பாடசாலையின் சார்பில் வழங்குகின்றோம்.

செல்வி இராஜதுரை அவர்கள் 21 வருட ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்தவர். எமது கல்லூரி 6 வருடங்கள் கடமையாற்றியுள்ளார். இவர் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் இரசாயனக் கல்வி போதித்தவர்களுள் மாணவர்களால் பெரிதும் விரும்பப்பட்ட ஆசிரியர் ஆவார். எமது கல்லூரியிலும் உயர்ந்த மாணவர்கள்

மத்தியில் விருப்பத்துக்குரிய ஆசிரியையாகத் திகழ்ந்தவர். விஞ்ஞான அறிவுப் போட்டி போன்றவற்றில் மாணவர்களைப் பயிற்றுவித்துப் பல்வேறு போட்டிகளில் எமது மாணவர்களை வெற்றி பெறச் செய்து பாடசாலைக்கு நற்பெயரைப் பெற்றுத்தந்தவர். இவருக்கும் எமது பாடசாலையின் சார்பில் வாழ்வு வளம் பெற வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்.

செல்வி குமாரசுவாமி அவர்கள் எமது பாடசாலையில் ஏறத்தாழ 6 வருடங்கள் சேவையாற்றியவர். இவர் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குப் போதனையை மேற்கொண்ட ஒரு சிறந்த ஆசிரியராவார். வெளிநாடு செல்வதற்காகத் தனது பதவியிலிருந்து இளைப்பாறியவர். அவரது வெளிநாட்டு வாழ்வும் வளம் பெறப் பாடசாலையின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

திரு செந்தூர் வேல் அவர்கள் ஏறத்தாழ 14 வருடங்கள் ஆசிரிய சேவை அனுபவம் உள்ளவர். அதில் எமது கல்லூரியில் 4 வருடங்கள் சேவை செய்துள்ளார். இவரும் சிறந்த கணித ஆசிரியர் ஆவார். மாணவர்கள் மத்தியில் விருப்பத்துக்குரிய ஆசிரியராகத் திகழ்ந்ததுடன் இந்து மன்றத்தின் பொறுப்பாசிரியராக இருந்து அதனைச் சிறந்த முறையில் வழிநடத்தியதுடன் அதன் மூலம் மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகளையும் செம்மையாக வழிநடத்தியவர். எமது மாணவர்களின் துடுப்பாட்டத் துறைக்குப் பொறுப்பாக இருந்து பல்வேறு வழிகளிலும் எமது மாணவர்களது முன்னேற்றத்திற்கு வழிவகுத்தவர். மேலும் பாடசாலையைச் சமூகத்துக்குள்ளும் சமூகத்தைப் பாடசாலைக்குள்ளும் கொண்டு வருவதன் மூலம் பாடசாலைச் சமூக உறவுகள் விரிவடைவதற்கு உதவியவர். ஆசிரியர் கழகம் நடாத்தும் பல்வேறு நிகழ்வுகளின் பல பழைய பாடல்களைப் பாடிப் பலரது பாராட்டுக்களையும் பெற்றவர். இவருக்கும் எமது பாடசாலையின் சார்பில் மனமுவந்த நல்வாழ்த்துக்களை வழங்குகின்றோம்.

திருமதி விஸ்வலிங்கம் அவர்கள் 25 வருடகால ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்தவர். எமது கல்லூரியில் 4 வருடங்கள் கடமையாற்றியுள்ளார். இவர் சிறந்த கணித ஆசிரியை ஆவார். இவர் கல்வி கற்பிக்கும் போது வகுப்பில் மாணவர்கள் உற்சாகத்துடன் தொழிற்படுவதைக் காண முடியும். மாணவர்களது விருப்பத்திற்குரிய ஆசிரியர் இளைப்பாறுவது எமக்குப் பெரும் இழப்பாகும். எனினும் அவர் தனது குடும்ப நலன் கருதி இவ்வோய்வைப் பெறுகின்றார். அவரையும் பாடசாலையின் சார்பில் வாழ்வாங்கு வாழ வாழ்த்து கின்றோம்.

திரு R.R சிறீதரன் அவர்கள் எமது பாடசாலையில் 4 வருடங்கள் கடமை புரிந்துள்ளார். இவர் சிறந்த கணித ஆசிரியர். மாணவர்களால் விரும்பப்பட்ட ஓர் ஆசிரியர். பாடசாலையின் நிர்வாகச் செயற்பாடுகளுக்குப் பல வகையிலும் தனது ஒத்தாசைகளைத் தந்தவர். இவர் இரத்மலானை இந்துக் கல்லூரிக்கு இடம் மாற்றம் பெற்றுச் செல்கின்றார். இவருடைய பணிகள் தொடர்ந்தும் நல்ல முறையில் அமைய வேண்டும் என எமது கல்லூரி வாழ்த்துகிறது.

திருமதி நாகராஜா அவர்கள் 30 வருட ஆசிரிய சேவை அனுபவத்தைக்

கொண்டவர். எமது கல்லூரியில் 4 வருடங்கள் சேவையாற்றியவர். ஆரம்ப ப்பிரிவு மாணவர்களால் மிக விரும்பப்பட்ட ஆசிரியர்களில் இவரும் ஒருவர். இவருக்கும் பாடசாலையின் சார்பில் எமது மனமுவந்த வாழ்த்துக்களை வழங்குகின்றோம்.

திருமதி சோமசுந்தரம் அவர்கள் 21 வருட கால ஆசிரிய அனுபவம் உள்ள ஓர் ஆசிரியர். இவர் 3 வருட காலம் எமது கல்லூரியில் கடமையாற்றியுள்ளார். ஆரம்பப் பிரிவில் கற்பித்தபோதும் தான் ஓய்வு பெறுவதற்கு முன் பொரு ளியல்துறையில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத் தக்கது. அவருக்கும் பாட சாலையின் சார்பில் எமது மனமுவந்த வாழ்த்துக்கள்.

திருமதி தனபாலசிங்கம் அவர்கள் ஏறத்தாழ 12 வருடங்கள் ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்துள்ளார். இவர் ஆரம்பபிரிவில் எமது மாணவர்களை நெறிப்படுத்துவதில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளார். இவருடைய ஓய்வுகால வாழ்வு வளம் பெற எமது நல்வாழ்த்துக்கள்.

திரு சண்முகரட்ணம் அவர்கள் ஏறத்தாழ 30 வருட ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்த அனுபவம் மிக்க ஒருவர். இவர் பௌதீகத்துறையில் தேர்ச்சி பெற்றவர். பௌதீக ஆசிரியர்களுக்கு பல சேவைக்காலப் பயிற்சிகளை வழங்கியவர். பலாலி ஆசிரியர் கலாசாலையில் போதனையாளராகக் கடமை ஆற்றியவர். தேசிய கல்வி நிலையத்தில் பௌதீகம் தொடர்பாக கருத்தரங்குகளை நடாத்து வதற்கு உதவியவர். அத்துடன் இவர் சிறந்த உடற்கல்வி ஆசிரியரும் ஆவார். எமது கல்லூரியில் குறைந்தகாலமே கடமை ஆற்றிய போதும் மாணவர் மத்தியிலும் ஆசிரியர் மத்தியிலும் நல்ல மதிப்பைப் பெற்றவர் ஆவார். இவருடைய ஆசிரியர் சேவையை பாராட்டுவதுடன் எமது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

திரு மனோகரன் அவர்கள் 23 வருட ஆசிரியர் சேவை அனுபவம் உள்ளவர். இவர் எமது பாடசாலையில் சிறிது காலம் தான் சேவை செய்துள்ளார். அக்காலத்தில் எல்லா மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் விரும்பப்பட்ட ஒருவராவார். இவருடைய ஓய்வு காலம் வளமாக அமைய வளமான வாழ்த்துக்கள் பல நல்குகின்றோம்.

## ஆரம்ப பிரிவு கலைமகள் விழா



முதன்மை விருந்தினர் திரு சண்முகசர்மா(உதவிக் கல்விப்பணிப்பாளர்) திருமதி சண்முகசர்மா அவர்களை பிரதி அதிபர் திருமதி த.சிவராஜா ஆசிரியாகள் மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்கின்றனர்

# FAREWELL !

**To**
**Mrs. P. Rajendram**



Mrs. P. Rajendram has been a teacher for thirty six years. She joined the tutorial staff of Hindu College on 5th June 1977. She has been a dedicated teacher and a strict disciplinarian. Over the years, her students have obtained good results at the ordinary level examination.

In further recognition of her dedication, she was appointed Sectional Head in 1986, which position she held until her retirement on 17th December 1997. She has been responsible for preparing neccessary application forms for G.C.E (O/L) students to obtain their National Identity Cards. She has won the hearts of thousands of pupils through her selfless service and devotion to duty.

She has tremendous responsibility in moulding the character of many students and teaching them the Hindu traditions and values.

" Our Best wishes go out to her on her happy life of retirement"

# இந்துக்கல்லூரி சாரணர் குழு 1997



**மேல்வரிசை:-**

S. பிரசாந்தன், S. யதுகுலன், P. டெனிஸ், S. ரொசாந்தன், Y. கோபன், S.அனோஜன், J. தர்ஷன், S. விபூஷணனன், M. நிமலப்பிரகாஷ்.

**2வதுவரிசை:-**

S. கேசவன், S. பிரகலாதன், N. திருபரன், M. ஐங்கரன், J. பிரதீபன், V. வசந்தன், K. யுவராஜ், S. சுதர்சன், M. லக்ஷயன், S. சாரங்கன், T. துதிலன்.

**3வதுவரிசை:-**

K. ஜெகதீபன், S. லாவர்ணன், N. கோபிதரன், S. தினேஷ்குமார், S. கிஷோ, S, பிரதீஸ்,M. பாலகஜன், N. மகேந்திரன், V. வர்ஷன்.

**அமர்ந்திருப்போர்:-**

V. அரவிந்தன்(குருளைச்சாரணத்தலைவர்), திருமதி. தேவராஜா(பொறுப்பாசிரியை), திரு.T. முத்துக்குமாரசுவாமி (அதிபர்), S. புவன்(குழுச்சாரணத்தலைவர்), B. சசிகரன்(உதவி குருளைச்சாரணத்தலைவர்).

**கீழ்வரிசை:-**

P. ஜெயரமேஸ், M. நிரோசன், T. தினேஸ், B. சத்தியன், L. லோகதர்ஷன், B. சயந்தன், V. கிஷாந்தன், S. பிரதிஸ்.

## தமிழ் இன்னிய அணி



## பல்லிய வாத்தியக்குழு



# ENGLISH LITERARY ASSOCIATION



**Seated ( L - R )**

Mr. J. P. Sukumaran (Staff Adviser), Mr. T. Rajaratnam (Vice President),
Mas. N. Sutharshan (Treasurer), Mr. T. Muthukumarasamy (Principal),
Mas. S. Mahendrakumar (Vice President),
Mrs. M.Ananda Baskaran (Teacher in charge), Mas. R. Sutharshan (Secretary).

**Standing ( L - R )**

J.Shanthy Poosan, T. Ananthan, R. Rajasooriyar,
S. Balatharan (Members of the Association).

## Donation of Science Equipments by
## CANADA OLD BOYS ASSOCIATION





COMPUTER UNIT HINDU COLLEGE

## "சாரணர் கற்கை நெறி" - வெளியீடு





முதலாவது புகைப்படத்தில் பிரதமவிருந்தினரான பிரதம சாரணஆணையாளர் திரு.கமிலஸ்பெனான்டோ மங்கள விளக்கேற்றுவதையும் 2வது புகைப்படத்தில் முதல் பிரதியை சாரணத்தலைவர் புவனிடமிருந்து பெற்ற, பிரதம ஆணையாளர் அவரை வாழ்த்துவதையும் அருகே பாடசாலை அதிபரையும் அவதானிக்கலாம்.

இந்துக்கல்லூரி பழைய மாணவரும்
பச்சைக்கயிறு, ஜனாதிபதிவிருது, தருசின்னம் ஆகியவற்றை வென்றவரும்
தற்போதைய இந்துக்கல்லூரிச் சாரணக் குழுத்தலைவருமான
சுப்பிரமணியம் புவனினால் எழுதப்பட்ட சாரணர்களுக்கான முதற்தமிழ் நூலான
"சாரணர் கற்கைநெறி"
பிரதம சாரண ஆணையாளர் திரு. கமிலஸ் பெனான்டோவினால்
9/10/97 அன்று கோலாகலமாக வெளியிடப்பட்டது. இவ்விழா கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. முத்துக்குமாரசுவாமியின் தலைமையில் நடைபெற்றது.

# UNITED NATIONS YOUTH ASSOCIATION



**Seated:- ( L - R )**

A. Prassana (President), Mrs. S. Sivaraja (V.ice Principal),
Mr. T. Rajaratnam(Vice Principal), Mr. K. Pakiyanathan
Mr. T. Muthukumarasuwamy (Principal),
J. Megarooban (Secretary).

**Standing:- ( L - R )**

J. Amithapkumar (Editor), S. Sivamayuran (V. Secretary) ,
V. Muhilan (V.President) , S. Suthakar (Treasurer).

# புதிய காக்கைகளும் பழைய நரிகளும்

*சிறுகதை*

ஒரு மரத்தில் ஒரு காக்கையும் அதன் குஞ்சுகளும் வசித்து வந்தன. ஒருநாள் அதன் குஞ்சுகள் பசியால் வாடி வருந்தின. அதைக்கண்ட காகத்திற்கு பொறுக்க முடியவில்லை. உடனே உணவுதேடி அலைந்தது. அப்பொழுது அங்கே ஒரு தண்டவாளக் கரையிலே ஒரு பாட்டி வடை சுட்டுக் கொண்டிருந்தார். அதைக் காகம் கண்டது. அதற்குக் களவெடுக்கவும் மனம் வரவில்லை. அதனால் சிறுகுச்சிகளை சிறிய சிறிய கட்டுக்களாகக் கட்டி அதனை பாட்டியிடம் எடுத்துச் சென்று குச்சிகளை எடுத்துக் கொண்டு இரண்டு வடை தருமாறு பாட்டியிடம் கேட்டுக்கொண்டது. பாட்டியும் அவற்றை வாங்கிவிட்டு இரண்டு வடைகளைக் கொடுத்தார். காகம் அதனை வாங்கிக் கொண்டு ஒரு மரத்தில் இருந்தது. அதற்கும் சரியான பசி. அது இரண்டு வடைகளில் ஒன்றைத் தானும் சாப்பிட்டு விட்டு ஒன்றைக் குஞ்சுகளுக்கு வைத்திருந்தது. அப்பொழுது நரி ஒன்று அங்கு வந்து காக்கையிடம் உள்ள வடையை எடுப்பதற்கு திட்டம் தீட்டியது. அது காக்கையைப் பார்த்து உன்குரல் மிகவும் இனிமையானது. அதனால் நீ ஒரு பாட்டுப்பாடு என்றது. காகத்திற்கு இப்படி முன்னொரு காகம் நரியிடம் ஏமாந்தது நினைவுக்கு வந்தது. அது உடனே பறந்துசென்று தனது குஞ்சுகளுக்கு வடையை உண்ணக்கொடுத்துவிட்டு மற்றக்காகங்களை எல்லாம் கூட்டி அங்கு நடந்த கதையைக் கூறி அந்த நரிகளையெல்லாம் அழிக்க வேண்டும் என்று கூறியது. அதற்கு ஒரு காகம் நாம் எல்லாம் பறந்து சென்று கொத்தி நரிகளை எல்லாம் அழிப்போம் என்றது. அதற்கு மற்றக் காகங்களெல்லாம் சம்மதித்தன. அடுத்த நாள் எல்லாக் காகங்களும் ஒன்று சேர்ந்து பறந்து நரிக்கூட்டத்தைக் கொத்தின. வேதனை தாங்கமுடியாத நரிகள் எல்லாம் ஓடத்தொடங்கின. அதைக் கண்ட காகங்கள் எல்லாம் தங்கள் இடத்தை நோக்கிப்பறந்தன.

சிவலிங்கம் வைகுந்தன்
ஆண்டு 3 E.

## எனது இலட்சியம்

அரிது அரிது மானிடராதல் அரிது. அரிய மானிடராகப் பிறந்த எமக்கு ஓர் இலட்சியம் இருக்க வேண்டும். இலட்சியம் இல்லாதவர் ஆழ்கடலில் துடுப்பற்ற படகு போன்றவர். ஒவ்வொரு மனிதரும் இலட்சியங்கள் மூலம் உயர்ந்த நோக்கை அடைமுடியும். எனது இலட்சியம் மருத்துவராக வர வேண்டும் என்பதே.

நான் கல்வியில் முன்னேறி மருத்துவராகி மக்களுக்கும், தாய் நாட்டுக்கும் சேவையாற்ற விரும்புகின்றேன். ஆரம்ப அடிப்படை வசதிகள் கூட இல்லாத கிராமங்களில், அல்லது போர்ச் சூழல் நிறைந்த வடக்குக்கிழக்குப் பிரதேசங்களில் வைத்திய தேவையை வேண்டி நிற்கும் வேளையில் உயிரைக்கூட துச்சமென மதித்து இனமத பேதமின்றி சேவையாற்ற வேண்டும். இவ்வாறு மக்களுக்கு சேவை செய்வதிலேயே எனது இலட்சியம் நிறைவு பெற வேண்டும் என வேண்டுகிறேன்.

ஞானசேகர் கிசோக்குமார்
ஆண்டு 3 E.

## கல்வியின் சிறப்பு

உலகில் இருவகைச் செல்வங்கள் உள்ளன. ஒன்று கல்விச்செல்வம் மற்றையது பொருட் செல்வம். பொருட் செல்வம் பிறருக்குக் கொடுக்குந்தோறும் குறைவுபடும். நீரா லும், நெருப்பாலும் அழியக் கூடியது பிறரால் கவரக் கூடியது. ஆனால் கல்விச்செல்வமோ அழிவற்றது. நீராலோ, நெருப்பாலோ அழியாதது. கள்வரால் களவாட முடியாதது. பிறருக்குக் கொடுக்கும் தோறும் பெருகிக் கொண்டே செல்லும். இதனாற்தான் கல்விச் செல்வத்துக்கு நிகரான செல்வம் வேறில்லை என்று நம் முன்னோர் போற்றினர்.

மனிதரிடத்துள்ள அறியாமையைப் போக்கி அறிவு ஒளி ஊட்டுவது கல்வி. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. கற்றறிந்தவனே கண்ணுடையவனெனக் கருதப்படுவான்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்று நம் முன்னோர் கூறியுள்ளனர். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்கவேண்டியவற்றைக் கற்று கற்ற நெறிப்படி ஒழுக வேண்டும். இதனையே திருவள்ளுவரும்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" என்றார்.

ச. விசாகன்
ஆண்டு 4 F.

# உலகம் கண்ட உத்தமர் காந்தியடிகள்

காந்தியடிகள் வட இந்தியாவில் உள்ள குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னும் கிராமத்தில் 1869 ஆம் ஆண்டில் ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி பிறந்தார். தாய், தந்தை பெயர் கரம்சந்து காந்தி, புத்தலிபாய், இவருக்கு காந்தி என்பது குடும்பப்பெயர். இவர் சிறுவயதிலே பெற்றோரிடம் அளவற்ற பக்தி கொண்டவர்.

இந்திய சுதந்திரத்துக்குப் போராடினார். "வெள்ளையனே வெளியேறு" என்று கூறி உண்ணா விரதம் இருந்தார். எப்பொழுதும் உண்மையும் அன்புமே வெற்றியளிக்கும் என்று நம்பினார். 1947 இல் ஆகஸ்ட் 15இல் இந்தியா சுதந்திரம் அடைந்தது. காந்தி மகான் 1948 ஜனவரி 30ஆம் நாள் நாதுராம் விநாயககோட்சே என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். காந்தி மரணம் கேட்டு உலகம் கண்ணீர்வடித்தது.

மக்களுக்கு உயர்வு தாழ்வு இல்லை. ஆண்டவன் படைப்பில் எல்லாரும் சமம். வேற்றுமை இன்றி வாழவேண்டும். ஏழைகளுக்குத் தொண்டு புரிய வேண்டும் என்பன காந்தியின் கொள்கை. அவரை உலகம் மகாத்மா என்று போற்றுகின்றது.

பிரேம்குமார் சஜித்
ஆண்டு 3 E.

# கல்வி

கண் இன்றியமையாத ஓர் உறுப்பாகும். கல்வியும் கண்ணைப் போன்று சிறந்தது; உயர்ந்தது. கல்வி அறிவு உடையவர்களே கண்ணுடையர். ஏனையோர் கண்ணிருந்தும் அஃதில்லாராகக் கருதப்படுவர். நல்ல முகதலைப்புள்ள ஆடைகளை உடுக்கின்றோம். அரிய வேலைப்பாடு அமைந்த அணிகலன்களைத் தெரிந்தெடுத்து அணிகின்றோம். அவை எல்லாம் அழகு என்று கூறுவதற்கில்லை. கல்வி அழகு ஒன்றே சிறந்தது; நிலையானது.

செல்வப் பொருள் சிறந்ததாயினும் பிறருக்குக் கொடுக்கும் தோறும் குறைந்து கொண்டே போகும். அது அரசராலும், கள்வராலும், தீ முதலியவற்றாலும் அழிந்து ஒழியும். கல்வியோ கொடுக்கும் தோறும் வளர்ந்து கொண்டே வரும். பிறரால் அதனை அபகரிக்கவோ, அழிக்கவோ இயலாது. கல்வி வற்றாத பெருஞ்செல்வம்.

கல்வி மனிதனை விலங்கு நிலையிலிருந்து உயர்த்துகிறது. நாம் இளமை முதற் கொண்டே கல்வியைக் கசடு - குற்றம் நீங்கக்கற்று இறைவன் திருவடியை வணங்கி இன்புறுவோமாக.

ஸ்ரீரமணகுமார் பிரதாப்
ஆண்டு 5 C.

# எமது நாடு

எமது நாடு இலங்கை. இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு முத்தாகும். இது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட தீவாகும். இங்கு சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் வாழ்கிறார்கள். இதில் பெரும்பான்மை கொண்டவர்கள் சிங்களவர் ஆவர். இரண்டாம் இடத்தில் தமிழர்களும் அதன்பின் முஸ்லீம்களும் உள்ளார்கள். இதைவிட பறங்கியர், வேற்று இன மக்களும் இங்கு தங்கி வாழ்கிறார்கள்.

இங்கு பேசப்படும் மொழிகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் போன்றவை. தேசிய மொழியாக சிங்களம், தமிழ் கருதப்படுகிறது. இங்குள்ள மக்கள் அணியும் ஆடைகள், உணவு பழக்க வழக்கங்கள், பொழுதுப் போக்கு கள் பலவிதமாக காணப்படுகிறது.

எமது நாட்டின் வர்த்தக தலைநகரம் கொழும்பு. இலங்கையில் காணப்படும் இயற்கைத் துறைமுகமாக திருகோணமலை காணப்படுகிறது. எமது நாட்டின் சர்வதேச விமான நிலைய மாக கட்டுநாயக்கா விளங்கு கிறது.

சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்கிற இடங்களாவன மலைநாட்டின் கண்டி, நுவரெலியா போன்றன. கண்டியில் தலதா மாளிகை, பேராத னைப் பூங்கா போன்றன சிறப் பானவை. மலை நாட்டில் வளர்கிற தேயிலை, இறப்பர் போன்றன ஏற்று மதிப் பொருட்களாக காணப் படுகின்றன. இதன் வருவாயால் இலங்கை அன்னிய செலாவாணியை பெறுகிறது. வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் முக்கியமானது. எமது நாட்டில் மலைகளில் உயரமான பேதுறுதாலகால, ஆறுகளில் நீளமான மகாவலிகங்கை பிரசித்தி பெற்றவை.

பற்குணராஜா அனுஜன்
ஆண்டு 5 E.

# அமிழ்தினும் இனிய தமிழ்

"செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே --------

"என்ற வரிகள் ஒவ்வொரு வரு க்கும் தமிழ்ப்பற்றையும், நாட்டுப் பற்றையும் ஊட்டுகின்றன. விடுதலை உணர்வினைமக்களின் இதயத்தினுள் நுழைய வைப்பதற்காக நாட்டு வணக்கம் அதாவது "எந்தையும் தாயும்" என்ற பாடல் வரிகள் நாட்டு ப்பற்றை வளர்த்ததுடன் தமிழ ன்னைமீது என்றும் தாய்ப 'பாசமும் சேர்ந்து இருப்பதை உணர்த்துகின்றது.

வயதுக்கு ஏற்ற நிலையிலும் அவரவர் பருவத்திற்கு ஏற்பவும் தமிழ் மொழி எளிமையான இலக்கணம், இலக்கியம், செய்யுள் என்பனவற்றை உள்ளடக்கி உள்ளது. அரசியல், பொருளாதார சமூக பரிமாணங்களு க்கேற்ப தமிழ்மொழி நலிந்தும் ஓங்கியும் வளர்கின்றது.

உலகில் உள்ள மொழிகள் பலவற்றிலும் கல்தோன்றா, மண் தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்த மொழியெனக் கருதப்பட்டு வருகின்ற தமிழ் மொழி காலத்துக்கு காலம் பல்வேறு அச்சுறுத்தல்களையும், சவால்களையும் எதிர்நோக்கிய போதிலும் இன்றும் சீரிளமை குன்றாது பொலிவுடன் திகழ்கின்றது. "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்பது பாரதியாரின் கூற்று ஆகும்.

தமிழ் பேசும் சமுதாயம் இன்று புலம்பெயர்ந்து கொண்டிருக்கும் நிலையைக் கண்டு தமிழ்த்தாய் விசனமுற்று இருக்கிறாள். ஆனால் பாரதியாரின் வீரப்பாடல் வரிகள் இன்னும் எம்செவி களில் எதிரொலிக் கின்றன."அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே-

பிரபாகரன் பிரசாந்
ஆண்டு 5 D.

## இளையான் குடிமாற நாயனார்

பாண்டிய நாட்டில் இளையான்குடி என்ற ஊரில் மாறனார் என்பவர் இருந்தார். இவர் பொன்னம்பலத்து நடனம் செய்யும் நடராசப் பெருமானின் திருவடி களை எப்பொழுதும் சிந்தித்து வணங்கி வந்தார். இவர் சிவனடியார்களை சிவனெனக்கருதி வணங்கி, உபசரித்து வேண்டுவனவற்றை விருப்பத்தோடு கொடுப்பர். அவர்களை பூசித்து அறுசுவை அளித்து மகிழ்வார் இவர் தன்னிடம் பொருள் பெருகிய போதும் சரி, குறைந்த போதும் சரி பேதம் இல்லாமல் தொண்டு செய்தார். இவருடைய தொண்டின் பெருமையை உலகுக்கு காட்டச் சிவபெருமான் திருவுள்ளத்தில் எண்ணினார். சிவபெருமானின் திருவிளையாடலால் மாறனாரின் வறுமைத்துன்பம் வாட்ட ஆரம்பித்தது. அந்நிலையில் அவர் நிலங்களையும், பொருள்களையும் விற்றார். ஆனாலும் இவரின் சிவத்தொண்டில் குறைவுபடவில்லை. மழைக்காலம் ஒரு நாள் இரவு மாறனார் பொருள் எதுவும் இல்லாமல் பட்டினியாக இருந்த போது சிவபெருமான் சிவத்தொண்டனாக வேடம் பூண்டு மாறனார் வீட்டுக்கு வந்தார். சிவனடியாரைக்கண்டு மாறனார் அன்புடன் வரவேற்றார். சிவனடியாருக்கு உணவு வழங்குவதற்காக தான் வயலில் விதைத்த நெல்லைக் கூட்டி ஒரு கூடையில் கொண்டு வந்தார். வீட்டின் கொல்லைப்புறத்தில் முளைத்திருந்த சிறு கீரையை அவரது மனைவி கறி சமைத்தார். பின் சிவனடியாரை உணவு அருந்துமாறு அழைத்தார். அப்போது சிவபெருமான் உமாதேவியுடன் தோன்றி நீர் அடியார்களுக்கு உணவு படைத்து இன்பம் கண்டாய். நீ குபேரனாக வாழக் கடவாய் என வாழ்த்தினார்.

**மனோகர் அபிலக்ஷன்**
ஆண்டு 4

## ஒற்றுமையே பலம் தரும்

ஒருரில் நண்பர்கள் மூவர் வசித்து வந்தனர். அவர்களுடைய பெயர்கள் பாலன், குமாரன், இந்திரன் ஆகும். அவர்கள் மூவரும் அவ்வூரில் உள்ள ஒரு பாடசாலையிற் படித்து வந்தனர். அவர்கள் அந்தப் பாடசாலைக்கு செல்ல வேண்டுமாயின் காட்டு வழியாகத்தான் செல்ல வேண்டும். ஒருநாள் அவர்கள் பாடசாலை விட்டு வீட்டுக்குத் திரும்பி வரும் போது வானம் இருண்டது. அப்பொழுது அவர்களுக்கு வரும் பாதை சரியாக விளங்கவில்லை. அந்த நேரத்தில் அவர்களை முட்டுவதற்கு ஒரு காட்டெருமை வந்தது. காட்டெருமை அவர்களை முட்டவந்த பொழுது அவர்கள் மூவரும் மரத்தின் மீது ஏறினார்கள். மரத்தில் இருந்து முறிந்த கொப்புகளை எடுத்துக் கொண்டு கீழே இறங்கினர். அவர்கள் கீழே இறங்கி அந்தக் காட்டெருமையை விரட்டினர். அவர்கள் விரட்டியபொழுது அந்தக் காட்டெருமை அச்சத்தால் ஓடியது. அவர்கள் மூவரும் ஒற்றுமையாக இருந்த படியால் அந்தக் காட்டெருமையை விரட்டினர். அவர்கள் மூவரும் ஒற்றுமையாக இருந்தது போல் நாமும் எல்லோருடனும் ஒற்றுமையாக இருத்தல் அவசியமாகும்.

**மனோகரன் மோதீஸ்**
ஆண்டு 4F

# புளிப்பா? இனிப்பா?

ஒரு சமயம் இப்ராகீம் என்கிற பரமசாது ஒரு பெரிய பணக்காரரிடம் வந்து சேர்ந்தான். அவர் பரமஞானி என்று தெரியாத அந்தப் பணக்காரர் தன் தோட்டத்தில் தோட்டக்காரராக வேலை பார்க்கும் படி சொன்னார். "சரி" என்று அந்த வேலையை இப்ராகீம் ஒப்புக் கொண்டார். சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் அந்தப் பணக்காரர் சில நண்பர்களுடன் தோட்டத்திற்குள் நுழைந்தார். இப்ராகீமைப் பார்த்து நண்பர்கள் சாப்பிடுவதற்கு நல்ல மாம் பழங்கள் கொண்டு வரும்படி சொன்னார். இப்ராகீம் ஒரு மரத்திலிருந்து சில மாம் பழங்களைக் கொண்டு வந்து கொடுத்தார். ஆனால் அவை எல்லாம் புளிப்பாக இருந்தன. அதைப் பார்த்த பணக்காரர் இப்ராகீமைப் பார்த்து "என்னப்பா, எத்தனை நாளாக நீ இந்தத் தோட்டத்தில் வேலை செய்கிறாய்? இன்னுமா எந்த மரத்துப் பழங்கள் புளிக்கும்? எந்த மரத்துப் பழங்கள் இனிக்கும் என்று உனக்குத் தெரியவில்லை?" என்று கேட்டார். அதற்கு இப்ராகீம், "தாங்கள் தோட்டத்தைப் பார்த்துக் கொள்ளும்படி உத்தரவு கொடுத்தீர்களே தவிர, பழங்களைச் சாப்பிடும்படி உத்தரவு கொடுக்கவில்லையே. பழங்களைச் சாப்பிட்டுப் பார்த்திருந்தால் அல்லவா எனக்கு எந்தப்பழம் புளிக்கும், எந்தப் பழம் இனிக்கும் என்று தெரிய வரும்" என்று பதில் சொன்னார். இந்தப் பதிலைக் கேட்ட பிறகு தான் பணக்காரருக்குத் தம் எதிரே நிற்பவர் சாதாரண தோட்டக்காரரல்ல, ஒரு பெரிய சாது என்ற உண்மை தெரிய வந்தது.

**சிவபாலசிங்கம் விசாகேசன்**
**ஆண்டு 4 F.**

## தோழா!

அதிகாலை எழுந்திடு
அழகாய்க் கடமைகள் முடித்திடு
கடவுள் வணக்கம் செலுத்திடு
கருத்துடன் கலைகளைக் கற்றிடு

சுத்தம் நன்கு காத்திடு
சோம்பலை அறவே ஒழித்திடு
பள்ளிக்குத் தவறாமல் சென்றிடு
பாடங்கள்அனைத்தையும்
பயின்றிடு

வகுப்பில் அமைதி கொண்டிரு
வஞ்சகரை விட்டு விலகிடு
ஆசிரியர் சொல்லை மதித்திடு
அதன்படி ஒழுகக் கற்றிடு

பெற்றோர் சொல்லைப் பேணிடு
பெருமை என்றும் உனக்குண்டு
நற்சேவை செய்து காட்டிடு
நாடு உன்னைப் போற்றிடும்

**பாலகுமாரன் சஞ்ஜீவன்**
**ஆண்டு 3 A.**

# எங்கே போகிறீர்?

*சின்னச் சின்னச் குருவி அக்கா எங்கே போகிறீர்?*
*என் அழகுச் சொண்டால் பூவில் தேனைக் குடிக்கப் போகிறேன்.*
*வண்ணக்கிளி அக்கா, வண்ணக்கிளி அக்கா எங்கே போகிறீர்?*
*வயல்களுக்குச் சென்று நெல்லை தின்னப் போகிறேன்.*
*எலி அண்ணா, எலி அண்ணா எங்கே போகிறீர்?*
*மூட்டையில் உள்ள தானியங்களை அரித்துத்தின்னப் போகிறேன்.*
*சிங்க மாமா, சிங்க மாமா எங்கே போகிறீர்?*
*காட்டைச் சுற்றிச்சுற்றி உலா வரப் போகிறேன்.*
*மயில் அக்கா மயில் அக்கா எங்கே போகிறீர்?*
*என் அழகான தோகையை விரித்து ஆடப் போகிறேன்.*
*கீரி மச்சான் கீரி மச்சான் எங்கே போகிறீர்?*
*சீறி வரும் பாம்பை நானும் அடக்கப் போகிறேன்.*
*பசுப் பாப்பா பசுப் பாப்பா எங்கே போகிறீர்?*
*என் அம்மாவைத் தேடி நான் ஓடிப் போகிறேன்.*
*யானைத் தாத்தா யானைத் தாத்தா எங்கே போகிறீர்?*
*மரங்களெல்லாம் முறித்து நானே விழுத்தப் போகிறேன்.*
*முயல் தம்பி முயல் தம்பி எங்கே வருகிறீர்?*
*வினா கேட்கும் உன்னுடனே விளையாட வருகிறேன்.*

இரவீந்திரா கேமிலன்
ஆண்டு 5 E.

# கல்வியின் சிறப்பு

நெல்லை வயலிற் தூவிப் பார் - அதற்கு
நீரும் பசளையும் கொடுத்துப் பார்
நல்லாய் வளர்ந்து விளைந்து வரும் - அது
நாங்கள் உண்ண உணவு தரும்.

மல்லிகைக் கொடியை நட்டுப் பார் - அதற்கு
வடிவாய்ப் பந்தல் போட்டுப் பார்
வெள்ளைப் பூக்கள் விரிந்து வரும் - எங்கும்
இரவும் பகலும் மணங்கமழும்.

தென்னங் கன்றை நட்டுப் பார் - அதற்கு
தினமும் தண்ணீர் விட்டுப் பார்
பென்னம் பெரிதாய் வளர்ந்து வரும் - எமக்குத்
தேங்காய்க் குலைகள் ஈன்று தரும்.

கல்வியை மனதில் ஊன்றிப் பார் - தினமும்
கண்ணாய் நினைத்துப் படித்துப் பார்
படிக்கப் படிக்கப் பெருகிவரும் - உன்னைப்
பலரும் புகழ உயர்த்தி விடும்.

**தயாபரன் ஸ்ரீரமணன்**
ஆண்டு 5 A.

# சினமடையாதே

*சினமடையாதே சீறிவிழாதே*
*சிறந்த குணங்களை சிதறவிடாதே*
*சினமடையாதே*
*மனம் போன போக்கினில் போகவிடாதே*
*மாபெரும் புகழ் வரின் மகிழ்ந்து துள்ளாதே*
*சினமடையாதே*
*அற்பரைப்போல் அடுத்துன் அறிவை விற்காதே*
*அறிவுடை பெரியோரை அவமதிக்காதே*
*கற்பனை உலகினுள் கனவு காணாதே*
*காலம் கடந்த பின் கண்விழிக்காதே*
*சினமடையாதே சீறிவிழாதே*

பகவத்சிங்கம் துவாரகன்
ஆண்டு 5 E.

அறிந்துகொள்வது

## "கை" கள் பல வகை

நாம் வாழும் நாடு - இலங்கை
பெண்மை அழைப்பது - மங்கை
பெண்கள் அணிவது - நகை
கொள்ள வேண்டியது - நம்பிக்கை
எழுதுவது - கரும்பலகை
இடிப்பது - உலக்கை
தளபாடங்கள் செய்வது - பலகை
யானை பாரம் தூக்குவது - தும்பிக்கை
கூடப்பிறந்த சகோதரி - தங்கை
எம்மிடம் இருக்கக் கூடாதது - பகை
மணம் வீசுவது - மல்லிகை

மனோகர் மனோஜ்குமார்
ஆண்டு 4 F.

# கணிதம் தோன்றிய வரலாறு

எண்களை அடிப்படையாகக் கொண்ட அறிவியலே கணிதம். கிரேக்க மொழியில் 'அரித்மோஸ்' என்ற சொல் எண்ணைக் குறிக்கும், எனவேதான் ஆங்கிலத்தில் இதனை அரித்மெடிக் என்கிறார்கள். நாகரிகத்தின் தொடக்க காலத்தில், தனது ஆடுகள், காளைகள் போன்ற மிருகங்களை எண்ண மனிதன் விரலைப் பயன்படுத்தினான். லத்தீன் மொழியில் 'டிஜிடல்' என்ற சொல் விரலைக் குறிக்கும். இதிலிருந்து தான் ஆங்கிலத்தில் டிஜிட் என்ற சொல் வழக்கத்திற்கு வந்தது. பின்னர் எண்ணிக்கைக்காகக் குச்சியின் மீது கோடுகள் போட்டு எண்ணிக்கையைக் குறிக்கும் வழக்கம் ஏற்பட்டது. ஒவ்வொரு எண்ணுக்கும் தனியாக வரிவடிவம் வந்ததும் இம்முறை கைவிடப்பட்டது.

எகிப்தியர்கள் 1 முதல் 10 வரை எண்ண, நேர்கோடுகளைப் பயன்படுத்தினர். கிரேக்கர்கள் தமது மொழியின் சில எழுத்துக்களுடன் ஏதோ ஒரு குறியைச் சேர்த்து இலக்கத்தை வகுத்தனர். உதாரணமாக ஒன்றையும் இரண்டையும் பத்தையும் குறிக்கும்.

ரோமானியர்களின் முறைப்படி முதல் ஐந்து எண்களும் பத்தையும், ஐம்பதையும், நூறையும், ஐந்நூறையும், ஆயிரத்தையும் குறிக்கும். ரோமானிய மொழியில் இன்றளவும் இலக்கங்கள் இவ்வாறே எழுதப்படுகின்றன.

இன்று நாம் பயன்படுத்தும் இலக்க வரிவடிவங்களுக்கு அராபியர் தான் வடிவம் கொடுத்தனர். ஜீரோவுக்கு அவர்கள் ஸிஃபர் என்றனர். அராபிய எண்முறையைப் பின்பற்றி 1202ல் இத்தாலியர் ஒருவர் முதல் கணிதப் புத்தகத்தைத் தயாரித்தார். லத்தீன் மொழியில் முதல் கணிதப் புத்தகம் 1478இல் அச்சாகியது. அக்காலத்தில் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகியவையும் பயிலப்பட்டன. இவ்வாறு கணிதம் உலகம் முழுவதும் நடைமுறைக்கு வந்தது.

அச்சுதன்
ஆண்டு 6

★ எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்குமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தன்சொந்தக் கால்களில் நிற்கச் செய்யுமோ, அத்தகைய கல்விதான் நமக்குத்தேவை.

– விவேகானந்தர்

# வீணையின் சுயசரிதை

தேன் சுவையுடைய பலாப்பழத்தைத் தரும் நான் தென்னிந்தியாவில் ஒரு வீட்டு முற்றத்தில் நின்றேன். எனது பழத்தை எனது வீட்டுக்காரரது குழந்தைகள் மட்டுமன்றி தெருவில் போவோரும், வருவோரும் விரும்பிச் சாப்பிட்டார்கள்.

நானோ ஒரு பெரிய மரமாக வளர்ந்து நின்றேன். அந்தோ! ஒரு நாள் ஒரு விறகு வெட்டி என்னை அடியோடு வெட்டலானான் வெட்டிச் சென்று தண்ணீரில் ஊறவிட்டுப் பின் என்னை வீணை செய்யும் ஆசாரியிடம் கொடுத்தார். அவர் என்னை வாளினால் அரிந்து, உளியால் உள்ளிருக்கும் சதையைக் கோதி எடுத்தார். அதன் பின் மிகவும் கவனமாக வீணையாக என்னை உருவாக்க ஆரம்பித்தார். வலது பக்கத்தில் வட்டமான பெரிய குடமாகவும் மேல் பக்கமாக நீண்டு அழகிய யாழி முகமாகவும் செதுக்கி எடுத்தார். அதன் பின் யாழி முகத்துக்குப் பக்கத்தில் சுரக்காய் வடிவத்தில் ஒரு சிறிய குடம் இணைக்கப்பட்டது. இது நான் விழாமல் இருப்பதற்கும், வாசிப்பதற்கு இலகுவாக இருப்பதற்கும் என்றார்கள். எனது நீண்ட மேற்பக்கத்தில் சங்கீதமுறைப்படி மெழுகினால் 24 மெட்டுக்கள் கட்டப்பட்டன. எனது பெரிய குடத்தில் நாதம் வருவதற்காக 2 நாதவட்டக் கண்கள் உருவாக்கபபட்டன. பெரிய குடத்தின் மேற்பக்கத்திலிருந்து நாதத் தந்திகள் நான்கும் மரத்தாலான பிரடைகளில் பிணைக்கப்பட்டன. மொத்தமாக நான் ஏழு பிரடைகளையும், 7 தந்திகளையும் கொண்டிருந்தேன். இதன் பின் எனக்கு வர்ணங்கள் பூசி அழகுபடுத்தினர். எனக்கு வீணை என்று பெயரிட்டனர்.

எனது அழகைப் பலரும் பார்த்து இரசித்து மகிழ்ந்தனர். என் அழகாலும் இசை நாதத்தாலும் கவரப்பட்ட ஒருவர் என்னை இந்தியாவிலிருந்து விமானம் மூலம் இலங்கைக்குக் கொண்டு வந்தார். இலங்கை வாழ்தமிழ்ச் சிறுவரின் சிறந்த கல்விக் கூடத்திற்கு என்னை அன்பளிப்பாக கொடுக்க இருப்பதாக அவர் கூறினார். இப்பொழுது இலங்கையில் நான் தேசியப்பாடசாலையாம் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் சங்கீத அறையில் பெருமையாகச், சந்தோஷமாக வீற்றிருக்கின்றேன். இந்துக்கல்லூரி மாணவர்கள் இப்பொழுது என்னை மீட்டி மகிழ்கின்றார்கள். நீங்களும் இங்கு வந்தால், என்னைப் பார்த்து இரசித்து மகிழலாமே!

செ.செந்தூரன்
6E

# ஆறுமுக நாவலரின் கல்விப்பணி

*"நல்லைநகராறு முக நாவலர் பிறந்திலரேல் சொல்லுதமிழெங்கே சுருதியெங்கே - எல்லவரும் ஏத்து புராணாகமங்கள் எங்கே பிரசங்கமெங்கே ஆத்தனறி வெங்கே அறை"*

19ஆம் நூற்றாண்டில் தமிழர்களின் பண்டைய பண்பாட்டின் சிறப்பினை மீண்டும் மலர்சசியுறப்பாடுபட்டவர்களில் முதலிடம் வகித்த பெருந்தகை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவார்.

இவர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே உள்ள பண்டைய உயர் இந்துக் குடும்ப த்திலே 1822 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பிறந்தார். இவர் சிறு பிராயந்தொட்டு இந்துப்பழக்கவழக்கங்களையும் இந்து சமயப் பண்பாட்டையும் மதித்துக் கெளரவித்தார். இந்து சமயப்பணபாட்டில் பற்றும், அதன் வளர்ச்சியில் ஆர்வமும், அக்கறையும் கொண்ட நாவலர் பெருமான் வேதசாரமும், சித்தாந்தமும், சைவ ஆகமங்களையும் கறறார். தமிழ் மொழியை மட்டுமன்றி ஆங்கில மொழி, சமஸ்கிருத மொழி என்பவற்றையும் ஐயந்திரி பறக் கற்றார்.

1846ஆம் ஆண்டு நாவலர் பெருமான் அவர்கள் தனது இருப்பிடத்தில் இரவிலும், பகலிலும் கல்வி கற்பிக்கத்தொடங்கினார். கற்பித்தல் பணியில் இன்பங்கண்டார் நாவலர் அவர்கள். 1848 ஆம் ஆண்டு ஆவணி மாதம் பொன் எழுத்துக்களால் குறிக்கப்பட வேண்டிய திருநாளாகும். ஆமாம்! அன்று தான் யாழ்ப்பாணத்து வண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை ஒன்று தாபிக்கப்பட்டது. ஏட்டுக் கல்விமுறையை மாற்றி ஆங்கிலப் பாடசாலைகளைப் போல புத்தகக் கல்விமுறையைக் கையாண்டால் நல்லபலன் கிடைக்கும் என்று எண்ணினார். அதனால் நாவலர் பெருமானுக்கு அச்சுக்கூடமொன்று தேவையாக இருந்தது. அச்சுக்கூடம் வாங்க சென்னை சென்றார்.

அச்சியந்திரம் வாங்க சென்னை சென்றவருக்கு திருவாவடுதுறை ஆதீனம் "நாவலர்" பட்டம் வழங்கியது. நாவலர் அவர்கள் அச்சியந்திரத்துடன் நாடு திரும்பி வித்தியானு பாவனயந்திரசாலை என்ற பெயரிட்டு அச்சியந்திரசாலையை தாபித்தார்.

ஆறுமுக நாவலர் அவர்களால் பாலபாடம், சைவவினாவிடை, ஆத்திசூடி உரை முதலிய நூல்கள் பாலபருவ த்திலிருந்து அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் அச்சிடப்பட்டன. நாவலர் அவர்கள் நூல்களை எழுதுவதில் புதிய நடையைக் கையாண்டார். புராதன தமிழ் இலக்கிய நூல்களை விமர்சித்தும், எளிய நடையில் எழுதியும் கல்வித்துறைக்கு அளப்பரும் சேவையாற்றினார்.

நாவலர் அவர்கள் கல்வித்துறைக்கு தன்னையே அர்ப்பணித்துச் சேவை செய்தார். தமிழரின் முன்னேற்றத்தையே தன் முன்னேற்றமாகக் கொண்டார். தமிழ்க்கல்வி விருத்தியடைய வேண்டு மெனில் தலந்தோறும் வித்தியாசாலை ஆரம்பித்தலே சிறந்த வழியெனக் கருதி பாடசாலைகள் பலவற்றை ஸ்தாபித்தார்.

தமிழரைத் தாழ்ந்த நிலையில் இருந்து உயர்நிலைக்குக் கொண்டுவந்த பெருமை நாவலர் பெருமான் அவர்களையே சாரும். அவரின் கல்விப்பணி நின்று நாமும் முன்னேறுவோமாக.

*ஜெ. விதுகரன்*
ஆண்டு 6E.

# விஞ்ஞானமும் மனித வாழ்வும்

இன்றைய உலகில் மனிதனோடு பின்னிப் பிணைந்து இருப்பது விஞ்ஞானமாகும். விஞ்ஞானம் பல அரிய சாதனைகளை உலகிற்கு நிலை நாட்டி வருகின்றது. இந்த விஞ்ஞானமானது கடலைப்போல அகலமும், ஆழமுமான ஓர் அறிவுத் தொகுதியாகும். ஏன் வானத்தையும் சந்திர மண்டலத்தையும் ஏனைய கோள்களையும் தொடும் அளவிற்குப் பரந்து விரிந்து நிற்கின்றது.

விண்வெளி ஆராய்ச்சிகளிலும், மாற்று இருதயச் சிகிச்சைகளில் கண்ட வெற்றிகளிலும் நவீன யுகத்தில் விஞ்ஞானம் அடைந்துள்ள உச்சநிலையினைக் காணலாம். பிரசித்தி பெற்ற விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளிலிருந்து தான் இன்றைய விஞ்ஞானம் வளர்ச்சி கண்டது. நியூட்டன் கண்டு பிடித்த புவியீர்ப்புச்சக்தி, அலெச்சாண்டர் கண்டு பிடித்த தொலைபேசி, மார்க்கோனியின் வானொலி, றைட்சகோதரர்கள் கண்டு பிடித்த ஆகாய விமானம், விஸ்டரின் அறுவைச்சிகிச்சை முறைகள் யாவும் மனித வாழ்வில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன.

விவசாயத்துறையினை எடுத்துக் கொண்டால் அங்கும் விஞ்ஞானம் மனித வாழ்க்கைக்கு ஒத்துழைப்புத்தருகின்றது. ஏருக்கும், எருத்துக்கும் பதிலாக புதிய, புதிய உழவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. கிணற்றிற்கும் துலாவிற்கும் பதிலாக குழாய்க்கிணறும், நீர் இறைக்கும் இயந்திரமும் பயன்படுகின்றன. சிறந்த கிருமி கொல்லிகளை உபயோகித்துப் பயிர்களை அழியாது காத்துக் கொள்கின்றான்.

போக்குவரத்துத் துறையை எடுத்துக் கொண்டால் அங்கும் விஞ்ஞானம் தான் முன் நிற்கின்றது. கால் நடையாகப் பிரயாணம் செய்த மனிதன் சொகுசு வேகம் கொண்ட ஊர்திகளில் பயணம் செய்கின்றான். இப்பொழுது தரை மீதும், விண்மீதும், கடல் மீதும் விரைந்து செல்லும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறான். பல வசதிகள் கொண்ட கப்பல்களும், மின் வேகத்தில் செல்லும் ஜெட்விமானங்களும் விஞ்ஞானம் அளித்த பெரும் பரிசுகளாகும்.

கைத்தொழில் துறையில் ஏற்பட்ட மாற்றம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. உலகின் பல பாகங்களிலும் அளவிட்டுக்கூற முடியாத அளவிற்கு தொழிற்சாலைகள் எழுந்து நிற்கின்றன. அவை பல மனிதர்கள் பல நாட்கள் செய்த வேலையினை குறைந்த நாட்களில் விரைவாகச் செய்கின்றன.

இன்னும் மனித வாழ்வின் வசதிக்கு வாய்த்த படைப்புக்களோ அளவில்லாதன. நல்லதோர் இல்லத்தரசியாக, கூலி அதிகம் கேளாத சேவகனாக சமையல் வரை விஞ்ஞானம் மனிதனுடன் பின்னிப்பிணைந்து சேவை செய்து வருகிறது.

இப்படிப்பட்ட விஞ்ஞானம் பல நன்மைகளைச் செய்தாலும் போர்க் கருவிகளையும், அணுக்குண்டுகளையும் ஆக்கி இவ்வுலகையே அழித்துவரும் ஆற்றல் படைத்ததாக இருக்கிறது. நாம் இதனை அழிவுக்கு பயன்படுத்தாமல் ஆக்கத்துறையில் பயன்படுத்தி உலகை முன்னேற்றுவோமாக.

ஜெயச்சந்திரன் –விதுகரன்
ஆண்டு 6 E.

# நாவலர் பெருமான் காட்டிய சைவ சமய வாழ்வு முறை

சமயம் என்பது ஒரு பாதை- - ஒரு போர்வை -.அவர வர் பார்வை யைப் பொறுத்து, சமயத்திற்கு அவ் வாறு வியாக்கியானம் தரப்படுகிறது. சமயத்தின் வரலா ற்றைக் கூர்ந்து கவனிப்பின் இம் மூன்று விதங்களிலும் சமயம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ள மைதெரியவரும்.சமயத்தைபோதைக்கு ரியதொன்றாக்கி,மாந்தி,மதவெறி பிடித்துமயங்கினவர்கள் சிலர். சமய த்தைபோர்வையாக்கி,அதனுள் மறைந்து நின்றுகொண்டு,சமுதா யத்திற்கு அல்லவை புரிந்தோர் பலர். சமயம் ஒரு பாதை, ஒரு வாழ்க்கை நெறி. வையத்துள் வாழ்வாங்கு வாழ அது வழி காட்டுகின்றது என்ற உணர்வில்லாமல் ,சமயத்தைச் சம்பிரதாயமாக்கி வாழ்ந்தோர் மிகப் பலர். பத்தொன்பதாம் நூற்றாண்டில், இலங்கையில், குறிப்பாக யாழ்ப் பாணத்தில் வாழ்ந்த சைவத் தமிழ் மக்களைப் பெரும்பாலும் மேற்கூறிய ஏதாவது ஒரு வகையினுள் அடக்கி விடலாம். நாவலர் தோன்றி வாழ்ந்து பணியாற்றியகாலமாகிய பத்தொன் பதாம் நூற்றாண்டு அத்தகைய சமயப் பின்னணியையும்,சூழலையும் கொண் டிருந்தது.

நமது சைவசமயம், சைவ ஆசாரம், பண்பாடு, கலாசாரம், சைவ மரபுக் கல்வி முதலியன அக்கால கட்டத்தில் நைந்து நலிந்து நல மிழந்திருந்தமைக்கு அந்நிய ஏகா திபதியாகிய ஆட்சியாளர்களின் ஆதி க்கம், அவர்களை அவர்களின் செல் வாக்கைப் பெற்றிருந்த பிறசமயக் குழு வினரின் பல்வேறு நடவடிக்கைகள் என்பவற்றைப் பொதுவாகக் காரண ங்களாக கூறுவர்.

நாவலர் உத்தம சைவ சமயி. தம் வாழ்க்கையை மாசுபடியாமல், குற்றம் தீண்டாமல், கண்ணும் கருத் துமாயிருந்து, காலந் தோறும் பாதுகா த்துக் கொண்டிருப்பவர்கள் உத்தம சமயிகள். ஏனையோரும் தத்தம் வாழ் க்கையை செம்மைப்படுத்தி, நல்ல வண் ணம் வாழ்வதற்குச் சமயநெறி காட்டி, வழிபடுத்துபவர்கள் அவர்கள். சைவ நெறி, நீதியை ஆதாரமாகக் கொண்டு ள்ளது. "மேன்மை கொள் சைவ நீதி" என்று போற்றப்படுகிறது. நாவலர் சைவ நீதியை உபாசித்தவர்; சாதனை செய்தவர்; நீதிக்குத் தம்மை அர்ப்ப ணித்தவர். நாவலர் பெருமான் காட்டும் சைவ சமய வாழ்வு முறை, நீதியின் பாற்பட்டது ஆகும்.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது. நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்". இது நாவலர் வாக்கியம்.

சைவ வாழ்வு முறையினைத் தந்த நாவலர்,அத்தகைய ஒரு வாழ்வில், ஆன்மீகமும் உலகியலும் இணைய வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். ஆன்மீகம் கலக்காத உலகியல் பயனற்றது மட்டுமன்று, ஆபத்தானதும் கூட என்னும் நிலை ப்பாடு அவருடையது.

சைவ சமயத்தை போர்வை யாகக் கொண்டு, அதனுள் மறைந்திரு ந்து கொண்டு, சமுதாயத் தீங்குகளை விளைவித்தவர்களுக் கெதிராக நாவ லரின் கண்டனக் கணைகள் தொடு க்கப்பட்டுள்ளன.

"கடவுளால் விரும்பப்படு பவைகளாவன; இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாகும்". "கடவுளால் வெறுக்கப் படுபவைகளா வன; கொலை, புலாலுண்ணல், களவு, கள்ளுண்ணல், வியபிசாரம், பொய், செய்நன்றி மறத்தல் முதலியன தீமை களாம்". நாவலர் பெருமான், நான்காம் பாலபாடத்தில் இவ்வாறு குறிப்பி ட்டு ள்ளார்.

சைவ நெறி ஆனது அன்பு நெறி, அருள்நெறி, நீதிநெறி, ஒழுக்க நெறி, பண்பாட்டு நெறி, அறிவு நெறி, அற நெறி என்று நாவலர் கொள்வார்.

சமயம் ஒரு பாதை என்ற வகையில் நாவலர் பெருமான் காட்டிய சைவ சமய வாழ்வு முறை, நாமுறைக்கேற்றதாகவும், பயனுள்ள தாகவும் அமைந்துள்ளது. மனிதர்கள் வாழ்வில் சகல நலன்களையும் அடைய வேண்டும் என்னும் விழுமிய குறிக்கோள் எய்தப்படுவதற்கு, நாவலர் பெருமாள் காட்டிய சைவ சமய வாழ்வுமுறை பெரிதும் உதவும் என்பது உறுதி.

*ஜெயமுகுந்தன் டிலுக்ஷனன்*

*ஆண்டு 7E*

# இயற்கைச் சக்திமுதல்கள்

அன்று தொட்டு இன்று வரை மனிதனின் செயற்பாடு இன்றித் தோற்று விக்கப்பட்டுக் காணப்படும் பொருட்கள் யாவும் இயற்கைப் பொருட்களாகும். இவ் வியற்கைப் பொருட்கள் கோள்களாக, நட்சத்திரங்களாக, காற்றாக, நீராக, சூரியனாக, கல்லாக, மண்ணாக, தாவர ங்களாக, விலங்குகளாக, மனிதனாக எம் கண்முன் விரிந்து கிடக்கின்றன. இவை யாவும் ஒன்றுடன் ஒன்று ஏதோ விதத்தில் தொடர்பு கொண்டும்,ஒன்றின் மேல் ஒன்று ஆதிக்கம் செலுத்தியும் வருகின்றன. எமது பூமியை எடுப்பின் காற்று, கடல், தாவரங்கள், விலங்குகள் யாவும் இப்பூமியை அழகுபடுத்தி உயிர்ப்புள்ளதாக ஆக்கிக் கொண்டி ருக்கிறது எனக் கூறினால் மிகையாகாது.

நாம் நடக்கிறோம், ஓடுகிறோம், பாய் கிறோம், வேலை செய்கிறோம் இவை யெல்லாம் எம்மால் எப்படி முடி கிறது? எமக்கு சக்தி இருப்பதால்தான் இவை யெல்லாவற்றையும் செய்ய முடி கிறது. எனவே வேலை செய்யும் ஆற்றல், சக்தி என அழைக்கப்படுகிறது. இயற்கை யில் சக்தியை கொண்டுள்ள பொருட்கள்வேலை செய்யும் ஆற்றலு டையன. எனவேதான் காற்று வீசும்போது மரங்கள் அசை கின்றன. காற்று புயலாக மாறும் போது மரங்கள் முறித் தெறியப்படுகின்றன. வீடு களின் கூரைகள் பெயர்த் தெறிய ப்படுகின்றன. இங்கு காற்றுக்கு ஒரு சக்தி உண்டென்பது புலப்படுகிற தல்லவா? அதே போன்றுதான் மலையி லிருந்து ஓடிவரும் நீர் வழியிலுள்ள மரங் களைப் பெயர்த்து விடுகின்றது. வெள்ளப் பெரு க்கின் போது வீடுகள், கட்டடங்கள் வீழ் கின்றன. எனவே இங்கு பாயும் நீர் சக்தியைக் கொண்டிருப்பது புலனாகிறது அல்லவா?

இயற்கையில் காணப்படும் வளி, நீர், சூரியன் போன்றவையும் நிலத்திற் குக்கீழ் இருந்து பெறப்படும் நிலக் கரி, பெற்றோலியம் போன்ற பொருட் களும், விறகுகளைத் தரும் தாவரங்களும் இயற்கைச் சக்தி முதல்களாகும். வீசும் காற்றில் உள்ள இயக்கச்சக்தி மூலம் காற் றாடிகளைச் சுழலச் செய்து தைன மோக் கள் இயக்கப்பட்டு மின்சாரம் பெறப்படு கிறது. நீர் பாய்ச்சல் நிகழ்த்தப் படுகிறது. அதே போன்று மலையிலிருந்து ஓடிவரும் நீரைக் கொண்டோ அல்லது தேக்கி வைக்கப்பட்ட நீரைக் குழாய்கள் மூலம் பாயச் செய்தோ நீர்ச் சுழலிகள் சுழற்றப் படுகின்றன. சுழற்றப்படும் நீர்ச்சுழலி தைன மோவிலிருந்து மின்சாரத்தைப் பெற உதவுகிறது.

மோட்டார் வண்டி முதல், மேகத்தை ஊடுருவிச் செல்லும் வான் ஊர்திவரை செயற்படத் தேவையான பெற்றோலியம் எரிபொருளும் இயற்கைச் சக்தி முதலே. பன்நெடுங்காலத்திற்கு முன் இப்புவியிலும் கடலிலும் வாழ்ந்து இறந்து போன தாவர விலங்கு உயிரினங்களின் உடல்கள் அமுக்கப்பட்டே பெற்றோலியம் எரிப் பொருட்கள் தோன்றியுள்ளன. இத்தாவர ங்களெல்லாம் ஒளித்தொகுப்பு எனும் செயற்பாட்டின் மூலம் சூரிய சக்தியை அன்று உடலில் இரசாயன சக்தியாகத் தேக்கி வைத்தன. அவையே இன்று பெற்றோலியம் எரிபொருளாகவும், நிலக்கரியாகவும் சக்தியைத் தருகின்ற சக்தி முதல்களாக உள்ளன.

எல்லாவற்றுக்கும் மேலான சக்தி முதல்சூரியனே. சூரிய சக்திஒளிச்சக்தி யாகவும் வெப்பசக்தியாகவும் நமக்கு கிடைக்கிறது. ஒளிச் சக்தி பல்வேறு வடிவங்களில் தாவரங்களால் மாற்றப்

பட்டு சேமிக்கப்படுகிறது. எரிபொருட்களாக உபயோகிக்கப்படும் விறகுகள் இயற்கைச் சக்தி முதல்களான தாவரங்களின் உடல்களே. சூரிய சக்தி தாவர உடல்களில் தேக்கி வைக்கப்பட்டன. ஆகவே எமக்கு எரிபொருளாகக் கிடைக்கின்றது.

இயற்கை சக்திமுதல்களில் என்றும் குறைவுபடாமல் இருக்கக்கூடியது சூரிய சக்தியே. மனிதன் இயற்கை வளங் களில் ஒன்றான சக்தி முதலான பெற்றோலியத்தைக் கட்டுப்பாடின்றி உபயோகிக்கத் தொடங்கியதால் இதற்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை தோன்றத் தொடங்கி விட்டது. எனவேதான் சூரியசக்தியை உபயோகிக்கும் பல்வேறு முறைகளில் விஞ்ஞானம் தனது கவனத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளது. எமவே இயற்கைப் பெரும் சக்தி முதலாகிய சூரியனின் சக்தியை நேரடியாகப்பயன்படுத்தக் கூடிய பல்வேறு முறைகளிலும் நாம் எமது கவனத்தைச் செலுத்தி அவற்றைப் பயன் படுத்துவோமாயின் சக்தித் தட்டுப்பாடென ஒரு நிகழ்வு எதிர்காலத்தில் ஏற்படாமல் தடுக்க முடியும் என உறுதியாக நம்பலாம்.

ச. ஜனகன்
ஆண்டு 7A

# ஆபிரிக்காக் கண்டம் பற்றி நான் அறிந்தவை!

உலகிலே ஏழு கண்டங்களும், ஐந்து சமுத்திரங் களும் உண்டு. அவை ஆசியாக்கண்டம், ஆபிரிக்காக்கண்டம், அந்தாடிக்காக்கண்டம், ஐரோப்பாக் கண்டம், வட அமெரிக்காக்கண்டம், தென் அமெரிக்காக்கண்டம், சமுத்திர ங்கள், பசுபிக் சமுத்திரம், அந்தாட்டிக் சமுத்திரம், இந்து சமுத்திரம், அத்திலா ந்திக் சமுத்திரம், ஆட்டிக் சமுத்திரம் என்பனவாகும்.

இந்தக் கண்டங்களில் ஆபிரிக் காவை சற்று உற்று நோக்குவோம். உலகத்திலே மிகப்பெரிய பாலை நிலமான சகாரா பாலை நிலம் இக் கண்டத்திலேயே உள்ளது. ஆபிரிக்காக் கண்டத்தில் கூடுதலாக நிக்ரோக்கள் தான் வசிக்கின்றார்கள். பிரமிட்டுக்கு பேர் போன நாடான எகிப்தும் இக் கண்டத்திலே அமைந்துள்ளது. ஆபிரிக்காக் கண்டம் வளமற்றது. இங்கு 10% நிலம் தான் விவசாயப் பயிர்ச் செய்கைக்கு உகந்தது. இக்கண்டத்தில் நாபியாய்பாலைநிலம்,நமிப்பாலைநிலம், லிபியப்பாலை நிலம், சூடான் பாலை நிலம் போன்ற பாலை நிலங்கள் அமைந்துள்ளன. இக்கண்டத்தில் அற்லஸ் மலைத் தொடரும் அமைந்துள்ளது. எதியோப்பிய உயர்நிலம், கென்யா உயர்நிலம், அதமாவாஉயர்நிலம் போன்ற உயர்நிலங்கள் அமைந்துள்ளன. கிளிமஞ் சாரோ சமவெளியும் அமைந்துள்ளது. தென் ஆபிரிக்கா தங்கத்தையும், நிலக் கரியையும் உற்பத்திசெய்கின்றது.

உலகிலேயே வனவிலங்குகளை இயற்கைச் சூழ்நிலையில் கண்டு களிக்கும் மிகச் சிறந்த வாய்ப்பு தென் ஆபிரிக்கா தான் எமக்குத் தருகிறது. 19 இலட்சத்து 48 ஆயிரத்து 528 ஹெக்டேயர் பரப்பைக் கொண்ட வனவிலங்கு சரணாலயம் தென் ஆபிரிக்காவில் உள்ளது. இந்தப் பிரதேசம் இஸ்ரவேல் நாட்டின் விஸ்திரணத்திலும் பார்க்கப் பெரியதாகும். இச் சரணாலயத்தில் 137 வகையான பாலூட்டிகள், 450 வகையான பறவைகள், 114 வகையான பாம்பினம், 40 வகையான மீனினம், 33 வகையான தரை மற்றும் நீர் பிராணிகள், 227 வகையான வண்ணத்துப் பூச்சியினம் உள்ளன. ஆபிரிக்காக் கண்டத்தையும், ஆசியாக் கண்டத்தையும் சுயஸ் கால்வாய் பிரிக்கின்றது.

ம. இளஞ்செழியன்
ஆண்டு 7A

# ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

உயிர் என்பது எல்லாவற்றையும் விட அரியது. ஆனால் உயிரை விட ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும் என்னும் போது ஒழுக்கத்தின் பெரு மையும் எடுத்துக் காட்டாமலே விளங்குகின்றது.

காற் காசுக்குப் போன மானம் கோடி கோடித்தாலும் வராது என நம் ஆன்றோர் கூறியுள்ளனர். அம்மானத்தைக் காப்பது ஒழுக்கமாகும் அறிஞர் ஒழுக்கத்துடன் வாழவேண்டும் எனில் மானத்துடன் ஓயாது போரிட வேண்டும் எனக் கூறுகின்றார்கள்.

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது பொய்யா மொழியான வள்ளுவன் வாக்காகும். ஒழுக்கம் மனிதனைப் பிரகாசிக்கச் செய்கின்றது. ஒழுக்க மற்றவனுக்கு மதிப்பில்லை; புகழில்லை; உலக அன்பில்லை. ஒழுக்க மற்றவன் செல்வனாகவும் இருக்கலாம்.ஆனால் ஒழுக்கமற்ற செல் வமும், கல்வியும் உயிரற்ற உடல் போலப் பயனற்றவை என்பது ஆன் றோர் கருத்து. அறிஞர் வரதராசன் படிப்பும் பணமும் செல்வாக்கும் இருந்து விட்டாற் போதாது. ஒழுக்கமும் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

இன்று சமுதாயத் தில் படித்தவர்களும் பாமரர்களும் பல விதமான போதைப் பொருட்களுக்கு அடியையாகித் தம் வாழ்வையே அழிதுக் குட்டிச் சுவராக்கிக் கொள்கின்றனர். பெற்றவரை மதியாது கற்றவரை மதியாது தன் குருவை மதியாது மாக்களாக நடந்து கொள்கின்றனர். இவர்கள் கல்வி அறிவோ சமய அறிவோ இன்றி ஒன்றுக்கும் உதவாக் கரைகளாகிப் பூமிக்குப் பாரமாக கொலை கொள்ளை போன்றவை களின் பிறப் பிடமாகிப் பிறருக்குத் துன்பம் தருகின்றனர். இவர்களை மண்ணவர்கள் மட்டுமல்ல விண்ணவர்கள் கூட வெறுக்கின்றார்கள். பெற்ற தாயும் கொண்ட மனைவியும் பெற்ற மக்கள் கூட ஒழுக்கமற்றவர்களை வெறுக் கின்றார்கள்.

ஒழுக்கமுள்ளவன் இழிகுலத்தவன் ஆயினும் உலக மக்கள் அவனை உயர் குலத்தவனாகவே உத்தமனாக ஏத்திப் புகழ்வர். எனவே நாம் சிறுவயதிலேயே "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்னும் அறிவுரையைப் பொன்னுரையாகக் கொண்டு எம் உயிரை விட்டாவது ஒழுக்க த்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒழுக்கம் இம்மையில் மட்டுமல்ல மறுமையிலும் வீட்டு இன்பத்தைத் தரவல்லது.

ஜெயராஜா ஜெயந்தா
ஆண்டு 7B

# ஆசிரியன் சமூகத்தின் விடி வெள்ளி

ஆசிரியன் எனும் சொல்லைப் பிரித்தால் ஆசு + இரியன், குற்றம் ஒழிப்பவன் என்று பொருள்படும். ஒரு குற்றம் செய்யும் மாணவனைத் திருத்தி நல்வழிக்கு இட்டுச் செல்லும் மகத்தான பணி ஓர் ஆசிரியனையே சாரும். "மாதா, பிதா, குரு, தெய்வம்" இங்கு மாதாவும் பிதாவும் தமது குழந்தைகளுக்குக் கல்வி புகட்டவெனத் தம் குழந்தைகளை ஆசிரியரிடமே ஒப்படைக்கின்றனர். எனவே, தாய் தந்தைக்கு அடுத்தபடியாக மதிக்கப்படுபவன் குருவே. "தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்பார்கள். அதாவது ஒரு குழந்தைக்கு அமையும் ஆசிரியன் சிறப்பாக அமைந்தால் அவனுடைய எதிர்காலம் சுபீட்சமாக அமையும் என்பது உறுதி. இக்காரணங்களினால் ஆசிரியன் என்பவன் சமுதாயத்தில் முக்கிய இடம் பெறுகின்றான் எனலாம்.

கல்வி என்பது, குழந்தை ஒன்றிற்குக் கருவறை தொடக்கம் கல்லறை வரை நடைபெறும் ஒரு செயற்பாடாகும். இக்கல்வியை வழங்கும் ஆசிரியர்கள் அக்குழந்தைகளின் வரலாற்றில் அழியாத இடத்தினைப் பெறுகின்றனர். மேலும் ஆசிரியன் என்பவன் குழந்தைகள் மத்தியில் ஒரு சுடர் விளக்குப்போன்றவன். ஒரு விளக்கை எரிய வைப்பதன் மூலம் பல விளக்குகளை ஏற்ற முடியும். இவ்வாறு பல விளக்குகளை ஒளிவிட்டுப் பிரகாசிக்க வைக்கும் மகத்தான பணி ஓர் ஆசிரியரின் பணியே ஆகும்.

மேலும், சமுதாய உயர் விழுமியங்களுக்கும் உறுதிப்பாட்டுக்கும் ஆக்கபூர்வமாகப்பணியாற்றுவோர் ஆசிரியர்களே ஆவர். சமுதாய புனரமைப்பில் ஆசிரியனது பங்கானது மிக மிக அத்தியவசியமானதாகக் கருதப்படுகின்றது. அதற்கு ஈடானது வேறு எதுவுமில்லை என்றே கூற வேண்டும். ஆசிரியரானவர் குறிப்பிட்ட தினத்தில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமேயன்றி என்றும் சமுதாயத்தினதும் மாணவர்களினதும் கௌரவத்திற்கு உட்பட்டவரேயாவர். இலை மறை காயாக இருக்கும் மாணவர்களது திறன்களை நிகழ்காலத்தில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கச் செய்வதோடு சமுதாய மேம்பாட்டுக்கு வித்திடுபவர்களாகத் திகழ வைப்பவர்களும் இவ்வாசிரியர்களே. எனவே, இவர்கள் என்றென்றும் கண்ணியத்துக்குட்பட்டவர்களே ஆவர்.

நல்லொழுக்க வருங்கால சமுதாயத்தை கட்டியெழுப்பும் சிற்பிகளாவார்கள். உலகில் பல்வேறு தொழில்கள் காணப்பட்டாலும் அத்தனை தொழில்களுக்கும் ஆள் வலுவைக் கொடுத்து நெறிமுறைப்படுத்துபவன் ஆசிரியனே. பிள்ளையின் எதிர்காலமானது ஒரு நல்லாசிரியன் கையிலேயே தங்கியுள்ளது. பிள்ளையின் வளமான எதிர்காலத்தைப் பிரகாசிக்கச் செய்யும் கதிர்களாக மின்னுபவர்களும் ஆசிரியர்களே.

பெற்றோர் பிள்ளையை அறிவூட்ட ஆசிரியரிடமே ஒப்படைக்கின்றனர். எனவே ஓர் ஆசிரியரானவன் அனைவரிலும் மேலானவன் எனபது "உள்ளங்கை நெல்லிக்கனி" போல் தெளிவாகின்றது. ஓர் ஆசிரியரானவன் மாணவர்களின் வளர்ச்சியில் ஏணிப்படி போலத் திகழ

வேண்டும். மாணவரை ஒவ்வொரு படியாக உயர்த்தி, உயர்ந்த அந்தஸ்துக்கு இட்டுச் செல்பவனே ஆசிரியன்.

ஒருவன் சமூகத்தில் எவ்வளவு பெரிய செல்வந்தனாக இருப்பினும் அவன் கல்வியறிவின்றி இருப்பானாயின் அவனைச் சமூகம் மதிக்காது. இங்கு செல்வத்தை விட கல்விக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. திருவள்ளுவர்,

"கேடு இல் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றையவை"

என்று, கல்வியின் பெருமையை எடுத்துக் கூறியுள்ளார். எனவே இப்பெருமை யாவும் கல்வியைப் போதிக்குப் ஆசிரியர்களையே சாரும். அத்தோடு ஒரு சமுதாயத்தின் நிலையை உயர்த்த அத்திவாரம் இடுபவர்களும் இவ்வாசிரியர்களே எனலாம்.

இப்பணியைப் புரியும் ஆசிரியர்கள் பரந்த அறிவு, ஒத்துழைப்பு, தன்னலமற்ற சேவை மனப்பான்மை, தலைமைத்துவம், ஆக்க முயற்சிகளை ஆரம்பிக்கும் திறன், தன்னம்பிக்கை, சினேகித மனப்பாங்கு, சமூக இசைவு, சுய கட்டுப்பாடு, வசீகரமான குரல், நேரம் தவறாமை, மனத் தைரியம், நடு நிலைமை போன்ற பல்வேறு அம்சங்களையும் கொண்டு இருப்பாரானால் சிறந்ததொரு சமுதாயம் உருவாக வழி வகுக்கும் என்பது திண்ணம்.

இராசு சத்யானந்தன்
ஆண்டு 8 A.

★ கல்வியானது அறிவு, உணர்வு, செயற்திறன் என்பவற்றை பிறப்பிக்க வேண்டும்.

– பெஞ்சமின் புளூம்.

★ கல்வி என்பது ஆற்றைப் போன்றது. எவ்வளவுக்கு எவ்வளவு இது ஆழமாயிருக்கிறதோ அவ்வளவு இது தந்தடியின்றி அமைதியாக இருக்கும்.

– எவ். பேக்கன்.

# நாட்டார் பாடல்களின் தனிச்சிறப்பு

*கிராமங்கள் இயற்கைதேவி எழுந்தருளியிருக்கும் கோயில் என்றால், கிராமமக்கள் அத்தேவியை வழிபடும் அன்பர்கள் எனலாம்.*

*அவர்கள் எளிமை வாழ்வு வாழ்பவர்கள். உழைப்பொன்றே பெரும் செல்வம் என்று கருதுபவர்கள். இயற்கையாகவே கூரிய மதியும் சமத்காரமான பேச்சும் கொண்டவர்கள். இயற்கையறிவும் கலையுணர்வும் கொண்ட அவர்களின் உள்ளத்திலே, பல பல காரணங்களினால் உணர்ச்சிகள் தோன்றிக் கரை புரண்டெழும் போது, அவை பாடல்களாக வெளிவருகின்றன.*

*இந்தப் பாடல்கள் இலக்கண வரம்பிற்குட்பட்டுச் சொற்சாலங் காட்டி மயக்குவன அல்ல, பாமர மக்களின் உள்ளத்துணர்ச்சியை உயிராகக் கொண்டு, கருத்தைத்தெற்றென விளக்கும் உரிமையோடு கூடி நடப்பவை. நாட்டுமக்களின் உள்ளத்திலிருந்து வெளிப்படுவனவாகையால், அவை நாட்டார் பாடல்கள் எனப் பெயர் பெறுகின்றன.*

*நாட்டார் பாடல்கள் சமுதாயத்தின் மிக மூத்ததொரு கலையாவதோடு, பண்பட்ட இசை வளர்ச்சிக்கு மூலாதாரமாகவும் விளங்குகின்றன. அன்றியும் அவை யாவும் பொதுமக்களின் இதயப்போக்கு, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், ஆசைகள் என்பவற்றை அளவிடக்கூடிய அளவுகோலாகவும் விளங்குகின்றன. எனவே ஒரு நாட்டின் பண்பாட்டை அறிவதற்கு நாட்டார் பாடலைப் போன்ற உயரிய கருவி வேறில்லை எனலாம்.*

*இடையர், உழவர், குறவர், மீனவர், வண்டிக்காரர் முதலிய தொழிலாளாகள் தொழில்களைச் செய்யும்போது சோர்வு தோன்றா வகையில் இருப்பதற்கு நாட்டார் பாடல்கள் பாடப்படுகின்றன. மருத நிலத்தைச் சேர்ந்த கிராமங்களிலே பரந்த கழனிகளில் வேலை நடைபெறும்போது உழவர், உழத்தியர், வாயினின்றும் வெளிவரும் பாடல்களிலே காதல் கொஞ்சும் நகைச்சுவை விஞ்சும்.*

*பொன்னுச்சாமி என்பவன், வயற்காட்டுப் பெண்களில் ஒருத்தியைப் பார்த்து,*

*"கண்ணாடி வளையல் போட்டு*
*களையெடுக்க வந்த புள்ளே*
*கண்ணாடிமின்னலிலே – உன்*
*களையெடுப்புப் பிந்துதடி"*

*என்று பாடுகிறான். உடனே அவள்,*

*"வாய்க்கால் வரம்புச்சாமி வயற்காட்டுப்*
*பொன்னுச்சாமி களையெடுக்கும் பெண்களுக்குக்*
*காவலுக்கு வந்த சாமி"*

*என்று பதில் சொல்கிறாள். இந்தப் பதிலில் நகைச்சுவையும், கிண்டலும்*

இழையோடிக் கிடக்கிறது. இவ்வாறாக நாட்டார் பாடல் நகைச்சுவையோடு மிளிர்கிறது.

தாலாட்டுப் பாடல்கள் கிராமத்திற்குக் கிராமம் வேறுபட்டுப் பலப்பலப்பொருளுடையனவாகக் காணப்படுகின்றன. இங்கு ஒரு பெண் தன் குழந்தையைத் தாலாட்டுகிறாள்.

"மலடி மலடி என்று மாநிலத்தோர் ஏசாமல்

மலடிக் கொரு குழந்தை மாதவனார் தந்த பிச்சை
இருளி இருளி என்று மாநிலத்தோரேசாமல்
இருளிக் கொரு குழந்தை ஈசுவரனார்தந்த பிச்சை"

என்று தன் உள்ளத்துணர்ச்சிகளை எல்லாம் சேர்த்துப் பாடுகிறாள்.

ஒப்பாரிப் பாடல்கள் நாட்டார் மக்களிடம் பெருவழக்குப் பெற்றுக் காணப்படுகின்றன. ஒரு வீட்டிலே அவ்வீட்டுத் தலைவன் இறந்துவிட்டான். அங்கு ஒருத்தி,

"பொதுதாய் இலங்குவாயே – நீயும்
பொழுது பட்டால் மங்காயே
நிலவாய் இலங்குவாவே – நீயும்
நிலவும் பட்டால் மங்காயே"

என்று புலம்புகின்றாள்.

இவ்வித நாட்டார் பாடல்கள் இலக்கியத் துறையிற் பெருமளவு ஆதிக்கம் பெற்றுள்ளன. புலவர்களும், இசைவல்லோர்களும், பக்தர்களும் நாட்டுப் பாடல் இசைமுறையைத் தழுவிப் பலப் பலப் பாடல்களை இயற்றியுள்ளனர். சிலப்பதிகாரத்திலே காணப்படும் வரிப்பாடல்களும் பல்வகைக் குரவைகளும் நாட்டுப்பாடல்களைத் தழுவியனவே. மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத் தேனில் வரும் அம்மானையும் அத்தகையதே. கோபாலகிருஷ்ண பாரதியாரும், சுப்பிரமணிய பாரதியாரும் நாட்டுப் பாடல்களிற் பெருகி வழங்கி வரும் சிந்துகளாற் கவரப்பட்டு அவ்விசையமைப்பைப் பின்பற்றினர். சுருங்கக் கூறின் வாய்மொழி இலக்கியமாகிய நாட்டுப்பாடல்கள் பாமர தாளவுறுதியோடும் கூடி உலவுகின்றன. அன்றியும், இலக்கண நுட்பங் கொண்ட இசைக்கலை வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைந்துள்ளன. எனவே, இத்தகைய சிறப்புடைய நாட்டார் பாடல்களைப் பேணிக் காப்பது கலையார்வம் கொண்ட அனைவரதும் பெருங்கடனாகும்.

இராசு சத்யானந்தன்
ஆண்டு 8A

# பாலர்களை வேலைக்கு அமர்த்தும் கொடுமை

ஒரு நாட்டின் வளங்களுள் மனித வளம் விலை மதிக்க முடியாத அரும்பெரும் சொத்தாகும். இதன் அடிஅத்திவாரமாக அமைபவர்கள் பச்சிளம் பாலகர்களே. அத்திவாரம் உறுதியாக அமைந்தால் தான் அதன் மேல் எடுக்கப்படும் கட்டடமும் உறுதியாக நிலைத்து நிற்கும். அதே போன்று மனிதவளத்தின் அத்திவாரமாக அமையும் சிறுவர்களின் உடல், உள விருத்தி உறுதியாகவும் ஒழுங்காகவும் அமைந்தால் தான் வருங்காலத்தில் பயனுள்ள நற்பிரசைகளைக் கொண்ட சமுதாயத்தை உருவாக்க முடியும். இன்றைய குழந்தைகளே நாட்டை ஆளும் நாளைய தலைவர்கள். எனவே அவர்களின் உய்வு, பாதுகாப்பு, சுதந்திரம், மேம்பாடு போன்ற அடிப்படை உரிமைகள் அனைத்தும் பாதுகாக்கப்படவேண்டும் என சர்வதேச சிறுவர் உரிமை பற்றிய சமவாயம் கூறுகிறது.

ஆனால் இன்று அநேக நாடுகளில் நிகழ்வது என்ன? சிறுவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு பச்சிளம் பாலகர்கள் பல கொடுமைகளுக்கு உள்ளாகின்றார்கள். இவற்றில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் கொடுமை இன்று மிக மோசமான சுரண்டலாகக் கருதப்படுகிறது. பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் பல்லாயிரக்கணக்கான பாலகர்கள் தம் பாலர் பருவத்தை சுதந்திரமாக அநுபவிக்க முடியாதவர்களாகக் கசக்கிப் பிழியப்படு கிறார்கள். வீங்கிய விரல்களும், வலிக்கும் நுரையீரல்களும் கூனிய முதுகுகளும் கொண்ட சிறுவர்கள் எழில் மிகு கம்பளங்களை உருவாக்குகிறார்கள். இதனால் கோடிக் கணக்கான டொலர் பெறுமதி மிக்க ஏற்றுமதித் தொழிலை நிலைபெறச் செய்து வரும் இப்பாலகர்கள் பெறுகின்ற ஊதியமோ அன்றாடச் சீவியத்திற்கே போதாது.

பச்சிளம் பாலர் பிரேசிலில் வாழை க்குலை வெட்டுகிறார்கள், கொலம்பியாவில் செங்கற்கள் சுமக்கிறார்கள், மொராக் கோவில் கல் உடைக்கிறார்கள், சூடானில் பஞ்சு அறுவடை செய்கிறார்கள், எகிப்தில் கந்தல் துணிக் கழிவுகள் சேகரிக்கிறார்கள், வயல் நிலங்களில் வேலை செய்யும் போது ஆபத்தான இயந்திரங்களில் ஏற்படும் விபத்துக்கள், கிருமிநாசினிகள் போன்ற வற்றிற்கு முகம் கொடுக்க வேண்டி இருக்கிறார்கள். இதனால் சிறுவர் மரணம், நோய், போசாக்கின்மை, ஊனம், எழுத்தறி வின்மை என்பன அதிகரிக்கின்றன. சிறுவர்கள் இவ்வாறு சுரண்டப்படுவதற்கு அவர்களின் குடும்ப ஏழ்மை நிலையே காரணமாகும். வறிய சமுதாயத்தில் வாழும் சிறார்களிற் சிலர் தமது பெற்றோரால் அடிமைகளாக விற்கப்படு கின்றனர். இவ்வாறு பிஞ்சு விரல்களைக் கொண்ட பாலர்கை காய்ந்து விட, கண் துஞ்ச, தூசிகள் நுரையீரலை நிறைக்க வேலை வாங்கப்படுகிறார்கள். இதனால் வயதை அடையும் பருவத்தில் பெரும்பாலானவர்கள் நோயாளிகளாக வேலையில் இருந்து விலகி விடுகிறார்கள்.

எனவேபாலர் கொடுமைப் படுத்தப்படுவதால் மனித இனத்தின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகிய சிறியோரைப் பேணி வளர்க்கும் பணி புறக்கணிக்கப்படுவதுடன் அவர்களைப் பிஞ்சிலேயே கனியச் செய்வதன் மூலம் எதிர்கால மனிதவளம் நாசம் செய்யப்படுவதாக சர்வதேச தொழில் நிறுவனம் எச்சரிக்கை செய்துள்ளது. மேலும் இத்தகைய சுரண்டல்களை நிறுத்துவதில் மக்கள் கண்காணிப்புடன், வெகுசன ஊடகத்தின் பிரசாரமும் அவசியமாகும். அத்துடன் அரசு சிறுவரின் அடிப்படை உரிமை மீறப்படுவதைக் கண்டிப்பாக நெறிப்படுத்தி அவர்களின் எதிர்கால வாழ்வு வளம் பெற ஆவன செய்ய வேண்டும்.

*பா. சபேசன்*
ஆண்டு 8A

# பண்டைத் தமிழிசை

சங்க காலத்தில் பரிபாடல் என்னும் இசைப்பாடல் பாடப்பட்டு இருந்தது. பரிபாடல், இசைப்பாடல் என்பதைப் பரிமேலழகர் உரையினால் நாமறிகிறோம். கிடைக்கப்பெற்ற பரிபாடலில் பண்டைய இசைச்சிறப்பினைக் காணமுடிகிறது. பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டில் இசைக்கலையில் வல்லவராக இருந்தவர் "பாணர்" எனும் இனத்தினர். இவர்கள் அரசர், சிற்றரசர், செல்வர்களின் இல்லங்களுக்குச் சென்று இசைப்பாடல்களைப் பாடி அவர்களால் போற்றப்பட்டார்கள். புரவலர்கள் பொன்னையும், பொருளையும் வழங்கினர்.

கி.பி. 7ஆம் ,8ஆம் ,9ஆம் , நூற்றாண்டுகளில் இருந்த, பேர் பெற்ற இசைப்பாணர்களில் திருஞானசம்பந்தருடன் இசைப்பண் வாசித்த திருநீலகண்ட யாழ்ப்பாணரும், திருமால் அடியவரான திருப்பாணாழ்வாரும் வரகுணபாண்டியன் காலத்தில் வாழ்ந்த பாணபத்திரனும் குறிப்பிடத் தகுந்தவர்களாவார்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் சிலப்ப திகாரம் என்னும் பழந்தமிழ்க் காப்பியத்தில் "அரங்கேற்றுகாதை", "ஆய்ச்சியர்குரவை" என்னும் இரு அத்தியாயங்களில் இளங்கோவடிகள் தம் காலத்தில் வழக்கிலிருந்த இசை, நடனம் ஆகியவற்றைப் பற்றி நன்கு விளக்கியுள்ளார்.

யாழ் தந்த முத்தமிழ் முனிவர் சுவாமி விபுலாநந்தர், தமது யாழ் நூலில் இசைத்தமிழ் பற்றிக் குறிப்பிடுகையில் "ஸ,ரி,க,ம,ப,த,நி,ச" என்னும் ஏழு ஒசை கருவியாக இசைத்தமிழ் ஆனது, ஏழ் பெரும்பாலைகளை வகுத்து, அவை நிலைக்களமாக நூற்றிமூன்று பண்களைப் பிறப்பித்து, அவை தமது விரிவாக 11091 என்னுந்தொகையினவாகிய ஆதியிசைகளை அமைத்து, "இம்மை இன்பமும் தேவர் பரவுதலானெய்தும் மறுமையின்பமும் பெறுமாறு செய்கின்றது" என்றார்.

"தேவாரம்" என்பது பழந்தமிழர்களின் இசைவளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. பண்கள் 'பகல்பண்', 'இரவுப்பண்', 'பொதுப்பண்' என்று அவை பாடும் நேரத்திற்குத் தக்கவாறு பிரிக்கப்பட்டுள்ளன. பஞ்சமம், இந்தனம், புறநீர்மை, கௌசிகம், காந்தாரபஞ்சமம் ஆகியவை பகல் பண்களுக்கும், சீகாமரம், வியாழக்குறிஞ்சி, தக்கராகம், மேகராகக குறிஞ்சி ஆகியவை இரவுப் பண்களுக்கும் சில எடுத்துக்காட்டுகளாகும்.

பண்டை நாளில் சீரியாழ், பேரியாழ், செங்கோட்டியாழ், கீசகயாழ், நாரதயாழ், தும்புயாழ் எனப்பலவகையான யாழ்கள் பயன்படுத்தப்பட்டன. கி.பி. 11ஆம் நூற்றாண்டுக்குப் பின் யாழ் வழக்கிழந்துவிட்டது. வீணை அவ்விடத்தைப் பெற்றுள்ளது. "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால் இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்" என்பர்

"இவ்வரிய பொக்கிஷமாம்தமிழிசையை தமிழ்ப் பாரம்பரியம் போற்றி, விருப்புடன் கற்றுத் திகழ்வோமாக."

ஜெ. விதுரணன்
ஆண்டு 8 C

# ஓவியம்

கி.பி 14 ஆம், 15 ஆம் நூற்றாண்டு காலப்பகுதிகளில் பழைய உரோம, கிரேக்க நாகரிகங்கள் மீண்டும் உதயமாகின. இந்த மறுமலர்ச்சியில் கட்டிட, சிற்ப சித்திரக கலைகள் முக்கியமாக வளர்ச்சியடைந்தன. இக்காலத்தில் கலைஞர்கள் சுதந்திரமாகத் தமது கலைத் திறமையை வெளிக்காட்டத் தொடங்கினர். சித்திரக்கலை மறுமலர்ச்சிக் காலத்தில் பரந்த அளவில் அபிவிரு த்தியடைந்தது. ஏனைய விடயங்களைப் போன்று இத்தாலியில் ஃபுளோரன்ஸ் நகரம் சித்திரக்கலையிலும் சிறந்து விளங்கியது. இந்நகரத்தில் வசித்த கலைஞர்களுள் மசெக்கியோ, பொட்டிசெல்லி, லியனாடோ டாவின்சி, றபயல், மைக்கல் அஞ்சலோ ஆகியோர் முக்கியமானவர்கள். இக்காலத்தில் லியனாடோ டாவின்சியினால் வரையப்பட்ட மோனாலிசா, இறுதி இராப்போசனம் என்பன சிறப்பு வாய்ந்த கலைப் படைப்புக்களாக இன்றும் விளங்குகின்றன. இதேபோன்று மைக்கல் அஞ்சலோ சிறந்த சிற்பக் கலைஞராக விளங்கினார்.

கி.பி 1900 ஆண்டின் ஆரம்பத்தில் பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரம் உலகக் கலைகளின் கேந்திர நிலையமாக விளங்கியது. இங்கு வாழ்ந்த கலைஞர்கள் தமது படைப்புகளுக்கு கோத்திர மற்றும் கிராமியக் கலைகளையும் உதவியாகக் கொண்டனர். 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட புகைப்படக்கருவி மூலம் புதிய பாதையில் சித்திரக்கலைஞன் தள்ளப்பட்டான். இதன் காரணமாக நவீன சித்திரக்கலை வளர்ச்சி யடைந்தது. 1912 அளவில் திரைப்படம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் சித்திரம், சிற்பம் போன்றன மாற்றமுறும் உலகிற் கேற்ப அமையவேண்டிய தேவை ஏற்பட்டது. விஞ்ஞானக் கோட்பாடுகளினால் மக்களின் கருத்துக்கள் திசை திருப்பப்பட்டன. இம்மாற்றங்கள் சித்திரம், சிற்பம் போன்றவற்றிலும் பிரதிபலிக்கத் தொடங்கின.

மறுமலர்ச்சிக் காலத்தில் சித்திரக் கலைஞர்கள் தெரிவுசெய்த விதி முறைகளுள் சித்திரத்தின் மூலம் ஆழம், புலக்காட்சி, ஒளி, நிழல் காட்டுதல், மனித உருவம் பற்றிச் சித்திரம் வரைதல் என்பன முக்கிய இடம் பெற்றன.

யப்பான் நாட்டில் மரத்தகட்டு அச்சில் காணப்படும் தட்டையான நிலப்பிரதேசம், அதன் கோலம், நிழற்படக்கலையின் குறித்த அம்சங்களைக் காட்டும் நவீன சித்திரம் அறிமுகம் செய்யப்பட்டது. இது எட்வாட் மெனே என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இவரது சித்திரங்கள் கண்ணால் கண்டவற்றை வரைந்ததால் உயிர்ப்புள்ளவையாக இருந்தன. இவ்வாறு மனித வாழ்க்கையுடன் கூடிய சித்திரங்களே உயிருள்ளவை என பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த போர்ட்லெயார் என்பவரும் எடுத்துக் கூறினார்.

போல்செசான் என்பவர் புதிய வழிகளை தேடித் திட்டமிடப்பட்ட வழியில் சித்திரக்கலையை வழிநடத்தியதால் இவர்

"நவீன சித்திரக்கலையின் தந்தை" என அழைக்கப்படுகின்றார். இவருக்குப் பின் வந்த கலைஞர்களும் செயற்திறனுடன் புதிய வழிகளைத் தேடிச் சித்திரக் கலைக்கு மெருகூட்டினர். இவ்வாறு சித்திரக் கலையிலேற்பட்ட மாற்றம் சிற்பக்கலையிலும் செல்வாக்குச் செலுத்தியது. உண்மையான வடிவங்களை முப்பரிமாணப் பண்புகளில் இயற்கையில் காணப்படுவது போன்று காட்டுவதன் மூலம் ஆக்கத்திறன் வெளிப்படுவதில்லை எனப் புரிந்து கொண்ட சிற்பக்கலைஞர்களும் புதிய வழிகளை நாடினர்.

இதேபோன்று இலங்கையிலும் சித்திரக்கலை அநுராதபுர யுகம் தொடக்கம் கண்டி யுகம் வரைக்கும் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. கண்டி யுகத்தின் சுவரோவிய மரபானது அன்றைய மன்னர்களின் அனுசரணையுடன் பிரசித்தமானது. மலையகச் சித்திரக் கலையானது மக்களின் வாழ்க்கையுடன் தொடர்புடையதாகக் காணப்பட்டது.

ஜாதகக் கதைகள், புத்தரின் சரிதை, வரலாற்றுச் சம்பவங்கள் போன்றவை இக்கலையின் கருவூலங்களாக விளங்கின. தம்புள்ள, தெகல்தொருவை, தலதா மாளிகை, லங்காதிலக, கங்காரமய போன்ற இடங்களிலும் தெல்வத்த, முல்கிரிகலை, கரகம்பிட்டிய, களனி ஆகிய இடங்களிலுள்ள விகாரைகளிலும் இவ்வாறான சித்திரங்கள் காணப்படுகின்றன. விதானத்துத் துணிச் சித்திரம், ஓலைச் சுவட்டு நூல்கள், நூல் மேலுறைகள், கொடிகள், பில்லி ஆக்கங்கள், மட்பாண்டங்கள், புத்தகப்பெட்டிகள், கதவுகள் போன்றவற்றில் வரையப்பட்ட சித்திரங்களும் உள்ளன. இவையனைத்திலும் கண்டிச் சித்திர இயல்புகளைக் காணலாம்.

இவர்கள் பயன்படுத்திய நிறங்களில் கறுப்பு, சிவப்பு, மஞ்சள் போன்றவை அதிகமாகவும், சாம்பல், நீலம், பச்சை என்பன ஓரளவும் காணப்படுகின்றன. சூழலிலிருந்து தயாரிக்கப்பட்ட வர்ண வகைகளும், தூரிகைகளும் இவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டன. இவை மக்களால் மிகவும் விரும்பப்பட்ட கலை நுணுக்கங்கள் எனலாம்.

N.A. மெண்டிஸ்
ஆண்டு - 8D.

# கண்டு பிடியுங்கள்

1. முட்டை வியாபாரி அழகன் நாள்தோறும் பல வீடுகளுக்கு முட்டை கொடுத்து வருபவன். ஒரு நாள் அழகன் முட்டை விநியோகம் செய்ய வீட்டை விட்டுக் கிளம்பி வரும்போது எதிரே வந்த லொறி ஒன்று அவன் கூடை மீது மோதியதால் முட்டைகள் எல்லாம் உடைந்து போய்விட்டன. ஆனால் அவனுக்கு அடிபடவில்லை. லொறி ஓட்டுனர் முட்டைகளின் மதிப்புக்குப் பணம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டார். அழகனுக்குக் கூடையில் 75 முதல் 100 முட்டைகள வரைதான் இருந்தனவென்று தெரியும். சரியான எண்ணிக்கை தெரியவில்லை. ஆனால்,

நான் ஒரு வீட்டிற்கு 3 முட்டை வீதம் கொடுத்தால் எவ்வீட்டில் முடிகிறதோ அத்துடன் திரும்பிவிடுவேன். ஒரு வீட்டிற்கு 4 முட்டை வீதம் கொடுத்திருப்பின் அப்போதும் மீதம் இருக்காது. எங்கு தீர்ந்து விடுகிறதோ அப்படியே வீட்டிற்குத் திரும்பி விடுவேன். சிலசமயம் ஒரு வீட்டிற்கு 5 முட்டை வீதம் கொடுத்தால் மீதம் 4 முட்டை இருக்கும் என்றான். அப்படியானால் அவனிடம் எத்தனை முட்டை இருந்தன?

விடை

84 முட்டைகள்.

1 வீட்டிற்கு 3 முட்டை வீதம் -84+3 = 28

1 வீட்டிற்கு 4 முட்டை வீதம் -84+4= 21

1 வீட்டிற்கு 5 முட்டை வீதம் -84+5

= 16 - 4 மீதி

2. அறிமுகமாகாதவரின் தொலைபேசி எண்

அறிமுகமாகாத ஒருவரை ஏதாவது மூன்றிலக்க எண்ணை எழுதுமாறு கூறல் வேண்டும். பின் அவ்வெண்ணின் நூறாமிடத்தை ஒன்றாமிடமாகவும் ஒன்றாமிடத்தை நூறாமிடமாகவும் மாற்றி எழுதச் சொல்லவும். அவ்விரு எண்களும் இடையிலுள்ள வித்தியாசத்தை கண்டுபிடிக்கச் சொல்லுங்கள். வித்தியாசஎண் ஈரிலக்கமாயின் ஒரு பூஜ்ஜியத்தை சேர்க்க சொல்லுங்கள். இப்போது அவரது தொலைபேசி எண்ணையும் வித்தியாச எண்ணையும் கூட்டச் சொல்லவும். இவ்வாறு கூட்டிவந்த விடையுடன் வித்தியாச எண்ணில் நூறாமிடத்தை ஒன்றாமிடத்திலும் ஒன்றாமிடத்தை நூறாமிடத்திலும் மாற்றி கூட்டவும் எனக்கூறுக. கடைசியில் வந்த விடையை கேட்டு அறியவும்.

(i)
```
 692
 296
 ---
 396
```

தொலைபேசி எண்- 590553

(ii)
```
590553
   396
------
590949
```

(iii)
```
590553
   693
------
591642
```

(iv)
இனி 1089 ஐக் கழித்தால் தொலைபேசி எண்ணை அறியலாம்

```
591642
  1089
------
590553
```

3. பதினாறு "4" என்னும் எண்ணை உபயோகித்து 1000 கூட்டுத்தொகை வர வைக்க முடியுமா? கணிதத்தில் உள்ள சகல குறிகளையும் பயன்படுத்த முடியும்.

விடை

$$\begin{array}{r} 444 \\ 444 \\ 44 \\ 44 \\ 4 \\ 4 \\ 4 \\ 4 \\ 4 \\ 4 \\ \hline 1000 \end{array}$$

## 4. இன்ஸ்பெக்டர் அருணாச்சலம்

ஓர் ஊரில் 3 கொள்ளையர்கள் இருந்தனர். இவர்கள் ஒரு ஊரை கொள்ளையடித்துவிட்டு வேறு ஊருக்கு சென்று விட்டனர். இச்செய்தி ஊர் முழுவதும் பரவியது.இச்செய்தியை இன்ஸ்பெக்டர் அருணாச்சலம் அறிந்தார். இக்கொள்ளையர்கள் வேறு ஊரிற்குச் சென்று வேறு முறைகளை கையாண்டனர். அதாவது ஒரு விடுகதையை இட்டு தீர்க்கு மாறு கூறுவர். அவ்வாறு தீர்க்காவிட்டால் நாம் அவர்களுக்கு பணம் செலுத்த வேண்டும். ஒரு நாள் அருணாச்சலம் இவர்களிடம் மாட்டி விட்டார். அக்கொள்ளையர்கள் பின்வருமாறு கூறினர். "நாம் போடும் விடுகதையை தீர்க்காவிட்டால் நீ எமக்கு பணம் தர வேண்டும்" என கூறினார்கள். அதற்கு அருணாச்சலம் "நான் வென்றால் நீங்கள் சிறைக்கு வர வேண்டும்" என்றார். அதற்கு கொள்ளையர்கள் ஒப்புக்கொண்டனர். அவர்கள் வினாவிய விடுகதைக்கு அருணாச்சலம் சரியாக விடை சொன்னார். கொள்ளையர்களும் அவர்கள் கூறியபடி சிறையிலடைக்கப்பட்டனர். அடுத்த நாட் காலை இன்ஸ்பெக்டர் அருணாச்சலத்தின் அறிவுக் கூர்மையைப் புகழ்ந்து வீரகேசரி பத்திரிகையில் எழுதப்பட்டிருந்தது. அக்கேள்வியை நீங்களும் செய்து பாருங்கள்.

ஒரு நாள் இரவு 3 சிறுவர்கள் சேர்ந்து ஒரு மாந்தோப்பிற்குள் நுழைந்து ஒரு கூடை நிறைய பழங்களை எடுத்து வந்து வைத்து விட்டு தூங்கச் சென்றனர். அதற்கு முன் வேகமாக பழங்களை எண்ணியதில் நூற்றிற்கு குறைவாகப் பழங்கள் இருப்பதை அறிந்தனர். நடு இரவில் விழித்த ஒரு சிறுவன் மாம்பழங்களை எண்ணியதோடு நில்லாமல் 3 பேருக்கும் சமபங்கிட்டான். மீதி இருந்த ஒரு பழத்தை உண்டு விட்டு தன் பங்கை ஒளித்து வைத்தான். இடையில் இரண்டாமவன் விழித்துக் கொண்டான். இவனும் முன்னவனைப் போல் மிகுதியை 3 சம பங்கிட்டு மிகுதி இருந்த ஒரு பழத்தை உண்டு தன் பங்கை ஒளித்து வைத்தான். சிறிது நேரத்தில் மூன்றாமவன் எழும்பி இரண்டாமவனைப் போலவே செய்தான். அப்படியாயின் எத்தனை மாம்பழங்கள்?

விடை 79 மாம்பழங்கள்

முதலாமவன் $= \frac{79}{3} = 26$ மீதி - 1

$= 79 - 1 - 26 = 52$

இரண்டாமவன் $= \frac{52}{3} = 17$ மீதி – 1

$= 52 - 1 - 17 = 34$

மூன்றாமவன் $= \frac{34}{3} = 11$ மீதி – 1

$= 34 - 1 - 11 = 22$

செ. லம்போதரன்
ஆண்டு 8 D

# சித்திரக்கலை

சித்திரம் இன்று நேற்று வந்த கலையல்ல. மனிதன் வேட்டையாடத் தொடங்கிய காலத்திலிருந்தே காணப்பட்டு வரும் ஒரு கலையாகும். மனிதன் முதலில் தாம் வேட்டையாடிய மிருகங்களின் உருவங்களையே தாம் வாழ்ந்த குகைச் சுவர்களில் வரைந்தான்.

வர்ணங்கள் எடுத்து வரைவதற்காக மனிதன் முதலில் மரங்களின் மூலிகைப் பொருட்களான இலைச்சாறு, மரங்களின் பால், பசை, மிருகங்களின் இரத்தம், கொழுப்பு போன்றவற்றினையும் பயன்படுத்தினான். இச்சித்திரக் கலையுடன் சேர்ந்தே செதுக்கற் கலையும், சிற்பக்கலையும் தோன்றி வளர்ச்சியுற்றன. அக்காலத்தில் சித்திரக்கலை உலகம் முழுதும் பரவியிருந்த மைக்குச் சான்றுகள் பலவுள்ளன. இவற்றில் இலங்கையில் "சீகிரியா" ஓவியங்கள் பிரசித்தி பெற்றுள்ளன. இதே போல் இந்தியாவில் "அஜந்தா" ஓவியங்களும் பிரசித்தி பெற்றுள்ளன.

மனிதனின் அறிவுத் திறன் வளர்ச்சியடைய மனிதன் பலதரப்பட்ட வகையில் ஓவியங்களை வரைந்தான். இப்படியாக வரையப்பட்ட ஓவியங்களில் "மொனலிசா" ஓவியமே அருமையான, அழகான, வடிவான ஓவியமாக உலகம் ஏற்றுள்ளது. இவ்வோவியத்தை வரைந்தவர் இத்தாலி நாட்டவரான "டாவின்சி" என்பவர். அக்காலத்திலிருந்த ஓவியர்களில் "மைக்கல் அஞ்சலோவும்" சிறந்த ஒரு சிற்பியாவார்.

இவர் "இயேசு" நாதரைப்பற்றி வரைந்துள்ளார். இப்படியாக வளர்ச்சியுற்ற "சித்திரக்கலை" இன்றும் கூட சிறந்த கலையாக, காணப்பட்டு வருகிறது. இக்கலை அக்கால மனிதன் எப்படி வாழ்ந்தான் என்றெல்லாம் அறிய உதவியிருக்கிறது.

சித்திரக் கலையுடன் எழுந்த சிற்பக்கலை, வளர்ச்சி அடையத் தொடங்கியது. இக்கலையினால் மனிதன் தனக்கு உவப்பானவற்றை கல்லிலே பொளிந்து பல உருவங்களை உருவாக்கினான்.

இச்செதுக்கல் கலையினாலேயே மனிதன் தன் இறைவழிபாட்டை நடத்தினாயின், இப்படி பலதரப்பட்ட கலைகளிலும் சித்திரக்கலை அணுகுமுறை ஒன்று உண்டு என்பதை நாம் உணரலாம். சித்திர்க்கலை என்றுமே பேணிக்காக்க வேண்டிய ஒரு கலையாகும்.

வ.கேதீஸ்வரன்
ஆண்டு 8D.

# சங்கீதத்தின் மகிமை

"ஆயகலைக ளறுபத்து நான்கினையு
மேயவுணர்விக்கு மென்னம்மை - தூய
வுருப்பளிங்கு போல் வாளென்னுள்ளத்தினுள்ளே
யிருப்பளிங்கு வாரதிடர் "

என, கம்பர்,

கலைகளை அருளும் சரஸ்வதிதேவியை பாமாலைசூட்டுகிறார். அறுபத்து நான்கு கலைகளிற் சிறந்த கலை சங்கீதக்கலையாகும். இக்கலை செவிக்கும் மனத்திற்கும் இன்பம் தரும். இக்கலையில் வீறுநடை போட்ட பெரியார் பலர் எம்மை சங்கீதக்கலையைப் பயில வழிகாட்டியுள்ளனர். சங்கீதக் கலையை பயிலாவிட்டாலும் கூட அதை இரசிக்கவாவது தெரிதல் வேண்டும். சங்கீதத்தை பால் குடிக்கும் பிள்ளை முதல் பல் இல்லாத கிழவர் வரை இரசித்துக் கேட்பர்.

சங்கீதக் கலை பழைமையானது. இது ஒரு பரந்த கலையென பெரியார் பலர் எமக்கு உணர்த்திச் சென்றுள்ளனர். இற்றைக்கு கி.மு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் 'திராவிடர்' எனும் இனத்தவர் தாம் ஓய்வாக இருக்கும் நேரத்தில் இசையை வளர்த்ததாக புராண ஆய்வுகள் கூறுகின்றன. மனித விருத்திக்கு இசையும் ஊன்று கோலாக இருந்தது. சங்கீதம் என்னும் அரும்பதத்தை பிரித்தால் சம் + கீதம் என வகுக்கப்படும். (சங்கீதம்= சம்+ கீதம்) சம் என்றால் சுகம் என்றும், கீதம் என்றால் இசை எனவும் பொருள் தரும். ஆதலினாற் சங்கீதம் சுகமான இசையாகக் கருதப்படும். எவ்வுயிர்க்கும் எந்தச் சூழலிலும் இசைவாக இருப்பதால் சங்கீதக் கலைக்கு இசை எனும் பெயரும் வந்து சேர்ந்தது. சங்கீதத்தை இசை,பாட்டு,காந்தர்வ வேதம், கர்நாடக சங்கீதம் எனப் பல பெயர் கொண்டு அழைக்கின்றனர்.

இசை சாதி,சமய,மொழி,இன வேற்றுமை அற்றது. இக்கலையை எவரும் கற்கலாம். மக்கள் மத்தியில் இசை மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளது. இசையை அரங்க நிகழ்ச்சிகள்,வானொலி,தொலைக்காட்சி,ஒலிப்பதிவு நாடாக்கள்,இசைத்தட்டு போன்றவற்றின் மூலமும் வெளிபடுத்த முடியும்.

நம் சங்கீதக் கலையின் மும்மூர்த்திகள் என முத்துஸ்வாமி தீஷிதர், ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள், சியாமா சாஸ்திரிகள் போற்றப்பட்டு வந்தனர். புரந்தரதாஸர் சங்கீதக் கலையின் பிதாவாகப் போற்றப்பட்டார்.

"பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலா வல்லியே"

கலை வடிவமாகக் கடவுளை நினைந்து வணங்குபவர்களுக்குக் கலை எளிதிற் கிடைக்கும் என இப்பாடல் மூலம் வலியுறுத்துகிறார் குமரகுருபரர். சமயத்தோடு இயைந்ததுதான் சங்கீதகலை, சங்கீதம் தெய்வீகமான கலையாகும். இவ்வுண்மையை நாம் ஆலயங்களில் உள்ள உருவச்சிலைகளைப் பார்ப்பதன் மூலம் அறியலாம். சரஸ்வதி வீணையையும், கண்ணன் புல்லாங்குழலையும், நடராஜர் உடுக்கையையும், நாரதர் இசைக்கருவியையும், நந்தி தேவர் மத்தளத்தையும் கரங்களில் ஏந்திக்கொண்டே எமக்கு அருட்காட்சி தருகின்றனர்.

சங்கீதம் மூன்று வகைப்படும் என முற்கால நூல்கள் கூறுகின்றன. அவையானவை கீதம்,வாத்தியம்,நிருத்தியம் முறையே வாய்ப்பாட்டு, இசைக்கருவி, நடனம். இக்கால சங்கீதத்தில் வாய்ப்பாட்டும், இசைக்கருவியும் மட்டுமே அடங்கியுள்ளன. நடனம் வேறு தனிக் கலையாக மாறிவிட்டது. இறைவன் இசையால் வசமாகுவான் என்பதனை இலங்கை வேந்தனாகிய இராவணன் சாமகானம் பாடிய கதையிலிருந்து அறியலாம். இசை ஓரறிவுள்ள தாவரம் தொடக்கம் ஆறறிவுள்ள மனிதன் வரை காந்தம் போல் கவரும் தன்மை கொண்டது. இசையின் மூலம் மரங்கள் வளர்ச்சி அடைவதை இந்திய விஞ்ஞானிகள் பரிசோதனை மூலம் கண்டு பிடித்துள்ளனர். அடுத்து ஐந்தறிவுள்ள விலங்கு, நாகப்பாம்பானது மகுடியின் ஓசை கேட்டு படமெடுத்து ஆடுகிறது. தாலாட்டுப் பாடலைக் கேட்டு அழுகிற குழந்தை அழுகை மறந்து நித்திரை கொள்கிறது. இசையின் மூலம் மழையை வரவழைக்கலாம் என மயிலாப்பூரில் ஜில்லாவில் வசித்து வந்த இசை வித்துவான் ஒருவர் நிரூபித்துள்ளார். சங்கீதம் ஆனது, வேலை செய்து களைத்து இருப்பவர்களுக்கு ஒரு புத்துணர்ச்சியை வழங்குகிறது.

பல புலவர்கள் அவர்களது காவியங்களை இசை மூலமே பாடியுள்ளனர். இவ்விசைபலரை இறைபதம் அடையச் செய்துள்ளது. அதுமட்டுமன்றி பல நோய்களையும் இசை மூலம் குணப்படுத்தலாம். கண்ணன் வேய்ங்குழல் வாசித்து மாடுகளை மேய்த்தது மட்டுமன்றிக் கோபியரையும் மயக்கினான்.

ஒரு முறை இராவணனுக்கும் நாரதருக்குமிடையே போட்டி ஏற்பட்டது. அதாவது "இசையால் யார் பாறாங் கல்லினை உருகச் செய்கிறாரோ" அவரே சிறந்தவர் என்பதாகும். முதலில் நாரதர் தனது யாழை ஒரு பாறாங்கல் மீது வைத்து இசைத்து பாறாங்கல்லினை சிறிது சிறிதாக உருகச் செய்தார். ஆனால் இராவணனால் பாறாங்கல்லினை உருகச் செய்ய முடியவில்லை. நாரதர் திரும்பவும் யாழைமீட்டுவதன் மூலம் பாறாங்கல்லில் இருந்து யாழை மீட்டுக்கொண்டார் எனப்படுகிறது. இதே போன்று தற்கால வித்துவான்கள் சிலர் மிருதங்கத்தினை இசைப்பதன் மூலம் வாழைக்காயினைக் கனியச் செய்திருப்பதையும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இராஜரட்ணம் ருக்ஷான்
ஆண்டு 8 A.

# இயற்கை அன்னையின் அருஞ்செல்வங்கள்

"இயற்கை" எவ்வளவு இனிமை யானது. எவ்வளவுதூய்மை ஆனது. எவ்வளவு எழில் உடையது!

நாம் காணும் இயற்கைக் காட்சிகள் நாம் அனுபவிக்கும் இயற்கை வளங்கள் இவை பன்னெடும் காலமாக நம் முன்னோர் ஆண்டு அனுபவித்து எமக்கு விட்டுச் சென்றவை.

ஆயினும் அவை எமக்கு மட்டும் சொந்தமானவையல்ல. அவை எமது எதிர்காலச் சந்ததியினருக்கும் பொது வானவை. இன்று நிகழ்வது என்ன?

தொழில் நுட்பமுன்னேற்றம், அபிவிருத்தி, உற்பத்திப்பெருக்கம் எனும் காரணங்களுக்காக இயற்கை வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன, அளவுக்கு அதிகமாக நுகரப்படுகின்றன.

இதன் விளைவுகள், தாக்கங்கள் அனைத்தும் நம் அனைவருக்கும் பொது வானவை. வளி,நீர்,நிலம் வானோக்கி வளர்ந்தகாடுகள் அவற்றில் வாழும் பல்லின விலங்குகளும் பறவைகளும் இயற்கையின் அருஞ்செல்வங்கள் ஆகும்.

இவ்வளங்களில் வளி உயிர் வாழ்க்கைக்கு இன்றி அமையாதது. ஆனால் இன்று வளிவளம் பல மனித நடவடிக்கைகளால் மாசுபடுத்த ப்படுகின்றது. நிலக்கரி, பெற்றோல் ,போன்ற சுவட்டு எரிபொருட்கள் தொழிற் சாலைகளிலும் போக்குவரத்துச் சாதன ங்களிலும் சக்தி வளங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

காபனீரொட்சைட், கந்தக வீரொட்சைட், நைதரசன் ஒட்சைட்டுக்கள், புகை போன்ற பலமாசுப் பொருட்களை வளிமண்டலத்திற்கு உமிழ்ந்தவண்ணம் உள்ளது. இவ்வளி மாசுக்களின் சில தாக்கங்களை இங்கே கருதுவோம். காபனீரொட்சைட் மனிதனில் மூச்சுத் திணரலை ஏற்படுத்துகிறது. கந்தக த்தினதும் நைதரசனினதும் ஒட்சைட டுக்கள் மழையில் கரைந்து அமில மழையாக நிலத்தை வந்து அடைகிறது. இவ் அமிலமழையினால் காடுகள் அழிக்கப்படுவதுடன், கட்டடங்களும் கைத்தொழில் மயமான சில நாடுகளில் தொழிற்சாலைகளால் விடப்படும் புகைமண்டலத்தினால் மனிதன் மாத்திரம் அன்றி தாவரங்களும் விலங்குகளும் பாதிப்படைகின்றன.

குளோரோபுளோரோ காபன் எனும் மாசுப்பொருளினால் எமது வளிமண்ட லத்தின் மேற்போர்வையான ஓசோன் மண்டலம் சிதைவடையும் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இதன் பாதிப்பினால் சூரியனில் இருந்து வருகின்ற ஊதா கடந்த கதிர்களின் ஊடுருவலால் ஏற்படும் ஆபத்து கோன்றயுள்ளது. நீர்வளம் உயிர்வாழ்க் கைக்கு இன்றி அமையாத ஓர் அருஞ் செல்வமாகும்.

மனித நடவடிக்கைகள் சமுத்திர ங்கள், குளங்கள், ஆறுகள் ஏன்? ஊற்றுநீர் வளம் கூட இன்று பாதிப் படைகிறது. நீர் வளத்தை மாசுப்படுத்தும் பிரதான காரணிகளாக எண்ணெய்க் கழிவுகள் சாயங்கள், சேதனக் கழிவுப் பதார்த்தங்கள் கதிரியக்கக் கழிவுகள், தொழிற்சாலைக் கழிவு களிலிருந்தும் நீர் நிலைகளில் கூட்டப்படும் வெப்பநீர் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

சேதனக்கழிவுகள் நீர் நிலைகளில் தேங்குவதால் அவற்றின் தூய்மையும் இயற்கை எழிலும் மங்குகிறது. துர்நாற்றமும் நோய்க்கிருமிகளின் பெருக்கம் என்பன ஏற்பட இடம் உண்டாகின்றது. சாயங்களும் எண்ணெய்க்கழிவுகளும் நீர் வாழ் உயிரினங்களுக்கு தீமை விளைவிக்கின்றது.

இதனால் மனிதனுக்குப் போதுமான பல்வகை மீனினங்களும், இறால் இனங்களும், பறவைகளும் கூட அழிவடைய நேரிடுகிறது.

அசேதன வளமாக்கிகளை பயன்படுத்துவதன் காரணமாக அவற்றில் இருந்து விடப்படும் நைத்திரேற்றுகளும் பொஸ்பேற்றுக்களும் நீரையும் நிலத்தையும் மாசுபடுத்துகிறது.

இவ்வாறான மாசுக்கள் நீர்நிலைகளில் தேக்கமடைவதால் அங்கு சில நுண்ணங்கிகளின் பெருக்கம் அதிகரிக்கிறது. நீர் பச்சை நிறமாக மாற்ற மடைகிறது. இவ்வாறான நீர்ச்சூழலில் வாழும் தாவரங்களும் விலங்குகளும் இறந்து போக நேரிடுகிறது. இன்றைய நாகரிக உலகில் பிளாத்திக், பொலித்தீன் முதலிய பிரிகை அடையமுடியாத பல பதார்த்தங்கள் தரையில் சேர்க்கப்பட்டு மாசுபடுகிறது.

வனவளங்கள் அளவுக்கு அதிகமாக அழிக்கப்பட்டமையால் பெறுமதிமிக்க மூலிகைகளும் வனத்தாவரங்களும் பல்லின விலங்குகளும் இன்று அருகிவிட்டன. காடுகள் அழிக்கப் பட்டமையும் சுவட்டு எரிபொருட்களினால் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் அளவை அதிகரிப்பதற்கு வழிகோலியது. இதன் தாக்கம் பச்சை வீட்டு விளைவாக இன்று உணரப்படுகின்றது. இதனால் ஏற்பட்டிருக்கும் விளைவுகள் என்ன?

புவியின் மேற்பரப்பு வெப்பநிலை உயரும் இவ்வெப்ப உயர்வினால் கடல்நீர் விரிவடையும் துருவங்களில் உள்ள பனிப்பாறைகள் உருகும் இது கடற் பெருக்கிற்கு வழிவகுக்கும்.

இதனால்தாழ்வான தரைப்பரப்புக்களும் தீவுகளும் கூட கடல்நீரால் மூடப்படநேரிடும். இன்றைய விஞ்ஞானிகளின் சிந்தனை அபிவிருத்தி ஆராய்வுகள் எனும் அடிப்படையில் முன்னேற்றம் காணும் அதே வேளையில் சூழல்மாசுக்களை விஞ்ஞானமுறையில் நீக்கக்கூடிய வழிகளையும் கண்டறியப் பட்டுள்ளமை வரவேற்கத்தக்க ஒரு விடயம் ஆகும். சுவட்டு எரி பொருட்களுக்குப் பதிலாக சூரிய ஒளிச்சக்தி, காற்றின் சக்தி, சூரிய வெப்பசக்தி, நீர்வலு என்பவற்றைப் பயன்படுத்துவதில் அதிகளவு முன்னேற்றம் காணப்படுகிறது. தொழிற்சாலைக் கழிவுகளை எழுமாறாக நீர்நிலைகளிலும், வளியிலும் கலக்க விடுதல் ஆபத்து என உணரப்பட்டுள்ளது. எதிர்காலசந்ததி தூய்மையான காற்றை எமக்குத் திருப்பித்தா, தூய்மையான நீரை எமக்குத் திருப் பித்தா, "தூய்மையான நிலத்தை எமக்குத் திருப்பித்தா" என்று எம்மிடம் கேட்பது போன்ற உணர்வு பல உலகநாடுகளில் ஏற்பட்டுள்ளது. ஆம் அவற்றைத் தூய்மையாகக் கொடுக்க வேண்டியது எமது பொறுப்பு. எனெனில் அவற்றின் தூய்மை கெடாது இயற்கை அன்னை எவ்வாறு எமக்குத் தருகிறாளோ அதே போன்று வருகாலத்தில் அவற்றை விட்டுச் செல்லும் பாரியபொறுப்பு எம்மிடம் உள்ளது.

ஏனெனில் அவை ஈடிணையற்ற செல்வங்கள். ஆம் காற்றிலும், நீரிலும், மண்ணிலும் தூய்மையைக் காண்போம், தூய்மையைப் பேணுவோம்.

இயற்கை வளங்களில் இறைவனைக் காண்போம்.

சி. சிவரமணன்
ஆண்டு 8 C.

# இலங்கை ஓவியர்கள்

சித்திரம் என்பதில் நாம் ஒரு புதுமையைக் காண்கின்றோம். அப்புதுமை பார்ப்பவர் அனைவரையும் அங்கு இழுத்துச் செல்கிறது. இதனை நாம் பார்க்கும் போது புதுமையும் ஆச்சரியமும் அடைகின்றோம். ஓவியனின் கற்பனா சக்தியை வியக் கின்றோம். ஓவியன் வாழா நாடே இல்லை. அவர்களில் இலங்கை ஓவியர்கள் தமது கலாச்சாரமும் பண்பாடும் குலையா வண்ணம் ஓவியம் தீட்டுகிறார்கள். இது இலங்கை ஓவியர்களுக்கு உரிய ஒரு தனிச் சிறப்பாகும்.

இலங்கையில் பல சிறந்த ஓவியர்கள் இருக்கிறார்கள். அவர்களில் டொனால் ராமநாயக்க, ஐவர்பப்டிஸ்ட், A.C.G.S அமர சேகர, மஞ்சுஸ்ரீ, சேனக்க செனநாயக்க, டேவிற் பெயின்றர், ஜோர்ஜ்கீற் என்பவர்கள் முக்கியமானவர்கள்.

இவர்களில் டொனால்ராமநாயக்கா, ஐவர்பப்டிஸ்ற் ஆகிய இருவரும் இயற்கைக் காட்சி ஓவியர்கள். இவர்கள் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த நவீன ஓவியர்களாக இருக்கவில்லை. இவர்களது ஓவியங்கள் உண்மையானதாகவும், உயிருள்ளதாகவும் இருந்தன.

A.C.G.S அமரசேகர முதியவராக இருந் தாலும் மிக அழகு வாய்ந்த ஓவியங்களை வரைந்தார். இவர் இலங்கை யினுள்ள முக்கியமான ஊர்வாசிகளையும், இயற்கைக் காட்சி ஓவியங்களையும் வரைந்தார். இவர் வரைந்த "வேலை இல்லாத் திண்டாட்டம்" "பேய் மகள் நடனம்" போன்றன சிறந்த ஓவியங்களாகும்.

மஞ்சுஸ்ரீயின் ஓவியங்கள் அதிகமாக சுவர் ஓவியங்களாக இருந்தன. இவை அனேகமாகக் கோயிற் சுவர்களில் காணப்பட்டன. இவர் ஜாதகக்கதைகளில் வரும் புத்தரையும், பௌத்த சமய மக்களையும்அதிகமாக வரைந்தார். இவரது ஓவியங்கள் இரு பரிமாணமாக இருந்தன. சிறு வயதிலேயே ஓவியராக இருந்தவர் சேனக்க செனநாயக்கா. இவர் அதிகமாக நவீன ஓவியங்களை வரைந்தார். இவர் தமது எண்ணங்களை நிறங்கள் மூலம் காட்டினார்.

டேவிட் பெயின்டர் கிராம வாழ்க்கையையும் அங்கு வாழும் மக்களின் உயர்ந்த நிலையையும் ஓவியங்களாக வரைந்தார். இவர் சமய சம்பந்தமான படங்களையும் வரைந்தார். வெளிநாட்டு ஓவிய உருவங்களை இவர் உத்தேசித்து வரைந்தாலும் அவை சிங்கள கலாச்சாரத்திற்கு ஏற்ற விதத்தில் இருக்கின்றன. இவர் வரைந்த "றபானா வாத்தியக்காரர்" "மெடோனாவும் பிள்ளைகளும்" போன்ற ஓவியங்கள் மிகவும் புகழ்பெற்ற ஓவியங்களாகும்.

இவர்களைத் தவிர இலங்கையில் வேறு புகழ் பெற்ற ஓவியர்களும் வாழ்ந் தார்கள். அவர்களில் J.D.A, பெரகெரா, ஜோர்ஜ்கீற் போன்றறோர் முக்கிய இயற்கைக்காட்சிகள், ஜாதகக்கதைகள், மக்களின் வாழ்க்கை முறைகள் போன்ற வற்றை வரைந்தனர். ஓவியர்கள் இறந்தாலும் அவர்கள் வரைந்த ஓவியங்கள் என்றும் இறப்பதில்லை.

இ. கிருஷான்
9 'G'

# கணித மாமேதை பைதகரஸ்

சிறந்த தத்துவ ஞானியும் கணித மாமேதையுமான பைதகரஸ் கிரீஸ் நாட்டின் சாமொஸ் நகரில் ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்குமுன் பிறந்தார். இவர் வாழ்ந்த காலத்தில் எழுத்துக்கள் கண்டறியப்படாத படியால் இவரைப் பற்றிய தகவல்களை ஒருவரும் ஆரம்பித்தில் அறிந்திருக்கவில்லை. பிற்கால எழுத்தாளர்களின் மூலமாகவே அவரை எல்லோரும் அறியக்கூடியதாக இருக்கின்றது. சாமொஸ்தீவு ஒரு முக்கிய வர்த்தக மையமாக விளங்கியது. அந்நகரிலுள்ள செல்வந்தர் குடும்பத்தில் பிறந்த பைதகரஸ் சிறந்த கல்வியைப் பெற்று முன்னேறினார். சிறுவயதிலிருந்தே அளவுக்கதிகமான அறிவில் யாருக்கும் நிகரற்றுவிளங்கினார். பதினைந்து, பதினாறுவயதில் அவரது அறிவு நிறைந்த வினாக்களுக்கு அவரது ஆசிரியர்கள் விடையளிக்க முடியாது திணறினார்கள்.

இதன்பின் அவர் 'பிஸ்தஸ்வின் தாவிவஸ்' என்பவரின் கீழ் கல்விகற்றார். இக்காலப்பகுதியில் தான் இவர் பிரபல்யமான தேற்றத்தைக் கண்டுபிடித்தார். அத்துடன் ஒரு முக்கோணத்தின் அகக்கோணங்களின் கூட்டுத்தொகை இரண்டு செங்கோண ங்களுக்குச் சமமென நிறுவினார். சிறு வகுப்புகளிலேயே மாணவர் களுக்குக் கற்பிக்கப்படும் முக்கிய த்துவம் பெற்ற தேற்றத்தைக் கண்டு பிடித்தபடியால் அதற்கு 'பைதகரஸ் தேற்றம்' எனக் குறிப்பிட ப்படுகின்றது. இத்தேற்றமானது கணித கற்கை நெறிகளில் ஏதோ ஒரு முறையில் பிரயோகிக்கப்படுகின்றது. ஒரு செங்கோண முக்கோணியின் செம்பக்கத்தில் அமையும் சதுரத்தின் பரப்பளவானது அம்முக் கோணியின் ஏனைய பக்கங்களில் அமையும் சதுரங்களின் பரப்புகளின் கூட்டுத்தொகைக்கு சமனாகும் என்பதே பைதகரஸால் கண்டறியப்பட்டதாகும். இவர் கல்வி பயிலும் காலத்தில் கல்விப்புத்தகங்கள் எதுவும் இருக்கவில்லை. அறிஞர்களிடையே சென்று அவர்களைச் சந்தித்து கல்வி கற்கும் ஒரேயொரு முறைதான் இருந்தது. பைதகரஸ் சுமார் 30 ஆண்டுகளாக பாபிலோன் பேசியா, அரேபியா, இந்தியா ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்தார். இவர் எகிப்திலும் பல காலம் வாழ்ந்து சங்கீதத்தைக் கற்று எண் கணிதத்தையும் சங்கீதத்தையும் தொடர்பு படுத்தும் முயற்சியை மேற்கொண்டார். பைதகரஸ் 50 வயதை அடைந்த போது கணிதத் துறையில் பல விடயங்களைக்கற்று தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் ஒரு பாடசாலை நிறுவி ஏனையவர்களுக்குக் கற்பித்தார். அவரது பிறந்த நாட்டின் கொடுங்கோல் சட்டத்திலிருந்து தப்புவதற்காக தென் இத்தாலிக்குக் குடிபெயர்ந்தார். அங்கு ஒரு பாடசாலையை 'குறொரொனே' என்ற இடத்தில் நிறுவினார். அங்கு மாணவர்கள் எண்கணிதம், கேத்திரகணிதம் சங்கீதம், வான்சாத்திரம், கிரேக்கதத்துவம் என்பவற் றைக்கற்றனர். பைதகரஸ் சிறந்த சமய வாதியாகவும் ஒழுக்க சீலனாகவும் இருந்தார். கூம்பு, கனக்குற்றி முதலியவற்றின் உருவங் களை வரையும் அறிவையும், எண்கணிததேற்ற அறிவையும் பெற்றிருந்தார். நட்சத்திரங்கள் ஒரு நீள்வட்டப்பாதையில் இயங்குவதாகக் கூறினார். சூரியனை மையமாகக் கொண்டு பூமி அசைவதினாலேயே இரவு பகல் உண்டாகின்றது எனவும் கூறினார்.

அவரது துரதிஷ்டம் அவர் அரசியலில் புகுந்தார். அதன் காரணமாக அவமரியாதை அடைந்தார். அரசியல் வாதிகளுக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தனர். பைதகரஸ் நாடு கடத்தப்பட்டார். அவரது 80 ஆவது வயதில் இறந்தார். பைதகரஸ் இறந்து 200 வருடங்களின் பின் செனற்சபையினர் உரேமனில் பைதகரசின் சிலையை நிருமாணித்தனர். அவர் இறந்தாலும் அவரைமறக்க முடியாதளவிற்கு பல கண்டு பிடிப்புகளைத் தந்து என்றென்றும் தனது பெயரை நிலைக்கப்பண்ணியுள்ளார்.

**பாலேந்திரா சஞ்ஜையன்**
ஆண்டு 9c

# தமிழ் இசைக் கருவிகள்

மனிதன் விலங்குகளோடு விலங்காக வாழ்ந்த காலத்தில் விலங்குகளை வேட்டையாடி இறைச்சியைத் தின்று அதன் தோல்களை மரக்கிளைகளினால் காய வைத்தான். காய்ந்த தோலின் மீது உலர்ந்த குச்சிகள் உராய்வதைக் கண்டு தமிழன் தோற்கருவியைக் கண்டு பிடித்தான்.

விலங்குகளை வேட்டையாடுகின்ற பொழுது வில்லின் நாணிலிருந்து கிளம்புகிற ஒலியைக் கொண்டு தமிழன் நரம்புக் கருவியைக் கண்டுபிடித்தான.

ஆற்றின் இருகரைகளிலும் உள்ள நாணற் கொடிகளில் உள்ள தீஞ்சுவையை வண்டுகள் துளைத்துத் துளைத்து உண்ட பிறகு அதனுள்ளே தென்றற் காற்று புகுந்து ஓசையிடுதலைக் கண்டு தமிழன் துளைக் கருவிகளைக் கண்டு பிடித்தான் என்பர். பின்முங்கிலில் வண்டு துளையிட்டு இசையின்பம் கிடைத்தது.

வேட்டையாடுதலின் போது உலோகத்தைக் கண்டு பிடித்த தமிழன் அதனை தற்செயலாக தட்டுகையில் எழுந்த ஒலி கேட்டு வியந்து கஞ்சக் கருவியைக் கண்டு பிடித்தான் என்பர்.

இத்தமிழிசைக் கருவிகள் தமிழனின் சொத்துக்கள் எனலாம். இவை தமிழனால் கண்டு பிடிக்கப்பட்டவை என்பது இசைக்கருவிகளுக்கு தமிழுக்கே சிறப்பாக உள்ள ழ கரத்தை வைத்து தோல்கருவிக்கு முழவு என்றும், துளைக் கருவிக்கு ‘குழல்’ என்றும் நரம்புக் கருவிக்கு யாழ் என்றும் பெயர் வைத்திருப்பதிலிருந்தே நன்கறியலாம்.

தோற்கருவியாக இருந்த பறை, தம்பட்டம், முரசு போன்றவை மிருதங்கம் தவில் என மருவி வளர்ந்தது. வில்லின் நாண் வழி புறப்பட்ட ஒலிமுதல் யாழ் ஆகி வீணை வயலின் போன்ற நரம்புக் கருவி ஆகியது. நாணற் கொடி முங்கில் இசை மருவி புல்லாங்குழல், மகுடி, நாதஸ்வரம் இசையானது. உலோக ஒலி மருவி சேமக்கலம் தாளம் போன்ற கஞ்சக்கருவிகளாகியது.

இவற்றையெல்லாம் வைத்து நோக்குவோமானால் நம்பாரம்பரிய இசையாம் தமிழிசையே இசைக்கருவிகள் தோன்ற முன்னோடியாய் இருந்தது என்பது ஐயமின்றித் தெளிவாக விளங்கப்படுகிறது.

நி. கிரிதரன்.

ஆண்டு 9.

# நீதியிலக்கியங்கள் இன்றும் எம்மை வழிநடத்துகின்றன

எமது வாழ்க்கை பயனுடையதாக அமைவதற்கு வழி காட்டுவன நீதியிலக்கியங்கள் என்றால் மிகவும் பொருந்தும். உலகத்தில் நாம் செய்யத்தக்கவை செய்யத்தகாதவை அனுசரிக்க வேண்டியவை ஒதுக்க வேண்டியவை என்பன போன்ற ஆசார முறைகள் பற்றி எமக்கு அவை விளக்கிக் காட்டுகின்றன. அறத்தின் வழியாக பொருளைத் தேடி அதன் மூலமாக இன்பத்தைப் பெற்றுக் கொண்டு வளரும் போது தான் முத்தி இன்பத்திற்கான வழி எமக்குத் தென்படுகின்றதென்பது பண்டைய நூலாசிரியர்களின் வாக்கு.

இந்த வகையிலே திருக்குறள், நாலடியார், நல்வழி, மூதுரை போன்ற நீதி நூல்களும் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களும் இவை போல இன்னும் பலவும் நீதி நூல்களாக மனித வாழ்வுப் பாதையினைக் காட்டி நிற்கின்றன.

இதிகாசங்களான மகாபாரதம் இராமாயணம் இரண்டும் முழுக்க முழுக்க அறக் கருத்துக்களையே போதிக்கின்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை என்பனவும் அத்தகைய இலக்கியங்களே. இவற்றில் வருகின்ற கதாபாத்திரங்கள் ஒவ்வொரு அறப் பண்புகளின் வடிவமாக மிளிர்வதை நாம் அவதானிக்கலாம். பாரதக் கதையில் வருகின்ற தர்மர் தர்மத்தின் வடிவமாக அமைகின்றார். தர்மத்தின் வழியிலே அவர் தனது சகோதரரான வீமன், அர்ச்சுனன், நகுலன் சகாதேவன் ஆகியோரை வழி நடத்தியமையால் பாரதப் போரிலே வெற்றி வாய்ப்பு அவர்களைத் தேடி வந்தது. அதுபோல் கர்ணனின் கொடைச் சிறப்பும் தான தர்மங்களால் கிடைத்த புண்ணிய பலன்களும் அவனுக்குப் பெருமையைத் தேடித் தந்தது.

இராமபிரானுடைய பணிவே இராவணனை அழிக்கக் காரணமாக அமைந்தது. கைகேயி காடு செல்லுமாறு கூறியவுடன் இராமர் மறுத்து விவாதித்து இராச்சியத்தைப் பிடித்து இருந்தால் இராவணனை அழித்திருக்க முடியுமா? மூத்தோர் அதுவும் பெற்றோர் சொல்லுக்குத் தலை பணிந்து காடு சென்றமையால் தான் வாலி போன்ற சமூகத் துரோகிகளை அவரால் அழிக்க முடிந்தது. இதனைத் தான் பணிவில் உயர்வு என்று எம்முன்னோர் போற்றுகின்றனர்.

பண்டைய நீதி நூலாசிரியர்களில் ஒருவர் தான் திருவள்ளுவர். திருவள்ளுவரால் எழுதப்பட்டது தான் திருக்குறள். திருக்குறள் முழுவதுமே எமது வாழ்வியல் நெறிகளைத் தான் எடுத்துக் கூறுகின்றன.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல் அதாவது
தீங்கு செய்தோரை நாம் தண்டிப்பதற்கு ஒரு

*சிறந்த முறை அவர்களை வெட்கப்படும்படி அவர்களுக்கு*

*நன்மை தரும் செயல்களை நாம் செய்து விடுதலாகும் என்கிறார் திருவள்ளுவர். எமக்கு யாரும் தீங்கு இழைத்தால் அதற்காக நாம் அவர் மீது பகைமை பாராட்டுதல் தகாது. மாறாக அவர்கள் வெட்கித் தலை குனியும்படியான செயல்களை நாம் செய்தல் வேண்டும். அதனால் அவர்கள் தமது பிழையை உணர்ந்து திருந்த இடமளிக்க வேண்டும் என்கின்றார் திருவள்ளுவர். இப்படியிருந்தால் சமுதாயத்திலே பகைமை ஏற்படமாட்டாது என்கின்றார்.*

*ஔவையாரின் பாடல்கள் முழுவதுமே நீதி நூல்களாகவே அமைகின்றன. ஓரிரு சொற்களில் மாபெரும் கருத்தை விளக்குகின்றார் ஔவையார்,*

இயல்வது கரவேல் - உன்னா உதவக் கூடியதொன்றை உதவாது ஒளிக்காதே
ஈவது விலக்கேல் - பிறர் கொடுப்பதை தடுக்க முயலாதே,
உடையது விளம்பேல் - மறைக்க வேண்டிய இரகசியத்தை பிறரிடம் சொல்லாதே
ஊக்கமது கைவிடேல் - விடாமுயற்சியைக் கைவிட்டு விடாதே

*ஆகிய வரிகள் எமது வாழ்க்கையின் சீராக்கத்திற்காக ஔவையார் தரும் விளக்கங்களாக அமைகின்றன. இன்னும் பற்பல அரிய பெரிய தத்துவங்கள் எல்லாம் அந்த நீதி நூல்களிலே வெகுவாகப் பொதிந்திருக்கின்றன.*

*முடிவாக நோக்கினால் நாங்கள் எமது வாழ்க்கையைச் சீராக அமைத்துக் கொள்வதற்கான சட்ட நூல்களாகவே இந்த நீதி நூல்கள் அமைகின்றன என்று திடமாகக் கூறலாம். இதனால் நாமெல்லோரும் இந்த நீதிநூல்களை நன்கு கற்று எதிர் காலத்தில் சிறந்தவர்களாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும்*

*தமிழ் அன்னை பெற்றதனால்*
*தமிழ் வாழ*
*தமிழ் அன்னை வாழ வேண்டுகின்றேன்.*

*சண்முகசர்மா ஜெயப்பிரகாஷ்*
*ஆண்டு 9*

# இலங்கையின் உணவு உற்பத்தி

மண்ணிலும் விண்ணிலும் ஆர்ப்பரிக்கும் அலைகடலிலும் ஆராய்ச்சிகள் பல நடத்தி எண்ணற்ற சாதனைகள் புரிந்திட்ட இவ்விஞ்ஞானயுகத்தில் உலகநாடுகள் பல போட்டியிட்டுக் கொண்டு நவீன கண்டு பிடிப்புகளில் உற்சாகம் காட்டு கின்றன. அபிவிருத்தி அடைந்த நாடுகள் இப்படி யானவற்றில் ஆர்வம் காட்டுகின்றன. ஆனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள், அந்நாடு அபிவிருத்தி அடைவதற்கு அவசியமான உணவு, உடை, உறையுள் எனும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முனைகின்றன. இவ்வரிசையில் எம்தாய் நாடாம் ஈழத்திரு நாடு இம்மூன்று அடிப்படைத் தேவைகளிலும் முதலிடம் வகிக்கும் உணவு உற்பத்தியில் அன்றும் இன்றும் இருந்த நிலைகளை பற்றி சற்று ஆராய்வோம்.

இற்றைக்கு சுமார் 700, 800 ஆண்டு களுக்கு முன் இலங்கை உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து, கீழைத் தேசங்களின் தானிய களஞ்சியமாக விளங் கியது என்பது சரித்திரம் கூறும் உண்மை. ஆனால் இன்றோ நிலமை தலைகீழாக மாறிவிட்டது. அன்று தேவைக்கதிகமான தானியங்களை ஏற்றுமதி செய்து தமக்கு தேவையான வேறு சில பொருட்களை அந்நியரிடமிருந்து பண்டமாற்று முறையில் பெற்றுகொண்ட நாடு, இன்று மனிதர்களை ஏற்றுமதி செய்யும் அவல நிலையில் உள்ளது.

அன்றைய மக்கள் உழவுத்தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். அன்றாட வாழ்வில் தமது உணவுக்காக பலதரப்பட்ட தானியங்களையும், கிழங்கு வகைகளையும் பயன்படுத்தினர். அன்று இன்று போல் நெல் அரிசி சோறு முதலிடம் வகிக்க வில்லை, பதிலாக சாமை, தினை, வரகு, குரக்கன், பயறு முதலிய பலவித தானிய ங்களும் இடம்பெற்றன. மேலும் இன்றைய கோப்பி, தேயிலையிற்கு பதிலாக பழஞ் சோற்று தண்ணீர், மோர் போன்றவற்றையே அருந்தினர். இதனால் இன்றைய மக்களைக் காட்டிலும் அன்றைய மக்கள் மிகுந்த ஆரோக்கியத்துடனும், வீரியத்துடனும் வாழ்ந்தனர். மேலும் அன்றைய மக்கள் எல்லோரும் விவசாயத்தில் ஈடுபட்டு இருந்த மையால் எமது நாடு பிற நாடு களுக்கும் நெல்லை ஏற்றுமதி செய்தது. இவ்வாறு எம் நாடு தன்னிறைவு அடைந் திருந்த வேளையில் வியாபார நோக்கத்தோடு இங்கு வந்த மேலைத்தேசத்தவர், நாட்டைக் கைப்பற்றி தம் ஆதிக்கத்தைச் செலுத்த லாயினர். அந்தோ! நாடு நலிவுறுவதாயிற்று இதுகாறும் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் சொந்தநாட்டிலேயே அந்நியருக்கு அடிமை சேவகம் செய்து சிறைப் பறவைகளாய் வாழலாயினர். இதனால் விவசாயம் வீழ்ச்சியுறலாயிற்று. இங்கு வந்து எம் தொழிலையும் கெடுத்து இங்குள்ள செல்வங்களை தம் நாட்டிற்கு எடுத்து சென்றதுமல்லாமல், இங்கு சிறந்த நிலவளம் இருப்பதை அறிந்து அவர்கள் நாட்டிற்குத் தேவையான பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, தென்னை, இறப்பர் மற்றும் கோப்பி, கொக்கோ போன்ற சிறுதோட்டப் பயிர்களையும் உற்பத்தி செய்தனர். இது நாள் வரை விவசாயப்பயிர்ச்செய்கையில் மூழ்கியிருந்த எம்மக்கள், இப்போது பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் நாட்டம் கொள்ளலாயினர். இதனால் எமக்கு வேண் டிய உணவுப் பொருட்களுக்கே பிற நாடுகளை எதிர்ப்பார்க்க வேண்டிய நிலை உருவாகிற்று.

காலப்போக்கில் நாடு சுதந்திரம் பெற்றது. இதுவரை அடிமையாய் வாழ்ந்த மக்களுக்கு சுதந்திர அன்னை சிறிது நிம் மதியை அளித்தாள். ஆயினும் அந்நிய மோகம் யாரைதான் விட்டது? தாய் நாட்டை வளம் பெருக்க வேண்டுமென்ற சிந்தை சிறிதுமின்றி மேல்நாட்டார் காட்டிய வழிமுறைகளையும் அவர்களின் கல்வி கலாசாரங்களையும் பின்பற்றத் தொடங்கி விட்டனர். இந்நிலையில் நாடு முன்னேறுவது எங்ஙனம்? ஆரம்பத்தில் உணவுப் பொருட்களை (தானியங்கள்) ஏற்றுமதி செய்த இலங்கை இன்று அவற்றின் இறக்கு மதிக்காக ஏனைய நாடுகளிடம் கையேந்த வேண்டிய நிலையில் உள்ளது.

இந்நிலையில் நாடு இருப்பதைக் கண்ணுற்ற ஆட்சி பீடத்தில் ஏறிய ஒவ்வொரு அரசாங்கமும் நாட்டை மீண்டும் தன்னிறைவு அடையச் செய்வதற்கான பல புதிய சாதனைகளை மேற்கொண்டன. இதன்பயனாக இலங்கை யின் வறட்சியான பகுதிகளில் பயிர்செய்ய கூடியதென கருதப்படும். நிலங்களுக்கு மகாவலி திசை திருப்புத திட்டத்தின் உதவி கொண்டு நீர் பாய்ச்சி உதவாக்கரையாக இருந்த நிலங்களை இப்போது பயிர்பச்சை செழித்து வளரும் வயல் வரம்புகளாக மாற்றி உள்ளனர். இதன்விளைவாக இறக்கு மதியில் ஒரு பகுதியை நாமே உற்பத்தி செய்து அந்நிய செலவாணியை மீதப்படுத்தக் கூடியதாய் உள்ளது.

மேலும் அன்று பலவித தானியங் களை உண்ட மக்கள் இன்று நெல் அரிசிச் சோற்றையும் அதிலிருந்து தயாரிக்கப்படும் உணவுகளையும் உண்ணப் பழகிக் கொண் டனர். இதனால் ஏனைய தானியங்களின் உற்பத்தி சிறிது, சிறிதாகக் குறையலாயிற்று. இதனால் இன்றைய பிள்ளைகளோ சாமை, குரக்கன் முதலியவற்றில் தயாரித்த உணவு களை உண்பதே அரிதாய் உள்ளது. இவ்வாறு ஏனைய தானியங்களின் உற்பத்தி இவ்வாறான ஊட்டச்சத்துள்ள உணவுகளை உண்ணாமை இக்காலத்துப் பிள்ளைகளை போசாக்கின்மைக்கு ஆளாக்கியுள்ளது.

மேலும் உற்பத்தியை அதிகரிப் பதற்காக அரசாங்கம் நாட்டு குடிகள் அனைவரையும் உணவு உற்பத்தியில் ஈடு படுமாறு வலியுறுத்தி விவசாய காணி களையும், உபகரணங்களையும், பணத் தையும், கால் நடை உணவுகளையும் இலவசமாகவும், கடனா கவும் கொடுத்து பெருமளவு உதவி புரிந்து, மக்களை விவசா யத்திலும், கால்நடை வளர்ப்பிலும் ஊக்குவித்து உற்சாகம் ஊட்டியது. இவ் வாறு நாடு முன்னேறிவரும் வேளையில், பதவிக்கு வரும் அரசாங்கங்கள் மீண்டும் இறக்குமதியைத் தொடர்வதால் மக்கள் மத்தியில் உள்ளூர் பொருட்கள் மீதுள்ள மதிப்புக் குறைந்து, வெளியூர், பொருட் கள் மீது மோகம் அதிகரிக்கிறது. அவற்றை வாங்குவதில் உற்சாகம் காட்டுகின்றனர். இதனால் உள்ளூர் உற்பத்தி பாதிக்கப் படுவதோடு பொருளாதாரப் பிரச்சினையும் ஏற்படுகிறது. அத்தோடு பொருட்களின் விலையோ ஒன்றிற்கு இரண்டாக அதிகரிக்கின்றது. நாளுக்கு நாள் அதிகரி த்துவரும் விலைவாசியை நோக்கும் போது எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரம் எப்படி இருக்கும் என்று கூறுவதே கடினம். அதிகரித்துவரும் விலைவாசிக்கு ஏற்ப பொருட்களை வாங்குவது எல்லோராலும் முடிந்த காரியமா? என்ன? இந்நிலையில் ஏழைகள் படும் அவஸ்த்தை கூறவும் வேண்டுமா?

எனவே நாட்டைப் பின்னோக்கி செல்ல விடாது அதைமுன்னேற்றப் பாதையில் இட்டு செல்வது அரசாங்கத்தின் கடமை மட்டுமின்றி நாட்டுக் குடிகள் ஒவ் வொருவருடைய தலையாய கடமை ஆகும் என்று நாம் எல்லோரும் கருத்தில் கொள்ள வேண்டும். அப்போதுதான் நாட்டின் இந் நிலை மாறி ஓரளவாயினும் உணவு உற் பத்தியில் தன்னிறைவு அடையலாம். அத்தோடு இன்று இறக்குமதி ஆகும், தேவைக்கும் அதிகமான ஆடம்பர பொருட்களின் இறக்குமதியை இரத்துச் செய்து கதிரையில் அமர்ந்து உத்தி யோகம் பார்க்கத் துடிக்கும் இன்றைய, இளந் தலைமுறையினர் ஒவ்வொருவரும் கலப்பை பிடித்து நாட்டிற்கு உதவும் வகையில் உழைக்க முன்வர வேண்டும். ஏன் தான் நம்மவர் விண்ணிற்தோன்றும் மின்னலைப் போல் நிலையற்ற உத்தியோகங்களைத் தேடி அலையும்போது "கல்மேல் எழுத்து" போன்று நிலையான உழவுத் தொழிலை வெறுக்கின்றனரோ. "ஏர் முனைக்கு நேர் இங்கு எதுவுமே இல்லை" என்றும் நம் வாழ்விலே பஞ்சம் இல்லை" எனும் கூற்றிற் கிணங்க நாம் உழவுத்தொழிலை மேற் கொண்டால் நாடு கூடிய சீக்கிரம் முன் னேறும் என்பதில் ஐயமேயில்லை. ஆகவே நாம் ஒவ்வொருவரும் எம் கடமையை கருத்திற் கொண்டு நாட்டை ஒரு சுபீட்சமான முன்னேற்ற பாதையில் வழிநடத்த ஒன்று சேர்ந்து உழைப்போமாக.

R. சதீஸ்குமார்
ஆண்டு 10G

# பச்சை வீட்டு விளைவு
## (Green House Effect)

விஞ்ஞானம் வெகு வேகமாக வளர்ச்சியடைந்துள்ள இக்கால கட்டத்தில் மனித நடவடிக்கைகளினால் புவிச் சுற்றுப் புறச் சூழல் பலவித தாக்கங்களுக்கு உட்பட்டுள்ளது. இத்தாக்கங்களின் விளை வாக எமது சூழலுக்குப் பாரியபாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. முக்கியமாக "பச்சை வீட்டு விளைவு" "அமில மழை" "ஓசோன் படைநலிவடைதல்" முதலிய தாக்கங்களினால் இன்றும் புவிச் சூழல் பெரும் அச்சுறுத்தலை எதிர் நோக்கி இருக்கிறது.

இவற்றில் குறிப்பாக பச்சை வீட்டு விளைவு என்றால் என்ன? அது எவ்வாறு ஏற்படுகிறது? அதனால் விளையும் பாதிப்புகள் எவை? எவ்வாறு நாம் இப்பாதிப்புகளை ஓரளவுக்காவது கட்டுப்படுத்தலாம் என்ற வினாக்களுக்கு விடைகாண முயலுவோம்.

நாம் வாழும் பூமி வளிமண்டலத்தால் சூழப்பட்டுள்ளது. வளியின் கூறுகளாக நைதரசன் ($N_2$) ஒட்சிசன் ($O_2$) நீராவி ($H_2O$) காபனீரொட்சைட்டு ($CO_2$) சடத்துவ வாயுக்கள் ஆகிய வாயுக் கூறுகளை விட சுவட்டளவில் காணப்படும் வாயுக்களும் உண்டு. சூரியனில் இருந்து காவப்படும் கதிர்களில் ஒரு பகுதி நேரடியாக வளிமண்டலத்தினூடாகப் பிரவேசித்து தரையின் மேற்பரப்பை அடைகிறது. அங்கு பட்டுத் தெறித்து மீண்டும் அண்டவெளியை நோக்கிச் செலுத்தப்படுகிறது. இதன்காரணமாக பூமியின் மேற்பரப்பின் வெப்பச் சமனிலை பேணப்படுகிறது.

நாலுபக்கங்களிலும் சுவர்களையும் மேலே கண்ணாடிக் கூரையையும் கொண்ட கட்டடங்கள் மேலைத்தேச குளிர்நாடுகளில் தாவரங்களை வளர்க்க உபயோகிக்கப்படுகின்றன. இவை "பச்சை வீடுகள்" என அழைக்கப்படுகின்றன. வெளியே நிலவும் வெப்பநிலையிலும் உயர்வான வெப்பநிலையை உள்ளே நிலவச் செய்தல் பச்சை வீடுகளின் தொழில் இதுவே பச்சை வீட்டு விளைவு ஆகும். இங்கு கண்ணாடிக் கூரை அந்தப் பணியைச் செய்கிறது. பச்சை வீட்டுக்குள்ளே புகும் ஒளியின் அகச்சிவப்புக்கதிர்களில் (IR கதிர்கள்) ல் ஒரு பகுதி வெப்பம் வெளியேறாது கண்ணாடிக் கூரை தடுக்கிறது. இதன் விளைவாக பச்சை வீட்டுக்குள்ளேயுள்ள வெப்பநிலை அதற்கு வெளியே உள்ள வெப்பநிலையிலும் பார்க்க உயர்வாக இருக்கிறது. இது கண்ணாடி வீட்டு விளைவு (Glass House Effect) என்றும் கூறப்படுகிறது.

பூமியைச் சூழ்ந்துள்ள வளிமண்டலமும் பச்சை வீட்டின் கண்ணாடிக் கூரை போன்றே தொழிற்படுகிறது. அதாவது பூமியின் மேற்பரப்பின் மீது விழும் சூரியக் கதிர்களில் ஒரு பகுதி அண்டவெளிக்குள் தெறிக்கப்படாதவாறு வளிமண்டலம் தடுத்து நிறுத்துகிறது. இதன் காரணமாகவே பூமியின் மேற்பரப்பு வெப்பச்சமனிலை பேணப்படுகிறது. வளிமண்டலத்தில் காணப்படும் காபனீரொட்சைட்டு, நீராவி போன்ற வாயுக்களுடன் நைதரசன் ஒட்சைட்டுகள், குளோரோ புளோரோ காபன் வாயு, மீதேன் வாயு ஆகியவையும் கண்ணாடிக் கூரையின் வேலையைச் செய்கின்றன. எனவே இவ்வாயுக்கள் பச்சை வீட்டு வாயுக்கள் எனப்படுகின்றன. ஓசோன் கூட ஒரு பச்சை வீட்டு வாயுவாகச் செயற்படும். பூமியில் நிலவும் வெப்பநிலை பச்சை வீட்டு வாயுக்களாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாயுக்களின் செறிவு அதிகரிப்பின் அவை பற்றி (Trapping) வைத்திருக்கும் வெப்பத்தின் கணியம் அதிகரிக்கும். வெப்பத்தைப் பற்றுவதில் பிரதான பச்சை வீட்டு வாயுவாக நீராவி கருதப்பட்டாலும் மனிதச் செயற்பாட்டின் மூலம் அதிகளவு வளிமண்டலத்தில் செலுத்தப்படும் பச்சை வீட்டு வாயு காபனீரொட்சைட்டு ஆகும்.

பூமியின் நீண்ட கால வரலாற்றை நோக்கும் போது இயற்கை வட்டச் செயல் முறைகள் வளிமண்டலத்தின் அமைப்பில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றம் ஏற்படாது பேணியுள்ளன. ஆனால் கைத்தொழிற் புரட்சியின் விளைவாக உயிர்ச் சுவட்டு

எரிபொருளின் உபயோகம் அதிகரிக்க ஆரம்பித்தது. இன்று அதிகரித்து வரும் உலக சனத்தொகை, சூழலில் மனித நடவடிக்கை அதாவது தலையீடு அதிகரித் தமை ஆகிய காரணிகளால் ஆரம்பத்தில் வளிமண்டலத்தில் 300ppm (0.03%) ஆக இருந்த $CO_2$ வாயு இன்று 353ppm (0.0353%) ஆக உயர்ந்துள்ளது. $CO_2$ வாயுவின் செறிவைப் போன்றே $CH_4$, $N_2O$ வாயுக்களின் செறிவும் படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. சேறுசகதிகள், நெல்வயல்கள் பண்ணைக்கழிவுகள் ஆகியவற்றில் இருந்து $CH_4$ வாயு வெளிவருகிறது. சுவட்டு எரிபொருளின் தகனம், வளமாக்கிகளின் இரசாயனத்தாக்கம், மண்ணில் நுண்ணங் கிகளின் தொழிற்பாடு ஆகியவற்றால் $N_2O$ வாயுவின் செறிவு வளிமண்டலத்தில் கூடுகின்றது. 1930 இல் தான் CFC வாயு என்ற செயற்கைப் பதார்த்தம் கண்டு பிடிக்கப்பட்டது. குளிரூட்டிகள், வாசனைத் திரவியங்கள் இலத்திரனியல் தொழிற் சாலைகளில் அதிகளவில் பயன்படுத் தப்படும் CFC வாயுவின் அதிகரிப்பும் பச்சை வீட்டுவிளைவுக்குக் காரணமாகிறது.

இவ்வாறு வளியில் பச்சை வீட்டு வாயுக்களின் செறிவு அதிகரித்து வருவதால் பூமியின் சராசரி வெப்பநிலை உயர்ந்து வருவதாக விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டி யுள்ளனர். பூமியின் சராசரி வெப்பநிலையில் ஏற்படும் உயர்வு புவி வெப்பமடைதல் (Global warmig) எனப்படும். வளிமண்டலத் தினுள் விடப்படும் பச்சை வீட்டுவாயுக்களின் அளவு அதிகரிப்பதனால் அடுத்த நூற்றாண் டில் (2050) பூமியின் சராசரிவெப்பநிலை (1.5 c - 4.5 ) 3 ஆல் உயர்ந்து விடும் என விஞ்ஞானிகளின் மதிப்பீடு கூறுகிறது. 21 ஆம் நூற்றாண்டு முடியும் போது அது மேலும் 2 ஆல் உயர்ந்துவிடும் என அச்சம் தெரிவித்துள்ளனர்.

பூமியின் வெப்பநிலை உயர்வால் ஏற்படும் விளைவுகளையும் விஞ்ஞானிகள் விபரமாக ஆராய்ந்துள்ளனர். வெப்பநிலை அதிகரிப்பால் பூமியின் 75% ஆக இருக்கும் கடல் நீரின் கனவளவு அதிகரிக்க கடல் மட்டம் உயரும். (20cm - 50cm) துருவப் பகுதிகளில் உள்ள பனிக்கட்டிகளும் உருகி அந்நீரும் கடலின் மட்டம் உயருவதற்கு வழிவகுக்கும். இதன் விளைவாக கடல் தரைக்குள் ஊடுருவும். பிரபல நகரங்கள், துறைமுகங்கள் கடலில் மூழ்கும். மாலைதீவு முற்றாகவே கடலில் மூழ்கிவிடும் எனவும் இலங்கையின் யாழ் குடாநாடும் தெற்கு, கிழக்கு மாகாணமும் மேல் மாகாணமும் கடலால் மூழ்கப்பட்டு விடும் எனவும் விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

பூமியின் மேற்பரப்பு வெப்பமாகும் போது அதன் மேலுள்ள வளியும் சூடா வதால் உலகின் காற்றோட்ட கோலங்களும் கால நிலையும் பாதிப்படையலாம். இதனால் மழைவீழ்ச்சியால் ஏற்படும் மாற்றங்கள் விவசாயம், தாவரங்களின் பரம்பல், காடுகள் ஆகியவற்றை பாதிக்கும்.

இவ்வாறு பச்சைவீட்டு விளைவு களினால் ஏற்படும் பாரிய விளைவுகளை யிட்டு பல நாடுகள் கவனமும் அக்கறையுங் கொண்டுள்ளன. பிரதான பச்சை வீட்டு வாயுவாகிய $CO_2$ புவியின் வெப்பநிலை அதிகரிப்பில் அதிக செல்வாக்கு செலுத்தும் காரணியாகும். எனவே இவ்வாயு வளி மண்டலத்தை சென்றடையும் கணியத்தைக் குறைக்க வேண்டும். இவ்வாயுவின் தோற்று வாய்களாகிய சுவட்டு எரிபொருள் பாவனையை கட்டுப்படுத்தல், மோட்டார் வாகனங்களில் இவற்றின் பூரண தகனம் நிகழச் செய்யும் வழிமுறைகளை கையாள்தல் அதாவது இயந்திரங்களை நல்ல நிலையில் பேணுதல், மாற்றுச்சக்தி முதல்களை அறிமுகஞ் செய்தல் (காற்றின் வலு, நீர்வலு, சூரியசக்தி, கடல்அலை) காடுகளை அழிக்காது பேணுதல் போன்ற மாற்று வழிகளைக் (alternative) கையாண்டு காலப் போக்கில் அதை நிறுத்தி எமது சூழலைப் பாதுகாப்பது எமது முக்கிய கடமையாகும்.

எந்நடைமுறைகளைக் கையாண் டாலும் மாற்றங்களைத் திசை திருப்ப 40-50 வருடங்கள் செல்லும். ஆனால் மனித வர்க்கம் அழியாமல் பாதுகாத்துக் கொள்வதற்கு எமது வாழ்க்கை முறைகளில் நடத்தை முறைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

பாலக்குமாரன் சத்யன்
ஆண்டு 10 G.

# தமிழர் பண்பாடு

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி" தமிழ் மொழி எனச் செந்தமிழ்ப்புலவர்கள் செப்பியுள்ளனர். "தமிழுக்கு அமுது என்று பெயர், அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எடுத்துரைத்துள்ளார்.

இவ்வாறு பற்பல பெரியோர்களாலும் புலவர்களாலும் போற்றப்பட்ட தமிழ் மொழியை, தாய் மொழியாகக் கொண்டு தனித்துவம் பெற்று வாழ்பவன் தமிழன். குறித்த ஒரு சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் உயர்நடத்தைக்குரிய பண்புகளைப் பண்பாடு என்று குறிக்கலாம். அந்த வகையில் எமது தமிழ் இலக்கியங்களும், உலகப்பொது மறையாம் திருக்குறளும் தமிழர் பண்பாட்டை அதாவது வாழும் முறையை அழகுற எடுத்துக் காட்டியுள்ளன.

காலத்திற்குக் காலம் தோன்றிய பல புலவர்களின் படைப்புகளில் கம்பன் தந்த தீந்தமிழ்க்கவிதைகளும், வள்ளுவர் தந்த வாழ்வு நெறித் திருக்குறளும் இளங்கோ தந்த சிலப்பதிகாரத்திற்கும் நிகரான காவியங்கள் உலகில் எவையுமே இல்லை. இத்தகைய காவியங்களினால் தமிழர் பண்பாடு மெருகூட்டப்பட்டது என்று கூறுவதைவிட, காலத் துக்குக் காலம் மெருகூட்டப்படுகிறது எனலாம்.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்ற குறளுக்கு அமைய எதையும் சிந்தித்துச்செயலாற்றும் சீரிய பண்பாடு உடையவர்கள் தான் தமிழர்கள்.

"மானமெல்லாம் போன பின்னே
வாழ்வது தான் ஒருவாழ்வா"

என்ற கூற்றுக்கு தமிழர்களே இலக்கணம் வகுத்துள்ளார்கள். தொடர்ந்து வந்த துன்பங்கள் வாட்டி வதைத்த போதிலும் வாய்மையிற் சிறந்து விளங்கினான் அரிச்சந்திரன். தனது மகன் என்றும் பாராது தேர்ச்சில்லை மகனுக்கு மேல் ஏற்றி நீதியைநிலை நாட்டினான் மனுநீதி கண்டசோழன். தமிழரசர்களின் வீரப்பண்பாட்டை அவர்களது போர் முறையில் இருந்து அறிந்து கொள்ளலாம். அக்கால மன்னர் மண்ணையோ மாபெரும் அரசை விரும்பியோ போர் தொடங்கினவர் அல்லர். மாற்றார் தம்மை மதிக்கவில்லை என்றும், மானம் குறித்தும் போர் தொடுத்தனர். போர்க்களத்தில் புறமுதுகிடாது நேருக்கு நேர்போராடி வெற்றி பெறுவதையும் வீரமரணம் அடைவதையும் தமது பண்பாடாகக் கொண்டிருந்தனர்.

போரிடப் புறப்படும் தனது கணவனை வெற்றி - வீரத்திலகமிட்டு /வாழ்த்தி அனுப்பும் பண்பாட்டைக் கொண்டவர்கள் தமிழ்க்குடிப்பெண்கள். "வீரமே தம் வாழ்வின் இலட்சியம்; வீரமே மரணத்தின் ஊதியம்" என்ற வீரப் பண்பாட்டைக் கருத்திற் கொண்டு

வாழ்ந்தவர்கள்தான் தமிழர்.

"சாதி இரண்டொழிய வேறில்லை" என்று ஔவையாரும் "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்று வள்ளுவரும் கூறியதில் இருந்து தமிழர் பண்பாட்டில் சாதி வேற்றுமைகள் இல்லை என்பதை அறியலாம்.

"அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"

என்று கூறும் வள்ளுவரின் குறள் இல்வாழ்க்கை அன்பு என்ற பண்பை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்று உணர்த்துகிறது. இதனையே தமிழரும் அன்று தொட்டு இன்றுவரை "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற தாரக மந்திரத்தைத் தலையாகக் கொண்டு அன்பின் அடிப்படையில் அறத்தோடு கலந்த இல்வாழ்க்கைதனை தமது பண்பாடாகக் கொண்டிருந்தனர்.

"எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டும்" என்பதை வலியுறுத்தும் வாழ்வுக்கோட்பாடுகள் தமிழர் பண்பாட்டுக் கலாச்சார ங்களை மேலோங்கச் செய்கின்றன. சமய விழாக்கள், சடங்குகள், பல்வேறு பண்டிகைகள், ஆலய வழிபாடு போன்றவற்றால் உற்றார்- உறவினர்- அயலவர் தொடர்பு மேலும் வலியுறுத்தப்படுகிறது. விருந்தோம்பல், பிறர்நலம் பேணல், நன்றி மறவாமை போன்ற கலாசாரப் பண்புகள் பேணப்பட்டும் தமிழர் பண்பாடு நிலைநிறுத்தப்படுகின்றது.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பெருநோக்கை வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு வாழும் தமிழர் "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற ஆன்றோர் கூற்றுக்கு இலக்கணமாக உடல் உழைப்பைத் தெய்வமாகப் போற்றும் பண்பாட்டையும் காத்து வருகின்றனர்.

இன்று நாம் விஞ்ஞான தொழில் நுட்பத்துறையில் எவ்வளவு முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோம் என்றாலும் நமது இனத்தவர் கடைப்பிடிக்கும் பண்பாடுகள் காலங்காலமாகப் பேணிப் பாதுகாக்கப்படல் வேண்டும். அதற்கும் மேலாக அவை சந்ததியினருக்கும் கையளிக்கப்பட வேண்டும். இக்கொள்கையை நாம் கடமையாகக் கொண்டுவாழ வேண்டும்.

"தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவனுக்கொரு குணமுண்டு"

பா. நிமலன்
ஆண்டு 10 G.

# எம் மொழி

ஓர் அழகிய மொழி
சொல் வளம் பொருள் வளம் நிறைந்த மொழி
இளமையும் இனிமையும் இணைந்த தேன் மொழி
இயலும் இசையும் இனிய கூத்தும் உடைய மொழி
உயிர் மெய் ஆய்தமுடன் இயங்கும் மொழி
குறிலும் நெடிலும் இசைந்தாடும் வல்மெல்லிடை வனப்பு மொழி
ஒல்காப் புகழ் தொல்காப்பியன் இலக்கணம் யாத்த மொழி
வள்ளுவன் குறளை வாய்மை பெற வைத்த மொழி
முச்சங்கம் கண்ட மொழி
மும்மன்னர் மடியில் தவழ்ந்த மொழி
சொல் ஏர் உழவரின் நாவில் களிநடம் புரியும் மொழி
கால ஊழிக்கும் இயற்கையின் சீற்றத்துக்கும் ஈடு கொடுத்து வாழும் மொழி
வேற்று மொழிகளுக்கு சொற்கொடை அளித்த வள்ளல் மொழி
பல கிளை மொழிகளுக்குத் தாய் மொழி
இறைவன் தவிசிருந்து வளர்த்த மொழி
என்றும் அழியா தெய்வீகம் படைத்த மொழி
கம்பன் கவிபாடிய மொழி
சயங்கொண்டான் பரணி பாடிய மொழி
புகழேந்தி வெண்பா பாடிய மொழி
காடவன் கலம்பகம் பாடிய மொழி
பொருப்பிலே பிறந்த மொழி
தென்னன் புகழிலே கிடந்த மொழி
சங்கத் திருப்பிலே இருந்த மொழி
வைகை ஏட்டிலே தவழ்ந்த மொழி
பேதை நெருப்பிலே நின்ற மொழி
கற்றோர் நினைவிலே நடந்த மொழி
அறிவியலுக்கு அறைகூவல் விடுக்கும் ஆற்றல் மொழி
மொழியியலுக்கு சவால் விடுக்கும் திறன் மொழி
இசையினை காணும் மொழி
எண் நுட்பம் காணும் மொழி
ஓவியங்கள் காணும் மொழி

காவியங்கள் காணும் மொழி
இயற்கை அன்னை அருளிய மொழி
அயல் மொழி வேண்டா ஆர் எழில் சேர் மொழி
தமிழர் பெருமைக்கு சான்றான மொழி
என்றும் குறைவில்லாத சிறப்பு மொழி
இலக்கணத்துக்கு தொல்காப்பியத்தை கொண்ட மொழி
அறநெறிக்கு திருக்குறளை தந்த மொழி
முதற் குடிமக்கள் காப்பியத்தை படைத்த மொழி
நெற்றிக் கண்ணனுக்கும் குற்றம் உரைத்த மொழி
தன் காலுக்கு சிலப்பதிகாரத்தை உடைய மொழி
தன் கைக்கு வளையாபதியை அணிந்த மொழி
தன் இடைக்கு மணிமேகலையை பூண்ட மொழி
தன் செவிக்கு குண்டலகேசியை பொருத்திய மொழி
நினைத்தால் நெஞ்சினிக்கும் மொழி
கேட்டால் காதுவக்கும் மொழி
சுவைத்தால் நாவினிக்கும் மொழி
படித்தால் வாயினிக்கும் மொழி
உண்மை மிக்க கீரனார்
உரை வகுத்த தமிழ் மொழி
ஊக்கமுள்ள வீரர் தம்மை
ஆக்குகின்ற தமிழ் மொழி
வண்மை மிக்க பாண்டியன்
வளர்த்தெடுத்த செந் தமிழ் மொழி
பாராண்ட மைந்தர் நாம்
விழா எடுக்கும் தமிழ் மொழி

ச.தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ
ஆண்டு 10

# எம் தமிழ்

எமது தாய் மொழி தமிழ். அது இனிமையான மொழி. தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்று பொருளாகும். தமிழ் மொழி பேசுவதற்கு இனிமையானது, கேட்பதற்கும் இனிமையானது.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே"

என்று பாரதியார் பாடினார். தமிழ் ஒரு புது வகையான தேன். இதனை காதாற் பருகலாம். வாயில் சுவை தரும், தேன் போலல்லாது இது காதில் இனிக்கிறது, கருத்திற் சுவைக்கின்றது. தேன் உண்ண உண்ணத் தெவிட்டும். ஆனால் தமிழோ தெவிட்டாத செந்தேன்.

தமிழ் மொழி பேசுவதற்கு இலகுவானது, இனிமையானது. உரப்பியுங் களைத்தும் பேச வேண்டிய எழுத்துக்கள் தமிழில் இல்லை. சிலர் தமிழ் ஆங்கிலம் முதலிய மொழிகளைப் போலல்லாமல் பல எழுத்துக்களை உடையது என்பர். உண்மையில் தமிழில் எழுத்தோசைகள் மிக மிகக்குறைவு. பிற மொழிகளில் உயிர் எழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் மட்டுமே வரிவடிவில் உள்ளன. தமிழ் மொழி உயிர்மெய்யெழுத்துக்கும் ஒரு உருவந் தந்திருக்கின்றது. "க" என்ற சத்தத்தை ஆங்கில மொழிகாரர் "கே" என்ற மெய்யெழுத்தையும் "ஏ" என்ற உயிர் எழுத்தையும் அருகருகாக எழுதி உண்டாக்குவர்.ஆனால் தமிழ் மொழியாளர் தனித்த ஒரு எழுத்தால் அதைப்புலப்படுத்துவர். இவ்வாறு எழுதுவது கொண்டு தமிழிலே எழுத்துகள் அதிகமாக உள்ளன என்று கூறுவது தவறாகும்.

தமிழ் பக்தி மார்க்கத்திற்குரிய மொழி என்பது அறிஞர் கருத்து. உலகில் உள்ள பக்திப்பாடல்களுள் அரைவாசிக்குக் குறையாதவை இந்திய மொழிகளில் உள என்பர். இந்தியாவிலுள்ள பக்திப் பாடல்களில் அரைவாசிக்கு மேற்பட்டவை தமிழ் மொழியில் உளவெனக் கணக்கிட்டிருக்கிறார்கள். இறைவனே தமிழைப்படைத்தான் எனவும், தமிழ் இறைவனைப் படைத்தது எனவும் கூறலாம். தமிழில் உள்ள பக்திப்பாடல்களில் மிக மிக இனிய வை, பன்னிரு திருமுறையிலும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலும் இவை காணப்படுகின்றன.

தமிழ் வீரத்துக்கும் பெயர் பெற்ற மொழி. தமிழ் மொழியில் வீரச்சுவை சொட்டுவதைப் புறநானூற்றில் காண்கின்றோம். காதல் சுவை சொட்டச் சொட்டப்பாடப்பட்ட பாட்டுக்கள் அகநானூற்றிலும், நற்றிணை முதலிய நூல்களிலும் காணப்படுகின்றன.

ஒன்பது சுவையும் மலிந்து காணப்படும் காவியங்கள் தமிழ் மொழியிற் பலவுள. கம்பன் தந்த தீந்தமிழ்க் காவியம் எம் தமிழ் மொழியிலேயே உண்டு. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது தமிழ் மொழி". இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் மிளிர்ந்து ஒளிர்வது. சிலப்பதிகாரத்தைத் தந்து உலகப்புகழ் படைத்தமொழி எம் இனிய தமிழ்மொழி.

எம் தமிழன்னை பஞ்ச காவியம் படைத்திருக்கிறாள். சிந்தாமணியை தலையிலே அணிந்து புகழ் பரப்புகிறாள். சிலப்பதிகாரம் அவளது பாதங்களை அழகுபடுத்துகிறது. மணிமேகலை அவளது இடையிற் பொலிவுற்று நிற்கின்றது. வளையாபதி அவள் கையிலே வளையலாகச் சுடர் விட்டுப்பிரகாசிக்கிறது. குண்டலகேசி அவளது காதுகளை அலங்கரிக்கிறது.

எம்மருமைத் தமிழ் மொழி அகத்தியரால் வளர்க்கப்பட்டது என்பர். அவர் வாழ்ந்த மலை பொதிய மலை. அதனால் பொருப்பிலே பிறந்தது தமிழ் என்பர். பாண்டியன் வளர்த்த மொழி யாதலால் தென்னகப்புகழிலே கிடந்த தென்பர். வைகையாற்றிலே சம்பந்தப் பெருமானிட்ட தமிழ் ஏடு தவழ்ந்த தமிழ்த்தாய். நெருப்பிலே நின்றவள் எனவும், கற்றோர் நினைவிலே நடந்த வளெனவும், மெய்யிலே கலந்தா ளெனவும் போற்றப்படுகின்றாள் எம் தமிழன்னை. வாழ்க எம் தமிழ், வளர்க செந்தமிழ்.

ஞா. கணாதிபன்
11 E.

# உலக உணவுப்பிரச்சினையும், அதற்குத் தீர்வான நவீன உணவு உற்பத்தியும்

*கி.பி 2020 ஆம் ஆண்டில் எம்முடைய உலகமாகிய இப்புவியில் மொத்த மக்கள் தொகை இப்போது இருப்பதை விட இரண்டு மடங்காகிவிடும் என்று ஆய்வாளர்கள் எச்சரித்துக் கொண்டு இருக்கின்றார்கள். அதாவது இன்றும் சுமார் 25 ஆண்டு காலத்துக்குள் உலகின் மொத்தத்தொகை 900 கோடியாக மாறிவிடும்! என்ன வியப்பாக உள்ளதா?*

## இன்னும் 25 ஆண்டுகளில்.........

*பசுமைப்புரட்சியின் தந்தையாகிய நார்மன் போர்லொக் ஒரு கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போது பின்வருமாறு கூறினார்:-*

*"அடுத்த 25 ஆண்டுகளில் உலகம் முழுவதிலும் அதிகரித்துக் கொண்டிருக்கின்ற மக்கள் தொகையின் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் உணவு உற்பத்தியை அதிகரித்தாலேயே மனித குல நாகரீகத்தை எம்மால் காப்பாற்றிக்கொள்ள முடியும்."*

*அவர் கூறியது முற்று முழுதாகச் சரியே! நாம் உணவு உற்பத்தியை மூன்று மடங்காக இன்னும் 25 ஆண்டுகளில் பெருக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளோம்.*

## போசாக்கற்ற உணவு-

*உலகம் முழுவதிலும் மொத்தமுள்ள ஏறத்தாழ 480 கோடி மக்களிலே 66% இற்கும் மேற்பட்ட மக்களிற்குப் போசாக்கு அற்ற உணவே கிடைக்கின்றது. அவர்களிலே பெரும்பாலானவர்கள் வயிறாறச் சாப்பிட வழியற்றோர் என்பதால் உணவு உற்பத்தியை 3 மடங்காக அதிகரிக்க வேண்டியது அத்தியாவசியமாகின்றது.*

## தீர்வுகள்-

*இந்த உலக உணவுப் பிரச்சினைக்கென எண்ணற்ற தீர்வுகள் உலகெங்கும் கைக்கொள்ளப் படுகின்றன.அவற்றுள்ளே அறுவடையை அதிகரிக்கவைத்தல், பயன்படுத்தப்படாத வளங்களில் இருந்து உச்சப்பயனைப் பெறுதல், சனத்தொகைப் பெருக்கத்தைக் குறைத்தல், உணவு விரயத்தைத் தவிர்த்தல், உணவுகளைச் சிறந்த முறையில் விநியோகித்தல், மற்றும் நவீன உணவுற்பத்தி முறை மூலம் புதிய உணவுகளைக் கண்டறிதல் என்பன முக்கியமானவையாகக் கருத்திற் கொள்ளப்படுகின்றன, என்றாலும் கூட இந்த உலக உணவுப்பிரச்சினைத் தீர்விலே முக்கிய பங்காற்றுகின்ற உலக உணவு விவசாய அமையம் (FAO) மிக முக்கிய அத்தியாவசிய தீர்வுகளாக இரண்டை முன்வைத்துள்ளது.*

### அவையாவன

*(1) சனத்தொகைப் பெருக்கத்தைக் குறைத்தல்.*

*(2) நவீன உணவு உற்பத்தி மூலம் புதிய உணவுவகைகளைக் கண்டறிதல்.*

## முதலாவது தீர்வு-

*இப்பிரச்சினைக்கான முதல் தீர்வாகிய மக்கள் பெருகும் சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் இன்று உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன. செல்வச் செழிப்புள்ள நாடுகளிலே மக்கள் தொகைக்கட்டுப்பாடு தொடர்பான ஆய்வுகள் மும்முரமாக நடைபெறுகின்றன. அவற்றை ஏழ்மை மிகுந்த நாடுகளிலே சோதித்துப் பார்க்கின்றனர். ஆனாலும் இந்தமக்கள் தொகைக் கட்டுப்பாடு முயற்சிகளின் பலன் தெரிய இன்னும் 50 ஆண்டுகள் ஆகுமாம்.*

**இரண்டாவது தீர்வு-**

கிட்டத்தட்ட 50 ஆண்டுகளிற்கு மேல் எடுப்பதனால் முதலாவது தீர்வின் மூலம் பெறப்படும் உடனடி விரைவான பலனை எதிர்பார்க்க முடியாமல் உள்ளது. ஆகவே இரண்டாவது தீர்வான நவீன உணவுற்பத்தியை ஏற்படுத்தலே உணவுப் பிரச்சினையை அழித்தொழிக்க மிகச்சிறந்த முறை எனக் கூறப்படுகின்றது. உலக உணவு விவசாய அமையம் முதல் ஐக்கிய நாடுகள்ஸ்தாபனம் வரையுள்ள அனைத்து சர்வதேச நிறுவனங் களும் உணவுப் பிரச்சினையை தீர்ப்பதில் நாட்டமுள்ள ஸ்தாபனங்களும் இந்த இரண்டாவது தீர்வையே கடைப்பிடிக்குமாறு வலியுறுத்துகின்றன. நவீன உணவு உற்பத்தியே இப்பிரச்சனைக்கு ஒரேவழி என அதனைச் சரண்புகுந்த மக்களுக்கு அதனது அண்மைக்கால வளர்ச்சிப்படிகள் சற்றுத் தெம்பை ஊட்டுகின்றது. அவை வருமாறு ............

**செயற்கை அரிசி-**

இரசாயன முறையில் சோதனைக் கூடத்திலே அரிசி, கோதுமை போன்ற ஆதார, அடிப்படை உணவுப்பொருட்களைச் செய்து காட்டுவதிலே அமெரிக்க ஆய்வாளர்கள் முதற்படியை அடைந்துவிட்டனர்!

காபோவைதரேற்றுக்களும் புரதமும் நிறைந்த அரிசியின் ஆதாரம் காபன், ஐதரசன், ஒட்சிசன் என்பவைதான். இம்மூலகங்களைக் கவனமாகத் தொகுத்து செயற்கை அரிசியை உருவாக்கப் பெரும்பாடுபடுகின்றனர் இவ்விஞ்ஞானிகள்.

**ஜெர்மனியின் உதாரணமும், ஈஸ்ட்டும்-**

முதலாம் உலகமகாயுத்தத்தின் போது, ஜெர்மனியில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டபோது அதை நிவர்த்தி செய்ய புரதச்சத்து நிறைந்த ஈஸ்ட் என்ற நுண்ணுயிரைப் (Breweri Yeast) பெருமளவில் உற்பத்தி செய்து உணவில் கலந்து சாப்பிட ஏற்பாடு செய்தனர்.

அதன்மூலம் குறைந்த அளவு உணவுப் பொருளிலேயே நிறையச் சக்தியைப் பெறமுடிந்தது.

**"ஜீன் புரட்சியும்", நேரடிப் புரதமும்-**

'ஜீன் புரட்சி' (generevolution) தற்போது ஏற்படத் தொடங்கியுள்ளது. அதாவது அணுமூலக் கூறுகளை வெட்டி ஒட்டும் வேலை, இதன்படி அரிசி, கோதுமை, உருளைக்கிழங்கு, வெள்ளரிக்காய் போன்றவற்றின் அணு மூலக்கூறுகளைப் பின்பற்றி நவீன உணவுவகைகளை உற்பத்தி செய்கின்றனர்.

மனிதன் கால்நடைகளை உண்டு அவற்றின் மூலம் புரதத்தைப் பெறாமல் நேரடியாகவே புரதத்தை அளிக்கவல்ல உணவுகளைக் கண்டறிந்துள்ளனர். இதன்மூலம் உணவுப்பிரச்சினையைக் குறைக்கலாம் என நம்பப்படுகின்றது.

ஆகவே எதிர்காலத்தில் எம் பூமியை கொடுமைப்படுத்தக்கூடிய உணவுப்பிரச்சினையை அழித்தொழிக்கும் ஒரு சிறந்த சக்தியாக நவீன உணவுற்பத்தி திகழ்கின்றது. நவீன உணவுற்பத்தியின் விரைவான வளர்ச்சியானது, உணவுப் பிரச்சினைக்கு எதிராக செயற்பட முடியும் என்ற நம்பிக்கையை உலகமக்கள் அனைவரது மனத்திலும் ஏற்படுத்தும் என்றால் அது மிகையாகாது.

ஆ.இ. திருச்செந்தூரன்
ஆண்டு 11F

# பாலியல் துஷ்பிரயோகம்

பாலியல் துஸ்பிரயோகம் ஏற்படுத்தும் அழிவின் முதற்கட்டம்தான் எய்ட்ஸ், தனது துர்ச்செயலால் எய்ட்ஸை பெற்றுக் கொண்ட மனிதசமுதாயம் அதற்கு அடிப்படைக் காரணங்களில் ஒன்றான பாலியல் துஸ்பிரயோகம் மீது கவனஞ்செலுத்த ஆரம்பித்துள்ளது. தமது உடல் ரீதியான தற்காலிக தேவைகளை ஆசைகளை நிவர்த்தி செய்வதற்காக ஆண் பெண் பேதமின்றி இருபாலாரும் கைக்கொள்ளும் சட்டரீதியற்ற வழிமுறை பாலியல் துஸ்பிரயோகம் என பரவலாக கருதப்படுகிறது. இது சாதி மதம் வயது பேதமின்றி ஒரு சர்வதேச பிரச்சினையாக இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மீது அனைத்துலகும் எடுத்துக் கொண்ட அக்கறை பல ஆய்வுகளுக்கு இட்டுச்சென்று பல வியக்கத்தகு உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளது. இலங்கையர்களாகிய நாம் அனைவரும் வெட்கப்படத்தகு விடயங்களும் காணப்படுவது யாராலும் மறுப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படவேண்டியது . மேற்படி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் சிறுகுடும்பம் முதல் சமுதாயம் அடங்கலாக தேசியமட்டம் வரை ஒவ்வொரு மட்டங்களிலும் பாலியல் துஸ்பிரயோகம் கண்டறியப்பட்டுள்ளது.

அநேகமாக சிறுவர் சிறுமியரே இதில் சுரண்டப்படுபவர்கள் தமது சிறு தேவைகளுக்கு ஏற்றபடி குழந்தைளிடம் அதிக அன்பு செலுத்துவது போல் நடித்து காரியத்தை நடத்துகிறார்கள். இதிலுள்ள கொடுமையென்னவென்றால் நாம் பாலியல் ரீதியாக சுரண்டப்படுவதை அந்தப் பிஞ்சுகள் உடனடியாக அறிவதற்கான சந்தர்ப்பம் இல்லை என்பதுதான். வயது வரும்போதுதான் அவர்கள் தமக்கு நடந்தது இன்னதுதான் என அனுமானிக்கின்றனர். இவ்வாறு கழுத்தறுக்கும் பெருச்சாளிகள் நாட்டுக்கு நாடு வீட்டுக்குவீடு இருக்கிறார்கள்.

சமுக ரீதியான மட்டத்தில் நோக்கும் போது, இதனால் பாதிக்கப்படுவது முற்றுமுழுதாக பெண்களே எனலாம். இவ்வாறானதொரு நிலைமையே பெண்ஊழியர்கள் வேலைபார்க்கும் இடங்களிலும் பாலியல் தொந்தரவாக உருவம் பெறுகிறது.

இன்னுமொரு முக்கியமான கட்டம் அரசியல் ரீதியான பாலியல் துஸ்பிரயோகம், அந்நியநாடுகளின் மீது படைகொண்டு சென்று வெற்றியீட்டியவர்களின் படையினர் தோல்விகண்ட நாட்டின் பெண்களையும்,சிறுமிகளையும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துதல் அரசியல் ரீதியானதாக நோக்கப்படுகின்றது, இவ்வாறு ஆயிரக்கணக்கில் மேற்கொள்ளப்படும் வல்லுறவுகள் காமஇச்சையால் தோன்றியவை என்று சொல்வது பொருத்தமானதன்று. அந்நிய விரோதம், ஆதிக்க வெறி என்பனவே இதற்கு பெரும்பாலும் காரணங்கள், உலகப் போர் வரலாறுகள் அனைத்தும் கண்டுவந்த நிகழ்வுகளே இவை, உதாரணமாக இரண்டாம் உலகயுத்தத்தில் சீனாவினுள் புகுந்த ஜப்பானியப்படை பல்லாயிரக்கணக்கான பாலியல் வல்லுறவுளை கட்டவிழ்த்து விட்டது நினைவு கூரப்படலாம், இதற்காக சிலஆண்டுகளுக்கு முன்னர்தான் பதவியில் இருந்த ஜப்பானிய பிரதமர் பகிரங்க மன்னிப்பு கோரினார்.

மேற்கண்ட அனைத்து மட்டங்களிலும் பாலியல் துஸ்பிரயோகத்துக்கு ஒரு களமாக இலங்கை இன்று விளங்குகின்றது, நாளாந்த பத்திரிகைகள் இதற்கு ஒரு எளிமையான பெயர்ப்பலகைகள். ஒரு புற்றுநோயைப் போன்று அனைத்து மட்டங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. பஸ்களிலும் சில சிறியளவிலான பாலியல் சேஷ்டைகள்

பிரயோகிக்கப்படுகின்றன.

சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் அனைத்துலகிலும் இலங்கையிலேயே மிக அதிகமாக மேற்கொள்ளபடுகிறது. என்று வெளியான அறிக்கையொன்றினால் இலங்கையின் அரசாங்கம் உட்பட பாமரமக்களும் ஒருமுறை வெட்கப்பட்டனர், இதனை மேற்கொள்பவர்களில் 80 %இற்கும் மேற்பட்டவர்கள் வெளிநாட்டவரே என்பதுதான் இன்னும் வேதனைக்குரியது. கற்றுலாத்துறை மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தையே, சிறிய நாடான இலங்கை இலாபகரமான வழிகளில் ஒன்றாக கொண்டுள்ளது, உல்லாசபுரி என இது மேலைநாட்டவர்களிடம் பெயர்பெற்றதற்கு வருந்தத்தக்க காரணங்களும் உள்ளனவா என இன்று சந்தேகமாக உள்ளது. வெளிநாடுகளில் இருந்து உல்லாசத்துக்காக எமது நாட்டுக்கு வரும் இவர்கள் விடுதிகளில் தங்கியிருந்து மேற்படி துஸ்பிரயோகங்களில் ஈடுபடுகிறார்கள் இந்தத்தொழிலில் சுமார் 3000 -6000 வரையான சிறுவர்கள் ஈடுபடுகிறார்கள், இவர்களை இத்துறைக்கு இட்டுச்செல்லும் முகவர்கள் இன்னும் ஏராளம் வறுமையினால் தான் இவர்கள் இந்த இழிவான வழியில் செல்கிறார்கள் எனினும் அதனை விட்டுவைப்பது நாட்டின் நற்பெயருக்கேற்படும் கறையாகும். உல்லாசப்பயணிகளின் வருகை தொடர்ந்தும் அதிகரிப்பதற்கு இதுவே முக்கிய காரணியோ என்று எண்ணத்தோன்றுகிறது. மேலைநாடுகளில் இருந்து சுற்றுலா புறப்படுபவர்கள் இவ்வாறான காரணங்களால் இலங்கைக்கும் வருகிறார்களா? இவர்களினால் எமது சிறுவர்கள் HIV தொற்றுக்கு உட்படுவதுதான் நாம் கருத்திற் கொள்ளவேண்டிய விடயம். இது சட்டங்கள் போட்டுத் தடுக்கப்படக்கூடியதா?அல்லது சிறுவர்களை அவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களின் மூலம் திசைதிருப்புவதா? . நடைமுறைக்கு சாத்தியமாகும் நடவடிக்கைகள் மிகவும் அவசியம். அரசியல் ரீதியானதெனக்கொள்ளப்படும் பாலியல் வல்லுறவுகளும் இலங்கையில் நடைபெற்றுள்ளன. பாரிய இராணுவ நடவடிக்கை மூலம் யாழ்குடாநாட்டைக் கைப்பற்றிய இராணுவம்,பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டமை வெளிவந்து பலநாட்களாகின்றன, வெளிவந்து கொண்டும் இருக்கின்றன, அவ்வாறான பாலியல் வன்முறைகள் கொலைகளில் முடிந்த சம்பவங்களே அதிகம். (யாழ் சுண்டுக்குளி மாணவி கிரிஷாந்தினி குமாரசாமியின் மரணம் இலங்கையை உலுப்பிய ஒரு நிகழ்வு) மேலும் எத்தனையோ இவ்வகை நிகழ்வுகள் வெளிவராமல் அடக்கப்பட்டுள்ளன. இது காமவெறியினால் ஏற்பட்டதா? இனவெறியினால் ஏற்பட்டதா? அடக்குமுறையின் பிரயோகமாக பாலியல் பயன்படுத்தப்படுகிறது. இனவெறியே இதற்கு காரணம் என எடுத்துக்கொள்ளும் பட்சத்தில் இவை அரசியல் ரீதியான பாலியல் வன்முறை என்ற வகையில் அடங்குகின்றன. இதற்கெதிராக மனிதஉரிமை நிறுவனங்களும், பெண்ணிலைவாதிகளின் போராட்டமும் முனைப்பு பெற்றுள்ளபோதும், பாலியல் வல்லுறவு நடந்து கொண்டிருப்பது நாகரிக உலகம் வெட்கப்படவேண்டிய விடயம்.

*ந. கோபிநாத்*
*ஆண்டு 13 A*
*கணிதம்.*

# வணிகத்தாள்

## அறிமுகம்

நிதிச் சந்தைகள் (Finance Markets) பொதுவாக இரு உட்பகுதிகளாகப் பிரித்து நோக்கப்படும். அவை பணச்சந்தை (Money Market) மூலதனச் சந்தை (Capital Market) என்பனவாகும். பணச் சந்தை என்பதனுள் குறைந்த முதிர்வுக் காலம் கொண்ட எல்லா வகையான நிதி நடவடிக்கைகளும் அவை தொடர்பான நிறுவனங்களும், ஏற்பாடுகளும் உள்ளடக்கப்படும். மூலதனச் சந்தையானது அதிக முதிர்வு காலத்தை உடைய நிதி நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக அமையும். அதாவது நடுத்தர கால, நீண்ட கால நிதி வழங்கலுடன் சம்பந்தப்பட்டதாக மூலதனச் சந்தை விளங்க, பணச் சந்தையானது குறுங்கால நிதி வழங்கலை மேற்கொள்வதாகும். வழக்கமாக பணச்சந்தை கருவிகளின் முதிர்வு காலம் ஒரு ஆண்டை விடக் குறைவானதெனக் குறிப்பிட்டாலும் அதனை விட அதிக கால முதிர்ச்சியை கொண்ட பணச் சந்தை ஆவணங்களையும் உலகின் சில நாடுகளில் நாம் காணலாம். உதாரணமாக கனடாவில் மூன்று ஆண்டுகள் வரை முதிர்வு காலம் கொண்ட பணச் சந்தைக் கருவிகள் நடைமுறையில் உள்ளன. ஒரு பொருளாதாரத்தின் நிதியியல் மற்றும் வங்கியில் முறைமைகளின் வளர்ச்சியும் நிதித் துறையின் செயற்பாடும் நாட்டின் சட்ட சூழலும், பணச் சந்தைக் கருவிகளின் எண்ணிக்கையும் தன்மையும் நிர்ணயிக்கின்றன.இலங்கையின் பணச் சந்தை அண்மைக் காலத்தில் புதிய கருவிகளை அறிமுகஞ் செய்து வருகின்றது. இவற்றில் முக்கியமானதாக "வணிகத் தாள்" தொடக்பாகவே இக் கட்டுரை அமைகின்றது.

இலங்கையின் பணச் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய கடன் கருவியாக "வணிகத் தாள்கள்" வினங்குகின்றன. 1993 August இல்அறிமுகப்படுத்த ப்பட்ட திலிருந்து அதிக வரவேற்புப் பெற்ற ஒரு குறுங்கால நிதியீட்டல் கருவியாக வணிகத்தாள் காணப்படுகின்றது. அவ் வகையில் வேறு புதிய பணச் சந்தைக் கருவிகளின் அறிமுகத்திற்கும் ஒரு "தூண்டுதலை" வணிகத் தாள்கள் வழங்கியுள்ளன எனலாம். வணிகத் தாள் என்பதற்கு பொருத்தமான அனைவராலும் ஏற்கப்பட்டதொருள் வரைவிலக்கணம் இல்லாதுள்ளது. "சிறந்த கைத்தொழில் சேவை அல்லது நிதியியல் நிறுவனமொன்றால் வழங்கப்படும் ஒரு குறுங்கால உறுதிப்படுத்தப்படாத வாக்குறுதிப் பத்திரம்"(Short term unsecured premissory notes issued by high quality industrial, utility and financial entities) என்ற வரைவிலக்கணம் பாரம்பரியமாக வணிகத்தாளுக்கு வழங்கப்பட்டு வந்தாலும் இந்த வரைவிலக்கணம் ஏற்புடையதாக காணப்படவில்லை. தற்காலத்தில் ஏற்புடையதான ஒரு வைரவிலக்கணமாக "நிறுவனங்களால் வழங்கப்பட்டு பொதுவாக நிறுவன ரீதியான முதலீட்டாளர்களுக்கு கழிவு அடிப்படையில் விற்பனை செய்யப்படும் உயர்தரமுடைய குறுங்கால ஆவணங்கள்" என்பதனைக் குறிப்பிடலாம்.(High quality short term note issued by entities throughout the world, generally sold on a discount basis to institutional investors) உயர்ந்த தேறிய பெறுமதியுடைய (High net worth) பாரிய நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற ஒரு உறுதிப்படுத்தப்படாத வாக்குறுதிப் பத்திரமாகவே வணிகத் தாள் அமைகின்றது.

அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் மிக நீண்ட காலமாக மிக முக்கியமான பிரபலமான குறுங்கால கடன் கருவிகளாக வணிகத்தாள் விளங்குகின்றது. இலங்கையில் ஒழுங்கு முறையான வணிகத்தாள் வெளியீடு (Bluechip Companies) எனப்படும் தரம் வாய்ந்த

நிறுவனங்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. John Keels Ltd, Aitken Spence & Co. Ltd. போன்ற பிரபலமான நிறுவனங்கள் வணிகத்தாள் விநியோகத்தில் ஈடுபட்டுள்ளன. இலங்கையின் வணிக வங்கிகள், வியாபார வங்கிகள், அபிவிருத்தி வங்கிகள் என்பன வணிகத் தாள் சந்தையுள் அண்மைக் காலத்தில் அதிகளவில் பிரவேசித்துள்ளன. வணிகத் தாளை கையாளுவோர் (Dealers) வழங்கும் அல்லது கொடுப்பனவு செய்யும் முகவர்கள(Issuing/Paying Agents) வெளியீட்டுக்கான வங்கியாளர் (Bankers to the issue) என்ற பல்வேறு நிலைகளில் இவ் வங்கிகள் வணிகத் தாள் வெளியீட்டில் சம்பந்தப்பட முடியும். இலங்கையில் வணிகத்தாள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் ஒரு வாக்குறுதிப் பத்திரமென்ற வகையில் மாற்றுண்டியல் கட்டளைச் சட்டத்தினால் (Bills of exchange ordiance) வழங்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியும் வணிக வங்கிகள் வணிகத் தாள் தொடர்பில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளை அறிமுகப்படுத்தயுள்ளது. ஆவணங்கள் சபைச் சட்டமானது (The Securities Council Act) "ஆவணங்கள்" (Securities) என்பதனை வரையறுக்கின்ற போது பரிமாற்று உண்டியல்களையும், வாக்குறுதிப் பத்திரங்களையும் உள்ளடக்காமையினால் வணிகத்தாளானது ஆவணங்கள் பரிமாற்று ஆணைக்குழுவின் (Securities Exchange Commission) பார்வைப் பரப்பினுள் உள்ளடங்கவில்லை. ஆவணங்கள் பரிமாற்று ஆணைக்குழுவே விலை கூறிய கம்பனிகளின் ஆவணங்களில் முதலீடு செய்யும் முதலீட்டாளரது நலன்களைப் பாதுகாக்கும் அமைப்பாகும். இதன் காரணமாக வணிகத் தாள் வெளியீட்டை ஒழுங்குபடுத்தும் பொறிமுறை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உணரப்பட்டது. நாட்டின் நிதி முறைமையின் ஆரோக்கிய நிலையை பேணும் பொறுப்பை மத்திய வங்கியே கொண்டுள்ளது. இந்தியா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் அந்தந்த நாடுகளது மத்திய வங்கிகளே வணிகத்தாள் வெளியீட்டை ஒழுங்குபடுத்து கின்றன. எனினும் ஐக்கிய அமெரிக்காவில் வணிகத் தாள் ஒரு ஆவணமாகக் (A Security) கருதப்பட்டு ஆவணங்கள் சட்டத்தின் கீழ் (The Securities Act) கொண்டு வரப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வணிகத் தாள் விநியோக விதிமுறைகள்.

இலங்கையில் செயற்படுகின்ற வணிக வங்கிகள் வணிகத் தாள் விநியோகம் ஒன்றில் பங்கேற்கின்ற போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் எவை என்ப தனை இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இவ்வகையில் வணிக வங்கி ஒன்றின் நிறுவன ரீதியான வாடிக்கையாளரொருவர் (Corporate customer) வணிகத் தாளினை விநியோகிக்கையில் வணிக வங்கிகள் குறிப்பிட்ட விநியோகத்தில் விநியோகிக்கும் அல்லது கொடுப்பனவு செய்யும் முகவர்களாகவோ, கையாள்பவராகவோ, (Dealers) உத்தரவாதமளிப்போராகவோ, முதலிடுவோராகவோ, ஒப்புறுதியளிப்போராகவோ (Under writers) சம்பந்தப்படலாம், அவ்வாறு வணிகத் தாள் விநியோகத்தில் பங்கேற்கின்ற போது பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்ற கம்பனியானது வணிகத் தாள் விநியோகத்தில் மாத்திரமே வணிக வங்கிகள் சம்பந்தப்பட வேண்டுமென மத்திய வங்கி வரையறை செய்கின்றது.

1. வணிகத் தாளை வெளியிட்டு குறுங்கால நிதி திரட்ட முற்படும் கம்பனி கொழும்பு பங்கு பரிமாற்று நிலையத்தில் விலை கூறிய கம்பனியாக இருத்தல் வேண்டும்.

2. குறிப்பிட்ட கம்பனியின் விநியோகத்திற்கு முந்திய ஆண்டிறுதி ஐந்தொகையின்

படியான கட்புலனாகக் கூடிய தேறிய பெறுமதி (TANGIBLE NET WORTH) ஆகக் குறைந்தது 100 ரூபாவாக இருத்தல் வேண்டும்.

3. பொது மக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்க அனுமதிக்கப்படாத நிறுவனங்களாக அவை இருத்தல் வேண்டும். (Institutions that are not permitted to accept public deposits)இவற்றைக் தவிர வணிகத் தாளானது முதிர்வு காலம் மூன்று முதல் ஆறு மாதங்கள் எனவும் (விநியோகத் திகதியிலிருந்து) மத்திய வங்கி நிர்ணயம் செய்துள்ளது. ஒவ்வொரு வணிகத் தாள் விநியோகமும் குறைந்தது 25 மில்லியன் ரூபா பெறுமதியுடையதாக இருப்பதுடன் தனியொரு முதலீட்டாளர் ஆகக் குறைந்தது ஒரு லட்சம் ரூபாவை முதலிட வேண்டும். வணிகத் தாளின் பெறுமதி ஒரு லட்சம் ரூபாவின் மடங்குகளாக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனைகளையும் மத்திய வங்கி வணிகத் தாள் வெளியீடு தொடர்பில் விதித்துள்ளது.

வணிகத் தாள் ஒன்றில் ஆகக் குறைந்தது பின்வரும் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் அவசியமாகும்.

அ. வணிகத் தாள்(Commercial paper) என்ற பதம் தெளிவாக அச்சிடப்பட்டிருத்தல்.
ஆ. விநியோகிக்கும் கம்பெனியின் பெயர். (Name of the issuing company)
இ. தொடர் இலக்கம். (Serial No.)
ஈ. விநியோகிக்கும் இடம். (Place of issue)
உ. விநியோகிக்கும் திகதி. (Date of issue)
ஊ. வணிகத் தாளின் பெறுமதி (இலக்கத்திலும் எழுத்திலும்).
எ. முதிர்வடையும் திகதி. (Date of maturity)
ஏ. விநியோகிக்கும் கொடுப்பனவு செய்யும் முகவரது பெயர். (Name of the issuing and paying Agent)
ஐ. விநியோகிக்கும் கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பங்கள்.

அனுகூலங்கள்.

மத்திய வங்கி வணிக வங்கிகள் தொடர்பில் ஏற்படுத்தியுள்ள இவ் ஒழுங்கு விதிகள் (Guide lines) இலங்கையின் கடன் தாள் சந்தையை(Local debt note market) பாதிக்கும் என சில நிதியியல் ஆய்வாளர் கருத்துத் தெரிவித்துள்ளனர். வணிகத் தாளின் முதிர்வு காலம் 6 மாதங்களாக வரையறுக்கப்பட்டுள்ளது இலங்கையில் மெதுவாக வளர ஆரம்பித்திருக்கும் நடுத்தர கடன் சந்தையை பாதிக்குமெனலாம். உள்நாட்டு(Medium term note market) கம்பனிகள், வணிக வங்கிகளுடனேயே தமது பெரும்பாலான நிதித் தொடர்புகளைக் கொண்டுள்ளன. இந்நிலையில் வணிக வங்கிகளை வணிகத் தாள் விநியோகம் தொடர்பில் கட்டுப்படுத்துவது நடுத்தர கால கடன் ஆவன சந்தையைத் தாக்கும் என வாதிடப்படுகின்றது. இது மலிவான குறுங்கால நிதி வாய்ப்பொன்றைப் பல நிறுவனங்களுக்கு மறுப்பதாக அமையும். ஏனெனில் வணிகத் தாள்கள் ஒப்பீட்டளவில் மலிவான நிதி மூலமாகும்.

வணிகத் தாள் ஒன்றில் முதலீடு செய்கின்ற முதலீட்டாளரை பொறுத்தவரை யில்

அது குறுங்கால முதலீடாக இருப்பதனால் ஆபத்து மிகக் குறைந்ததாக அமையும். வேறு விதமாக கூறுவதாயின் வணிகத்தாளை வழங்கிய கம்பனி முதிர்வுக் கால முடிவில் பணத்தை மீளச் செலுத்த இயலாத நிலையை அடையும் வாய்ப்பு மிகக் குறைவாகும்.

வணிகத் தாள் வருவாய் வீதம் (Income Percentage) திறைசேரி உண்டியல் வட்டி வீதங்களைக் காட்டிலும் குறிப்பிடத்தக்களவு அதிகமாகக் காணப்படுவதும் முதலீட்டாளரைப் பொறுத்த அனுகூலமாகும். வணிகத் தாளின் கவர்ச்சிவரத் தன்மையை இது அதிகரிக்கின்றது. இரண்டாந்தரச் சந்தையொன்றும் (A Secondary market) வணிகத் தாளுக்கு இருப்பின் அவற்றின் திரவத் தன்மை (Liquidity)அதிகரிக்கும். அதாவது தனக்கு பணம் தேவைப்படுகின்ற போது முதலீட்டாளர்கள் வணிகத் தாளை இரண்டாந்தரச் சந்தையில் விற்று பணமாக்க முடியும். இது தயக்கமின்றி வணிகத்தாளில் முதலீடு செய்யும் தூண்டுதலை முதலீட்டாளர்களுக்கு வழங்குகின்றது.

வணிகத் தாளை விநியோகித்து தமது குறுங்கால நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதனால் விநியோகிக்கும் நிறுவனத்திற்கும் (Issuer) பல அனுகூலங்கள் ஏற்படு கின்றன. உறுதிப்படுத்தப் படாத வாக்குறுதிப் பத்திரமாக (An Unsecured Promissory Note) வணிகத் தாள் விளங்குவதனால் விநியோகிக்கும் நிறுவனத்திற்கு ஒரு மலிவான நிதி மூலமாக அது அமைகிறது. ஏனெனில் வங்கி போன்ற நிதி நிறுவனங்களிடம் கடன் பெறுவதனால் தலை சிறந்த கம்பனிகள் கூட குறிப்பிட்ட கடனுக்கு உத்தரவாதமாக or அடைமானமாக (A Security) தமது சொத்துக்களை வழங்க நேரிடும். இத்தகைய தேவைப்பாடு வணிகத்தாள் விநியோகத்தில் காணப்படாத வகையில் அது ஒரு மலிவான நிதி மூலமாகக் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு காணப்படும்.

தவிர வணிகத் தாள் வெளியீட்டின் காரணமாக வெளியிடும் நிறுவன மதிப்புச் சந்ததையில் உயர்வதற்கான ஏதுநிலை ஏற்படும். முதலிடும் பொது மக்கள் மத்தியில் கம்பனியில் நம்பகத்தன்மை அதிகரிக்கும். இதனால் ஒரு பணச் சந்தை கருவி என்ற வகையில் வணிகத் தாள் தொடர்பான பிரபல்யம் உயர்வடையும் எனலாம்.

முடிவுரை.

பொதுவான இலங்கையின் பணச் சந்தைப் போக்கினை கூறி பணச் சந்தையின் பிந்திய வரவான வணிகத் தாள்களது தன்மையையும் முக்கியத்துவத்தையும் இக்கட்டுரை விபரித்தது. இலங்கையின் நிதிச் சந்தை வளர்ச்சிக்கும், இலங்கையை ஒரு பிராந்திய நிதியியல் மையமாக விருத்தியுற செய்வதிலும் பணச் சந்தையின் அபிவிருத்தி மிக முக்கியமான ஒரு முன் நிபந்தனையாகும். பணச் சந்தை வளர்ச்சிக்கு புதிய பணச் சற்தை கருவிகள் விருத்தி செய்யப்பட்டு, உகந்த நிதியியல் சுழல் ஏற்படுத்தப்படுவது அவசியமென்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். இவ்வகையில் வணிகத் தாள்களானது அறிமுகம் இடைநிலை கிரயங்களை (Intermediatory Costs)குறைத்ததுடன், எதிர்கால உடன்படிக்கைகள் (Forward Rate Agreements) போன்ற கருவிகள் இலங்கைக்கு புழக்கத்திற்கு வருவதற்கும் வகை செய்ததெனலாம். பணச் சந்தையின் வளர்ச்சிக்கு வணிகத் தாள் குறப்பிடத்தக்களவு பங்காற்ற முடியுமென எதிர்பாாக்கப்படுகின்றது.

*Nadarajah Thayakaran*
*Year 13 C*

# கணனி யுகம்

ஆதிமனிதன் வேட்டையாடப் பயன்படுத்திய கூரிய கற்கள் முதல் இன்றைய இணையம் வரை மனிதகுல வரலாற்றில் பாரிய பாய்ச்சலை ஏற்படுத்திய சாதனங்களிலே கணணி முக்கிய பாத்திரம் வகிக்கிறது.

கலியுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதனை சரியாகக் கூறின் கணணி யுகத்திலேயே வாழ்கின்றான் எனலாம். தொழில்நுட்ப மறுமலர்ச்சியால் பல வருட ஆராய்ச்சிகளால் விஞ்ஞானத்தின் முக்கிய கண்டுபிடிப்பாக வந்த கணணி மனித வாழ்வில் இரண்டறக் கலந்து விட்டது. கணணி என்ற எண்ணக்கரு 1812 ஆம் ஆண்டளவில் விஞ்ஞானி ஒருவரினால் வெளியிடப்பட்டாலும் 1939 ஆம் ஆண்டளவில் தான் மடக்கை, திரிகாணகணித பெறுமானங்களைக் கணிக்கும் இயந்திரமாக கணணி தோன்றியது. இவை துரிதமான வளர்ச்சி அடைந்து இன்று பல்வேறு தரப்பட்ட தரவுகளையும் ஆராய்ந்து சேமித்து வைக்கின்றன. கணணிகள் "ஆம் ", "இல்லை" எனும் இரண்டு முதன்மைச் சைகைகளால் மட்டும் இயங்குகின்றன. ஆரம்பகாலத்தில் கணணிகள் இயந்திர மயமானவையாக இருந்தன. தற்காலத்தில் கணணிகள் இலத்திரனியல்மயமானவையாக மாறியிருக்கின்றன. இன்றைய கணணிகளில் மூளையாக அமைவது அவற்றில் உள்ள மிகச்சிறிய ஒன்றிணைக்கப்பட்ட மின்சுற்றுகளாகும். இதனால் சுயமாக சிந்திக்கும் ஆற்றல் அல்லாததால் மனிதனால் இவை இயக்கப்படுகின்றன. இன்று இக்கணணிகள் விஞ்ஞானம், வியாபாரம், நுண்கணணி எனப் பலவகைப்படும். மேலும் தொலைத்தொடர்பு, போக்குவரத்து, மருத்துவம், பொருளாதாரம், கல்வி போன்ற சகல துறைகளோடும் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ள ஒரு சாதனம் ஆகும்

சகல துறைகளுக்கும் முக்கியமாக வர்த்தகத்துறையில் தொலைதூர/ உள்ளக தகவல் பரிமாற்றம் இன்றியமையாததாகும். இத்தகவல் பரிமாற்றம் தொலைபேசி, Telex, Fax, T.V போன்ற தொலைத்தொடர்பு சாதனங்களினாலேயே பிரதானமாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. பின்னர் தகவல்களைப் பதனிடும் சாதனமான கணணிகளினூடாகவே தகவல் பரிமாற்றம் நடைபெறும் போது கூடிய பலன்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று உணரப்பட்டது. கணணிகளின் துரித அபிவிருத்தி காரணமாக தற்காலத்தில் பத்திரிகைகளில் வரும் செய்திகளைக் கூட கணணியில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. வருங்காலங்களில் ஒவ்வொரு வீட்டிலும் கணணிகளின் மூலம் செய்திகளை உடனுக்குடன் எழுத்து வடிவிலும் ஒலி, ஒளி வடிவிலும் பெற்றுக் கொள்ளலாம்.

கணணியுகத்தில் மருத்துவத்துறையிலும் கூட கணணிகள் புகுந்து விட்டன. தற்காலத்தில் நோயாளி ஒருவரின் வயது, இரத்த அழுத்தம், அவருக்கு முன்னர் ஏற்பட்ட நோய்கள் போன்ற மருத்துவக்குறிப்புக்களை கணணியில் சேமித்து வைக்கப்பட்டு தேவையான போது பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. அது மட்டுமன்றி கணணிகள் உதவி கொண்டு மிகக்கடினமான நுண்ணிய சத்திரசிகிச்சைகள் கூட மிக இலகுவாகச் செய்யக்கூடியதாக உள்ளது. தற்காலத்தில் பயங்கரப் புற்றுநோயையும், தாயின் கருப்பையில் இருக்கும் பிள்ளையையும் பார்க்கக்கூடிய வசதியையும் ஏற்படுத்தித் தந்த பெருமை கணணியையே சாரும்.

சிறுவர் முதல் பெரியவர் வரை கல்வி புகட்டுவதிலும் கணணிகள் வல்லவை. அலுமாரியில் அடுக்கடுக்காக உள்ள புத்தகங்களை எல்லாம் ஒரு சிறு ஒலிநாடாவிலோ அன்றி வட்டத்தகடுகளிலோ (floppy disc) கணணியின் உதவி கொண்டு அடக்கி விடலாம். கணணி மூலமாக நூலகம் செல்லாது வீட்டிலிருந்தே நூலகப் புத்தகங்களைப் படித்து விடலாம். இதனால் இன்று சிறியவர், பெரியவர் அனைவரும் கணணியில் கல்வி கற்க ஆரம்பித்துள்ளனர்.

பல்வேறு தேவைகளுக்காக இனக்கலப்பு செய்ய வேண்டிய பயிர், விலங்குகளின் "பிறப்புரிமையல்" பற்றிய விபரங்களை எல்லாம் கணணிகளில் சேமித்து வைக்கலாம். இவை தவிர வேறுபல தகவல்களை ஒழுங்குபடுத்தி வைக்கவும் தேவையான நேரத்தில் தேவையான விதத்தில் இலகுவாகவும் உடனடியாகவும் தகவல்களை மீளப்பெறவும் பயன்படுத்தப்படுகிறது.

கணணியுகத்தில் உலக நாடுகள் தமது பொருளாதார மேம்பாட்டிற்கும் கணணியையே உபயோகிக்கின்றன. கணணிகள் இல்லாவிடின், ஒவ்வொரு மணித்தியாலமும் மாறிக் கொண்டேயுள்ள வெளிநாட்டு நாணயமாற்று விகிதங்களை உடனுக்குடன் அறியமுடியாது. தற்காலத்தில் உச்சப்பயன் பெறுமுகமாக வங்கிகளும் கணணிமயமாக்கப்பட்டுவிட்டன. புள்ளி விபரத்திரட்டிற்கும் கணணிகள் இன்றியமையாதன எனலாம்.

ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, ஜேர்மனி, ஜப்பான் போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கணணியுகம் சிறப்புற்று மேலோங்கியுள்ளது. கணணியுகம் மேலும் மேலும் சிறப்புற அங்கு ஆராய்ச்சிகள் தொடர்ந்தவண்ணமுள்ளன. அந்நாடுகளில் எங்கும் எதற்கும் கணணியே ஒரே வழி என்ற நிலைமை உருவாகி விட்டது. நம் இலங்கையிலும் முதன்முதலாக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தில் கணணி கையாளப்பட்டது. அதைத் தொடர்ந்துபரீட்சைத் திணைக்களத்திலும் ,புள்ளிவிபரத் திணைக்களத்திலும் கையாளப்பட்டன. இன்று கூடுதலாக எல்லாத் திணைக்களங்களிலும் கூட்டுத் தாபனங்களிலும் தனியார் தாபனங்களிலும் கணணிகள் பயன்படுத்தப்படுகின்றன. இன்று இலங்கையில் கணணிகள் கல்வியிலும் புகுத்தப்பட்டுள்ளன. பாடசாலை, பல்கலைக்கழகங்களிலும் கணணி சார்பான பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. கணணி இக்காலத்தில் கையில் எடுத்து செல்லக்கூடிய அளவிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டு மிக முக்கியமான "இன்டெல் 4004" கண்டு பிடிக்கப்பட்டது. இது மிகச்சிறிய அளவிலான நுண் செயலாக்கி மைக்ரோ புரொசெஸ்கர் கொண்டு தயாரிக்கப்பட்டது. "இன்டெல் 4004" மைக்ரோ புரொசெஸ்கர் 2300 திரான்சிஸ்டர்கள் மட்டும் கொண்டது. ஆனால் சமீபத்தில் தயாரிக்கப்பட்டுள்ள "இன்டெல் p6" எனும் மைக்ரோபுரொசெஸ்கர் 5.5 கோடி திரான்ஸ்சிஸ்டர்களைக் கொண்டுள்ளது. இவ் மைக்ரோ புரொசெஸ்கர் முன்னையதைவிட ஏறத்தாழ 100000 மடங்கு அதிகரித்த வேகத்தைக் கொண்டுள்ளது. இதன் விளைவாகவே இன்று கணணிகள் பாவனை மிகவும் பிரபலமாகின்றது.

தற்காலப்பகுதியில் இறுதியாக கணணியுகத்தில் பிரதான சாதனையாக இணையம் விளங்குகிறது. இணையம் என்பது பல்வேறு வித்தியாசமான வகைப்பட்ட கணணி/கணணி வலைகளின் உலகளாவிய வலைப்பின்னலமைப்பு என வரையறுக்கப்படலாம். சாதாரண கணணி தொடக்கம் மிகப் பிரமாண்டமான கணணி (super computer) வரையான ஏறத்தாழ 150 நாடுகளிலுள்ள பல கணணிகள் இணையத்தினால் தொடர்புபடுத்தப்பட்டிருக்கின்றன.

இணையத்தின் பல்வேறு பயனுள்ள சேவைகளினாலும் பல்வேறு இணையத்தளங்களிலும் காணப்படுகின்ற அபரிமிதமான தகவல் களஞ்சியங்களினாலும் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களாலும் பொது மக்கள், வர்த்தகர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் எனப் பல்வேறுப்பட்ட தரங்களிலுமுள்ள 10 கோடி மக்களுக்கு மேல் பயனடைகின்றார்கள். இவை தவிர நாளாந்தம் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் புதிதாக இணையததைப் பயன்படுத்தத் தொடங்குகிறார்கள்.

கணணிகள் தகவல் பரிமாற்றத்திற்காக தொடர்பூடகங்களால் இணைக்கப்படுவது "கணணி வலைகள்" (Computer Networks) எனப்படுகின்றன. ஒரே வளாகத்தில் அல்லது கட்டிடத்தினுள் இருக்கும் கணணிகள் இணைக்கப்பட்டிருக்கும் அமைப்பு (LAN) உள்ளக கணணிவலை என்றும், ஒரே நகரத்திலுள்ள பல்வேறு வளாகங்களிலுள்ள கணணிகள் இணைக்கப்படும் அமைப்பு (MAN) நகர கணணி வலை என்றும், நகரங்களிடையே (நாடுகளிடையே கூட உள்ள கணணி வலைகளினமைப்பு (WAN) Wide Area Net என்றும் அழைக்கப்படுகின்றன.

இணையமானது எந்த ஒரு தனி மனிதனிற்கோ அல்லது நிறுவனத்திற்கோ சொந்தமானது அல்ல, இது உலக மக்களின் சொத்து ஆகும். இணையத்திலுள்ள சில சேவைகள் :

Time: இணையத்தில் உள்ள வெவ்வேறு கணணிகளில் வெவ்வேறு நேரங்கள் பேணப்படுகின்றன. சில நடவடிக்கைகளுக்கு கணணிகளிடையே நேர ஒழுங்கு முக்கியமானது. இதற்காக இணையத்தில் பல Time Servers (NTP) மூலம் இணைப்புகள் உள்ளன.

Internet Fax : இணையத்திலிருந்து Fax பண்ணுவதற்கு email பயன்படுத்தலாம்.

Internet chat : ஏற்கனவே ஏற்பாடு பண்ணியபடி இருவர் ஒரே நேரத்தில் தங்கள் தங்கள் கணணியில் ரைப் பண்ணுவதன் மூலம் தொடர்பு கொள்ளுதல் Internet Talk எனப்படுகிறது. இதேபோல பலர் ஒரே நேரத்தில் தொடர்பு கொள்வது Internet chat என்று அழைக்கப்படுகிறது.

Internet Relay chat : ஆயிரக்கணக்கான channels இருக்கின்றன. ஒவ்வொன்றும் வித்தியாசமான விடயங்களில் அளவளவாக ஒதுக்கப்பட்டுள்ளன.

Internet Phone : இணையத்தினூடாக போன் பண்ண உதவும்.

Video Conferencing : பலர் ஒரே நேரத்தில் தமது கணணிகளில் இருந்தபடியே நேரடியாகக் கதைப்பது போன்று தொடர்பு கொள்ள உதவும். எனவே இறுதியாக கணணிகள் அதிசக்தி வாய்ந்தவையாகவும் உருவத்தில் சிறியனவாகவும் மலிந்தவையாகவும் இருக்கின்றன.

**நடராசா ரமேஷ்**
ஆண்டு 13 A

# ஏழைகளின் தெய்வம் -அன்னை தெரேசா

தெருவோரமாக நடந்து செல்லும் நமது பார்வைக்கு வறியவர்கள், எளியவர்கள், பசி பட்டினியால் துன்பு று வோர், நோயுற்றோர் எனப்பலவகையான பிறப்புக்கள் அகப்படுகின்றன. ஆனால் நமது மனங்கள் அவர்களுக்காக ஏங்குவதோ, அவர்களின் துயர்துடைக்க உந்தப்படுவதோ மிக மிக அரிதேயாகும். அதிகபட்சம் எமது உதவியாக சில ரூபாய் நாணயங்களை அவர்களிடம் சமர்ப்பித்து விட்டு நமது வழியிலே சென்று விடுகின்றோம். ஆனால் ஓர் உயிர் ஏழை எளியவர்களின் துன்பநிலையைக் கண்டு ஏங்கியது, மனம் பதைத்தது, பரிதவித்தது. ஏழைகளதும், நோயுற்றோரதும் வாழ்விலே ஒளியூட்டி அவர்கள் உள்ளங்களில் மகிழ்ச்சித்தீபந்தனை ஏற்ற வேண்டும் எனக் கனவு கண்டது. தனது கனவுதனை நனவாக்கி மனநிறைவடைந்தது. தனது முயற்சிகளில் வெற்றி பெற்றது.

ஆம் அவ்வுயிரே உலகம் போற்றும் மேன்மக்களில் ஒருவராகத் திகழும் ஏழைகளின் தெய்வம், கருணைக்கடல் அன்னை தெரேசாவாகும். அன்னை தெரேசா ஐரோப்பிய நாடாகிய அல்பேனியாவிலே, பொஜாக்கிசு என்னும் கிராமத்தினில் ஒரு கத்தோலிக்கக் குடும்பத்தினில் 1910 ம் ஆண்டு அவதரி த்தார். அவரது இளமைப் பெயர் அக்னஸ் (Agnes) என்பதாகும். அக்னஸ் சிறுமியாக இருக்கும் பொழுதே சமயப்பற்று மிக்க அவளது பெற்றோர், ஏழை எளியவர்களை அழைத்து உணவளிப்பது வழக்கம். இது அவளது இல்லத்தினில் ஒரு நிரந்தர நிகழ்வாகக் காணப்பட்டது. இந்நிகழ்வே அவளது உள்ளத்தினில் "ஏழை மக்களின் துயர்துடைக்கப் பாடுபடுதல் வேண்டும்." என்ற உணர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமைந்ததெனலாம். கன்னியாஸ்திரியாகிச் சேவைபுரிதல் வேண்டும் என்ற எண்ணம் அக்னஸின் மனதினில் ஊற்றெடுத்தது. இதனையடுத்து இந்தியாவில் பெங்காலில் (வங்காளம் ) உள்ள கன்னியாஸ்திரி மடத்து டன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டாள்.

தனது பதினெட்டாவது வயதினிலே தனது தாயையும் அருமைச் சகோதரங்களையும், உற்றார் உறவினர்களையும் துறந்து உலகத்து மக்கள் அனைவரையும் தனது உறவினர்களாக ஏற்றுக்கொண்டார். 1930 ம் ஆண்டு கல்கத்தாவிலுள்ள கன்னியாஸ்திரி மடந்தனில் இணைந்து ஏழைச்சிறுவர்களுக்காக நிறுவப்பட்ட ஒரு பள்ளியிலே ஆசிரியையாகக் கடமை புரியத்தலைப்பட்டார். இவ்வேளையில் பட்ணாவில் வைத்தியத் துறையிலும் பயிற்சி பெற்றுக்கொண்டார். 1931 ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதி கல்கத்தாவிலுள்ள லொரெடோ மடத்தினில் கன்னியாஸ்திரியாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதோடு தனது பெயரையும் "தெரேசா" என மாற்றிக் கொண்டார். தான் பணியாற்றி வந்த கல்லூரியில் கற்ற ஏழைச்சிறுவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அயராது உழைத்த அன்னை தனது பணி குறிப்பிட்ட பிரதேசங்களுக்குள் முடங்கிக் கிடக்காது, பரந்த ரீதியிலே விஸ்தரிக்கப்பட வேண்டியது என எண்ணினார். இதன் விளைவாக லொரெடா மடத்தினது அனுமதியுடன் வெளியிலுள்ள சாதாரணமக்களது துயரைத்துடைக்கும் பணிகளில் ஈடுபடலானார்.

1950 ஆம் ஆண்டு தனது சொந்த சமூக சேவை அமைப்பான மிஷனறிஸ் ஒவ் சரிட்டி (Missionaries of Charity) என்ற அமைப்பினை நிறுவினார். இசமயத்திலேயே அவர் முதன் முதலாக நீலநிறச்சேலைத் தலைப்புடன் கூடிய வெண்ணிறக் கைத்தறி ஆடைதனை அணிய ஆரம்பித்தார். அன்னை சகிதம் அவரது அமைப்பின் அங்கத்தவர்கள் கல்கத்தா நகரின் நடைபாதைகளிலிலும், குப்பைக் கூடங்களிலும் அநாதரவாகக் கிடந்த குழந்தைகளை எடுத்து வளர்க்கலா

னார்கள். கல்கத்தா நகரின் சேரிப்புற ங்களுக்குள்ளே சென்று கதியற்றிருந்த ஏழை மக்களுக்கும், குஷ்டரோகிகளுக்கும் தம்மாலான உதவிகளைப் புரிந்தார்கள். இவ்வாறு சிறு அமைப்பாக ஆரம்பிக் கப்பட்ட இவ்வறக்கட்டளை நிலையம் காலப்போக்கில் பெரும் நிறுவகமாக விஸ்தீரணமடைந்தது. அன்னையின் சேவையால் ஈர்க்கப்பட்ட பலர் இந்நிலைய த்துக்கு நிதிதனை வாரி இறைத்தார்கள். வெளிநாடுகளிலிருந்து பலர் அன்னையிடம் வந்து, அவருடன் இணைந்து அறப்பணி களில் ஈடுப்படலாயினர். மாபெரும் நிறுவகமாக விஸ்தீரணமடைந்த அன்னை தெரேசாவின் அறக்கட்டளை நிலையம் தற்போது நூற்றுமுப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் தனது கிளைகளை நிறுவி ஏழை மக்களின் மேம்பாட்டுக்காக உழைத்து வருகின்றது. இந்நாடுகளில் ஐந்நூறுக்கும் மேலான அநாதைச் சிறுவர் நிலையங்கள் இயங்குகின்றன. நாலாயிர த்துக்கும் மேற்பட்ட கன்னியாஸ்திரிகள் தமது வாழ்க்கையை ஏழைகளின் நலனு க்காக அர்ப்பணித்துத் தன்னலமற்ற பெருஞ்சேவை ஆற்றிவருகின்றனர். 1967ம் ஆண்டு கொழும்புக்கு விஜயம் செய்த அன்னை தெரேசா தனது உன்னத சேவையை இலங்கையிலும் ஆரம்பித்து வைத்தார்.

அன்னை தெரேசாவின் சாதி, மதம், இனம் முதலானவை சாராத, பாகுபாடற்ற, தன்னலமற்ற சேவை உலக முதல்வர்கள் பலரது கவனத்தையும் கவர்ந்தது. பாப்ப ரசர் அருளப்பர் சின்னப்பர் இந்தியாவுக்கு விஜயம் செய்த பொழுது அன்னை தெரேசாவின் ஒப்பற்ற சேவைதனை மெச்சி தான் பயணிக்கும் சொகுசு கார் வண்டிதனை அன்னையின் அறக்கட்டளை நிலையத்துக்கு அன்பளிப்புச் செய்தார். காலஞ்சென்ற வேல்ஸ் இளவரசி டயானா வும் அன்னை தெரேசாவின் பணிகளால் பெரிதும் கவரப்பட்டார். இதன் விளைவாக அன்னையுடன் நெருங்கிய தொடர்பு களைப் பேணி வந்தார். அன்னையின் அளப்பெரும் சேவைக்காக அவருக்கு 1979 இல் அமைதிப் பணிக்கான நோபல்ப் பரிசு வழங்கப்பட்டது. மேலும் அன்னை யாருக்கு பத்மசிறீ விருது, பாரத நாட்டின் உயர் விருதான "பாரத ரத்னா" விருது முதலியனவும் வழங்கப்பட்டன. 1996ம் ஆண்டு அன்னையின் சிறந்த சேவைக்காக அவருக்கு அமெரிக்கா நாட்டுக்கான கௌரவப் பிரஜா உரிமை வழங்கப்பட்டது.

"ஏழை எளியவர்களுக்குத்தேவை எமது அனுதாபங்களல்ல, அன்பும் கருணையுமேயாகும்" என்று கூறிய அன்பின் பிறப்பிடம் அன்னை தெரேசா 1997ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி இவ்வுலகைத் துறந்து இறை வனது அருட்பாதங்களை அடைந்தார். அப்போது அவருக்கு வயது எண்பத்து ஏழு. தனது மறைவுக்கு சில மாதங்களின் முன்னர் அறக்கட்டளை நிலையத்தினை தலைமை தாங்கும் பொறுப்பினை சகோதரி நிர்மலாவுக்குப் பகர்ந்தார். அன்னையின் இறப்பு உலக மக்களனைவரையும் ஆராத் துயரில் ஆழ்த்தியது. அவரது மேனியைத் தரிசிப்பதற்காக பெருந்திரளான மக்கள் கூடினார்கள். அன்னையைக் கௌரவிக்கும் முகமாக இந்திய அரசு அவருக்கு அரச மரியாதைகளுடன் கூடிய மரணச்சடங் கினை அளித்தது. இவ்வாறான மரணச் சடங்கு இந்திய வரலாற்றினில், மகாத்மா காந்தி, ஜவகரலால் நேரு போன்ற சுதந்திரத் தியாகிகளுக்கே முன்னர் அளிக்கப்பட்டதாகும்.

மக்கள் சேவையே மகேசன் சேவை எனக்கொண்டு ஏழைகளின் மேம்பாட்டு க்காக உழைத்த அன்னை தெரேசா அவரது ஒப்பற்ற பணிகள் வடிவிலும், அவர் நிறுவிய பெரும் அறக்கட்டளை நிலையத்தின் வடிவிலும் தற்போதும் வாழ்ந்து கொண்டே இருக்கின்றார். ஏழைகளின் மனங்களில் நம்பிக்கைத் தீபந்தனை ஏற்றி வைத்த அன்னை தெரேசாவினது நாமமும் அவர் ஆற்றிய அளப்பரிய சேவைகளும் மனிதவர லாற்றினில் பொன்னெழுத்துக்களால் குறிப்பிடப்பட வேண்டியனவாகும்.

**S. Mayuran,**
Year 12 D

# மாது பிதா குரு தெய்வம்

ஐந்து அறிவு உடையவர்கள் மாக்கள். ஆறறிவுடையவர்கள் மக்கள். ஆறாவது அறிவுதான் பகுத்தறிவு. "பகுத்தறிவு" என்று ஒன்று இருந்ததினால் நாம் மக்களாகும் பேறு பெற்றோம், எங்களுள்ளும் சிலர் பகுத்தறிவைப் பயன்படுத்தாது மக்களிலிருந்து விலகுகிறார்கள். விலகினால் விலங்கு என்பதை அறிவோமாக. இங்கு மாக்கள் என்பது விலங்குகள். மக்கள் என்பது மனிதர்கள்.

நல்லொழுக்கமே மனிதர்க்கு உண்மையான செல்வமாகும். நல்லொழுக்கம் அளப்பரிய ஆக்க சக்தியை வழங்குகிறது. " ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி" - என்பது வள்ளுவர் வாக்கு. ஒழுக்கக் கேட்டினாற் பெரும்பழியை எய்துவார்கள் என்பது குறளின் பொருள்.

மக்களாகிய நாம் வைகறையில் துயில் எழுதல்வேண்டும். துயில் எழும்போதே நம்மை மக்களாகப் பெற்ற தந்தை, தாயைத் தொழுது கொண்டு எழுதல் வேண்டும் என்பது முந்தையோர் கண்ட முறை. எம்மைப் பெற்ற தாயும் தந்தையும் எமது கண்கண்ட தெய்வங்கள் . நாம் செய்யுங் கருமங்களைச் சிந்திக்கவும், நாம் பெறவுள்ள பேறுகள் வாய்ப்பாக இருக்கவும் எமது கண் கண்ட தெய்வங்களாகிய பெற்றோரை வழிபடல் வேண்டும். நமக்கு இருமுது குரவர்களாக உள்ளவர்களே மாதா, பிதா என்போர். இவர்கள் இன்றேல் நாமில்லை. அவர்களின் பெருங்கருணையை நினைந்து நினைந்து மனமுருகிக் கரங்கூப்பி என்றும் எம்மால் வழிபடவேண்டியவர்கள்.

"அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்", தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை; தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்பவை எமக்குத்தாரக மந்திரமாகவுள்ளன. "ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே" என்பது தாய் கூறும் மாகவாக்கியம். பத்துத்திங்கள் சுமந்து பாலூட்டி சீராட்டி வளர்த்தவள் அன்னை. இதற்கு நாம் செய்யும் கைமாறு தான் என்ன? அத்தகைய தியாகச் செயலுக்கு இவை போதுமா? சான்றோனாக்குதல் தந்தைக்கு கடன். தாயினால் பத்துத் திங்கள் சுமந்து, பிறந்து வளர்த்தெடுக்கப்பட்ட பிள்ளைக்கு கல்வியைப் பெற்றுக் கொடுத்து சான்றோனாக்குதல் தந்தைக்குரிய கடனாகும். இதனை வள்ளுவர் பெருமான் மிக அழகாக பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"தந்தை மகற்காற்றும் உதவி வையத்துள் முந்தியிருப்பச் செயல்"

தந்தை கண்டிப்பானவர். தாய் அன்புள்ளம் படைத்தவர். இவர்கள் இருவரும் தமது பிள்ளைகளின் கல்வி, ஒழுக்கம் என்பவற்றில் கண்ணும் கருத்தும் உடையவர்கள்.

அன்னையை தெய்வமாகப் போற்றுக

தந்தையைத் தெய்வமாகப் போற்றுக

குருவைத் தெய்வமாகப் போற்றுக- தைத்திரீய உபநிடதம்

மாதா, பிதாவுக்கு அடுத்த படியில் நிற்பவர் குரு. குருவானவர் எமக்கு ஞானக் கண்ணைத்திறப்பவர். இறைவனே குரு வடிவமாக வந்து ஆட்கொள்வதை மாணிக்கவாசகர் வரலாற்றிலிருந்து அறிகின்றோம்.

"குரு. பிரம்மா குரு. விஸ்ணு.

குரு. தேவா மகேஸ்வர" (வேத சுலோகம்)

குரு ஞானவிளக்குப் போன்று எமது மன இருளைப் போக்குகின்றார். குரு செய்யும் பணி அளப்பரியது. அவர் ஏணியும் தோணியும் போல நின்று எமது எதிர்கால வாழ்க்கைக்கு உதவுகின்றார். குருவினால் நாம் பெறும் ஞானம் இப்பிறவிக்கு மாத்திரமல்ல ஏழேழு பிறவிக்கும் சென்று உதவக் கூடியது.

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றயவை" - (திருக்குறள்)

இந்தச் சிறப்பான கல்வியை எமக்கு நல்குபவர் குரு. இதனால் அன்றோ "எழுத்தறிவித்தன் இறைவன் ஆவான்" எனச் சான்றோர் குருவைப் பெருமையாகக் கூறுவர்.

இருமுது குரவர்களாகிய தாய் தந்தையர் எங்களைப் பெற்று வளர்த்து உருவாக்கி ஞானகுருவிடம் கையளிக்க அவர் ஞானோபதேசம் செய்து இறையுணர்வை நல்குகின்றார். இந்நிலையிலே தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகியது. அந்நிலையிலேயே தெய்வாம்சம் சித்திக்கிறது.

தெய்வத்தை நாம் விதிப்படி மெய்யன்போடு தொழுவோம். மானிடப்பிறவி எடுத்த நோக்கமே இறைவனைத் தொழுது முத்தியின்பம் பெறுதல். அதற்கு வழிகாட்டுபவர்கள் மாதா, பிதா, குரு என்போர். இத்தகைய உயர்ந்த எண்ணம் ஒவ்வொரு மாணவர் மனதிலும் உதயமாக வேண்டும். எனவே மாதா, பிதா, குரு, தெய்வம் என்போரைப் போற்றி பேரின்பப் பெருவாழ்வு வாழ்வோமாக.

அம்பிகைபாகன் விமலரூபன்
ஆண்டு 13 A

*"Stand up, be bold, be strong*
*Take the whole responsibility*
*on your own shoulders*
*and know that you are the Creator*
*of your own destiny*
*All the strength and success you want*
*is within yourselves*
*Therefore make your own future."*

*- Swami Vivekananda*

# வெப்பத்தினால் ஏற்படும் தூய்மைக்கேடு
# THERMAL POLLUTION

பொதுவாக சுற்றுப்புறத்தில் காற்று, நீர், நிலம் ஆகியவற்றிலே ஏற்படும் தூய்மை க்கேடுகளைப் பற்றியும், அதனால் ஏற்படும் தீமைகளைப் பற்றியும் பரவலாக நமக்கு ஓரளவு தெரிந்துள்ளது. மற்றும் அதிக ஒலியினால் ஏற்படும் விளைவுகளையும் மக்கள் சிறிதளவு அறிந்துள்ளனர். எனினும் வெப்பத்தால் புறச்சூழலில் ஏற்படும் தூய்மைக்கேடு பற்றிய விழிப்புணர்வு நம்மி டையே ஏற்படவில்லை. இங்கு குறிப்பிடப் படும் தூய்மைக்கேடு கோடை காலத்தில் அதிக வெப்பத்தினால் ஏற்படும் விளைவு என்று எண்ண வேண்டாம் பொதுவாக இங்கு விபரிக்கப்படும். சுழலில் ஏற்படும் தூய்மைக்கேடு பற்றி பல அறிவியல் அறிஞர்களும் அதற்கான முக்கியத்து வத்தைக் கொடுக்கவில்லை.

உலகின் பல நாடுகளிலும், நம்நாட்டிலும் பல தொழிற்சாலைகளிலிருந்தும், அனல்மின் நிலையங்களிலிருந்தும் வெளிப்படுத்தப்படும் நீர், சாதாரண வெப்பநிலையை விட மிக அதிகமாகவுள்ளது. அனல்மின் நிலையங் களிலும் பல தொழிற்சாலைகளிலும் சாதா ரண அறை வெப்பநிலையிலுள்ள நீர் இயந்திரங்களிலுள்ள பல பாகங்களை குளிர வைப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. அப்போது முதலில் செலுத்திய நீர் அதிக வெப்பநிலையில் வெளிவருகின்றது அவ்வாறு அதிக வெப்பநிலையில் வெளியே வரும் நீரானது ஆறுகள், ஏரிகள், கடலிலும் செலுத்தப்படும் போது இவற்றிலுள்ள நீரின் வெப்பநிலை சாதாரண நிலையிலிருந்து அதிகமாகிறது.

இவ்வாறு பல இடங்களிலிருந்து வரும் சூடான நீரை நீர்நிலைகளில் கலக்க விடும்போது அங்கு ஏற்படும் அதிக வெப்பம் ஒரு வித்தியாசமான தூய்மைக்கேட்டை ஏற்படுத்துகிறது. சூடான நீரும், சாதாரண வெப்பநிலை நீரும் சேர நீர்நிலையின் வெப்பநிலை அதிகரிக்க இதன் காரணமாக அங்குள்ள தாவர, விலங்கு உயிரினங்களின் இயக்க தொழிற்பாடு (மூச்சுவிடல், உணவை சமிபாடடைய வைத்தல்) கள் ஏறத்தாழ இருமடங்காகும். இதனால் இவ்வெப்ப தூய்மைகேடு விலங்கினங்களையும் தாவர இனங்களையும் மிக வேகமாக வளரவைத்து அவற்றின் வாழ்வை குறைக்க காரண மாகிறது. இன்னும் சில உயிரிகள் அதிக வெப்பநிலை காரணமாக தொழிற்பாடுகள் பாதிப்புற்று அவற்றின் வாழ்வு குறைக்க ப்படுகிறது. சில வெப்ப அதிர்ச்சியால் இறக்கவும் கூடும். இத்தகைய வெப்பத்தால் ஏற்படும் தூய்மைக்கேடான நீரில் பச்சை பாசி வெப்பநிலை அதிகரிக்க நன்றாக வளரும். (35°C – 40°C) இதன் வளர்ச்சி வழமை க்கு மாறாக நீரில் அதிகரிக்க நீர்ச்சூழலில் நீலப்பச்சை பாசி வளர இவை நீர்ச்சூழலை கெடுக்கும் மேலும் இச்சூழ் நிலையில் நோய்களை ஏற்படுத்தும் Bactesia உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. அதிக வெப்பநிலை நீரின் பௌதிக மற்றும் இரசாயன இயல்புகளையும் மாற்றலாம். நீரின் அடர்த்தி 4°C யில் மிக அதிகமாக இருக்கும். நீரின் வெப்பநிலை அதிகரிக்க அடர்த்தி குறையும் வெப்பநிலை அதிகரிக்க நீரின் பாகுத்தன்மை குறையும். நீரில் மிதந்து கொண்டிருக்கும் விலங்கினத் திற்கு தேவை யான உணவுத்துகள்கள் கீழ்நோக்கிச்செல்ல இதனால் நீரில் வாழும் உயிரினங்களுக்கு தேவையான உணவுத்

துகள்கள் கடலின் அடியில் செல்ல உணவுப் பற்றாக்குறை ஏற்படும்.

இவை எல்லாவற்றையும் விட மிக மோசமான விளைவு ஒன்றுள்ளது. பொது வாக வாயுக்களின் கரையும் தன்மை நீரின் வெப்பநிலை அதிகரிக்கும்போது, குறை கிறது. ஆகவே நீரில் கரைந்துள்ள ஒட்சிசன் அளவு வெப்பநிலை அதிகரிக்கும் போது குறைகிறது. ஆகவே தாவர, விலங்கினங்கள் உயிர்வாழத் தேவையான நீரிலிருந்து உள்ளெடுக்கும் ஒட்சிசன் அளவு வெப்ப தூய்மைக்கேட்டால் குறைகிறது. உணவுப் பற்றாக்குறையாலும் ஒட்சிசன் பற்றாக்குறை காரணமாகவும் மீன்கள் மடியலாம்அல்லது இவை சூடான இடங்களிலிருந்து வெப்பநிலை குறைந்த இடங்களுக்குச் செல்லலாம். வெப்பத் தூய்மைக்கேடு நீரில் ஏற்பாட்டை மீன்கள் பெரிதும் மடியும். இத்தூய்மைக்கேட்டை எவ்வாறு குறைக்கலாம் ----அனல் மின் நிலையங்கள் மற்றும் தொழிற்சாலை களிலிருந்து வெளிவிடப்படும் அதிக வெப்பமான நீரை குறிப்பிட்ட இடத்தில் சேமித்து குளிர வைத்து மீண்டும் பயன்படுத்தலாம் அல்லது நீரைப் பாயச் செய்து வெப்பநிலையை குறைத்து கடல் அல்லது ஆற்றில் கலக்கலாம். இவ்வாறு செய்வதால் கடலில் வாழும் விலங்கினங் களும் தாவர இனங்களும் வெப்பத் தூய்மைக்கேட்டால் பாதிக்கப்படமாட்டாது. அத் தூய்மைக்கேட்டால் மனிதர்களின் செயற்பாடுகளுக்கு இடையூறுகள் ஏற்படுதல் குறைக்கப்படும். சூழல் சமநிலை குழம்பாது காணப்படும்.

**வில்லியம் ஆர்க்,**
**12A.**

★ *என்று முதன் முதலாக நீ உன்னையே கேலி செய்து கொண்டு சிந்திக்கத் தொடங்குகிறாயோ அன்று தான் நீ வளர்ச்சியடைய ஆரம்பிக்கிறாய்.*

- ஏதெல்.

★ *வலிமை என்பது உடலில் இருந்து வருவதில்லை மன உறுதியில் இருந்து வருகிறது.*

★ *பொய், பகை, சுயநலம் இல்லாத மனிதன் உள்ளத்திலே இறைவன் அருள் என்றும் இருக்கும்.*

★ *பொறுமையும் விடா முயற்சியும் நம்மிடம் இருந்தால் சிரமங்கள் எனும் மலைகளையே வென்று விடலாம்.*

- காந்தி.

# கூர்ப்பின் போக்கு

1940 களுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் நுளம்புகளின் பெருக்கம் கட்டுக்கடங்காமல் போனது. அதன் காரணமாக மலேரியா நோய் வெகுவேக மாகப்பரவி பலரை மரணவாசலுக்கு இட்டுச் சென்றது. அப்போது கண்டு பிடிக்கப்பட்ட DDT என்ற இரசாயன மருந்தின் மூலம் மிக விரைவாக நுளம்புகள் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. 1968 ஆம் ஆண்டளவில் மீண்டும் நுளம்புப் பெருக்கம் தலை தூக்கிய போது DDT பயன்படுத்தப்பட்டது. ஆனால் நுளம்பு களை கட்டுப்படுத்தும் தன்மை இம்மருந்து க்கு அற்றுப்போனது. இது எவ்வாறு நிகழ்வு ற்றது? கூர்ப்பின் போக்கு இம் மாற்றத்திற்கு விடையளிக்கின்றது.

இக்கூர்ப்பைப் பற்றிய இன்று நிலவும் "இயற்கைத்தேர்வுக் கொள்கையை சார்ள்ஸ் டார்வின் (CHARLES DARWIN) 1859 இல் "இனங்களின் உற்பத்தி" என்னும் தனது நூலின் மூலம் வெளியிட்டார். நான்கு முக்கிய கருத்துக்களை தன் கொள்கையில் அவர் முன்வைத்திருந்தார். அவையாவன.

(01) அபரிதமான உற்பத்தி

(02) போட்டி

(03) தக்கனப் பிழைத்தல்

(04) கூர்ப்படைந்த இனம்

ஒரு அங்கி தன் இனத்தை நிலைக்கச் செய்ய இனப்பெருக்கம் மூலம் அதிக எச்சங்களை தோற்றுவிக்கின்றது. இவ் எச்சங்கள் தமக்கிடையேயான உணவு, உறைவிடம் என்பவற்றுக்கு கடுமையான போட்டியை எதிர் நோக்குகின்றன. மேலும் சூழலில் ஏற்படும் மாற்றங்களையும் எதிர்நோக்குகின்றன. இதில் பல மடிய, சில மட்டும் தக்கனப் பிழைத்து கூர்ப்படைந்த இனமாக மாறும். இவற்றின் சந்ததியும் அதே சூழல் மாற்றத்தை எதிர் கொள்ளும் தன்மையைப் பெறும். இதுவே டார்வினின் விளக்கமாகும். நுளம்புகள் DDT ஐ தாங்கும் வல்லமையைப் பெற்றதை இக்கொள்கையின் மூலம் விளங்கலாம்.

பிரான்ஸ் நாட்டு இயற்கை ஆய்வாள ரான லமார்க் (LAMARCK) 1801 இல் "ஒரு அங்கியில் தேவையான அங்கம் விசேடமாக திரிபடையும் எனவும் பயன்படாத உடல் அங்கம் பரிமாண வளர்ச்சியில் முக்கியத்துவம் குன்றி மறைந்து விடும்" என்ற கருத்தை வெளியிட்டார். இக்கருத்தும் கூர்ப்பின் போக்கை சிறப்புற விளங்கிக் கொள்ள உதவியது.

கலத்தின் கருவில் உள்ள DNA களின் நைதரசன் மூல ஒழுங்குத் தொடரில் ஏற்படும் மாற்றம் கூர்ப்பிற்கு வழிவகுக் கின்றன. இம்மாற்றம் இயற்கையாகவும் சிலவேளை களில் கடுகு வாயு போன்ற புறக் காரணி களாலும் நடை பெறும். இவ்வாறு நைதரசன் மூல ஒழுங்குத் தொடர் மாறுவதால் ஒரு இயல்பானது ஒரு அங்கி யில் சடுதியாக வெளிக்காட்ட ப்படுமாயின் அது விகாரம் எனப்படும். இதைப் பற்றி 1848 இல் டிவிரிஸ் (DEVRIES) என்னும் விஞ்ஞானி வெளியிட்டார். இவ்வாறான விகாரங்கள் தலையுரிமை பெற்று அடுத்த சந்ததிக்கு கடத்தும் வல்லமை வாய்ந்திருப்பதையும் இவர் தெரிவித்தார்.

கூர்ப்பானது தலைமுறைக்குத் தலை முறை விருத்தியடைந்து கொண்டு செல் லும். ஆதியில் ஒரு கல விலங்காக தோன் றிய உயிர் இன்று பல்கல விலங்கா கவும் அதிலும் தெளிவான பேச்சு, சிந்தனை விருத்தி, உயர்ந்த நாகரீகம் ஆகியவற்றைக் கொண்ட சிறப்பு விலங்கான மனிதனைத் தோற்றுவித்தது வரையில் கூர்ப்பின் பங்களிப்பு அளப பரியது.

இன்று உலகின் நிலவும் யுத்தம், வறுமை ஆகியவற்றினால் மனிதர் பலர் மடிந்தாலும் அடுத்துருவாகும் சந்ததி இதை தாங்கும் வல்லமையைப் பெற்று விடும். அனுசேபவீதம் கூடிய மூளைத்திறன் உயர்ந்த மனித இனம் எதிர் காலத்தில் உருவாகும் என ஆராய்ச்சியாளர் நம்புகின்றனர்.

சுந்தரசிகாமணி மயூரன்
விஞ்ஞானப்பிரிவு 1999.

# மேரி கீயூரி

மேரி கியூரி அம்மையார் வாழ்நாழ் முழுவதும் மேற்கொண்டிருந்த ஆய்வில் திரண்டதுகான "ரேடியம்" என்னும் விந்தையான பொருள். அப்பொருள் உலகிற்கு பல வகையிலும் பயன்படுகிறது. ஆனால் உலக ரேடியத்தின் பயனை அனுபவிக்கத் தொடங்குவதற்கு முன்னரேயே அதுதன் அன்னையை ஆட்கொண்டு விட்டது.

மேரி கியூரியின் இயற்பெயர் "மான்யா ஸ்க்லோ டோவஸ்கா" என்பதாகும். இவர் 1967 ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் திகதி போலந்து நாட்டில் "வார்சா" எனும் இடத்தில் பிறந்தார். குடும்பம் வறுமையில் இருந்தாலும் எப்படியோ தொடக்கக் கல்வியை முடித்தார். 1883 இல் தமது உயர்கல்வியை முடித்தார். அதில் முதன்மையாகத் தெரிவுசெய்யப்பட்டு தங்கப்பதக்கம் பெற்றார். தொடர்ந்து படிக்கவேண்டும் என்று ஆசை இருந்தாலும் அவருடைய தகப்பனாரால் பல்கலைக்கழகப் படிப்பிற்கு செலவு செய்ய போதிய வசதி இல்லை. எனவே மான்யாவும் அவளுடைய மூத்த சகோதரி புரோன்யாவும் ஒரு தீர்மானம் எடுத்தனர். இதன்படி முதலில் மான்யா ஒரு தொழில் பார்த்து அந்த வருவாயில் புரோன்யா படிக்க வேண்டும். பின்னர் புரோன்யா உழைத்து மான்யாவின் கல்விக்கு உதவவேண்டும். இவர்களுடைய திட்டம் செயலானது. இதன்படி மான்யா ஒரு குடும்பத்தில் குழந்தைகளுக்குப் போதிக்கும் ஆசிரியாராகப் பணியாற்றினார். புரோன்யாவும் பாரிசில் சர்போன் பல்கலைகழகத்தில் மருத்துவக்கல்வியில் சேர்ந்தார். மான்யா வேலை பார்த்து வந்த குடும்பத்தில் மூத்த மகன் வார்சா பல்கலைக்கழகத்தில் படித்து வந்தார்.அவர் விடுமுறையில் வீடு திரும்பியபோது மான்யாவை பார்த்தார். அவர் ஆடிய நடனத்தை கண்டு களித்தார். அவருடைய அறிவுக் கூர்மையை வியந்தார். அவர் மான்யாவை மனதாரக் காதலித்தார். மான்யாவும் அவரைக் காதலித்தாள். ஆனாலும் ஒரு சாதாரண ஆசிரியை தன் மகனுக்கு மனைவியாக வருவதை அவளுடைய தாய் விரும்பவில்லை.

மான்யாவின் ஏழைமனம் பதறியது. அவளுடைய கண்கள் மௌனக்கண்ணீர் வடித்தன. வாழ்க்கையை வெறுத்தார். இப்பொழுது மான்யாவுக்கு 23 ஆண்டுகள் நிரம்பிவிட்டன. அவரது கனவு நனவானது தங்கை மருத்துவத்தில் தேர்வுபெற்றாள். மான்யா சர்போன் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பிரிவில் சேர்ந்தார். பிரெஞ்சு உச்சரிப்பில் தனது பெயரை மேரி என மாற்றிக் கொண்டார். அங்கு கழித்த நான்கு வருடங்களும் அவருக்கு பெரும் சோதனையாக இருந்தது. ஒளி புக வழியில்லா ஒரு சிறிய அறையிலேயே அவர் தங்கவேண்டியிருந்தது.

எல்லா வகையான நோய்களாலும் பெரும் துயருற்றார். உண்ணுவதற்கு போதிய உணவு கிடைக்கவில்லை. அறிவுப் பசியினால் அவர் எல்லாப் பசிகளையும் பொறுத்துக்கொண்டார். இவருக்கு இயற்கையிலேயே அறிவுக்கூர்மை இருந்ததால் அவர் கணிதம், கவிதை, இரசாயனம், இசை, பௌதீகம், வானநூல் போன்ற எல்லாப் பாடங்களிலும் ஆர்வம் இருந்தது. இவர் இடைவேளையில் பரிசோதனைச்சாலையில் குவளை கழுவும் கூலியாளாகவும் வேலை பார்த்தார். இவர் பௌதீகத்திலே

பல்கலைக்கழகத்தில் முதன்மையாகவும் கணிதத்தில் இரண்டாவதாகவும் தேர்ச்சி பெற்றார். இப்பொழுது இவருக்கு 27 வயது. எனினும் இவருடைய காதல்தோல்வி மனதின் மூலையில் துளைத்துக் கொண்டிருந்தது.

பியரி கியூரி ஒரு விஞ்ஞான மேதை. இவர் அந்த பல்கலைகழகத்திலே ஓர் ஆய்வுகூடத்தில் மின்சாரம் ,காந்தம் ஆகியவை பற்றி ஆய்வுகள் நடத்திவந்தார். ஒரு முறை இவர் மேரியைச் சந்தித்த போது அவரது அறிவில் மயங்கினார். மேரியை தனது ஆய்வுகூடத்தில் வேலைக்கு அமர்த்தினார். அடுத்த ஆண்டிலேயே இரு விஞ்ஞான மேதைகளின் திருமணம் நடந்தேறியது.

ஜேர்மனியில் ராஞ்சன் எக்ஸ்க்கதிர்கள் கண்டுபிடித்திருந்த காலம் அது. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஹென்றி பெக்குரல் என்னும் அறிவியலறிஞர் இருட்டில் ஒளிவீசும் பொருள்களைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார் அப்பொழுது யுரேனியத்தின் தாதுப்பொருளாகிய 'பீச் பிலென் (pitch blende) டில் யுரேனியம் தவிர வேறு ஒரு புதுப்பொருளும் இருக்க வேண்டும் என்று ஊகித்தார். அவருக்கு மேரி கியூரியின் பரிசோதனைத் திறனில் நல்ல நம்பிக்கை இருந்தது. அதனால் அவருடைய சந்தேகத்தைக் கியூரி தம்பதிகளிடம் தெரிவித்தார். அவர்களுக்கும் இதில் ஒரு ஆர்வம் ஏற்பட்டது. யுரேனியத்தாது மிகவும் விலை உயர்ந்தது. இதைக்கியூரி தம்பதிகளால் எப்படி விலை கொடுத்து வாங்க முடியும்? நல்ல சமயத்தில் அவர்களுக்கு ஓர் எண்ணம் உதித்தது. பிச் பிலெண்ட தாதுவில் அந்தப் புதுப்பொருள் இருக்குமானால் தாதுவிலிருந்து யுரேனியம் பிரித்தெடுக்கப்பட்ட பின்பும் கூட தாதுக்கழிவில் அப்பொருள் இருக்க வேண்டும் என்று அவர்கள் எண்ணினர். யுரேனியம் நீக்கப்பட்ட இந்தக்கழிவு மலிவாகக் கிடைத்தது. இதைதொன் கணக்கில் வாங்கிக் குவித்துக்கொண்டு கியூரி தம்பதிகள் வரலாற்றுப்புகழ் பெற்ற தங்கள் ஆராய்ச்சியை தொடங்கினர்.

ஒரு கெட்டியான இரும்புக்கொடி கலத்தில் இக்கழிவு கொதிக்க வைக்கப்பட்டது. இதில் ஒவ்வொரு துளியையும் சேதமாகாமல் பாதுகாத்து வந்தனர். கொதிகலத்திலிருந்து தாங்கமுடியாத அளவுக்கு பல வாயுக்கள் வெளியாயின. இந்த இன்னல்களையெல்லாம் பொருட்படுத்தாமல் அவர்கள் தாங்கள் குறிக்கோளில் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். இடையில் 1896 இல் மேரிக்கு நிமோனியா ஏற்பட்டு மூன்று மாதங்கள் படுக்கையில் இருக்க வேண்டியிருந்தது. இந்தக்காலத்தில் பியரி கியூரி மட்டுமே வேலையைக் கவனித்துவந்தார்.

நோயிலிருந்து குணமடைந்த வேலையில் பங்கு கொண்ட மேரி மறுமுறையும் வேலையிலிருந்து ஒய்வுபெற வேண்டியிருந்தது. இம்முறை மேரி ஒரு பெண் குழந்தையை ஈன்றெடுத்தாள். படுக்கையில் இருந்தபோது ஓர் ஆய்வு முறை திடீரென்று அவள் மனதில் தோன்றியது.

குழந்தையைக்கூடக் கவனியாமல் மேரி ஆய்வுக்கூடத்திற்கே வந்துவிட்டாள். மெய்சிலிர்க்கும் இவ்வேலை இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடந்தன. மலையளவு இருந்த கழிவுப்பொருள் சுத்தம் செய்யப்பட்டு ஒருசிறிய துளியளவாக மாறியது. இது ஒரு பிஸ்மத் கூட்டுப்பொருள் என்று கண்டுபிடிக்கப்பட்டது இதன் ஆற்றலோ யூரேனியத்தைவிட பன்மடங்கு அதிகமாக இருந்தது. இதில் அதுவரை கண்டு

பிடிக்கப்பட்ட ஒரு புதுப்பொருள் இருப்பதாக தெரியவந்தது. அதனால் ஆராய்ச்சி மீண்டும் தொடங்கியது. 1898ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிஸ்மத் கூட்டுப்பொருளில் ஒரு புதுப்பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இப்பொருளுக்கு மேரி "பொலோனியம்" என்று பெயரிட்டுத்தம் தாய் நாட்டின் பெயரை விஞ்ஞான உலகில் நிலைநாட்டினார்.

பெலோனியம் நீக்கப்பட்ட பிஸ்மத் கூட்டுப்பொருள் இன்னும் அதிக ஆற்றலோடு காணப்பட்டது. வியப்பு மேலிட கியூரி தம்பதிகள் தங்கள் வேலையைத் தொடர்ந்தனர். கடினமான உழைப்பிற்குப்பின் 'ரேடியம் (Radium) என்னும் அதிசயமான பொருள் அதில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

ரேடியம் ஒரு அதிசயப் பொருள் இது யுரேனியத்தை கைவிட 10 லட்சம் மடங்கு அதிகக் கதிரியக்கம் உடையது இதிலிருந்து வெளிப்படும் கதிர் மிக்வும் சக்தி வாய்ந்தது ஒளிபுகமுடியாத பொருள்களையும் இக்கதிர் துளைத்துச்செல்லும் தன்மையுடையது. இது மற்றப் பொருள்களோடு கல்க்கப்படும் பொழுது தானாக ஒளிவீசும் தன்மையுடையது. இதை நாம் சில கடிகாரங்களின் முகப்பில் காண்கிறோம். ரேடியத்திலிருந்து வரும் கதிர்கள் கிருமிகளைக் கொல்லும் சக்தி வாய்ந்தவை. சிறிய பிராணிகளைக்கூடக் கொன்றுவிடும். இக்கதிர்கள் தசையை அழிக்க வல்லன. அதனால் இவை புற்றுநோய் மற்றும் தோல் வியாதிகளைக் குணப்படுத்தப்பயன்படுகின்றன.

இந்த அரிய கண்டுபிடிப்பிற்காக கியூரி தம்பதிகளுக்கு நோபல் பரிசு கிடைத்தது. இப்பொழுது மேரியின் வாழ்க்கையில் மகிழ்ச்சி ஆரம்பித்தது. எனினும் விதி விளையாட ஆரம்பித்தது. 1906ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் நாள் பியரி கியூரி ஒரு வீதி விபத்தில் இறந்தார்.

மேரியின் வாழ்க்கையில் துயரம் தான் ஆட்சிசெய்தது. ஆராய்ச்சியே கதி என்று இருந்தார். பகலெல்லாம் ஆராய்ச்சி செய்து இரவில் அவற்றை தனது கணவனுக்கு எழுதி வைப்பார். இவருடைய சேவையைப் பாராட்டி பிரெஸ் பிரென்ஞ் அரசு பியரி கியூரியின் பேராசிரியர் பதவியை மேரிக்கு வழங்கி கௌரவித்தது. பின்னர் இவர் சுத்தமாக ரேடியத்தை பிரிக்கும் முறையை கண்டுபிடித்தார். இதனால் இவருக்கு இரண்டாம் தரம் நோபல் பரிசு கிடைத்தது.

இந்த அதிசயப் பெண்மணி 1934இல் ஜூலை மாதம்| 4ஆம் நாள் இவ்வுலகை விட்டு தன் உயிரை நீத்தார்.

**C.A. ரமணன்**
12 D

# போதைப்பொருட்களும் அவற்றினால் ஏற்படும் தீமைகளும்

பல வருடங்களாக இலங்கை முழுவதிலும் அபின், கஞ்சா போன்றவை பாவனையில் உள்ளன. அபின் ஆயுர்வேத வைத்தியர்களினால் மருத்துவ தேவைகளுக்குப் பாவிக்கப்பட்டு வருகிறது. இன்று இலங்கையில் கொடிய புற்றுநோய் போன்று அசுர வேகத்தில் பரவி வரும் போதைப் பொருட்களில் மிக முதன்மையானதும், மிகவும் கொடியதுமான போதைப் பொருள் ஹெரோயின் (Heroin) ஆகும். மனிதன் உட்கொள்ளும்போது அவனது உடலில், மனத்தில், நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்தவல்ல இரசாயனப் பொருட்களே போதைப்பொருட்களாகும்.

மேற்குறிப்பிட்ட அனைத்துப் போதைப்பொருட்களும் மனிதனுக்கு வேறுபடும் அளவுகளில் அடிமை நிலையை (Addiction) ஏற்படுத்தவல்லன. இங்கு அடிமை நிலை என்பதன் கருத்து இப்பொருட்களைப் பாவிக்கும் மனிதன் நாளடைவில் அப்பொருளில் உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் தங்கி நிற்க வேண்டிய (Dependence) நிர்ப்பந்தத்திற்கு உள்ளாவதே.

### இலங்கையில் பாவிக்கப்படும் போதைப் பொருட்கள்

**அபின் (Opium)** :- அபின் என்பது பொப்பு (Poppy) என்னும் தாவரத்தின் பழுக்காத வித்துறையிலிருந்து பெறப்படும் கட்டி போன்ற சாறு ஆகும். போதையை ஏற்படுத்த இலங்கை மக்கள் பல காலமாக அபினைப் பாவித்து வருகிறார்கள்.

**மோர்வின் (Morphine)** :- அபினின் பிரதான கூறு மோர்பின் ஆகும். இது அபினிலிருந்து இரசாயன முறையினால் பிரித்து எடுக்கப்படும். இந்த மோர்பின் என்ற பொருள் மருத்துவத்துறையில் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. மிகவும் மோசமான வேதனைக்கு (Pain) கொடுக்கப்படும் மருந்துகளில் இன்றும் முக்கிய இடத்தை இது வகிக்கின்றது. மோர்பின் பொதுவாக ஊசிமூலம் உட்செலுத்தப்படும். இலங்கையில் இப்பொருளை போதைப் பொருளாகப் பாவிப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும்.

**ஹெரோயின் (Heroin)** : இது பவுடர் (Powder) குடு (Kudu) போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்து. மோர்பினை ஓர் இரசாயனத தாக்கத்திற்கு உட்படுத்தும்போது ஹெரோயின் கிடைக்கிறது. இது மோர்பினை விடப்பத்து மடங்கு வீரியமானது. அதிகளவு அடிமை நிலையை ஏற்படுத்தவல்து. ஈயத்தாளின் மீது இந்தத் தூளை இட்டு, அதன் கீழே சூடேற்றும்போது வரும் புகை உட்கொள்ளப்படும். சிலர் சிகரெட்டுடன் கலந்து புகைப்பார்கள் ஊசி மூலமும் செலுத்தப்படும்.

**கஞ்சா** (Ganja or Cannabis) :- இது Cannabis Sativa என்னும் தாவத்தில் இருந்து பெறப்படுகிறது. இத்தாவரம் இலங்கையின் பல இடங்களிலும்

சட்டவிரோதமாகப் பயிரிடப்படுகிறது. தாவரத்தின் இலை, தண்டு, பூவின் நுனி ஆகியற்றிலிருந்து கஞ்சா பெறப்படுகிறது. கஞ்சா ஒரு பூண்டுக்கலவை அல்லது கடும் மண்ணிற பிசின் போன்ற பொருளாகும். இது புகையிலையுடன் (சிகரெட், பீடி, சுருட்டு) கலந்து புகைக்கப்படுகின்றது.

போதை நிலையில் இருக்கும் போது விபத்துக்கள் ஏற்படுகின்றன. மேலும் மிதமிஞ்சிய அளவு (Over dose) உபயோகம் மனோவியாதி (Psycosis) வலிப்பு அறிவற்ற நிலை (Coma) மரணம் ஆகியவற்றை ஏற்படுத்தலாம். போதைப் பொருட்களைத் தொடர்ச்சியாகப் பாவிப்பவர்களுக்கு நாளடைவில் அவற்றிலே தங்கியிருக்கும் நிலையும், அவற்றிற்கு அடிமையாகும் நிலையும் ஏற்படும். ஊசி மூலம் உட்செலுத்தும் போது கிருமி நீக்கப்படாத உபகரணங்கள் பாவிக்கப்படுவதால் புண், சீழ்க்கட்டி, குருதி நஞ்சேறல், செங்கண்மாரி எயிட்ஸ் (Aids) போன்றவற்றை ஏற்படுத்தலாம். மேலும் போதைப்பொருளினால் ஏற்படும் பிரச்சினைகளாக சுவாசித்தல் தடைப்படுதல், குழப்பமான மனநிலை பயங்கர மாயக்காட்சிகள் உண்டாதல் போன்றவன்றையும் குறிப்பிடலாம்.

போதைப்பொருள் பாவிப்பவரை எளிதில் அடையாளங்கண்டு கொள்ள முடியும் அதைப்பாவிப்பதால் ஏற்படும் அறிகுறிகளாவன அதிபரவசநிலை (Euphoria), உடல் மனம் தளர்ச்சியடைந்த நிலை, இதய, நாடித்துடிப்புக்கள் அதிகரித்தல், கண்கள் சிவப்படைதல், நித்திரையின்மை, பசி அதிகரித்தல், கண்கள் மூக்கு ஆகியவற்றிலிருந்து நீர் வடிதல், நடத்தை ஒழுங்கற்றுப்போதல், பேச்சுத்தடுமாறல், ஓங்காளம், போலிக் கற்பனை போன்றன அவையாகும். மேலும் அதைப் பாவிப்பவரது நடத்தையில் பல மாற்றங்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். மகிழ்வும் உற்சாகமும் உள்ள மனநிலை திடீரென சிடுசிடுப்பும மந்தமுமான மனநிலைக்கு மாறுதல், எதிர்பாராத முன்கோபம் அல்லது சண்டைபிடித்தல், தனது தோற்றத்தில் கவனமின்மையாக இருத்தல், மாணவனாயின் படிப்பு, விளையாட்டு, வீட்டுவேலை போன்றவற்றில் நாட்டம் இழத்தல், பொய் சொல்லுதல், அடிக்கடி அரைத்தூக்கம் அல்லது தூக்கமின்மை, உடலில் அல்லது உடைமைகளில் வழமைக்கு மாறான மணம் வீசுதல் போன்றவை அவதானிக்கக்கூடிய மாற்றங்களாகும்.

நண்பர்களின் தூண்டுதலினால் அல்லது நெருக்குதலினால், இந்தப் பொருட்களைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வத்தினால் பரிசோதனை முயற்சியாக ஒருவர் போதைப் பொருளைப் பாவிக்க ஆரம்பிக்கின்றார்.

எந்தவொரு இன்பம் தரும் பழக்கதையும் மனிதன் பழகிவிட்டால் அதைக் கைவிடுவது மிகக் கடினமாகும். பெற்றோர் பிள்ளைகளின் வளர்ப்பில் மிகவும் அக்கறையுடன் இருக்க வேண்டும். உணவு, உடை, பணம் போன்ற தேவைகளுடன் மனோரீதியான தேவைகளும் (அன்பு) வழங்கப்படவேண்டும். தாம் ஒதுக்கப்பட்டவர்கள், தமது தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்ற உணர்வு பிள்ளைகளுக்கு ஏற்படாமல் பெற்றோர் பாார்த்துக்கொள்ளவேண்டும். இதைவிட மனோரீதியான பிரச்சினையுள்ளவர்களை உற்றார், உறவினர் கரிசனையுடன் கவனித்து மருத்துவ உதவியைப் பெறுவதற்கு உதவவேண்டும்.

**தனஞ்ஜெயன் துஷியந்த்**
ஆண்டு 12 "B" (Bio-Science)

# சாரணியமும் சாரணர்களும் - ஒரு உளவியல் நோக்கு

ஒரு தேசத்தின் சரித்திரத்திலும் சரி ஒரு தனி மனிதனின் வாழ்க்கை யிலும்சரி 90 வருடங்கள் என்பது நீண்ட ஒரு காலப்பகுதியாகும். எந்தவொரு தாபனமும் இக்காலத்தைக் கடந்து வந்திருப்பின் அது ஒரு வலிமையான அடிப்படைக் கருப் பொருள். இந்த நிலையில் உலக சாரணியம் நடந்து கொண்டிருக்கும் 1998ஆம் ஆண்டில் தனது 90 வருட வரலாற்றை கொண்டு ள்ளது. அடிப்படையான தத்து வங்களால் உலகெங்கும் பரவி காணப்படுகின்றது.

"சாரணியம்" இந்தச் சொல்லுக்கு வரைவிலக்கணம் அளிப்பது கடினம். உண்மையில் கண்ணியத்துடன் கூடிய கடமையை, கட்டுப்பாட்டுடன் மன மகிழ்வுடன் அளிப்பதே சாரணியம். சமூகம் தனக்கு தேவையற்றதை உடனடியாக ஒதுக்கி அல்லது நீக்கிவிடும். சாரணி யத்தைப் பொறுத்தவரையில் சமுதாயம் அதை எந்தவிதத்தயக்கமும் இன்றி ஏற்றுக்கொண்டுள்ளது.

சாரணியத்தின்மூலம் சாரணர்கள் பௌதீகரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் உரமிக்கவர்களாகின்றனர். உலகை தம் சூழலாகவும் உலகம் வாழ் மக்களை தம் உற்றதுணைவர்களாகவும் எண்ணும் அளவுக்கு அவர்களின் மனம் பரந்துபக்குவ மடைகின்றது. மற்றைய சாரணனின் வளர்ச்சியில்தானும் மகிழ்ச்சியடையும் அளவுக்கு நல்லமனதைக் கொண்டவர்க ளாகின்றனர். உடலையும் உள்ளத்தையும் உற்சாகம் மிக்கதாக வைத்திருக்கின்றன. மனிதர்களை மாத்திரமின்றி தமது சூழலில் வாழும் மரம், செடி, கொடிகள், மிருகங்களையும் தம் தோழர்களாகக் கொள்கின்றனர்.

சாரணியம் மூலம் ஒரு மாணவன் உடனடியாக ஒரு பயனைப் பெறாவிட் டாலும் வருங்காலத்தில் அவனது வாழ்க்கையைச் சரியாக நிலைநிறுத்த நிச்சயமாக இது உதவும். எம்மில் எத்தனை பேருக்கு ஒரு வேளை உணவைத் தயாரிக்கவோ அல்லது குறுக்கிடும் ஆற்றைக் கடக்கும் ஆற்றலோ உள்ளது? சாரணனாக இருந்த ஒரு மனிதனுக்கு இவை ஒரு பொருட்டேயல்ல. சமையலுக்கு சட்டி, பானை கூட அவனுக்கு அவசியப்படாது.

பாடசாலை மட்டத்தில் எடுத்து நோக்குவோமானால் ஒரு சாரணன் வகுப்பறை ஒற்றுமையைப் பேணுவதில் உறுதியுள்ளவனாகக் காணப்படுவான். ஆசிரியர்கள் அவனை முன்னுதா ரணமாக்கி மற்றைய மாணவர்களை நல்வழிப் படுத்துவர். கல்வி தவிர்ந்த ஏனைய புறக்கிருத்தியங்களிலும் உடல் ஆரோக்கியம் மிக்க சாரணனே சிறப்பாகப் பங்களிப்பான்.

ஆபத்துக்காலங்களிலும், அவசர நேரங்களிலும் பதட்டத்தை வென்று விரைந்து செயலாற்றும் வீரனாகத் திகழ்பவன் சாரணனே. காயத்தை மட்டுமல்ல கவலையால் கனக்கும் மனப்பாரத்தைத் தன் தன் பஞ்சு போன்ற மென்மையான பேச்சால் ஒற்றியெடுக்கும் வல்லமை சாரணனுக்கு உண்டு. பாசறை வாழ்வில் ஏற்படும் சுக துக்கங்கள் அவனது வாழ்வை அமைத்துக்கொள்ள வளமான

படிக்கட்டுகளாக இருக்கும்.

பெற்றோர்கள் மத்தியில் சாரணியம் படிப்பைக் கெடுக்கும் ஒரு செயற்பாடு என்று ஒரு நம்பிக்கையுண்டு. இது எவ்வளவு தவறானது என்பதை இன்றைய நாடு போற்றும் அறிஞர்களின் இளமைக்கால சாரணிய வாழ்வு உணர்த்தும். புத்தகப்புழுவாக இருக்கும் சிறார்கள் வருங்கால வாழ்வை எதிர்கொள்ள முடியாது தவிப்பர். சாரணியத்தினால் அவன் அடையும் ஜனாதிபதி விருது போன்றவை அவனுக்கு கௌரவத்தையும் மேற்படிப்புக்குரிய வெட்டும்புள்ளியை பெற்று தரும். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சாரணர்களுடன் பழகும் போது அவர்களின் அறிவையும் கலாச்சாரத்தையும் மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

நாளை வரும் நல்லுகத்தை நாடெல்லாம்போற்றும் வண்ணம் செயற்பட சாரண இயக்கம் தன் எழுச்சிமிக்க செயற்பாடுகளை முன்னெடுக்கும். மகிழ்வை இழந்த உலகம் இருட்டில் விளக்காய் சாரணிய சேவையைப் பயன்படுத்தி பயன்பெறும் என்பதில்லை ஐயமில்லை

★ வாழ்க்கையில் இழந்தால் திரும்பிப்
பெறமுடியாத விடயங்கள் மூன்று
உச்சரிக்கப்பட்ட சொல்
தவறிவிட்ட வாய்ப்பு
கடந்து போன நிமிடம்

★ அறியாமை என்பது மிகப்பெரிய சாபம்
முட்டாளாக இருப்பது மிகப்பெரிய தண்டனை.
இதில் விசித்திரம் என்னவென்றால் இந்த
சாபத்தையும், தண்டனையையும் நாம் தான்
நமக்கு கொடுத்து விடுகிறோம்.

# இலங்கையின் பங்குச் சந்தை அமைப்பு
# Share Market in Sri Lanka

பொதுக் கம்பனிகளின் பங்குப் பத்திரங்களின் கொள்வனவு விற்பனைக்கு உதவும் அமைப்பு, பங்குச் சந்தை ஆகும். இலங்கையில் பங்குச் சந்தை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக வரையறுக்கப்பட்ட கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை காணப்படுகின்றது. இதன் முக்கிய நோக்கமானது பங்குப் பத்திரங்களினூடாக பெருமளவு நிதியைத்திரட்டி பொருளாதார அபிவிருத்திக்கு உதவுதலாகும். இலங்கையின் பங்குச் சந்தை அமைப்பானது இருவகைப் படுத்தப்படுகின்றது.

1. முதலாந்தர பங்குச் சந்தை (Primary Share Market)
2. இரண்டாந்தர பங்குச் சந்தை (Secoudary Share Market)

புதிதாக உருவாக்கப்படும் கம்பனிகள் தேசிய புதினப் பத்திரிகைகளினூடாக அல்லது முன் விவரணத்தின் ஊடாக விளம்பரம் செய்து பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று பங்குகளை விற்பனை செய்யும் போது ஏற்படுவது முதலாந்தர பங்குச் சந்தையாகும். இங்கு தரகர்களின் சேவை நாடப்பட்டு பங்குகள் விற்பனை செய்யப்படும் ஆனால் தரகர்களுக்கு அவர்களது சேவைக்கான தரகு வழங்கப்பட மாட்டாது.

இரண்டாந்தர பங்குச் சந்தை என்பது ஏற்கனவே செயற்பாட்டில் உள்ள கம்பனி தாம் ஏற்கனவே விற்பனை செய்தவகைப் பங்குகளை நிதித்தேவைக்காக விற்பனை செய்யும் பொழுது அல்லது ஏற்கனவே கம்பனி ஒன்றின் பங்குகளைக் கொள்வனவு செய்து வைத்திருப்பவர்கள் இன்னொருவருக்கு அவற்றை விற்பனை செய்யும் பொழுது ஏற்படுவது இரண்டாந்தர பங்குச் சந்தையாகும். இங்கு தரகர்களின் சேவை நாடப்பட்டு தரகு வழங்கப்படும்.

இலங்கையின் பங்குச் சந்தையின் ஆரம்ப வரலாற்றை ஆராய்வோமேயானால் 1896இல் "பங்குத் தரகர் சங்கம்" என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. 1904 ஆம் ஆணடு "கொழும்பு தரகர் சங்கம்" என இது பெயர் மாற்றப்பட்டது. 1984ஆம் ஆண்டு கொழும்பு தரகர் சங்கத்தின் தனியுரிமையை நீக்குமுகமாகவும், கொழும்பு தரகர் சங்கத்தின் செயற்பாடுகளைக் குறைக்கும் முகமாகவும், "வரையறுக்கப்பட்ட கொழும்பு பங்கு தரகர் சங்கம்" அமைக்கப்பட்டது. 1985இல் கொழும்பு தரகர் சங்கமும் வரையறுக்கப்பட்ட பங்குத் தரகர் சங்கமும் ஒன்றிணைந்து "வரையறுக்கப்பட்ட கொழும்பு ஆவணமாற்று கம்பனியாக" உருவாக்கப்பட்டது. பின்னர் 1990 இல் இது வரையறுக்கப்பட்ட கொழும்பு பங்கு பரிவர்த்தனையாக அமைக்கப்பட்டது.

பங்குச் சந்தைக்காக வியாபாரத் தளமானது 1984இல் அமைக்கப்பட்டது. முன்பு வியாபாரத்தளம் என்பது பங்குகளை விற்பனை செய்ய விரும்புவோரின் அளிப்புக்களையும் கொள்வனவு செய்ய விரும்புவோரின் கட்டளைகளையும் பகிரங்கமாக வெளிப்படுத்தும் இடம் வியாபாரத் தளம் ஆகும். முன்பு தரகர் களின் உதவியுடன் கரும்பலகையூடாக இது வெளிப்படுத்தப்பட்டது. பங்குகளை விற்பனைசெய்வோரும் கொள்வனவு செய்வோரும் இதில் நேரடியாகப் பங்குபற்றுவர். தற்பொழுது இக்

கொள்வனவு விற்பனை நடவடிக்கையானது கணனிகளின் உதவியுடன் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது.

இலங்கையில் பங்குச் சந்தையானது துரித கதியில் வளர்வதற்குப் பின்வரும் காரணங்கள் துணைபுரிந்தன.

1. வெளிநாட்டவர் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த 100% வரிக்கட்டுப்பாடு நீக்கப்பட்டமை.
2. வெளிநாட்டவர் 40% அதிகமான பங்குகளை கொள்வனவு செய்ய முடியாது என்ற கட்டுப்பாடு நீக்கியமை.
3. அந்நியச் செலாவணி கட்டுப்பாடுகள் நீக்கியமை. விலைகூறப்பட்ட கம்பனியின் பங்குகளை கொள்வனவு செய்வோருக்கு பிடிப்புவரிக்கட்டுப்பாடு நீக்கியமை.
4. அரசிற்குச் சொந்தமான கம்பனிகளை தனியார் மயமாக்கியதன் மூலம் மொத்தப் பங்கு வழங்கலின் நிரம்பலை அதிகரித்தமை. என்பனவாகும்.

இலங்கையின் பங்குச் சந்தையானது பின்வரும் பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

1. மக்கள் பொதுக் கம்பனிகளை உருவாக்குவதற்கு பதிலாக சொந்த கம்பனிகளை உருவாக்கியமை.
2. பொது மக்களின் பங்கு முதலீட்டு ஆற்றல் குறைவாக இருத்தல்.
3. விலைகூறப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை குறைவாக இருத்தல்.
4. மக்களுக்கு பங்குச் சந்தை தொடர்பான அறிவாற்றல் குறைவாக இருத்தல்
5. வங்கிகளின் கவர்ச்சி மிகு சேமிப்பு நடவடிக்கைகள்

போன்ற பிரச்சினைகளின் காரணமாக பங்குச் சந்தை வளர்ச்சியில் சற்றுப் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களில் இப் பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்படுமாயின் இலங்கையின் பங்குச் சந்தை அபிவிருத்தியடைந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெருமளவில் உதவும் என்பது திண்ணம்.

**ஜெகநாதன் மேகரூபன்**

'வர்த்தகம் 98'

# தனியார் மயமாக்கல் (Privatization)

தனியார் மயமாக்குதல் அல்லது தனியார் மயப்படுத்தல் எனப்படுவது அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை அதாவது பொதுத்துறை தொழில் முயற்சிகளைத் தனியாரிடம் கையளிப்பது அல்லது முகாமையைத்தனியாரிடம் ஒப்படைத்தல் என்பதனைக் குறிக்கின்றது. அந்த வகையில் இத்தனியார் மயமாக்கற் செயற்பாடானது இலங்கையில் மட்டுமன்றி பல உலக நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது, மேற்கொள்ளப்பட்டும் வருகின்றது அபிவிருத்தி அடைந்த நாடுகள், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள், சோஷலிச நாடுகள் பலவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். பிரிட்டனில் இருபதுக்கும் மேற்பட்ட வெவ்வேறு வகையான தொழில் முயற்சிகள் தனியார் மயமாக்கப்பட்டுள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரையில் "தனியார் மயமாக்கல்" மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாடானது "மக்கள் மயப்படுத்தல்" (Peoplisation) என்ற பதம் மூலம் மாற்றம் அடைந்துள்ளது. தனியார் மயமாக்கல், மக்கள் மயப்படுத்தல் ஆகிய இரு செயற்பாடுகளும் பொதுத்துறைக்குச் சொந்தமான சொத்துக்களை தனியார் நிறுவனங்களிடம் கையளித்தல் அல்லது விற்பனை செய்தல் என்ற கருத்தினை வழங்குகின்றது. ஆனால் மக்கள் மயப்படுத்தல் எனப்படுவது பரந்தளவிலான முறையில் பொதுத்துறைச் சொத்துக்கள் உரிமைமாற்றப்படுவதனைக் குறிக்கின்றது. மக்கள் மயப்படுத்தலின் போது பொதுத் துறைக்குச் சொந்தமான சொத்துக்களைத் தனியே தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வது மட்டுமன்றி பொதுமக்கள், ஊழியர்கள் ஆகியோருக்கும் பங்குகள் வழங்கப்படும், நடவடிக்கைகளை உள்ளடக்கிய செயற்பாடாகும். இதன் மூலம் மக்கள் மயப்படுத்தல்கருமமானது, பெருமளவில் பொதுமக்கள் உடமையாளராவதற்கான வசதியினை அளிக்கின்றது.

மக்கள் மயப்படுத்தல் திடத்தின் கீழ் பொதுத்துறை முயற்சியின் உடைமையில் 51% முதல் 60% மான பங்குகள் கூட்டு முதலீட்டாளர்களுக்கு (Corporate Investor) வழங்கப்படுகின்றது. 10% மான பங்குகள் ஊழியர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்படுகின்றது. 30 % மான பங்குகள் பொதுமக்களுக்குப் பங்குச் சந்தையின் ஊடாக வழங்கப்படுகின்றது. இந்த வகையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனத்தில் உடைமையாளராக மூன்று பகுதியினர் காணப்படுவார்கள்.

1. கூட்டு முதலீட்டாளர்கள் 51% - 60%
2. ஊழியர்கள் 10%
3. பொதுமக்கள் 30%

உதாரணமாக இலங்கை ஒக்சிஜின் கம்பனி லிமிட்டெட்டில் (ceylon Oxygen), நோர்வேயைச் சேர்ந்த Norske Hydro நிறுவனம் 60% மான பங்குகளையும், ஊழியர்களையும் உடமையாளராகக் கொண்டு உள்ளனர். எனவே இது மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவனம் என்ற அந்தஸ்தினைப் பெற்றுள்ளது.

அதாவது கூட்டு முதலீட்டாளர்கள், பொதுமக்கள், ஊழியர்கள் ஆகியோர் உடமையாளராகும் போது மக்கள் மயப்படுத்தல் நடவடிக்கை பூரணத்துவம் அடைகின்றது எனக் கூறுவது பொருத்தமானது ஆகும். மக்கள் மயப்படுத்தல் மூலம் கூட்டு முதலீட்டாளர்களுக்கு பங்குகள் வழங்குவதன் மூலம் அனுபவமுள்ள சிறந்த, திறன்மிக்க முகாமையினை நிறுவனத்தில் ஏற்படுத்தமுடியும். ஊழியருக்கு 10%மான பங்குகள்

இலவசமாக வழங்கப்படும் போது ஊழியர்களும், உடமையாளராவதற்கான வாய்ப்பினை அளிக்கின்றது. ஊழியர்கள் நிறுவனத்தில் சேவைபுரிந்த ஆண்டுகளின் அடிப்படையில் இலவசமாகப பங்குகள் வழங்கப்படுவது நிறுவனத்தில் ஊழியர்களுக்கான தொடர்பினை அதிகரிப்பது மட்டுமன்றி அவர்களின் சேவைக்கு மதிப்பளிப்பதுடன் அதனை நியாயப்படுத்துவதாகவும் அமைகின்றது.

பொதுமக்களுக்கு 30% மான பங்குகளை கொள்வனவு செய்ய வாய்ப்பளிப்பதன் ஊடாக பொதுமக்களின் முதலீடுகள் ஊக்கப்படுத்தப்படுகின்றது. அதாவது சாதாரண மக்களும் தமது சேமிப்புக்களை பாரியதிட்டங்களில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பினை அளிப்பதன் ஊடாக மூன்று வகையான நோக்கத்தினை அடைவதற்கு உதவுகின்றது, எனக் கூறுவதும் பொருத்தமானதாகும். இலங்கையைப் பொறுத்து 1985ஆம் ஆண்டளவில் பொதுத்துறை நிறுவனங்களின் கூடிய நிதிச்சுமை காரணமாக அரசு தனியார் மயமாக்கலை கொள்கை அளவில் ஏற்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுத்துறை நிறுவனங்களில் காணப்பட்ட பிரதான குறைபாடுகளாக பின்வருவன அடயாளம் காணப்பட்டன.

1. பல பொதுக்கூட்டுத்தாபனங்கள் நட்டத்தில் இயங்கியமை
2. கூட்டுத்தாபனங்களில் தேவைக்கு அதிகமான ஊழியர்கள் காணப்பட்டமை
3. பழைய தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டமை
4. பணித்துறைக்கட்டுப்பாடு. இது சிவப்பு நாடாவிற்கு வழிவகுத்தது.

இந்நிலையில் கூட்டுத்தாபனங்கள் தொடர்பாக மூன்று மாற்றுவழிகள் காணப்பட்டன. அவையாவன.

1. கூட்டுத்தாபனங்களை மூடுதல்.
2. கூட்டுத்தாபனங்களைத் தொடர்ந்தும் இயக்குவிக்கும் பொருட்டு நிதி யினை வழங்குதல்
3. கூட்டுத்தாபனங்களைத் தனியார் மயமாக்குதல்.

இம்மூன்று மாற்றுவழிகளையும் தனித்தனி பரிசீலனை செய்யும் போது, கூட்டுத்தாபனங்களை மூடுதல் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினைப் பொறுத்து புத்திசாலித்தனமானதல்ல. கூட்டுத்தாபனங்களைத் தொடர்ந்தும் இயக்குவிக்கும் பொருட்டு நிதியினை வழங்குதல் அரசின் நிதிச் சுமையினை மீண்டும் அதிகரிக்கும். இந்த வகையில் தனியார்மயமாக்கலைப்பற்றிச் சிந்திப்பதே சிறந்ததும், சாத்தியமான தொன்றுமாகும் என்ற கருத்து உணரப்பட்டதால் தனியார்மயமாக்கல் தொடர்பான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. 1985ஆம் ஆண்டில் தனியார் மயமாக்கலை செயற்படுத்தும் ஆரம்பகட்டமாக ஆறு அங்கத்தவர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி வேண்டப்பட்டது.

1. ஒவ்வொரு கூட்டுத்தாபனத்தினதும் சொத்து, பொறுப்பு பற்றிய மதிப்பீடு.
2. கம்பனிகளாக மாற்றப்படவுள்ள பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது சுவீகரிக்கப்பட்ட கம்பனிகளில் பங்குகளை விற்பனை செய்வது தொடர்பான நடைமுறைகள்
3. கம்பனிகளாக மாற்றப்படும் போது வேண்டப்படாத ஊழியர்களின் சேவைகள்தொடர்பாகக் கொடுக்கவேண்டிய நஸ்டஈடு.

தனியார் மயமாக்கல் என்னும் போது அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் முகாமையினை தனியாரிடம் கையளித்தல் என்பது பொதுவான கருத்தாகும். எனினும் தனியார்மயமாக்கல் என்னும் போது அரசு தனியுரிமை வகித்து வந்த நிறுவனங்களில் தனியாரையும் ஈடுபட அனுமதி அளித்தல், அரச நிறுவனங்களின் முகாமையினைத் தனியாரிடம் கையளித்தல் (வணிகமயப்படுத்தல்) அரச ஒப்பந்த வேலைகளில், தனியாரும் ஈடுபட அனுமதியளித்தல் ஆகிய சகல அம்சங்களும் தனியார்மயமாக்கல் என்ற கருத்தினைக் குறிக்கும்.

தனியார் மயமாக்கல், தனியார் தனியுரிமை (Private Monopoly) தோன்றுவதற்கு வழிவகுக்கும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அத்தியாவசிய சேவைகளும் காலப்போக்கில் தனியார் மயமாக்கப்படலாம் இதனால் வருமானம் குறைந்த மக்கள் அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது போகலாம் என்ற பல்வேறு வகையான கருத்துக்கள், விமர்சனங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் தனியார் மயமாக்கல் செயற்பாட்டை மேற்கொள்ளும் பொருட்டு சர்வதேச ரீதியாக அழுத்தங்கள் ஏற்பட்டன.

தனியார் மயமாக்கலை மேலும் பயனுடைய செயற்பாடாக மாற்றும் பொருட்டும், நாட்டின் சகலமக்களும் அத்திட்டத்தின் மூலம் நன்மை அடையும் பொருட்டும், தனியார் மயமாக்கல் விரிவுபடுத்தப்பட்டு “மக்கள் மயப்படுத்தல்” என்ற புதிய பெயரும், வடிவமும் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

மறுபுறத்தில் தனியார் மயமாக்கல் சில எதிர் விளைவுகளையும் கொண்டுள்ளது எனக்கூறுவது மறுப்பதற்கு இல்லை. தனியார் மயமாக்கல் தனியுரிமைக்கு வழிவகுப்பதுடன் தனியார் மயமாக்கலின் மூலம் சிலசேவைகளை வருமானம் குறைந்த வர்கள் பெற்றுக்கொள்ள முடியாது போகும் நிலை ஏற்படலாம். வேலையின்மைக்கும் வழிவகுக்கும்.

அத்துடன் இலங்கையில் தனியார் மயமாக்கல் மூலம் நாடு முழு அளவிலான பலனைப்பெற வேண்டின் வளர்ச்சி அடைந்த ஒரு மூலதனச் சந்தை காணப்பட வேண்டும். ஆனால் இலங்கையில் அவ்வாறான ஒரு வளர்ச்சி அடைந்த மூலதனச் சந்தையில்லை. மூலதனச் சந்தையினை விருத்தயடையச் செய்து தனியார் மயமாக்கலுக்கு உதவும் எனினும் இலங்கையைப்பொறுத்து மூலதனச் சந்தை வளர்ச்சியும் தனியார் மயமாக்கலும் ஒரே காலகட்டத்தில் மேற்கொள்வதனால் எதிர்பார்த்த பலனைப் பெறமுடியவில்லை எனக்கூறுவதும் பொருந்தும். எவ்வாறாயினும் தனியார் மயமாக்கல் குறுகிய கால எல்லையுள் குறிப்பிடத்தக்களவு பலனைத் தந்துள்ளது எனக் கூறுவது மறுப்பதற்கில்லை. தனியார் மயமாக்கல் நடவடிக்கை முற்றுப்பெறாது ஆரம்ப நிலையில் காணப்படுவதினால் அது தொடர்பான பூரண மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியாது. மேற்கொள்வதும் சாத்தியம் அற்றது. இதன் முழுப் பலாபலன்களையும் இன்னும் சில வருடங்களின் பின்பே முற்றாக மதிப்பிடமுடியும்.

**Kathirkamanathan Venugoban**
1999 A/L (Com)

# பகிடிவதை தேவைதானா?

பூமிப் பந்து இருபது நூற்றாண்டு களைச்சுற்றி முடித்து, இருபத்தோராம், நூற்றாண்டில் எட்டிப்பார்க்க ஆரம்பித் துள்ளது. மனித குலம் தன் வாழ்வுக்கும், வசதிக்கும் வருகாலச் சந்ததிக்கும் தேவைப் படும் வகையில் அறிவையும், ஆக்கத் தொழிற்பாடுகளையும் விருத்தி செய்து வருகின்றது. முன்னைய நூற்நாண்டுகளில் இருந்ததைவிட மனிதன் சிந்திக்கின்ற ஆற்றலை அதிகம் பெற்றுள்ளான் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன!

என்ன இருந்தும் என்ன?

ஒரு சிலரின் வக்கிர புத்திகளும், பிறரை வதைக்கின்ற எண்ணங்களும் ஒட்டுமொத்தமாக உலகையே ஒருகணம் புத்திபேதலிக்க வைத்துவிடுகின்றது!

இந்த நூற்றாண்டு தான் வன்முறை களும் பயங்கரவாதங்களும் பலாத்கார எண்ணங்களும் தலைகாட்டி தலைதூக்கிய ஆண்டு! இத்தகைய கொடுமைகள் உண்டாக்கிய தாக்கங்கள் மனதில் ஒரு மூலையில் பதுங்கிக் கிடக்கின்றது பலருக்கு! இவற்றை வெளிப்படுத்துவதற்குத் தருணங்களை எதிர்பார்த்துக் கிடந்த சில வக்கிரம் பூத்த இதயங்களுக்கு ஒரு சில நிகழ்வுகள் வாய்ப்பாக அமைந்து விடுகின்றன!

அவற்றில் ஒன்றுதான் ராகிங் (ragging) எனப்படும் பகிடிவதை! மாணவ சமுதாயத்தை மட்டுமல்லாமல், கல்வித் துறையுடன் சம்பந்தப்பட்ட அனைவரை யுமே தலைகுனிய வைத்த ஒரு சில சம்பவங்களுக்கு மேற்குறிப்பிட்ட நிகழ்வே காரணம்!

தென்னிந்தியாவின் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்திலே நாவரசு என்ற மாணவனை -ஜான் டேவிட் என்ற மாணவன் வடிவில் வந்த கொடூர புத்தி படைத்தவன். பகிடிவதை என்ற பேரில் வல்லுறவுக்கு அழைத்துக் கொலைசெய்து துண்டு துண்டாக வெட்டிச் சுவை கண்டது முதல் சம்பவம்! மாணவ உலகம் கூட இவ்வளவு வக்கிரப் புத்திகளை உடையது தான் என உலகம் கண்டறிய இதுவே வழிவகுத்தது!

அமைதியான சுபாவமுடைய வரப்பிரகாஷை ஏழுபேர் கொடுமையான சில உடற்பயிற்சிகளைச் செய்யுமாறு வற்புறுத்த அவன் உடல் உபாதைக் குள்ளாகி இரு சிறுநீரகங்களும் செயற் படாமல் பிஞ்சாகவே கருகியது எமது நாட்டின் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த ஒரு பயங்கரம்! இப்போதும்கூட எம் சமூகம் விழித்துக் கொண்டதாகத் தெரியவில்லை!

இதற்குப் பின்னரும் அம்பாறையில் ஹாட்லிக் கல்வி நிறுவனத்தில் மது அருந்தும் சில மாணவரால் (?) செலும் துஹார என்ற மாணவன் வதைத்துக் குற்றுயிராக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமான சம்பவமும் சிலநாளுக்கு முன்னரே நடந்தது!

எமது இளைஞர் சமுதாயம் எங்கே சென்றுகொண்டிருக்கிறது? இதற்கு என்ன காரணம்? மனவருத்தமும், மனதினுள்ளே புதைந்து கிடக்கும் ஆக்கிரமிப்பு அரக்க உணர்வுகளே இத்தகைய தீச்செயல்கட்குக் காரணம் என மனவியலாளர்கள் (Psychologists) கூறுகின்றனர்.

அடுத்த முக்கியமான வினா என்னவென்றால் உண்மையிலே இந்த ராகிங் எனப்படும் பகிடிவதையின்

நோக்கமென்ன என்பதாகும்!

மேலைநாடுகளில் பல்கலைக் கழகங்களில் நுழையும் புதிய மாணவர்களை (Junior Students) முன்பிலிருந்து கல்விபயிலும் சிரேஷ்ட மாணவர்கள் (Senior Students) இந்தப் பகிடிவதைகளைப் பயன்படுத்தி தம்முடன் புரிந்துணர்வு கொள்ள வைத்தனர்! இது எத்தனையோ தசாப்தங்களாக நடைமுறை யிலிருந்து வந்தது; இருந்து வருகின்றது!

பகிடிவதை எனப்படும் போது சிறு வேடிக்கையான செயல்களைச் செய்யச் சொல்லி தாமும் மகிழ்வுற்று புதியவர் களையும் தம்முடன் அம் மகிழ்வில் இணையச் செய்தனர்! எங்கள் கீழைத்தேய நாடுகளிலும் முன்பிருந்து இந்நிகழ்வு கடைப்பிடிக்கப்பட்டு வந்தது! இவ்வளவு காலமும் ஆரோக்கியமான விளைவுகளைத் தந்து வந்த பகிடிவதை இன்று அனர்த் தங்களை விளைவிக்க ஆரம்பித்துள்ளது!

நடந்த கொடூரங்களில் மூன்றுதான் வெளியே தெரிந்துள்ளன! இன்னும் தெரியப்படாதவை எத்தனையோ? சிவப்பு விளக்குகள் ஒளிர்விட ஆரம்பித்து உள்ள இந்நேரத்திலேயே இதை எம் நாட்டிலாவது தடைசெய்ய வேண்டும் என்பதே பெரும்பாலான கல்விமான்களின் கருத்தாகும்!

ஆரோக்கியமான விளைவுகள் தந்த 'ராகிங்' இன்று ஒரு சிலரால் தவறாகப் பயன்படுத்தியதற்காகத் தடைசெய்யப்பட வேண்டுமா? என வினவுபவர்க்கு ஒன்றே ஒன்று கூற ஆசைப்படுகிறேன்!

ஒரு நாயைக் காவலுக்காக வீட்டில் வளர்க்கிறோம்! எப்போது அதற்குப் புத்தி பேதலித்துவீட்டிலுள்ளவர்களையே கடித்துப் பதம் பார்க்க ஆரம்பிக்கின்றதோ அப்போதே சுட்டுவிடுகின்றோமல்லவா? அதுபோலத்தான் இதுவும்!

குறைந்தது வருங்காலத்தில் நல்ல பலன்தரும் கற்பகதருக்கள் விதையாகவே கருகாமல் காக்கவாவது இந்தப் பகிடிவதை மீதான தடை பயன்படுமே! புதியவர்களைப் புரிந்து கொள்ளக் கட்டாயம் இப்படிப்பட்ட ஒரு நிகழ்வு தேவைப் படின், எம் நாகரிக, பண்பாட்டு விழுமியங்களுக்குட்பட்டதான ஏதாவது ஒரு முறையைக் கைக்கொள்ளலாம் தானே!

விருட்சங்கள் கருகாமலிருக்க ஒரு விதையின் வேண்டுகோள் இந்தக் கட்டுரை!

மரணித்த மாணவச்சகோதரரின் ஆத்மாக்கள் சாந்திபெறட்டும்!

நன்றி !

ஆ.இ. வாமலோசனன்
97 பௌதீக விஞ்ஞானம்

# கோணமலை வெந்நீர் ஊற்றின் சிறப்புக்கள்

கோணமலை வெந்நீர் ஊற்றைப் பற்றிப் பல புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். இந்தப்புலவர்கள் பல இடங்களைச்சேர்ந்தவர்கள். நாம் இப்போது பார்க்கப்போகும் புலவர்கள் இருவர். ஒருவர் புலவர்மணி. பெரியதம்பிப்பிள்ளை, மற்றையவர், சோமசுந்தரப் புலவர். இவ்விருவரும் வெந்நீர் ஊற்றைப் பற்றிப் பாடிய பாடலை எடுத்து நோக்குவோம். அதில் சோமசுந்தரப்புலவர் உவமைக் கருத்துக்களைக் கூறிப் பாடியுள்ளார்.ஆனால் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் கன்னியா குமரியிடம் வினாவியபோது கன்னியாய் தன்சிறப்பைக்கூறுவதுபோலப் பாடியுள்ளார்.

எனினும்இருவரும் கூறவருவதுஒன்றுதான். ஆனால் கூறும் முறைதான் மாறுபட்டது. இந்தப் புனித ஊற்றானது திருகோணமலையில் உள்ளது. இது தோன்றிப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும் அதன் புகழ் இன்றுவரை மங்க வில்லை. இந்த ஏழு கிணற்று நீரும் ஒவ்வொரு வகையான வெப்பத்தை உடையது. இங்கு வருபவர்கள் எவராயினும் இந்த ஏழு புனித கிணற்றுநீரிலும் தலைமுழுகாது போவதில்லை. இந்த நீர் பாவங்களை நீக்கவல்லது என்று அனைவரும் கூறுகின்றனர். இந்தக் கிணறுகள் இராவணனின் தாய் இறந்து விட்டமையால் தாய்க்குச் செய்ய வேண்டிய ஈமக் கிரிகைகளைச் செய்ய நீர்தேவைப்பட்டதால் திருமால் வந்து அமைத்ததாகக் கூறப்படுகின்றது. ஆயினும் உண்மையா பொய்யா எனக் கூறமுடியாது.

இன்று சிலர் விஞ்ஞான முறைப்படி நிலத்திற்குக் கீழுள்ள பாறையின் தன்மையினாலேயே இப்படி ஏழு கிணறுகளும் ஒவ்வொரு வகையான வெப்பத்தைக் கொண்டுள்ளது என்கின்றார்கள்.ஆயினும் இக்கிணற்று நீரில் வெம்மை மாறுபட்டுக் காணப்படுவதற்கான காரணம் அறியமுடியவில்லை. இங்கு வந்த வெளிநாட்டு ஆராய்ச்சியாளரும் கூட இதன் மாற்றத்தை அறியமுடியாதுள்ளனர்.இந்தக் கிணற்றிலுள்ள நீர் அள்ள அள்ளக்குறையாது. இந்த நீரில் பல மதத்தவரும், பல சாதியினரும் எவ்விதத் தடையுமின்றிப் பாவிக்க அனுமதி உள்ளமையால் இது ஒரு புதுமையைத் தான் காட்டுகின்றது.

சோமசுந்தரப்புலவர் இந்த வெந்நீர் ஊற்று வெப்பம் வெவ்வேறு வகையில் காணப்படுவதால் அதனை ஒவ்வொருவருடைய மனத்திற்கும் ஒப்பிடுகின்றார்.இவர் இலங்கை வளம் என்னும் பகுதியில் இந்த ஏழு கிணற்றின் வெம்மையைப் பாடியுள்ளார். அவரது பாடல் ஏழு அடிகளைக் கொண்டதாகும் அந்தபாடல் கீழே குறிப்பிடப்பட்டதாகும். இந்தப் பாடலில் எட்டாவது அடி கோணமலை வெந்நீர் ஊற்றைக் குறிக்கிறது.

*"காதலனைப் பிரிந்தவளின் மனம் போல வொன்று*
*கவிபாடிப் பரிசுபெறான் மனம் போல வொன்று*
*தீது பழி கேட்டவன் தன் மனம் போல வொன்று*
*செய்தபிழைக் கழுங்குமவன் மனம் போல வொன்று*
*நீதிபெறா வேழைதுயர் மனம் போல வொன்று*
*நிறை பழித்த கற்புடையாள் மனம் போல வொன்று*
*காதுமழுக் காறுடையான் மனம் போல வொன்று*
*கனவேறு மெழுநீர்க ளுண்டுகன்னியாயில்"*

இவர் பாடிய பாடலின் பொருளை நாம் நோக்குவோம். தன் காதலனைப் பிரிந்தவள் மனம் போல ஒன்றும், பாடலைப்பாடி பரிசு பெறாதவன் மனம் போல ஒன்றும், பிழை செய்யாதவன் மேல் தீது பழிசுமத்தபட்டவனைப் போல ஒன்றும், தான் செய்யாத பிழையை எண்ணிக்கலங்கும் மனம் போல ஒன்றும், நீதிபெறாத ஏழையின் மனம் போல ஒன்றும், கற்பில்லாதவள் எனக் கூறப்பட்டவள் போல ஒன்றும், பொறாமை உடையவன் மனம் போல ஒன்றும் என இந்த ஏழுவகையான வெந்நீர் ஊற்றின் வெம்மையும் காணப்படுகின்றது என்கிறார். இவர் மிகவும் நுட்பமாகப் பாடினாலும் நீரின் புனிதமே, இல்லாவிடில் இந்த கிணற்றின் தொன்மை பற்றியே கூறவில்லை எனலாம்.

ஆனால் புலவர் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்ஒவ்வொன்றினதும் சிறப்பை எடுத்துக் காட்டியும் அந்தப்பாடலை உருவாக்கி உள்ளார். இப்பாடல்கள் அனைத்தும் பொருளை எளிமையாகவும் தாக்கமாகவும் புலப்படுத்தும் வகையிலே உரையாடற் பாங்கிலே அமைந்துள்ளன. முதலிருவரிகள் ஆசிரியர் வினாவாகவும் அடுத்த இருவரியும் கன்னியாயின் விடையாகவும் காணப்படுகிறது. அதுமட்டுமல்லாது முதலிரு அடிகளும் கன்னியாயில் இயற்கைத் தன்மையையும் இயல்பு நிலைகளையும் கூறுகின்றன. அடுத்த இரண்டு அடிகளும் புலவர் தம் இருகருத்துக்களை ஏற்றிக் காட்டுபனவாய் அமைந்துள்ளது. அதுமட்டுமல்ல அவர் கூறும் கருத்தை நாம் நோக்கின் கன்னியாய் எனப்படும் இந்தப் புனித நீரானது இலங்கையில் மட்டும் தான் உண்டு. அதனால் இது ஒரு புகழை இலங்கைக்கு உருவாக்கி விட்டது. இங்கு எல்லா இன மக்களும் தடை இன்றி நீராடக் காரணம் என்னவென்று கன்னியாயை கேட்டபோது கன்னியாய் கூறுவது எந்த மதத்தை வழிபட்டாலும் இறுதியில் சேரும் இடம் ஒன்றுதான் என்ற பரம்பொருளை உணர்த்தவும் எல்லா மத உயிரும் ஒன்றுதான் என்பதை உணர்த்தவும் தான் என்று கூறபடுகிறது. அந்தப்பாடல் ஆனது கீழே குறிப்பிடபட்டதாகும்.

*"சைவர் பவுத்தர் முகமதியர்*
*சார்ந்தே கிறிஸ்து சமயத்தோர்*
*மெய் தொட் டாட நீ விரும்பும்*
*விதமென் கன்னி யாத் திருவே"*

எனக் கேட்ட போது கன்னியாய் கூறிய பதில் ஆனது,

*"மெய் தொட் டாட யான் விரும்பும்*
*விதமிங் குணர் வீர் மேதினியில்*
*தெய்வ மெவர்க்கும் பொது வென்னும்*
*திறத்தை விளக்கும் செயல் கண்டீர்"*

என்று இந்தக் கன்னியாய் என்பவள் கூறுவதுபோலப் பாடலை உருவாக்கி உள்ளார். இதன் பொருள் மேலே கூறியதுபோல எல்லா மதமும் ஒரு பரம்பொருளை அடைய பல்வேறு வழியில் வழிபடுகிறார்கள் என்பது உண்மை ஆகும். மேலும் அவர் கூறுவது யாது எனில் இங்கு காணப்படும் நீரானது அள்ள அள்ள மெல்லச் சுரந்து வருவதெல்லாம் கல்வி என்னும் பொருளை உணர்த்தவே என்கிறார். அதாவது கல்வியானது உடனே கற்க முடியாது மெல்ல மெல்லதான் கற்கலாம் அப்படிக் கற்கும் கல்வி எப்போதும் அழியாது என்பதை உணர்த்தலே என்கிறார். அவர் இக்கருத்தை பாடலில் எவ்வாறு விளக்கி உள்ளார் என்று பார்போமாயின்.

*அள்ளக் குறையா தினிதூறும்*
*வெந்நீர்ச் செல்வ மதையருளி*
*மெள்ளச் சுரந்து வருவதென்ன*
*வியம்பாய் கன்னி யாய்த்திருவே*

*மெள்ளச் சுரந்து வருவதெல்லாம்*
*விரும்பி யுலகோர் மனந்தளவே*
*கொள்ளச் சுரக்கும் கல்வியென*
*நானுஞ் சுரக்கும் குணங்கண்டீர்*

என்று கன்னியாய் பதில் கூறுகிறது போல் எமக்கு கல்வியின் சிறப்பை எடுத்து விளக்குகிறார். இப்படியாக ஏழுபாடலிலும் ஏழுகருத்துக்களைக் கூறிச் செல்கிறார். அத்துடன் இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது கன்னியாய் என்று அழைக்கப்படுவது வெந்நீர் ஊற்றையே. கன்னியாய் என்பதன் பொருள் திருமணமாகாத ஒரு தெய்வப்பெண் என்று பொருள்படும். புலவர் பெரிய தம்பிப் பிள்ளை அவர்கள் கூறுவது இங்கு ஒருதடவை குளித்தால் உடலும் உயிரும் நன்மை பெறும் என்று. எனவே இவ்விரு புலவரையும் நாம் நோக்கின் புலவர் பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் இவ்ஊற்றை வைத்து வாழ்விற்கு உகந்த பலகருத்தைக் கூறிச் செல்கிறார். அத்துடன் அதன் சிறப்பு சிலதையும் எடுத்துக் காட்டுகிறார்.

அதுபோல் சோமசுந்தரப் புலவர் விரும்பிய ஒன்றை அடையாதவனுக்கும் ஒருவனது உள்ளத்தில் எழும் எண்ணங்களும் எப்படியோ அப்படிப்பட்டது என்று கூறுகிறார். எனவே சோமசுந்தரப் புலவரைப் பொறுத்தவரையில் மிகவும் விரிவாக கன்னியாயின் சிறப்பைக் கூறவில்லை. அதனை இன்னொன்றுக்கு ஒப்பிட்டு உள்ளாரே தவிர அதன் சிறப்பு தேற்றம் பற்றியோ, தோற்றம் பற்றியோ எதுவும் கூறவில்லை. எனினும் அவருடைய பாடலிலும் எமது வாழ்கையில் நடக்கும் உண்மையான சம்பவக் கருத்தை கூறி உள்ளார். ஆயினும் அவருடைய பாடல் ஏழு அடியிலும் ஏழு மனதே வைத்துப் பாடி உள்ளார் எனலாம்.

இறுதியாக நாம் உணரக் கூடியது யாது எனில் இவ்விரு புலவர்களதும் கருத்தும் வெவ்வேறு கருத்துக்களாக உள்ள போதும் எமக்கு தேவையானது எதுவோ அதை நாம் எடுத்துக் கொள்ள வேண்டியதுதான். ஆயினும் இவ்விருவரது கருத்தும் நல்லதாக இல்லை என்று கூறமுடியாது. அவரவர் சுயசிந்தனை அதாவது இயற்கை ரசனையாலேயே அவர்களது கருத்து வெவ்வேறாகக் காணப்படுகிறது. எனவே இவ்விருவரது கருத்திலும் வாழ்வுக்கு தேவையான பல கருத்துக்கள் இருக்கின்றன. ஆகவே இதனால் நம்வாழ்க்கை உயர்வாக வளர இது பெரிதும் துணை புரியாவிடிலும் சிறிதேனும் உதவும் என கூறலாம். இங்கு இறுதியாக கூறவருவது யாது எனில் இந்த உரை எனது சிறிய சிந்தனையில் உதித்தது. இது மற்றவர்களுக்கு வேறு விதமான சிந்தனையை உருவாக்கலாம். ஆகவே இதில் இருந்து இரு புலவர்களது பாடலின் ரசனை வெவ்வேறு வகையில் காணப்பட்ட போதிலும் அவர்களது சிந்தனையையும் மன உறுதியுடன் உருவாக்கிய இப்பாடல்களைக் கொண்டு மேற்கண்ட புலவர்களை வாழ்த்த வேண்டும்.

**லோகேஸ்வரன் நிமலன்**
12 கலைப்பிரிவு

# தேசிய வட்டப் பாய்ச்சலில் ஓர் சிறு பார்வை

**தேசிய வருமானத்தின் வரைவிலக்கணம்**

"குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் ஒரு பொருளாதாரத்தில் நிலம், உழைப்பு, முதல், முயற்சி ஆகியவற்றின் உடமையாளர்கள் பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு உற்பத்தி காரணிச் சேவையை வழங்கியதற்காக பணவடிவில் வழங்கப்படும் வாடகை, கூலி, வட்டி, லாபம் என்பவற்றின் கூட்டுத்தொகையே தேசிய வருமானம் என வரையறுக்கலாம்.

**தேசிய வருமான வட்ட பாய்ச்சல்.**

ஒரு பொருனாதாரத்தின் வீட்டுதுறை, நிறுவனதுறை என்பவற்றுக்கிடையே உற்பத்தி, வருமானம், செலவு என்பன எவ்வாறு செயல்படுகிறது என்பதை காட்டுவதே வருமான வட்டப் பாய்ச்சலாகும் ஆகும். இங்கு வீட்டுதுறை என்பது ஆக்க காரணிகளாக நிலம், உழைப்பு, முதல், முயற்சி என்பவற்றின் உடமையாளர்கள் என வரையறுக்கப்படும், நிறுவனதுறை என்பது ஆக்க காரணிகளை பெற்று பொருட்களின் சேவைகளின் உற்பத்தியில் ஈடுபட்டு இலாப நோக்கில் செயல்படுவோர் என வரையறுககப்படும்.

எனவே தேசிய வருமான வட்டப் பாய்ச்சலை ஒரே நோக்கிலேயே எடுத்து நோக்குதல் சிக்கல் வாய்ந்ததும் விளக்கமற்றதுமாகிவிடும், எனவே சில எடுகோள் மத்தியில் நான்கு வகையாக எடுத்து நோக்குவது இலகுவானது என்பது என் கருத்து.

1. வீட்டுதுறை, நிறுவனதுறை என்பன உள்ள "எளிய பொருளாதாரம்". அதாவது இப்பொருளாதாரம் வருமானம் முழுவதையும் நுகர்வுக்கே செலவிடும்.

2. வீட்டுதுறை, நிறுவனதுறை என்பன உள்ள "சிக்கன பொருளாதாரம். அதாவது சேமிப்பு, முதலீடு என்ற செயல்பாடுடைய பொருளாதாரம் ஆகும்.

3. வீட்டுதுறை, நிறுவனதுறை, அரசாங்கதுறை என்பன உள்ள "மூடிய பொருளாதாரம்".

4. வீட்டுதுறை, நிறுவனதுறை, அரசாங்கதுறை, வெளிநாட்டுதுறை என்பன உள்ள "திறந்த பொருளாதாரம்".

மேலே கூறிய நான்கு வகை பொருளாதாரத்திலும் பொருளியல் எண்ணக்கருக்களான மூடிய பொருளாதாரம், திறந்த பொருளாதாரம் என்பவற்றை எடுத்து நோக்கின் மூடிய பொருளாதாரம் என்பது ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளில் ஈடுபடாத பொருளாதாரத்தைக் குறிக்கும். இங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தி மொத்த தேசிய உற்பத்திக்கு சமனாக இருக்கும். மேலும் திறந்த பொருளாதாரம் என்பது ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபடும் பொருளாதாரமாகும். எனவே மேலே கூறியபடி ஒவ்வொரு பொருளாதாரமாக எடுத்து நோக்குவோம்.

# எளிய பொருளாதாரம்.

இவ் எளிய பொருளாதாரத்தில் வீட்டுதுறை, நிறுவனதுறை என்பன மட்டுமே உண்டு என்படும் இவை சேமிப்பு, முதலீட்டு செயல்பாட்டில் ஈடுபடுவதில்லை என்பதும் எடுகோளாக இருக்கும். இப் பொருளாதாரத்தின் வட்டப பாய்ச்சலை வருமாறு படம் மூலம் காட்டலாம்




வீட்டுதுறைவின் தம் உற்பத்தி காரணிகளான நிலம், உழைப்பு, முதல், முயற்சி ஆகியவற்றை நிறுவனதுறைக்கு வழங்க நிறுவன துறையினர் பொருட்கள் சேவை உற்பத்தியிலீடுபட்டு வீட்டுதுறையினருக்கு அப்பொருட்கள் சேவைகளை வழங்குகின்றனர். இப்பாய்ச்சலையே நாம் மெய்ப்பாய்ச்ல் என்கின்றோம். காரணிச் சேவையை பெற்ற நிறுவனதுறை தாம் பெற்ற நிலம், உழைப்பு, முதல், முயற்சி என்ற காரணி சேவைக்கு அளவான காரணி வருமான வாடகை, கூலியும் சம்பளம், வட்டி, லாபம் என்ற காரணி வருமானத்தை வீட்டுதுறைக்கு வழங்கும். பொருட்கள் சேவைகளைப் பெற்ற வீட்டு துறையினர் தம் காரணி வருமானங்களை, பெற்ற பொருட்கள் சேவைகளுக்கு அளவாக செலவு செய்வர். இதனை பணப் பாய்ச்சல் என்கின்றோம். எனவே மெய்ப்பாய்ச்சல் மூலமே பணப் பாய்ச்ல் இடம் பெறுவதை அவதானிக்கலாம். மேலும் இவ்வட்டாரங்களிலிருந்து பின்வரும் சிலமுடிவுகளை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது.

1. ஒரு நாட்டின் தேசிய வருமானமானது உற்பத்திவழி, வருமானவழி, செலவுவழி என்ற மூன்று வழிகளில் கணிக்கப்படுகிறது எள்றும் அவை வெவ்வேறு வழிகளில் கணிப்பிடப்படினும் ஒன்றுக்கொன்று சமனாகும் என்ற முடிவைப் பெறலாம். அதாவது வீட்டுதுறையினர் வழங்கிய உற்பத்தி காரணிகளுகளாகவே காரணி வருமானமும், இக் காரணி வருமானத்தை பெற்ற பொருட்கள் சேவைகளுக்கே செலவிடப்படுகிறது எனவும் கூறலாம். எனவே தேசிய வருமானம = தேசிய உற்பத்தி என்றும் காரணி வருமானத்தை பெற்ற வீட்டுதுறையினர் தாம் பெற்ற வருமானம் முழுவதையும் பொருட்கள் சேவைகளினை கொள்வனவு செய்வதற்காகவே செலவிடுகின்றனர். எனவே இங்கு தேசிய வருமானம் தேசிய செலவு என்றும் முடிவுக்கு வரலாம்.

   தேசிய வருமானம் - = தேசியளவு = தேசிய உற்பத்தி

   G.N.I = G.N.C = G.N.P.

2. பொருளியல் எடுத்துக் கொள்ளும் இரு பெரும் சந்தைகளான பொருட் சந்தை, காரணி சந்தை என்பன காட்டப்படுகின்றன. அதாவது பொருட்கள் சேவைகள் பரிமாறப்படுகையில் பொருட் சந்தையும், காரணி சேவைகள் பரிமாறப்படுகையில் காரணி சந்தையும் உருவாகுவதை படம் விளக்குகிறது.

இப்பொருளாதாரம் தன் தேசிய வருமான நிர்ணயிப்பை வருமாறு காட்டும்.

$$Y = C$$

வருமானம் = நுகர்வு.

நுகர்வு என்பதற்கு நுகர்வு சார்பு உண்டு. இவ்நுகர்வு தொழிற்பாடானது வருமானத்திற்கும் நுகர்வுக்குமிடையேயுள்ள தொடர்பை விளக்குகிறது. எனவே வருமானம கூட நுகர்வு கூடுவதும் வருமானம் குறைய நுகர்வும் குறையும் என்பதை வினக்குவதே நுகர்வு தொழிற்பாடு ஆகும். எனவே நுகர்பு சார்பு வருமாறு.

$$C = a + by$$

c = நுகர்வு

a = நுகர்வுக் கோடு அச்சை வெட்டும் புள்ளி அல்லது பூச்சிய வருமானத்தில் நுகர்வின் அளவு.

b = நுகர்வுக் கோட்டின் சரிவு அதாவது எல்லை நுகர்வு நாட்டம்.

y = வருமானம்.

இவ்வட்டப் பாய்ச்சலில் தேசிய வருமான நிர்ணயிப்பை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கலாம்.

த. ராஜமோகன்
13 'E'

# யுத்த பூமியில் சமாதானம் எப்போது?

"இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச் சினைக்கு தீர்வு கண்டுவிடவேண்டும். இன்றேல் இனி எவராலும் எப்போதும் தீர்வைக் கண்டுவிடமுடியாது." சாதி பேதங்கள், சமய அடிப்படை வாதங்களைத் துறந்து, பிரிவினைகளையும் பேதங்களையும் மறந்து சுதந்திரமான ஐக்கியமான ஒரு தேசத்தைக் கட்டியெழுப்ப நாட்டுமக்கள் அனைவரும் அணிதிரளவேண்டும்' என்று புத்தாண்டு தின வாழ்த்து செய்தியில் சனாதிபதி வலியுறுத்தியுள்ளதானது யுத்தமானது எவ்வளவு தூரத்திற்கு இந்த நாட்டை அரித்தெடுக்கும் வைரஸ் ஆக மாறிவிட்டது என்பதை எமக்கு உணர்த்துவதாகவேயுள்ளது.

இந்த யுத்தத்தினால் இந்நாட்டுமக்கள் அனுபவித்த சொல்லோணாத்துயரங்கள் இந்த நாட்டிற்கு ஓர் அமைதியை தேடிக் கொடுக்கவேண்டிய பெரும் பொறுப்பை இந்த நாட்டு ஆட்சியாளர்களின் கைகளில் ஒப்படைத்தது. ஆனால் இந்த நாட்டில் நடந்த ஆட்சி குழப்பங்கள், ஆட்சி மாற்றங்கள், அரசியல் ஸ்திரமின்மை போன்றவற்றால் இந்த நாட்டின் அமைதி பிற்போடப்பட்டு கொண்டிருந்தது. இவ்வேளையில் யுத்தமும் படுதீவிரமடைந்து ஒவ்வொரு வீட்டின் வாயில் கதவையும் தட்டத்தொடங்கிவிட்டது. இவ்வேளையில் ஆட்சிப்பீடமேறிய பொதுஜன ஐக்கிய முன்னணி, நாட்டின் அனைத்து இனங்களையும் ஒற்றுமைப்படுத்தும் முயற்சியில் இறங்கியதோடு மட்டுமல்லாமல் தீர்வுதிட்டப்பொதியையும் மக்கள் முன் வைத்தது. பெரும் செலவில் "தவளம" போன்ற வீதி நாடகங்களையும் நடத்தியது. அரசின் இம்முயற்சியானது வெற்றிய டைந்தா அல்லது தவிடுபொடியாகியதா என நாம் ஆராய வேண்டிய கடப்பாடு நமக்கு உண்டு.

முதலில் அரசு வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை பற்றி ஆராய்வோ மேயானால், இதுவரை காலமும் அரசிற்கு ஊன்று கோலாக, இருந்த தீர்வு பொதியினை, விடுதலைப்புலிகள் "அரசியல் தற்கொலைச் சான்றிதழ்" எனக் குறிப்பிட்டுள்ளமையானது அவர்கள் ஒரு போதும் பொதியினை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. அதுமட்டு மல்லாமல் ஆட்சியில் உள்ள அரசியல்வாதிகளும் இத்தீர்விதிட்டத்தை கொஞ்சம் கொஞ்சமாக எதிர்க்க ஆரம்பித்து விட்டனர். "அரசின் தீர்வுத்திட்டத்தால் நன்மைக்கு பதில் தீமையே ஏற்படப் போகிறது" என வெலிமடை நகரில் அண்மையில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணி பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜே.வி.பி பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டதானது இதற்கு உதாரணமாக திகழ்கிறது. இன்று நாட்டின் எதிர்கட்சிகளும் தீர்வுதிட்டத்தை ஒதுக்கி வைத்துவிட்டு அதற்கு மாற்றீடான ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அரசை வற்புறுத்தியுள்ளன. அது மட்டுமல்லாமல் ஆரம்ப காலங்களில் மக்களின் அதிகபட்ச நம்பிக்கையைக் கொண்டமைந்திருந்த இப்பொதி கொஞ்சம் கொஞ்சமாக மக்களிடம் நம்பிக்கையிழக்க தொடங்கிவிட்டது. இதனால் மக்களிடம் இப்பொதி தொடர்பாக ஒரு சலிப்புத் தன்மையே காணப்படுகிறது. இதனால் இதற்கு மாற்றீடான அதாவது பிரதியீடான ஒரு திட்டத்தை மக்களுக்கு முன் வைக்க வேண்டிய மிகவும் இக்கட்டான

நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு மாற்றீடாக மக்களிடையே பல்வேறுபட்ட கருத்துக்கள் முன் வைக்கப்படுவதை நாம் இன்று காணக்கூடியதாகவுள்ளது. தற்போது அதிகாரப்பகிர்வு முயற்சியானது, பிரதானமாக தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைகளை இதுவரைகாலமும் அரசியல் மட்டத்திலும் சமூக, கலாசார, பொருளாதார மட்டங்களிலும் சரியாக விவரமறிந்து தீர்க்காது விட்டதனால் எழுந்த சவால்களைத் தீர்ப்பதற்கான ஒரு முயற்சியாகவே இன்று பல பெரும்பான்மை மக்களால் கருதப்படுகிறது. இந்த முயற்சி வெற்றியளிக்க வேண்டுமென்றால் இதில் முக்கிய பாத்திரங்களான அரசாங்கம், பிரதான எதிர்க்கட்சி, விடுதலைப்புலிகள், ஏனைய அரசியல் அமைப்புக்கள் ஆகியவை ஒரு இணக்கத்திற்கு வந்து தத்தமது பங்கை ஆற்றுவதற்கு வன்முறைகள் தணிந்து போகும் ஒருசூழ்நிலையில், "வழி" பிறக்க வேண்டும் என எல்லோரும் விரும்புகின்றர்.

இலங்கையில் இரு தரப்புக்கும் இடையே நடைபெறும் போரினால் அப்பாவிப் பாதிக்கப்படும் நிலையை முடிவிற்கு கொண்டுவந்து போர் நிறுத்தத்துடனான ஒரு சமாதானப்பாதையில் நாடு செல்ல வேண்டும் என்பதை தொடர்ச்சியாக சமாதான விரும்பிகளும், பொதுமக்கள் பத்திரிகைகளும் வலியுறுத்தியும் உருப்படியான முன்னேற்றம் இது விடயத்தில் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. சமாதானம் இன்றுவரும், நாளை வரும் என இநநாட்டு மக்கள் அதுவும் குறிப்பாக கொடுமையாக பாதிப்புற்ற வடக்கு- கிழக்கு மக்கள் எதிர்பார்த்து இலவு காத்த கிளிகளாகியுள்ளனர். இலங்கையைப் பொறுத்தவரையில் நாடு அமைதியான சூழலுக்கு திரும்பவேண்டியது இன்றைய நிலையில் மிகவும் அவசியமானதாகும். எனவே இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் முற்று முழுதாக இணைந்த சமஷ்டி முறையிலான அரசியல் முறை இருதரப்பும் சிந்திக்க வேண்டும்.

இது இவ்வாறு இருக்க இந்நாட்டு மக்களை அண்மையில் தாக்கியுள்ள பெரிய இடி அரசின் பட்ஜெட் ஆகும். பட்ஜெட்டைப் பார்த்த சிலர் இது தேசிய பட்ஜெட் தானா அல்லது சிலமாகாண எல்லைகளுடன் வரையறுக்கப்பட்ட பட்ஜெட்டா என தலையில் கை வைக்கின்றனர். அதுமட்டு மல்லாமல் பாணுக்கும், பருப்புக்கும் விலை குறைத்துள்ளதா என தேடிய ஏழைகளுக்கு பலத்த ஏமாற்றமாகிவிட்டது. "கவலைப்பட வேண்டாம் தங்கத்தின் விலை சரிந்துள்ளது" என்று வேறு அவர்களது முதுகிலும் தடவிக் கொடுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் பாதுகாப்பு செலவினம் ரூ45 மில்லியனுக்கு அப்பால் அதிகரிக்குமேயானால் மாத்திரமே பாதுகாப்பு வரி உயர்த்தப்படும் என்றும், நாட்டைப் பாதுகாக்கும், உதவி தொகை தொடரும் எனவும் பிரதிநிதி அமைச்சர் G.L. பீரிஸ் தெரிவித்துள்ளார். நிலைமை இவ்வாறு இருக்கையில் தீர்வுத்திட்டம் நிறைவேற்றப் படுவதற்கு நாள் குறிப்பதும் விரைவில் யுத்தம் முடிவுக்கு வந்து நாட்டில் அமைதி பிறக்கும் என்று உத்தரவாதம் அளிப்பதும் தான் புரியாத புதிராக இருப்பதாக தமிழ் மக்கள் புலம்புகின்றனர். இன்றைய நிலைமையில் எந்த வகையிலுமே சீர் செய்யமுடியாத அளவுக்கு மோசமாக மக்களின் வாழ்க்கை தரம் சென்று கொண்டிருக்கின்றது. ஏழை வறியமக்களைத்

தூக்கிவிடும் அளவுக்கு எந்த விதமான திட்டங்களும் இல்லை. வறுமைக் கோட்டுக்கு சற்று மேலே இருந்தவர்களும், வறுமைக் கோட்டுக்கு கீழே வேகமாக நகர்த்த ப்படுகின்றனர். இந்த விதமான போக்குகட்கு மத்தியில் யதார்த்தத்தை மறந்தோ, மறைத்தோ நிலைமையைக் கையாளக கூடாது. நாடு சீரடைந்தால் மாத்திரமே பொருளாதாரம் சீரடையும் என்பதைச் சகல தரப்பினருமே உணர்ந்துள்ளனர்.

இந்த நிலைப்பாடு தொடர்ந்து செல்லுமேயானால் இந்தநாடு குட்டிச் சுவராய்ப் போவதை யாராலும் எந்த வகையிலுமே தடுத்து நிறுத்த முடியாது போகும் இது வரைகால இனப்பிரச்சினை மாறி மாறி இழுத்தடிக்கப்பட்டதன் விளைவையே இன்று மக்கள் இன பேதமின்றி "அறுவடை" செய்கின்றனர். நாளைய சந்ததியேனும் நிம்மதியாக இருக்க வேண்டுமானால் சுய இலாபங்கட்காக பொறுப்பின்றி செயற்பட்டு காலங்கழிக்கும் பழக்க தோஷத்தை அனைத்து அரசியற் கட்சிகளும் கைவிடவேண்டும். நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்க முடியாத நிலைமையிலும், இலட்சக் கணக்கான இனம் வயதினருக்கு வேலை வாய்ப்பை உண்டு பண்ண முடியாமலும், மக்கட்கு தேவையான சேவைகள், நடவடிக்கைகளைச் சீராக நிறைவேற்ற முடியாமலும் வரவு செலவுத்திட்டத்தை அரசு மெல்ல "அமத்தி வாசிக்க வேண்டிய நிலை" இன்று தோன்றியுள்ளது என்பதே உண்மை. இந்த நிலைமையை மாற்றுவதும் அல்லது வருடாந்தம் இதே நிலைமையைத் தொடருவதும் ஆட்சிப்பீடங்களின் உறுதியான நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது.

ஆகவே நாம் யுத்தத்தின் பாதிப்புக்களை உற்று நோக்கும் போது சமுதாய வேர்களை மட்டுமல்லாமல் பொருளாதார ஆணி வேர்களையும்இவ்யுத்தமானது பிடுங்கி செல்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனவே மனித பண்பாட்டு விழுமியங்களையும், மனித இனத்தின் தனித்துவ தன்மையையும் சிறுகச் சிறுக அழித்துக் கொண்டிருக்கும் இந்த யுத்ததிற்கு முற்றுப்புள்ளி வைக்க அனைத்து இனங்களும் ஒன்றோடு ஒன்று கைகோர்க்க வேண்டும் எனடபதே அனைவரதும் அவாவாகும். இன்று நம் நாட்டில் புரையோடிப் போய் இருக்கும் இவ்வினப் பிரச்சினைக்கு அறுவை சிகிச்சை செய்ய அனைத்து இனங்களும் முன்வரவேண்டும். அதேவேளையில் அரசியல் வாதிகளும் தம் சுயநலப்போக்கினை கைவிட்டு நம்நாட்டின் இறைமையைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

Y. சுபாகர்
ஆண்டு 13A

★ நீ எதை நினைக்கிறாயோ
அதுவாகவே ஆகிவிடுகிறாய்
- கீதை -

# My Ambition

My ambition is to become a successful doctor. I have always enjoyed my science lessons in the class and I used to admire the way doctors treat patients.

Becoming successful doctor involves a lot of hardwork and dedication. I am very kind hearted by nature. And I have heard stories of great sacrefices made by great doctors.

